வெளியீடு 10-7-2001

Issued 10-7-2001

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

சனிக்கிழமை, நவம்பர் 11, 2000 – தொகுதி 111 – எண் 1

**Saturday the 11th November, 2000 – Volume 111– No. 1**

V2;11,31 P00
P00·111·1
322458

...ப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

... Assembly Secretariat, Fort St. George,
Chennai-600 009

[Price Rs. 3.00

222458

11-11-2000

## உள்ளடக்கம்


பக்கங்கள்

தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் — xi-xiv

Personnel of the Government of Tamil Nadu — xv-xviii

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல் — xix-xxii

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி) — xxiii-xxxiii

1. வினாக்கள்—விடைகள்—

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள் — 1-38

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல்கள் 11 முதல் 14 வரை) — 38-171

2. சிறப்புக் கவன ஈர்ப்பு—

தேயிலை, கொப்பரைத் தேங்காய் விலை வீழ்ச்சி மற்றும் கரும்பு விலையை டன்னுக்கு ஆயிரம் ரூபாயாக உயர்த்துவது குறித்து — 172-219

திரு. சோ. பாலகிருஷ்ணன் — 172-176,219

திரு. ஜி. பழனிசாமி — 176-181,220

*மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன் — 181

*திரு. சொ. கருப்பசாமி — 181-184

திரு. ஐ. கணேசன் — 184-188,211

*திரு. லா. சந்தானம் — 189-192

*திரு. ஜே. ஹேமச்சந்திரன் — 192-196

| | பக்கங்கள் |
|---|---|
| 2. *சிறப்புக் கவன ஈர்ப்பு—தொடர்ச்சி* | |
| தேயிலை, கொப்பரைத் தேங்காய் விலை வீழ்ச்சி மற்றும் கரும்பு விலையை டன்னுக்கு ஆயிரம் ரூபாயாக உயர்த்துவது குறித்து—தொடர்ச்சி | |
| திரு. சி. வேலாயுதன் | 196-198 |
| திரு. பா.மு. முபாரக் | 198-203 |
| திரு. கே. சுப்பராயன் | 202 |
| திரு. ச. அழகிரி | 203,204, 210,216 |
| டாக்டர் க. கிருஷ்ணசாமி | 204-205 |
| *மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் | 185,205- 211,217 |
| திரு. பி.ஆர். சுந்தரம் | 220,221 |
| 3. *அறிக்கைகள் அளித்தல்—* | |
| (அ) பொது நிறுவனங்கள் குழு | 221 |
| (ஆ) சட்ட விதிகள் ஆய்வுக் குழு | 221 |
| 4. *அரசினர் சட்டமுன்வடிவு (திரும்பப் பெறுதல்)—* | |
| தமிழ்நாடு பொது நூலகங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000 | 221-222 |
| 5. *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—* | |
| (அ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000 | 222-223 |
| (ஆ) அழகப்பா பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000 | 223 |
| (இ) தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000 | 224 |





| | பக்கங்கள் |
|---|---|
| 5. *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி* | |
| (ஈ) தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000 | 224-225 |
| 6. *அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—* | |
| (அ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (எட்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000 | 225-230 |
| மாண்புமிகு திரு. ஆலடி அருணா | 226,227,228, 229,230 |
| திரு. கே. சுப்பராயன் | 226,227 |
| திரு. ஜே. ஹேமச்சந்திரன் | 228 |
| (ஆ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஒன்பதாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000 | 230-232 |
| மாண்புமிகு திரு. ஆலடி அருணா | 231,232 |
| (இ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (பத்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000 | 232-234 |
| மாண்புமிகு திரு. ஆலடி அருணா | 232,233,234 |
| (ஈ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (பதினொன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000 | 234-236 |
| மாண்புமிகு திரு. ஆலடி அருணா | 234,235 |
| (உ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (பன்னிரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000 | 236-237 |
| மாண்புமிகு திரு. ஆலடி அருணா | 236,237 |

| | பக்கங்கள் |
|---|---|
| **6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி** | |
| (ஊ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000 | 238-240 |
| மாண்புமிகு திரு. ஆலடி அருணா | 238,239,240 |
| திரு. சி. ஞானசேகரன் | 238-239 |
| (எ) தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் இயக்கூர்திகள் நுழைவின் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000 | 241-248 |
| மாண்புமிகு திரு. ஆலடி அருணா | 241,243,244, 246,247-248 |
| திரு. சி. ஞானசேகரன் | 241-242,243, 244 |
| மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி | 242,243,246 |
| திரு. ஜே. ஹேமச்சந்திரன் | 245-246 |
| (ஏ) தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (செயற்பாட்டினைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்தல்) சட்டமுன்வடிவு, 2000 | 248-251 |
| மாண்புமிகு திரு. கோ.சி. மணி | 248,249,250, 251 |
| திரு. கே. சுப்பராயன் | 249 |
| (ஐ) தமிழ்நாடு ஊராட்சிகள் (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000 | 251-257 |
| மாண்புமிகு திரு. கோ.சி. மணி | 251,252,253, 254,255,256, 257 |
| திரு. சி. ஞானசேகரன் | 252 |
| திரு. வை. சிவபுண்ணியம் | 253 |
| டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் | 253,254 |
| திரு. டி. மணி | 254,255 |





| | பக்கங்கள் |
|---|---|
| **6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி** | |
| (ஒ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000 | 257-259 |
| மாண்புமிகு திரு. கோ.சி. மணி | 257,258,259 |
| (ஓ) தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் [தொழிலாளர்களுக்கு நிரந்தர தகுநிலை (அந்தஸ்து) வழங்குதல்] திருத்தச் சட்டமுன்வடிவு, 2000 | 259-264 |
| மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி | 259,262,263 |
| திரு. ஜே. ஹேமச்சந்திரன் | 260 |
| திரு. கே. சுப்பராயன் | 260-261 |
| டாக்டர் க. கிருஷ்ணசாமி | 261-262 |
| (ஔ) தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய மற்றும் பண்டிகை விடுமுறைகள்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2000 | 264-268 |
| மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி | 264,266-267, 268 |
| திரு. ஜே. ஹேமச்சந்திரன் | 264-265 |
| டாக்டர் க. கிருஷ்ணசாமி | 265,266 |
| *திரு. நா. பெரியசாமி | 266 |
| (அஅ) தமிழ்நாடு உணவு வழங்கு நிறுவனங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000 | 269-270 |
| மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி | 269,270 |

பக்கங்கள்

6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—
தொடர்ச்சி

(அஆ) தமிழ்நாடு நகரமைப்பு மற்றும் ஊரமைப்புத் திட்ட (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000 — 270-274

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி — 271,272,273,274

திரு. சி. ஞானசேகரன் — 271,272

(அஇ) இந்திய சுங்க வரிகள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000 — 274-290

*மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன் — 274,275,283-287,290

திரு. ஜே. ஹேமச்சந்திரன் — 275-276,288, 289

திரு. சி. ஞானசேகரன் — 276-277,288

திரு. சோ. பாலகிருஷ்ணன் — 278

டாக்டர் க. கிருஷ்ணசாமி — 278,279

*திரு. லா. சந்தானம் — 279

*திரு. நா. பெரியசாமி — 279-280,288

திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் — 280-281

திரு. ஜி. நிஜாமுதீன் — 281-282

மாண்புமிகு திரு. கோ.சி. மணி — 283

திரு. ஜி. பழனிசாமி — 287





பக்கங்கள்

6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—
தொடர்ச்சி

(அஈ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு, 2000 — 290-295

*மாண்புமிகு திரு. கா.நா. நேரு — 290,292-293, 294

திரு. ஜே. ஹேமச்சந்திரன் — 291-292

*திரு. நா. பெரியசாமி — 292-293

(அஉ) தமிழ்நாடு நீர்ப்பாசன (மேம்பாட்டு வரி விதிப்புத்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2000 — 295-296

மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான் — 295,296

(அஊ) தமிழ்நாடு வழக்குரைஞர்கள் நல நிதிய (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000 — 297-302

மாண்புமிகு திரு. ஆலடி அருணா — 297, 300

*திரு. அ.லெ. சுப்பிரமணியன் — 297-299

திரு. சி. ஞானசேகரன் — 299-301

(அஎ) பதிவு செய்தல் (தமிழ்நாடு இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000 — 303-306

*மாண்புமிகு திரு. இ. பெரியசாமி — 303,304-306,

திரு. ஜே. ஹேமச்சந்திரன் — 303-304

*திரு. நா. பெரியசாமி — 304

(அஏ) தமிழ்நாடு நிலக்கொடை வேள்வி (பூதான் யக்ஞா) (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000 — 307-312

*மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு — 307,308-310, 311,312

*திரு. நா. பெரியசாமி — 307-309,311

திரு. சோ. பாலகிருஷ்ணன் — 309-310,311

பக்கங்கள்

6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)— தொடர்ச்சி

(அஐ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000 — 315-317

மாண்புமிகு திரு. ஆலடி அருணா — 315,316,317

(அஒ) அழகப்பா பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000 — 317-319

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் — 317,319

(அஓ) தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000 — 319-321

*மாண்புமிகு திரு. வீரபாண்டி. எஸ். ஆறுமுகம் — 319,320

(அஔ) தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000 — 321-322

மாண்புமிகு திரு. ஆலடி அருணா — 321,322

7. அறிவிப்புகள்—

(அ) இந்திய சுங்க வரிகள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000 (ஆ இ) — 274

(ஆ) பதிவு செய்தல் (தமிழ்நாடு இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000 (ஆ இ) — 303

(இ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000 (ஆ இ) — 315



பக்கங்கள்

8. அரசினர் தீர்மானம்—

(அ) விதி 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தல் — 314-315

(ஆ) விதி 32-ஐத் தளர்த்தல் — 323

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— 323-327

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

## ஆளுநர்—நீதிபதி செல்வி மீ. பாத்திமா பீவி

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

| | |
|---|---|
| 1. **முதலமைச்சர்** | : **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, மாவட்ட வருவாய் அதிகாரிகள், உள் துறை, நிதி, திட்டம், தொழில்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, சிறுபான்மையினர் நலன், கடவுச் சீட்டு மற்றும் வணிக வரிகள். |
| 2. **கல்வி அமைச்சர்** | : **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** தொழிற்கல்வி உள்ளிட்ட கல்வி, சட்டமன்றம், தேர்தல்கள், மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் மற்றும் முன்னாள் இராணுவத்தினர். |
| 3. **மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்** | : **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலம் மற்றும் மின்சாரம். |
| 4. **ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்** | : **மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** நகராட்சி நிருவாகம், சமுதாய வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல். |
| 5. **வேளாண்மைத் துறை அமைச்சர்** | : **மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்புப் பயிர் மேம்பாடு. |

6. பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. துரைமுருகன்:**
பொதுப் பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டம், செயற் திட்டப் பணிகள், வனம் மற்றும் சின்கோனா.

7. போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் : **மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:**
போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், தொழிலாளர் நலம், மக்கள்தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, இரும்பு எஃகு கட்டுப்பாடு மற்றும் பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு

8. நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:**
நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்.

9. தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் : **மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:**
தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை.

10. உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. கா.நா. நேரு:**
உணவு, விலைக் கட்டுப்பாடு மற்றும் குடிமைப் பொருட்கள் வழங்கல், பொது விநியோக முறை, கூட்டுறவு மற்றும் புள்ளிவிவரங்கள்.

11. பால்வளத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. க. சுந்தரம்:**
பால், பால் பண்ணை வளர்ச்சி, குடிசை மாற்றுத் திட்டம் மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.

12. வருவாய்த் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:**
வருவாய், வருவாய் நிர்வாகம், மாவட்ட வருவாய் நிர்வாகம், துணை ஆட்சியாளர்கள் மற்றும் இசுலாமிய அறக்கட்டளை (வக்ஃப்).



13. சட்டத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. ஆலடி அருணா:**
சட்டம், நீதிமன்றங்கள், சிறைச் சாலைகள், எடைகள் மற்றும் அளவைகள் குறித்த சட்டம், கம்பெனிகள் பதிவு, கடன் வழங்கல் பற்றிய சட்டமியற்றல் உட்பட கடன் நிவாரணம் மற்றும் சீட்டு நிதி பற்றிய சட்டம் இயற்றுதல்.

14. கைத்தறித் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. என். கே. கே. பெரியசாமி:**
கைத்தறி, துணித் தொழில்.

15. பிற்படுத்தப் பட்டோர் நலத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. எம். ஆர். கே. பன்னீர்செல்வம்:**
பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர் மரபினர் நலன் வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

16. இளைஞர் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:**
விளையாட்டு மற்றும் இளைஞர் பணிப்படை மற்றும் சுற்றுச் சூழல் மாசுக்கட்டுப்பாடு.

17. வீட்டு வசதித் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:**
வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி, நகர அமைப்புத் திட்டமிடல் மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி.

18. ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:**
கிராமக் குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பதிவுத் துறை, முத்திரைத் தாள் சட்டம் மற்றும் சத்துணவு.

19. **செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:**
*செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம்.*

20. **கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:**
*கால்நடை பராமரிப்பு.*

21. **சமூக நலத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குண பாண்டியன்:**
*மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், இரவலர் காப்பு இல்லம், அனாதை இல்லங்கள், குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம்.*

22. **ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:**
*ஆதிதிராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்.*

23. **சுற்றுலாத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்:**
*சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.*

24. **கதர்த் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:**
*கதர் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்.*

25. **மீன் வளத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:**
*மீன் வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்.*



## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR—Justice Selvi M. FATHIMA BEEVI

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister** .. **The Hon. Kalaignar M. Karunanidhi:**
Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Home, Finance, Planning, Industries, Prohibition and Excise, Minorities Welfare, Passports and Commercial Taxes.

2. **Minister for Education** .. **The Hon. Prof. K. Anbazhagan:**
Education including Technical Education, Legislature, Elections, Electronics, Science and Technology and Ex-Servicemen.

3. **Minister for Health and Electricity** .. **The Hon. Thiru Arcot N. Veerasamy:**
Health, Medical Education and Family Welfare and Electricity.

4. **Minister for Rural Development and Local Administration** .. **The Hon. Thiru Ko. Si. Mani:**
Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness and Urban and Rural Water Supply.

5. **Minister for Agriculture** .. **The Hon. Thiru Veerapandi S. Arumugam:**
Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development.

6. **Minister for Public Works and Forest** .. **The Hon. Thiru Duraimurugan:** Public Works, Irrigation including Minor Irrigation, Programme Works, Forest and Cinchona.

7. **Minister for Transport and Labour** .. **The Hon. Dr. K. Ponmudi:** Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Chennai Metropolitan Development Authority, Labour, Census, Employment and Training, Iron and Steel Control and Newsprint Control.

8. **Minister for Highways** .. **The Hon. Thiru Pasumpon Tha. Kiruttinan:** Highways and Ports.

9. **Minister for Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments** .. **The Hon. Dr. M. Thamizhkudimagan:** Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments.

10. **Minister for Food, Public Distribution System and Co-operation** .. **The Hon. Thiru K.N. Nehru:** Food, Price Control and Civil Supplies, Public Distribution System, Co-operation and Statistics.

11. **Minister for Milk** .. **The Hon. Thiru K. Sundaram:** Milk and Dairy Development, Slum Clearance and Accommodation Control.

12. **Minister for Revenue** .. **The Hon. Thiru A. Rahman Khan:** Revenue, Board of Revenue, District Revenue Establishment, Deputy Collectors and Wakf.



13. **Minister for Law** .. **The Hon. Thiru Aladi Aruna:** Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits.

14. **Minister for Handlooms** .. **The Hon. Thiru N.K.K. Periasamy:** Handlooms, Textiles.

15. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru M.R.K. Panneerselvam:** Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees.

16. **Minister for Youth and Pollution Control** .. **The Hon. Thiru Pongalur N. Palanisamy:** Sports and Youth Service Corps and Environmental Pollution Control.

17. **Minister for Housing** .. **The Hon. Thiru K. Pitchandi:** Housing, Rural Housing Development, Town Planning and Urban Development.

18. **Minister for Rural Industries and Registration** .. **The Hon. Thiru I. Periasamy:** Rural Industries including Village and Cottage Industries, Registration and Stamp Act and Nutritious Meals.

19. **Minister for Information, Publicity and Printing** .. **The Hon. Thiru V. Mullaivendan:** Information and Publicity, Film Technology and Cinematography Act, Stationery and Printing and Government Press.

20. **Minister for Animal Husbandry** .. **The Hon. Pulavar P.M. Senguttuvan:** Animal Husbandry.

| | | |
|---|---|---|
| 21. Minister for Social Welfare | .. | **The Hon. Tmt. S.P. Sarkunapandian:** Social Welfare including Women's and Children's Welfare, Beggars Home, Orphanages and Correctional Administration and Integrated Child Development Services Scheme. |
| 22. Minister for Adi-Dravidar and Tribal Welfare | .. | **The Hon. Thiru Samayanallur S. Selvarasu:** Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour. |
| 23. Minister for Tourism | .. | **The Hon. Thiru N. Suresh Rajan:** Tourism and Tourism Development Corporation. |
| 24. Minister for Khadi | .. | **The Hon. Thiru Andhiyur P. Selvarasu:** Khadi Board, Bhoodan and Gramdan. |
| 25. Minister for Fisheries | .. | **The Hon. Tmt. S. Jenefer Chandran:** Fisheries and Fisheries Development Corporation. |



# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

*பேரவைத் தலைவர்*

**மாண்புமிகு திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்**

*பேரவைத் துணைத் தலைவர்*

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி**

*மாற்றுத் தலைவர்கள் பட்டியல்*

1. **திரு. அ.லெ. சுப்பிரமணியன்**
2. **திரு. சி.டி. தண்டபாணி**
3. **திரு. குத்தாலம் பி. கல்யாணம்**
4. **டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்**
5. **திரு. நா. பெரியசாமி**

*செயலாளர்*

**திரு. வெ. இராசாராமன்**

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல்

| | | | |
|---|---|---|---|
| 1. | திருமதி பானுமதி ஆனந்தராஜன், பி.எஸ்.சி., பி.ஜி.எல். | .. | கூடுதல் செயலாளர் |
| 2. | திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 3. | திரு. கி. சாயிநாதன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| 4. | திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| 5. | திரு. மு. ஆறுமுகப்பெருமாள், எம்.ஏ., பி.லிட். | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 6. | திரு. சா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| 7. | திருமதி வீ.நா. உமா, பி.ஏ. | .. | குழு அலுவலர் |
| 8. | திரு. தி. திருமாவளவன், பி.எஸ்சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 9. | திரு. வெ. இராமகிருஷ்ணன், எம.ஏ., பி.எல். | .. | பேரவைத் தலைவரின் சிறபபுத் தனிச் செயலர் |
| 10. | திரு. சு. ராஜகுரு | .. | குழு அலுவலர் |
| 11. | திரு. செளரி அய்யாத்துரை | .. | பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |
| 12. | திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 13. | திரு. கோ. ஸ்ரீராமன், பி.காம். | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 14. | திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 15. | திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 16. | திரு. இல. மாரியப்பன், பி.ஏ. | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 17. | திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 18. | திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |

19. திரு. ம. பிலிப், எம்.ஏ., பி.ஜி.எல். .. துணைச் செயலாளர்
20. திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். .. துணைச் செயலாளர்
21. திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். .. சார்புச் செயலாளர்
22. திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். .. சார்புச் செயலாளர்
23. திருமதி என். துளசிபாய், பி.ஏ. .. சார்புச் செயலாளர்
24. திரு. கோ. ரவீந்திரன், எம்.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்
25. திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. .. சார்புச் செயலாளர்
26. திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். .. சார்புச் செயலாளர்
27. திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்.சி., பி.எல். .. சார்புச் செயலாளர்
28. திருமதி சீ. கனகவல்லி, டி.சி.பி. .. தலைமை நிருபர்
29. திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. .. தலைமை நிருபர்
30. திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்.சி., பி.எல். .. சார்புச் செயலாளர்
31. திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். .. சார்புச் செயலாளர்
32. திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்
33. திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். .. தலைமை நிருபர்
34. திருமதி என். மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல்., .. சார்புச் செயலாளர்
35. திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ., பி.எல். .. தலைமை நிருபர்
36. திரு. தி. உமாபதி, பி.ஏ. .. தலைமை நிருபர்
37. திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்
38. திரு. கோ. தேவராஜன், பி.ஏ. .. சார்புச் செயலாளர்
39. திருமதி ச.இரா. சுகுணா .. தலைமை நிருபர்
40. திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)

## பெயர்களும் தொகுதிகளும்

1. அசோகன், திரு. அ. .. திருவாரூர் (செ.வ.)
2. அந்தியூர் ப. செல்வராசு, திரு. .. அந்தியூர் (செ.வ.)
3. அபுல்ஹசன், திரு. எம்.எம்.எஸ். .. மயிலாடுதுறை
4. அப்துல் லத்தீப், திரு. ம. .. வாணியம்பாடி
5. அப்பாவு, திரு. மு. .. இராதாபுரம்
6. அமரமூர்த்தி, திரு. டி. .. அரியலூர்
7. அய்யலுசாமி, திரு. லி. .. கோவில்பட்டி
8. அருண்குமார், திரு. பா. .. மேட்டுப்பாளையம்
9. அழகராஜா, திரு. என்.ஆர். .. தேனி
10. அழகிரி. திரு. ச. .. சிதம்பரம்
11. அழகுவேலு, திரு. ச. .. கண்டமங்கலம் (செ.வ.)
12. அன்பழகன், திரு. வ. .. செய்யார்
13. அன்பழகன், பேராசிரியர் க. .. துறைமுகம்
14. அன்பில் பெரியசாமி, திரு. .. திருச்சிராப்பள்ளி-2
15. ஆசையன், திரு. பெ. .. ஆண்டிப்பட்டி
16. ஆண்டமுத்து, திரு. வெ.அ. .. பவானிசாகர்
17. ஆரூண் ரஷீத், திரு. ஜே.எம். .. வில்லிவாக்கம்
18. ஆலடி அருணா, திரு. .. ஆலங்குளம்
19. ஆவுடையப்பன், திரு. இரா. .. அம்பாசமுத்திரம்
20. ஆறுமுகம், திரு. தி.ப. .. திருச்செங்கோடு

21. ஆற்காடு நா. வீராசாமி, திரு. - அண்ணா நகர்
22. ஆனந்தன், திரு. பால. - வந்தவாசி (செ.வ.)
23. இரகுமான்கான், திரு. அ. - இராமநாதபுரம்
24. இராசமாணிக்கம், திரு. க.வெ.வீ. - மேலூர்
25. இராசமாணிக்கம், திரு. பி. - ஒரத்தநாடு
26. இராசன், திரு. வி.பி. - இராஜபாளையம் (செ.வ.)
27. இராசேந்திரன் என்கிற தீரன், திரு. ஆ. - ஆண்டிமடம்
28. இராமசாமி, டாக்டர் வை. - பண்ருட்டி
29. இராமசாமி, திரு. கே.ஆர். - திருவாடனை
30. இராமச்சந்திரன், திரு. ஒ.ஆர். - கம்பம்
31. இராமச்சந்திரன், திரு. சி.இரா. - தொண்டாமுத்தூர்
32. இராமச்சந்திரன், திரு. மா. - திருவோணம்
33. இராமலிங்கம், திரு. ஏ. - காட்டுமன்னார்கோவில் (செ.வ.)
34. இராமலிங்கம், திரு. செ. - திருவிடைமருதூர்
35. இராமன், டாக்டர் இ.எஸ்.எஸ். - பள்ளிப்பட்டு
36. இராமஜெயம், திரு. ந. பூ. - மயிலாப்பூர்
37. இராஜரெட்டி, திரு. ச. - தளி
38. இராஜேந்தர், திரு. டி. - பூங்கா நகர்
39. இளங்கோ, திரு. கோ. - அவினாசி (செ.வ.)
40. ஈஸ்வரன், திரு. ரா. - வாசுதேவநல்லூர் (செ.வ.)
41. உதயசூரியன், திரு. தா. - சங்கராபுரம்
42. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். - தஞ்சாவூர்



43. கணேசன், திரு. ஐ. - எடப்பாடி
44. கணேசன், திரு. கே.சி. - ஜெயங்கொண்டம்
45. கருணாநிதி, கலைஞர் மு. - சேப்பாக்கம்
46. கருப்பசாமி, திரு. சொ. - சங்கரநயினார்கோவில் (செ.வ.)
47. கருப்பண்ண உடையார், திரு. ந. - பாபநாசம்
48. கருப்புசாமி, திரு. டி. - உப்பிலியாபுரம் (ஆ.வா.)
49. கன்னையன், திரு. க. - தொட்டியம்
50. காஞ்சனா கமலநாதன், டாக்டர் - கிருஷ்ணகிரி
51. காந்தி, திரு. ஆர். - இராணிப்பேட்டை
52. கிருஷ்ணசாமி, டாக்டர் க. - ஓட்டப்பிடாரம் (செ.வ.)
53. கிருஷ்ணன், திரு. எஸ்.வி. - நாங்குநேரி
54. கிருஷ்ணன், திரு. சி. வெ. - வேடசந்தூர்
55. குண்டன், திரு. டி. - உதகமண்டலம்
56. குத்தாலம் பி. கல்யாணம், திரு. - குத்தாலம்
57. குமாரதாஸ், டாக்டர் தே. - கிள்ளியூர்
58. கும்மிடிப்பூண்டி கி. வேணு, திரு. - கும்மிடிப்பூண்டி
59. குழந்தை தமிழரசன், திரு. - விருத்தாசலம்
60. கோதண்டம், திரு. ஏ. - ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
61. கோபால், திரு. பா. - மேட்டூர்
62. கோபு, திரு. சி. - அணைக்கட்டு
63. கோமதி சீனிவாசன், திருமதி - வலங்கைமான் (செ.வ.)
64. கோவிந்தன், திரு. ப. - தாரமங்கலம்
65. கோவிந்தன், திரு. வெ. - பேரணாம்பட்டு (செ.வ.)

66. சக்ரபாணி, திரு. ஆர். - ஒட்டன்சத்திரம்
67. சண்முகம், திரு. கோ. - திருப்பத்தூர்
68. சண்முகம், திரு. சி. - ஆலந்தூர்
69. சண்முகம், திரு. ம. - கிணத்துக்கடவு
70. சண்முகம், திரு. வி.சி. - நெல்லிக்குப்பம்
71. சந்தானம், திரு. லா. - சோழவந்தான்
72. சந்திரசேகரன், திரு. சி. - சேந்தமங்கலம் (ஆவா.)
73. சந்திரசேகரன், திரு. துரை. - திருவையாறு
74. சமயநல்லூர் எஸ். செல்வராசு, திரு. - சமயநல்லூர் (செ.வ.)
75. சம்பத், திரு. ஏ.ஜி. - முகையூர்
76. சரஸ்வதி, திருமதி ஆர். - தாராபுரம் (செ.வ.)
77. சற்குணபாண்டியன், திருமதி எஸ்.பி. - டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
78. சாமிநாதன், திரு. மு.பெ. - வெள்ளக்கோவில்
79. சிங்காரவேலு, திரு. வி.பி. - வால்பாறை (செ.வ.)
80. சிவபுண்ணியம், திரு. வை. - மன்னார்குடி
81. சிவராமன், திரு. ஆர். - திருப்பத்தூர்
82. சிவராஜ், திரு. சு. - ரிஷிவந்தியம்
83. சிவலிங்கம், திரு. எஸ்.ஆர். - பனமரத்துப்பட்டி
84. சிவானந்தம், திரு. ஆர். - ஆரணி
85. சிவாஜி, திரு. இ.ஏ.பி. - திருத்தணி
86. சின்னய்யா, திரு. வெ. - திருமயம்
87. சீனிவாசன், திரு. ஏ.ஆர்.ஆர். - விருதுநகர்



88. சுகவனம், திரு. இ.ஜி. - பர்கூர்
89. சுடலைமுத்து, திரு. அ. - போடிநாயக்கனூர்
90. சுதர்சனம், திரு. டி. - பூந்தமல்லி
91. சுந்தரம், திரு. க. - பொன்னேரி (செ.வ.)
92. சுந்தரம், திரு. ந. - காரைக்குடி
93. சுந்தரம், திரு. பி.ஆர். - இராசிபுரம்
94. சுந்தர், திரு. கே. - உத்திரமேரூர்
95. சுப்பராயன், திரு. கே. - திருப்பூர்
96. சுப்பிரமணி என்கிற சி.சு. மணி, திரு. சி. - திருவள்ளூர்
97. சுப்பிரமணி, திரு. பி.என். - ஆற்காடு
98. சுப்பிரமணியன், திரு. அ.லெ. - திருநெல்வேலி
99. சுப்புலட்சுமி செகதீசன், திருமதி - மொடக்குறிச்சி
100. சுரேஷ் ராசன், திரு. என். - கன்னியாகுமரி
101. செங்குட்டுவன், புலவர் பூ.ம. - மருங்காபுரி
102. செங்கை சிவம், திரு. - பெரம்பூர் (செ.வ.)
103. செல்லக்குமார், டாக்டர் அ. - தியாகராயநகர்
104. செல்வம், திரு. ரெ. - குளித்தலை
105. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன், திரு. - கொளத்தூர் (செ.வ.)
106. செல்வராஜ், திரு. து. - உடுமலைப்பேட்டை
107. சேகரன், திரு. ஆர்.ஆர். - ஓமலூர்
108. சேதுநாதன், திரு. ரா. - திண்டிவனம்
109. சைதை கா. கிட்டு, திரு. - சைதாப்பேட்டை

110. ஞானசேகரன், டாக்டர் ஆ .. மேல்மலையனூர்
111. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்
112. டேவிட் செல்வின், திரு. எஸ். .. ஸ்ரீவைகுண்டம்
113. தங்கமணி, திரு. கே. .. மானாமதுரை (செ.வ.)
114. தங்கம் தென்னரசு, திரு. .. அருப்புக்கோட்டை
115. தங்கவேலன், திரு. சுப. .. கடலாடி
116. தங்கவேல், திரு. அ.ல. .. சேலம்-2
117. தண்டபாணி, திரு. சி.டி. .. கோயம்புத்தூர் மேற்கு
118. தமிழ்க்குடிமகன், முனைவர் மு. .. இளையான்குடி
119. தமிழ்ச்செல்வன், திரு. ஆர். .. அரக்கோணம் (செ.வ.)
120. தமிழ்மணி, திரு. வீ. .. செங்கல்பட்டு
121. தளபதி, திரு. கோ. .. சேடப்பட்டி
122. தனபாலன், திரு. கே.ஆர்.ஜி. .. சேலம்-1
123. தனபால், திரு. வி.ஜி. .. குடியாத்தம்
124. தாமரைக்கனி, திரு. இரா. .. ஸ்ரீவில்லிபுத்தூர்
125. திசைவீரன், திரு. உ. .. பரமக்குடி (செ.வ.)
126. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. .. பேராவூரணி
127. திருவேங்கடம், திரு. பெ.சு. .. கலசப்பாக்கம்
128. துரைசாமி, திரு. பா. .. வரகூர் (செ.வ.)
129. துரை, திரு. கே. .. திருவெறும்பூர்
130. துரைமுருகன், திரு. .. காட்பாடி
131. தெய்வநாயகம், திரு. எ. .. மதுரை மத்தி
132. தேவராஜன், டாக்டர் மு. .. பெரம்பலூர் (செ.வ.)



133. நடராசன், திரு. ஆ .. பேரூர்
134. நடராஜன், திரு. த. .. செஞ்சி
135. நயினா முகமது, திரு. கோ. .. கடையநல்லூர்
136. நன்னன், திரு. கொ.வீ. .. செங்கம் (செ.வ.)
137. நாகரத்தினம், திரு. ச. .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
138. நாசர், திரு. ஏ.வி.ஏ. .. புவனகிரி
139. நிஜாமுதீன், திரு. ஜி. .. நாகப்பட்டினம்
140. நேரு, திரு. கா.நா. .. லால்குடி
141. பசும்பொன் தா. கிருட்டிணன், திரு. .. சிவகங்கை
142. பத்மா, டாக்டர் .. நன்னிலம் (செ.வ.)
143. பரணிகுமார், திரு. பா. .. திருச்சிராப்பள்ளி-1
144. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)
145. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
146. பழனிவேல் ராஜன், திரு. பி.டி.ஆர். .. மதுரை மேற்கு
147. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி
148. பன்னீர்செல்வம், திரு. மு. .. சீர்காழி (செ.வ.)
149. பாண்டுரங்கன், திரு. ந. .. பெரணமல்லூர்
150. பாலகிருஷ்ணன், திரு. சோ. .. முதுகுளத்தூர்
151. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.என். .. பவானி
152. பாலசுப்பிரமணியன், திரு. ப. .. பட்டுக்கோட்டை
153. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை
154. புகழேந்தி, திரு. இ. .. கடலூர்
155. புரட்சிமணி, திரு. ச. .. மங்களூர் (செ.வ.)

156. பூவேந்தன், திரு. த. - பழனி (செ.வ.)
157. பெரியசாமி, திரு. இ. - ஆத்தூர்
158. பெரியசாமி, திரு. என். - தூத்துக்குடி
159. பெரியசாமி, திரு. என்.கே.கே. - ஈரோடு
160. பெரியசாமி, திரு. நா. - பெருந்துறை
161. பெருமாள், திரு. வி. - ஏற்காடு (ஆவா.)
162. பெர்னார்டு, திரு. இரா. - குளச்சல்
163. பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. - சிங்காநல்லூர்
164. பொன்முடி, டாக்டர் க. - விழுப்புரம்
165. பொன்முடி, திரு. எஸ்.எஸ். - பல்லடம்
166. பொன்னம்மாள், திருமதி ஏ.எஸ். - நிலக்கோட்டை (செ.வ.)
167. மகேந்திரன், திரு. இரா. - நாட்ராம்பள்ளி
168. மணிக்கண்ணன், திரு. ஆசெ. - திருநாவலூர்
169. மணி, டாக்டர் அ. - உளுந்தூர்பேட்டை (செ.வ.)
170. மணி, திரு. கோ.சி. - கும்பகோணம்
171. மணி, திரு. டி. - விளவங்கோடு
172. மணி, திரு. ஜி.கே. - பெண்ணாகரம்
173. மணி நாடார், திரு. எஸ்.எஸ். - சாத்தான்குளம்
174. மணிமாறன், திரு. இரா. - திண்டுக்கல்
175. மணிவர்மா, திரு. க. - தண்டராம்பட்டு
176. மதிவாணன், திரு. இரா. - இராயபுரம்
177. மதிவாணன், திரு. செ. - அச்சரப்பாக்கம் (செ.வ.)
178. மனோகரன், திரு. கு. - தருமபுரி



179. மாயவன், திரு. தி.ப. - ஸ்ரீரங்கம்
180. மாரி அய்யா, திரு. பே. - புதுக்கோட்டை
181. மாரிமுத்து, திரு. அ. - வானூர் (செ.வ.)
182. முகம்மது இஸ்மாயில், திரு. எஸ்.எஸ். - அரவக்குறிச்சி
183. முகம்மது கோதர் மைதீன், திரு. - பாளையங்கோட்டை
184. முத்து, திரு. வி. - சங்கரி (செ.வ.)
185. முத்துராமலிங்கம், திரு. ம. - திருமங்கலம்
186. முபாரக், திரு. பா.மு. - கூடலூர்
187. முருகேசன், திரு. பொ. - காஞ்சிபுரம்
188. முல்லைவேந்தன், திரு. வ. - மொரப்பூர்
189. முனிரத்தினம், திரு. ஆ.மு. - சோளிங்கர்
190. மூக்கப்பன், திரு. இரா. - சின்னசேலம்
191. மூக்கையா, திரு. எல். - பெரியகுளம
192. மோகனதாசன், திரு. கோ. - பூம்புகார்
193. மோகன் கந்தசாமி, திரு. ப. - பொங்கலூர்
194. மோசஸ், டாக்டர் எம். - நாகர்கோவில்
195. ரங்கநாதன், திரு. எம். - குன்னூர் (செ.வ.)
196. ரங்கநாதன், திரு. ப. - புரசைவாக்கம்
197. ரவி அருணன், திரு. கே. - தென்காசி
198. ரவிசங்கர், திரு. கு. - விளாத்திகுளம்
199. ராசேந்திரன், திரு. ஏ. - போளூர்
200. ராணி, செல்வி க. - தலைவாசல் (செ.வ.)

| | | |
|---|---|---|
| 201. ராமசாமி, திரு. ஏ.எம். | .. | ஆத்தூர் |
| 202. ராமச்சந்திரன், திரு. செ. | .. | திருப்பரங்குன்றம் |
| 203. ராஜு, திரு. எஸ். | .. | பொள்ளாச்சி |
| 204. ராஜேந்திரன், திரு. எஸ்.கே. | .. | சத்தியமங்கலம் |
| 205. ராஜ்குமார் மன்றாடியார், திரு. என்.எஸ். | .. | காங்கேயம் |
| 206. லட்சுமணன், திரு. வி.கே. | .. | கோயம்புத்தூர் கிழக்கு |
| 207. வாசுகி முருகேசன், திருமதி | .. | கரூர் |
| 208. விசுவநாதன், திரு. இரா. | .. | நத்தம் |
| 209. விஜயகுமார், திரு. கே.எம். | .. | சாத்தூர் |
| 210. விஜயன், திரு. டி.சி. | .. | திருவொற்றியூர் |
| 211. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. | .. | வீரபாண்டி |
| 212. வீரப்பன், திரு. கே.கே. | .. | கபிலர்மலை |
| 213. வெங்கடசாமி, திரு. பி. | .. | ஓசூர் |
| 214. வெங்கடாசலம், திரு. அ. | .. | ஆலங்குடி |
| 215. வெங்கடாசலம், திரு. ஜி.எல். | .. | பாலக்கோடு |
| 216. வெங்கடேசன், திரு. ச.க. | .. | மதுராந்தகம் |
| 217. வெங்கடேசன், திரு. பி.வி.எஸ். | .. | காவேரிப்பட்டினம் |
| 218. வெங்கிடு, திரு. ஜி.பி. | .. | கோபிச்செட்டிப் பாளையம் |
| 219. வேடம்மாள், திருமதி ஏ.ஆர். | .. | அரூர் (செ.வ.) |
| 220. வேதரத்தினம், திரு. எஸ்.கே. | .. | வேதாரண்யம் |
| 221. வேலாயுதன், திரு. சி. | .. | பத்மநாபபுரம் |
| 222. வேலுசாமி, திரு. வ. | .. | மதுரை கிழக்கு |



| | | |
|---|---|---|
| 223. வேல்சாமி, திரு. க. | .. | நாமக்கல் (செ.வ.) |
| 224. வேல்துரை, திரு. பா. | .. | சேரன்மகாதேவி |
| 225. வைதியலிங்கம், திரு. மீ.அ. | .. | தாம்பரம் |
| 226. ஜெனிபர் சந்திரன், திருமதி எஸ். | .. | திருச்செந்தூர் |
| 227. ஜோதிகண்ணன், திரு. மு.ந. | .. | முசிறி |
| 228. ஸ்டாலின், திரு. மு.க. | .. | ஆயிரம் விளக்கு |
| 229. ஹேமச்சந்திரன், திரு. ஜே. | .. | திருவட்டாறு |
| 230. ஆன் டி' மான்டி, திருமதி | .. | நியமனம் |
| 231. வெற்றிடம் | .. | அறந்தாங்கி |
| 232. வெற்றிடம் | .. | சிவகாசி |
| 233. வெற்றிடம் | .. | திருப்போரூர் (செ.வ.) |
| 234. வெற்றிடம் | .. | திருவல்லிக்கேணி |
| 235. வெற்றிடம் | .. | உசிலம்பட்டி |

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்

திரு. கே.வி. வெங்கடபதி .. அரசு தலைமை வழக்கறிஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## ஐப்பசி 26, விக்கிரம—திருவள்ளுவர் ஆண்டு 2031

## 2000 நவம்பர் 11, சனிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** அவர்கள் தலைமையில் காலை 9.30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"கருமம் சிதையாமல் கண்ணோட வல்லார்க்கு
உரிமை உடைத்திவ் வுலகு"

கடமை தவறாமையிலும், கருணை பொழிவதிலும் முதன்மையாக இருப்போருக்கு இந்த உலகமே உரிமையுடையதாகும்.

### 1. வினாக்கள்-விடைகள்

#### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 61, திரு. இரா. விசுவநாதன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**61—**

**மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துதல்**

***35953—திரு. இரா. விசுவநாதன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாணார்பட்டி ஊராட்சி ஒன்றியம், கம்பிளியம்பட்டியிலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[2000 நவம்பர் 11

(அ) மற்றும் (ஆ) 2000-2001 ஆம் ஆண்டில் திண்டுக்கல் மாவட்டம் கம்பிளியம்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மேம்படுத்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, சாணார்பட்டி ஊராட்சி ஒன்றியம், கம்பிளியம்பட்டியிலும், நத்தம் ஒன்றியம் சிறுவடியிலும் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக அரசு உருவாக்க வேண்டுமென்று கேட்டிருந்தேன். கம்பிளியம்பட்டி ஊரில் மட்டும் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக அரசு உயர்த்தி இருக்கிறது. இது மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துவதற்கு முன்பு போடப்பட்ட கேள்வி. அதற்காக எனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு நத்தம் ஒன்றியத்தைச் சார்ந்த சிறுவடியிலும் ஓர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்த ஆண்டு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக ஆக்குவது குறித்து அந்தக் குழு ஆய்வு செய்கிறபோது அந்தப் பள்ளியையும் கருதும்படியாக அரசு சார்பாகத் தெரிவிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டத்தைப் பொறுத்தளவிலே சில இடங்களில் "ரொம்ப remote ஏரியாக்களில் உயர்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. அதுபோன்றுதான் நிலக்கோட்டை தொகுதியிலேகூட நம்முடைய மறைந்த மாமேதை திரு. சி. எஸ். அவர்கள் காலத்திலே விறுவெட்டிலே ஓர் உயர்நிலைப்பள்ளி ஆரம்பிக்கப்பட்டது. இப்போது அங்கே 800-க்கு மேற்பட்ட குழந்தைகள் படித்து வருகின்றார்கள். அவர்கள் வெளியிலே வந்து பரிட்சை எழுத வேண்டுமென்றால் மிகவும் சிரமத்தை அடைந்து கொண்டிருக்கிறார்கள். ஆகையினால் தயவுசெய்து அந்தப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்திக் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மையார் கேட்டதெல்லாம் செய்கின்ற அரசு இந்த அரசு. எனவே, கேட்க வேண்டிய காலத்தில் கேட்பார்களேயானால் கொடுக்க வேண்டிய முறையில் கொடுக்கப்படும்.



2000 நவம்பர் 11]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக்குவது, உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்குவது ஆகியவற்றை மாவட்டவாரியாக தேர்ந்தெடுக்கிறீர்களா அல்லது ஒட்டுமொத்தமாக மாநில அளவில் தேர்ந்தெடுக்கிறீர்களா என்பதை அறிய விரும்புகிறேன். காரணம், என்னுடைய இராமநாதபுரம் மாவட்டம் போன்ற பிற்படுத்தப்பட்ட பகுதிகளிலே பல இடங்களில் உயர்நிலைப் பள்ளி வேண்டுமென்றும், மேல்நிலைப் பள்ளி வேண்டுமென்றும், பணம் கட்டியிருக்கிறார்கள்; கோரிக்கை வைத்திருக்கிறார்கள். இவற்றை எல்லாம் எந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கிறீர்கள் என்பதை இந்த அவைக்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டவாரியாகவும் கருதப்படுகிறது. அந்தப் பள்ளிக்கூடத்தில் படிக்கிற மாணவர்களுடைய எண்ணிக்கை அடிப்படையிலேயும் கருதப்படுகிறது. அதாவது நடுநிலைப் பள்ளி வேண்டுமானால் ஐந்தாவது வகுப்பிலே படிக்கிற மாணவர்களின் எண்ணிக்கை, உயர்நிலைப் பள்ளி வேண்டுமானால் எட்டாவது வகுப்பிலே படிக்கிற மாணவர்களின் எண்ணிக்கை, அடுத்து அந்த வட்டாரத்திலே பக்கத்திலே உள்ள பள்ளிகள், எத்தனை ஊட்டுப் பள்ளிகள் இருக்கின்றன என்றும் கருதப்படுகிறது. அதன் விளைவாக எவ்வளவு பேர் அந்தப் புது வகுப்பில் சேருவதற்கு வருவார்கள் என்பதும் கருதப்படுகிறது.

மலைப்பகுதியோ, மிக மிகப் பின்தங்கிய பகுதியோ, சுற்றுப்புறத்திலே அதிக பள்ளிகள் இல்லாததும் எட்டு கிலோ மீட்டர் அளவுக்கு வேறு உயர்நிலைப் பள்ளி இல்லை என்ற நிலைமை இருக்கிற இடமும் கருதப்படுகிறது. கூடுமான வரையில் ஒவ்வொரு மாவட்டத்திலேயும் பள்ளிகள் எந்தவகையிலாவது உயர்த்தப்பட வாய்ப்பு இருக்கிறதா என்பதும் கருதப்படுகிறது. ஒவ்வொரு தொகுதியிலேயும்கூட ஏதாவது ஒரு பள்ளிக்கூடம் தர முடியுமா என்பதும் கருதப்படுகிறது. ஆனால் இவற்றில் எல்லாம்கூட, அந்தக் கருத்து அடிப்படையில் முன்னுரிமை பெறுகிற பள்ளிகளை விட்டுவிட்டு முன்னுரிமை பெறாத பள்ளிகளை உயர்த்தி வழங்குவதற்கு வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது.

[2000 நவம்பர் 11

முற்பகல் 9-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 62, திரு. ச. அழகுவேலு, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**62—**

**அய்யன் திருவள்ளுவர் பல்கலைக்கழகம்**

***37362—திரு. ச. அழகுவேலு:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகப் பல்கலைக்கழகங்களில் ஏதாவது ஒன்றுக்கு அய்யன் திருவள்ளுவர் பல்கலைக்கழகம் எனப் பெயர் சூட்டப்படுமா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விடையில் ஒரு சிறு திருத்தம். தற்போது அப்படிப்பட்ட ஒரு கருத்துரு எதுவும் அரசாங்கத்திடம் இல்லை.

**திரு. ச. அழகுவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வள்ளுவன் புகழை வையகமெல்லாம் வாரி இறையடா தமிழா" என்ற பாரதியினுடைய கட்டளையை, கனவை நிறைவேற்றுகின்ற அரசு இந்த அரசுதான். புத்தாயிரம் ஆண்டிலே, கன்னியாகுமரியிலே, வானுயர சிலை அமைத்த அரசும் இந்த அரசுதான். ஆகவே, கலைஞர் அவர்கள் தீட்டிய குறளோவியத்திற்கு நோபல் பரிசு கிடைக்க, ஏதாவது ஒரு பல்கலைக்கழகம் முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறளோவியத்திற்கு நோபல் பரிசு போன்ற சிறப்புப் பரிசு வழங்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆசைப்படுவதிலே தவறு இல்லை. ஆனால் எந்தப் பல்கலைக்கழகமும் அதற்காக முயற்சி எடுப்பதற்கு எந்த வழிமுறையும் கிடையாது. இலக்கிய பேரறிஞருடைய நூல் எதுவாக இருந்தாலும் அதுகுறித்து நோபல் பரிசு வழங்குவதற்குரிய நிபுணர் குழுதான் ஆய்வு செய்ய முடியும். அதற்குள்ள தகுதிகளை அவர்கள்தான் தீர்மானிப்பார்கள்.



2000 நவம்பர் 11]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 63 மற்றும் வினா எண் 64 பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.

வினா எண் 65, திரு. கே.எம். விஜயகுமார், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**65—**

**மேல்நிலை குடிநீர்த் தொட்டி**

***6724—திரு. கே.எம். விஜயகுமார்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை நகரில் கிழக்குப் பகுதிக்குத் தனியாக மேல்நிலைக் குடிநீர்த் தொட்டி அமைத்துத் தரும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இப்பணியை 30-11-2000-க்குள் முழுவதுமாக முடித்து, நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட உள்ளது.

**திரு. கே.எம். விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி 2 ஆண்டுகளுக்கு முன்னர் நான் எழுதிக் கொடுத்தது. மாண்புமிகு அமைச்சர் அவர்களும், தானைத் தலைவர் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் ஆசியோடு, அந்தப் பணி அருப்புக்கோட்டை நகரில் இந்த மாத இறுதிக்குள் முடிவுறும் என்று அறிவித்துள்ள கூற்றுக்கு நன்றி. அந்தப் பணிக்காக நிதி ஒதுக்கீடு செய்து கொடுத்த அமைச்சர் அவர்களுக்கு நன்றிகூறி அமர்கின்றேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 66, டாக்டர் ஆ. ஞானசேகரன், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

[2000 நவம்பர் 11

**66—**

**சாலை அமைத்தல்**

***13935—டாக்டர் ஆ. ஞானசேகரன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதி, மேல்மலையனூர் ஒன்றியம், மேல்மலையனூர் பிரதான சாலையிலிருந்து கஞ்சமலை புரவடை வழியாகச சிறுதலைப்பூண்டி வரை புதிய சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வரும் நிதியாண்டில் நிதிநிலைமையைப் பொறுத்து நடவடிக்கை எடுக்கப்படும்.

**டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அந்தச் சாலையை இந்த நிதியாண்டிற்குள் தயவுசெய்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிறைவேற்றித் தருவார்களா என்கின்ற வேண்டுகோளை விடுத்து. அதேசமயத்தில், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்த நிதியாண்டில், நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடுகின்றபோது, கிராமங்களை இணைக்கின்றவகையில் இணைப்புச் சாலைகள் உருவாக்கிட வேண்டுமென்ற அடிப்படையில், அதற்கு ரூபாய் 50 கோடி அளவுக்கு நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். என்னுடைய தொகுதியில் செஞ்சி ஒன்றியத்தில், அணையேரி முதல் மூலநெல்லிமலை வரையிலும், சோ.குப்பம் முதல் பாக்கம் வரையிலும், மேல்மலையனூர் ஒன்றியத்தில், தாதம்பட்டி முதல் ஈயகுணம் வரையிலும், அதேபோல் மேட்டுவயலாமூர் முதல் காட்டுப்பாதை கிராமத்தை இணைக்கின்றவகையிலும், தயவுசெய்து அந்தக் கிராமங்களை இணைக்கின்றவகையில் சாலைகளை ஏற்படுத்துவதற்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்வார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 50 கோடி ரூபாய் திட்டம் என்பது எனக்குச் சரியாகப் புரியவில்லை. அது highways-க்கா அல்லது ஊராட்சி



2000 நவம்பர் 11]

ஒன்றியத்திற்கா அல்லது பஞ்சாயத்துக்கா, இணைப்புச் சாலையா, பிரதமர் திட்டத்தின் கீழ் போடப்படுகின்ற சாலையா என்பதற்கெல்லாம் விளக்கம் இல்லை. இருப்பினும் அதுபற்றி இப்போது விவாதிக்க வேண்டிய அவசியமும் இல்லை. கஞ்சமலை புரவடை வழியாகச் சிறுதலைப்பூண்டி வரை செல்லும் சாலை 3 கிலோ மீட்டர் உள்ளது. அதில் 2 கிலோ மீட்டர் வரை சாலை போடப்பட்டுள்ளது. பாக்கி இருக்கிற ஒரு கிலோ மீட்டருக்கு — அது பிரைவேட் பார்ட்டி பட்டா நிலமாக இருக்கிற காரணத்தால் — நில ஆர்ஜிதம் செய்வதில் அதிக காலதாமதம் ஆகும். நில ஆர்ஜிதத்திற்கு முடிவு எடுத்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவர்களிடத்திலே நேரடியாகச் சென்று ஒப்புதல் கடிதம் பெற்றுத் தருவார்களேயானால், அதை விரைவாக முடிப்பதற்குச் சாத்தியக்கூறுகள் தென்படும். நிதிநிலையைப் பொறுத்தும், அவர் கடிதம் பெற்றுத் தருவதைப் பொறுத்தும் அந்தப் பணி தொடங்கப்படும்.

**டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை அணுகியபோதும், கிராம நெடுஞ்சாலைத் துறை பொறியாளர்களை அணுகியபோதும் இதற்கென்று தனியாக District Rural Development அலுவலகம் செயல்பட்டு வருகிறது என்றும், அந்த அலுவலகத்தை நீங்கள் அணுகினால், அந்தச் சாலைகளை நீங்கள் உடனடியாகப் பெறமுடியும் என்கின்ற ஒரு பதிலை விடுத்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே, மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் மிகப் பணிவுடன் வேண்டிக்கொள்கின்றேன். நான் கடிதம் மூலம் கொடுக்கின்றேன் — இந்தச் சாலைகள் இல்லாத கிராமத்திற்குச் சாலைகளை அமைப்பதற்கு தயவுசெய்து உடனடியாக ஆணையிடுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-40

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாலை யாருடையது; யார் போட வேண்டுமென்பதெல்லாம் பிரச்சினையில்லை. இப்போது, அந்த ஒரு கிலோமீட்டர் தூரமும் பட்டா நிலமாக இருக்கிறது. அதிலே இருக்கிற முக்கிய பிரச்சினையே அதுதான். அந்தப் பட்டா நிலத்தை, நிலச் சொந்தக்காரர்களிடமிருந்து பெற்று, அவர்கள் ஒப்புதல் கொடுப்பார்களேயானால், பணி தொடங்குவதற்கான முயற்சியில் ஈடுபட்டு, நிதி ஆதாரங்களைப் பெற்று அதற்கு பிறகு நடவடிக்கை மேற்கொண்டு பணியைத் தொடங்கலாம்; அல்லது அவர்கள் நிலத்தை ஆர்ஜிதம் செய்து எடுத்துக்கொண்டுதான்

[2000 நவம்பர் 11

சாலை அமைக்க வேண்டுமென்று சொன்னால், சற்றுக் காலதாமதம் ஆகலாம் என்பதையும் அறிவிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 67, திரு. பி. இராசமாணிக்கம், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**67—**

### ஆழ்குழாய்க் கிணறுகள்

***38845—திரு. பி. இராசமாணிக்கம்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒரத்தநாடு தொகுதி, கண்ணந்தங்குடி, மேலையூர், வள்ளிப்பட்டு, ஒக்கநாடு, கீழையூர் ஆகிய கிராமங்களில் அமைக்கப்பட்டுள்ள சமுதாய ஆழ்குழாய்க் கிணறுகள் செயலற்று உள்ளன என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) சமுதாய ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்த பின்பு, அதனைப் பராமரிப்பது அந்தந்தக் கிணற்றின் மூலம் பயன்பெறும் நிலங்களுக்கு உரிய சொந்தக்காரர்களால் அமைக்கப்பட்ட சங்கத்தின் பொறுப்பாகும்.

**திரு. பி. இராசமாணிக்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989-90ஆம் ஆண்டு நமது முதல்வர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த போது, சிறப்புத் திட்டத்தின்கீழ் ஒரு கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்டு, கிட்டத்தட்ட 15 கிராமங்களில் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டன. அதைப் பராமரிக்கிற பொறுப்பு இதுவரை அந்தச் சங்கமும் செய்யவில்லை. வேளாண்மைப் பொறியியல் துறை மூலமாக அதைப் பராமரிக்கின்ற பொறுப்பை ஏற்று, என்ன நோக்கத்திற்காக ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டனவோ, அதை நிறைவேற்றுகிற வகையில் முறையாகச் செயல்படுவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.



2000 நவம்பர் 11]

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்ணந்தங்குடி, மேலையூர் கிராமத்தில் நடுத்தெரு, கூழிக்காடு ஊராட்சி ஆகிய மூன்று இடங்களில் 1992-ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட மூன்று சமுதாய ஆழ்குழாய்க் கிணறுகள் நல்ல முறையில் இன்றைக்கும் இயங்கி வருகின்றன. ஒக்கநாடு, கீழையூர் கிராமத்தில் சமுதாய ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்படவில்லை. கீழ்வள்ளிப்பட்டு, மேல்வள்ளிப்பட்டு மற்றும் ஒக்கநாடு, மேலையூர் ஆகிய கிராமங்களில் 1992-ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட ஆழ்குழாய்க் கிணறுகள் செயலற்று உள்ளன. சமுதாய ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்ட பின்பு, பராமரிப்புக்காக அந்தந்த ஆழ்குழாய்க் கிணற்றின் மூலம் பயன்பெறும் நிலங்களுக்குரிய சொந்தக்காரர்களால் அமைக்கப்பட்ட சங்கத்தின் பொறுப்பாளர்களிடம் ஒப்படைக்கப்படுகின்றன. அந்தச் சங்கங்கள்தான் இச்சமுதாயக் கிணறுகளைப் பராமரிக்க வேண்டும். பழுதுபட்ட மூன்று சமுதாய ஆழ்குழாய்க் கிணறுகளையும் பழுதுநீக்கம் செய்ய மொத்த உத்தேச மதிப்பீடு ரூபாய் 2 இலட்சத்து 51 ஆயிரம் ஆகும். 1977-78 ஆம் ஆண்டு போடப்பட்ட சமுதாய ஆழ்குழாய்க் கிணறுகள் வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் — பிரிக்கப்படாத பழைய தஞ்சை மாவட்டத்தில், 84 சமுதாய ஆழ்குழாய்க் கிணறுகள் — அமைக்கப்பட்டதில் 73 ஆழ்குழாய்க் கிணறுகளில் மோட்டார் பழுது மற்றும் ஆழ்குழாய்க் கிணற்றில் நீர் வரத்து பாதிப்பு ஆகிய காரணங்களால் பழுதுபட்டுள்ளதாக, வேளாண்மைப் பொறியியல் துறையால் கண்டறியப்பட்டு, இதனைச் செப்பனிட ரூபாய் 18 இலட்சத்தில் மதிப்பீடு ஒன்று தஞ்சை மாவட்ட ஆட்சியருக்குக் கருத்துருவுடன் அனுப்பப்பட்டு உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ. ராசேந்திரன்.

**திரு. ஏ. ராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறையின் மூலம், இந்தச் சமுதாய ஆழ்குழாய்க் கிணறுகள் சில ஊராட்சிகளில், சில இடங்களில் செயலற்றுக் கிடப்பது உண்மைதான். இவைகளுக்குப் பதிலாக, திறந்தவெளி கிணறுகள், அந்தக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் ஏற்படுத்தினால் மக்களுக்கு நன்மை ஏற்படும். இதை அரசு செய்ய முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட உத்தேசம் இல்லை.

*முற்பகல் 9-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.ஆர். இராமசாமி.

**திரு. கே.ஆர். இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற சமுதாய ஆழ்குழாய்க் கிணறு அமைக்கும் திட்டத்தை தற்போது அரசாங்கம் நிறுத்தி வைத்திருப்பதாக நான் அறிகிறேன். இதுபோன்ற ஆழ்குழாய்க் கிணறுகளை அமைப்பதற்காக அரசு மீண்டும் முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2000-2001ஆம் ஆண்டில் அக்டோபர் 2000 வரை 3,522 ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. இது நடப்பு ஆண்டு வரைக்கும். 2001-2002-லே இது தொடருகிறதா என்ற அந்த விவரம் என்னிடத்தில் இல்லை. தனி கேள்வி போட்டால் தருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 68, திரு. மீ.அ. வைதியலிங்கம், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**68—**

### பன்னாட்டு மலர் ஏல மையம்

***32602—திரு. மீ.அ. வைதியலிங்கம்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பள்ளிக்கரணையில் பன்னாட்டு மலர் ஏல மையம் அமைக்கும் பணி எப்போது தொடங்கப்படும்?

(ஆ) அதன் இன்றைய நிலை என்ன?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) விரைவில் தொடங்கப்படும்.

(ஆ) ரூ.24.02 கோடி செலவில் பன்னாட்டு மலர் ஏல மையம் அமைக்க மத்திய அரசின் அனுமதி கிடைக்கப்பெறவில்லை. எனவே, ரூ.15.00 கோடி செலவில் சிறிய மலர் ஏல மையம் ஒன்று அமைக்க மீண்டும் மத்திய அரசின் இசைவு கோரப்பட்டுள்ளது.



**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மலர் ஏல மையம் பள்ளிக்கரணை பகுதியிலே ஏற்பட இருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே அறிவித்தார்கள். அந்த இடங்கள் எல்லாம் இன்று பெப்சி நிறுவனத்தைச் சார்ந்த தொழிலாளர்களுக்கு, National Institute of Ocean Technology-க்கு என்று, குடிசைமாற்று வாரியத்திற்கென்று ஆக்கிரமிப்பு செய்து கொண்டிருக்கிறார்களே, எஞ்சிய இடம் இருக்கிறதா, நம்மிடத்திலே இருந்து ஆர்ஜிதம் செய்யப்பட்டு விட்டதா என்பதையெல்லாம் நான் மாண்புமிகு அமைச்சர் மூலமாக அறிந்துகொள்ள விரும்புவதோடு, இந்தத் திட்டம் எப்போது தொடங்கப்படும் என்பதையும் மாண்புமிகு அமைச்சர் மூலம் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை விமான நிலையத்தின் அருகில் உள்ள பள்ளிக்கரணையில் பன்னாட்டு மலர் ஏல மையம் ஒன்று தொடங்கப்படும் என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அவர்களுடைய நிதிநிலை அறிக்கையிலே 1997-98-லே அறிவித்தார்கள். அதற்காக மதிப்பீடு 30 கோடி ரூபாயில் தயாரிக்கப்பட்டது. நிலம் ஒதுக்கப்பட வேண்டும் என்று வருவாய்த் துறையிடம் கேட்கப்பட்டு, வருவாய்த் துறை 30 ஏக்கர் நிலத்தை இந்தப் பன்னாட்டு மலர் ஏல மையத்திற்காக ஒதுக்கீடு செய்து, தமிழக அரசு ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்திற்கும் நிலத்தை ஒதுக்கி, அது இப்போது இந்தத் துறையிடம் உள்ளது. அதிலே யாரும் ஆக்கிரமிப்பு செய்யவில்லை. ஆனால், மத்திய அரசின் Agricultural processed Food products Export Development Authority இந்தத் திட்டத்திற்காக நிதி ஒதுக்கீடு ஒதுக்க முன்பு ஒப்புக்கொண்டு பிறகு 30 கோடி ரூபாய் ஒதுக்க இயலாது சிறிய அளவிலே இங்கே இந்தத் திட்டத்தை தயாரித்து, நீங்கள் மீண்டும் கோரிக்கை அனுப்புங்கள் என்று கேட்டு, 15 கோடி ரூபாயில் இந்த பன்னாட்டு மலர் ஏல மையம் தொடங்குவதற்காக நாம் மத்திய அரசாங்கத்திற்கு அனுமதி கோரி அனுப்பியிருக்கின்றோம். அது Agricultural processed Food Products Export Development Authority-யினுடைய பரிசீலனையிலே இப்போது இருந்து கொண்டிருக்கிறது. இதற்கிடையில் சிறிய அளவில் தமிழக அரசின் ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தின் மூலம் 25 இலட்சம், 30 இலட்சம் ரூபாய் அளவில் நாம் ஒரு மலர் ஏல மையத்தைத் தொடங்கலாம் என்று நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகிறது.

[2000 நவம்பர் 11

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 69 மற்றும் வினா எண் 70 பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.

வினா எண் 71, திரு. ஆர். சக்ரபாணி, மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**71—**

**உரிமம் வழங்குதல்**

***22579—திரு. ஆர். சக்ரபாணி:**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

லோடு ரிக்ஷா ஓட்டும் தொழிலாளர்களுக்கு உரிமம் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. ஆர். சக்ரபாணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது தமிழ்நாட்டில் ஓடுகின்ற இந்த லோடு ரிக்ஷாக்களை ஒவ்வொருவரும் தங்கள் இஷ்டம்போல் 100 சி.சி. 150 சி.சி மோட்டார்களை வைத்து வண்டிகளை ஓட்டுகிறார்கள். அவர்கள் அந்த வண்டிகளை ஓட்டுவதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக சென்னை நகரத்திலே 100 C.C.-க்குக் கீழே ஓடுகின்ற வண்டிகள் 100 C.C.-க்கு அதிகமாக ஓடுகின்ற வண்டிகள் என்ற அடிப்படையிலே மீன் வண்டிகளையெல்லாம் கணக்கு எடுக்க வேண்டுமென்று இந்த அரசு முயற்சி எடுத்து 10-11-1998-ல் கணக்கெடுப்பதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டது. அந்த அடிப்படையிலே 17-11-1998-க்குப் பிறகு வண்டிகளுடைய எண்ணிக்கை கணக்கிடப்பட்டு 100 CC-க்கு குறைவான வண்டிகள் 1870 வண்டிகளும், 100 CC-க்கு அதிகமான வண்டிகள் 993 வண்டிகளும் ஆக 2,863 மீன் பாடி



2000 நவம்பர் 11]

வண்டிகள் இங்கே ஓடிக்கொண்டிருக்கின்றன. இவைகளுக்கு உரிமம் வழங்க வேண்டும் என்று சட்டம் போடுவதற்கு மாநில அரசுக்கு அதிகாரம் கிடையாது. மத்திய அரசாங்கம்தான் Motor Vehicles Act-லே அந்தத் திருத்தத்தைக் கொண்டு வரவேண்டும். அதை கொண்டுவர வேண்டும் என்ற எண்ணத்தோடு மைய அரசுக்கு 17-12-1998 அன்று மோட்டார் வாகன விதிகளுக்கு விதிவிலக்கு அளித்து பதிவு செய்திட கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. தொடர்ந்து மத்திய அரசுக்கு இதை வலியுறுத்தி கடிதமும் எழுதப்பட்டிருக்கிறது. அவர்களிடமிருந்து அதற்கான திருத்தம் பெறப்பட்ட பிறகு இந்த வண்டிகளையும் முறைப்படுத்துவதற்காக, உரிமம் வழங்குவதற்காக அரசு நடவடிக்கைகளை எடுக்கும்.

முற்பகல் 9-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சுமை ரிக்ஷாக்களை ஏற்கெனவே சென்னை மாநகரத்திலே ஒழுங்குபடுத்துவதற்கு பல தடைகள் வழங்கப்பட்டன. அவற்றை நெறிமுறைப்படுத்தி வழங்க வேண்டுமென்று அந்த அமைப்பைச் சார்ந்தவர்கள் எல்லாம் வேண்டுகோள் விடுத்தார்கள். இப்போது சென்னை மாநகரத்தினுடைய பல வீதிகள் மிகக் குறுகலாக இருக்கின்ற காரணத்தினாலே பெரிய வாகனங்கள், லாரி போன்ற பெரிய வாகனங்கள் உட்பகுதிகளுக்குச் சென்று வருவது சிரமமாக இருக்கும். எனவே, பொதுமக்களுக்கு தங்களுடைய சரக்குகளை, பொருள்களை ஏற்றிச் செல்வது கடினமாக இருக்கின்ற காரணத்தினாலே இந்த ரிக்ஷாக்களை வரன்முறைப்படுத்த மீண்டும் மத்திய அரசை வலியுறுத்தி அவர்கள் இந்தத் தொழிலை தொடர்ந்து செய்வதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசு அவர்களை எந்தவிதமாகவும் கட்டுப்படுத்தவில்லை. அவர்களுடைய எண்ணிக்கையை சரி செய்திருக்கிறது. குறிப்பாக 733 சி.வி. என்ற எண் ஒவ்வொரு வண்டிக்கும் வழங்கப்பட்டு இருக்கிறது. ஆகவே கணக்கு எடுக்கப்பட்டிருக்கிறது. சில வரன்முறைகளை அரசு நிர்ணயித்திருக்கிறது. அதற்கேற்ப அவற்றை இயக்குவதிலே எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லை. மத்திய அரசாங்கமும் இந்த உரிமங்களை சரியாக வழங்கிவிடும் என்று

சொன்னால் மேற்படி விபத்துக்கள் இதன் மூலமாக நடைபெறுவதிலிருந்து தடுப்பதற்கு வாய்ப்பாக அமையும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ.வி.ஏ. நாசர்.

**திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று சாலைகளில் ஓடக்கூடிய மீன் வண்டிகள் எல்லாம் 100 C.C.-க்கு மேலாக இருக்கின்றன. அவர்கள் கடுமையான வேகத்தில் செல்கிறார்கள். அவர்கள் பக்கத்திலே மோட்டார் சைக்கிள்கள்கூட போக முடியவில்லை. அந்த அளவுக்கு அவர்கள் வேகமாகச் செல்கிறார்கள். வேகம் அதிகமாக இருக்கின்றதனால் விபத்துக்களும் நடக்கின்றன. எனவே, இந்த ஒழுங்குமுறைத் திட்டம் வருகின்ற வரை அந்த வாகனங்களுக்கு 100 C.C.-க்கு குறைவாகத்தான் மோட்டார்களைப் பொருத்த வேண்டும் என்ற ஒரு ஆணையாவது அரசு பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மோட்டார் வாகனச் சட்டத்தில் மத்திய அரசாங்கம்தான் திருத்தங்களைச் செய்ய வேண்டும். அதற்கான கருத்துருக்களை நாங்கள் அனுப்பியிருக்கிறோம். ஆகவே இதிலே பதிவு செய்து ஓட்டினால் இவ்வளவு பிரச்சினைகள் இருக்காது. அந்த உணர்வோடுதான் மத்திய அரசாங்கத்தை வலியுறுத்தி வருகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 72, திரு. லா. சந்தானம், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**72—**

### பாலத்தை அகலப்படுத்துதல்

***27966—திரு. லா. சந்தானம்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோழவந்தான் தொகுதி, வாடிப்பட்டியின் மையப் பகுதியிலுள்ள தேசிய நெடுஞ்சாலையில் உள்ள பாலத்தை அகலப்படுத்தி, கைப்பிடிச் சுவரை உயர்த்திக் கட்ட அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



தற்பொழுது இல்லை.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு தேசிய நெடுஞ்சாலையாக இருக்கின்ற காரணத்தினாலும் அதிலே வாகன போக்குவரத்து மிக அதிகமாக இருக்கின்ற நிலையிலும் அதிலே அடிக்கடி விபத்துக்கள் நேர்கின்ற நிலை இருக்கின்ற காரணத்தினாலும் அதை அகலப்படுத்தி பாலத்தை ஒழுங்குபடுத்தித் தருவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது தேசிய நெடுஞ்சாலையாக இருக்கின்ற காரணத்தினாலேதான் பிரச்சினை. இப்பொழுது இந்தச் சாலை தேசிய நெடுஞ்சாலை ஆணை குழுமம் — National Highways Authority of India — என்ற மத்திய அரசு நிறுவனத்தால் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. என்றாலும்கூட இந்தப் பாலத்தினுடைய நிலைமையைக் கருதி மாண்புமிகு உறுப்பினர்களுடைய கோரிக்கையையும் ஏற்று உடனடியாக இந்தப் பாலத்தை அகலப்படுத்திக் கட்டுவதற்கு ஆணையிடப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான சாலைகளை மட்டுமே பராமரிக்கின்ற பொறுப்பை நெடுஞ்சாலைத் துறை ஏற்றுக்கொள்கிறது. உலக வங்கித் திட்டத்தின் மூலமாக கிராமப்புற சாலைகளை, மேம்பாடு செய்யப்படுகிற சாலைகளை கிராமங்களில் இருக்கிற அந்த ஊராட்சிகளோ அல்லது ஊராட்சி ஒன்றியமோ நிர்வாகம் செய்வது என்பது, பராமரிப்பது என்பது இயலாத காரியமாக இருக்கிறது. பல கோடி ரூபாய் செலவிலே போடப்பட்டிருக்கிற சாலைகள் அவை. ஆகவே அப்படி உலக வங்கி திட்டத்தின் மூலமாக விவசாய மேம்பாட்டிற்காக போடப்பட்ட சாலைகளை நெடுஞ்சாலைத் துறையே எடுத்து அபிவிருத்தி செய்வதற்கான முயற்சிகளை, பராமரிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புற இணைப்புச் சாலைகள் என்ற திட்டத்தின்கீழ் சாலைகளே இல்லாத ஊர்களுக்கு சாலை அமைக்கின்ற

[2000 நவம்பர் 11

பணியை நெடுஞ்சாலைத் துறை மேற்கொள்கிறது. அந்தச் சாலைகளெல்லாம் ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்ட சாலைகள்தான். எனவே, அந்தச் சாலைகளை மேம்படுத்தி முடிந்த பிறகு அவற்றை ஊராட்சி ஒன்றியத்திற்கே ஒப்படைத்துவிட வேண்டுமென்பதுதான் இப்போது இருக்கக்கூடிய நியதி. அந்த வகையிலே கிராமப்புறச் சாலைகள் மேம்படுத்தப்பட்டு அந்தச் சாலைகள் ஊராட்சி ஒன்றியத்திடம் ஒப்படைக்கப்படுகிறது. அந்தச் சாலைகளைப் பராமரிப்பதற்கென்று ஊராட்சி ஒன்றியங்களிலே தனி நிதி ஒதுக்க வேண்டுமென்றும் அரசு கேட்டுக் கொண்டிருக்கிறது. அதிக அதிகாரங்கள் வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிற உள்ளாட்சி நிறுவனங்கள் இந்தச் சாலைகளையும் பராமரிப்பதற்குத் தயாராக இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 9-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. மணிமாறன்.

**திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய நெடுஞ்சாலைகளில், மாநில நெடுஞ்சாலைகளில் பாலங்கள் கட்டுவது விரைவாக நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய இந்த வேளையில் கிராமங்கள் சூழ்ந்த பேரூராட்சிப் பகுதியிலே முக்கியமான பேருந்துகள் செல்லக்கூடிய சாலைகளின் குறுக்கே, ஆற்றின் குறுக்கே பாலங்கள் கட்டப்பட வேண்டுமென்று அந்தப் பகுதி மக்கள் பல நேரங்களில் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். சென்ற முறைகூட கவனஈர்ப்புத் தீர்மானம் கொடுத்தபோது உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், பேரூராட்சிகளுக்குத் தகுந்த நிதியாதாரம் இல்லாத காரணத்தினால் கட்ட இயலாது என்று பதிலளித்தார்கள். எனவே, நெடுஞ்சாலைத் துறை அதுபோன்ற பாலங்களை எடுத்து, அவற்றைக் கட்டி முடித்து அந்தப் பகுதி மக்கள் பேருந்து வசதிகளைப் பெறவும், விவசாய மக்கள் தங்களுடைய உடைமைகளை நகர்ப் பகுதிக்குக் கொண்டுவர வாய்ப்பாகவும் கிராமப் பகுதியிலே இருக்கக்கூடிய, பேரூராட்சிப் பகுதியிலே இருக்கக்கூடிய அவசரத் தேவை என்று கருதக்கூடிய அந்தப் பாலங்களைக் கட்டிக் கொடுக்க வேண்டும். குறிப்பாக, திண்டுக்கல் தொகுதியில் இருக்கக்கூடிய குடகனாற்றின் குறுக்கே ஐயம்பாளையம், ஆத்துப்பட்டி பாலங்களை — மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நினைவிருக்கும் என்று நினைக்கிறேன், இது சம்பந்தமாகப் பலமுறை அவரிடம் நான் பேசியிருக்கிறேன். எனவே,— இந்த ஆண்டு நபார்ட் திட்டத்திலே அது சேர்த்துக்கொள்ளப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.



2000 நவம்பர் 11]

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நபார்ட் திட்டம் என்பதே, விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த கிராமப்புற மக்கள் வாழ்கிற பகுதிகளுக்காக இருக்கிற திட்டம்தான். அந்தத் திட்டம் நகராட்சிக்கோ, பேரூராட்சிக்கோ வராது. ஆகவே, பேரூராட்சிக்குட்பட்ட சாலைகளைப் பேரூராட்சிகள்தான் பராமரிக்க வேண்டும். பேரூராட்சிக்குட்பட்ட சாலைகளிலேயுள்ள பாலங்களைப் பேரூராட்சிகள்தான் கட்ட வேண்டும். அதேபோல், நகராட்சிக்குச் சொந்தமான சாலைகளை நகராட்சிகள்தான் பராமரிக்க வேண்டும். நகராட்சிக்குச் சொந்தமான சாலைகளிலேயுள்ள பாலங்களை நகராட்.சிகள்தான் கட்ட வேண்டும். பேரூராட்சிக்கும், நகராட்சிக்கும் நிதியாதாரத்தை நகர்ப்புற வளர்ச்சி வங்கியின் மூலமாகப் பெறுவதற்கு வாய்ப்புக்கள் இருக்கின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. தேசிய நெடுஞ்சாலையில் களம் அமைப்பது, தேசிய நெடுஞ்சாலை ஓரங்களில் சிற்றுண்டி விடுதி அமைப்பது, போன்றவைகளெல்லாம் இருப்பது போக்குவரத்திற்கு இடைஞ்சலாக இருந்து விபத்து நடைபெறுகிறது. இதைத் தடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா? அதுமட்டுமல்லாமல், தேசிய நெடுஞ்சாலையில் தனியார்கள் சிற்றுண்டி விடுதி வைக்கிற காரணத்தினால் அவர்களுக்கு இலாபம் வருகிறது. ஆகவே, அதுபோன்ற பகுதிகளில் அரசாங்கத்தின் மூலமாக மோட்டல் வைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலைத் துறைக்கும் இந்தக் கேள்விக்கும் தொடர்பில்லை. என்றாலும், நெடுஞ்சாலையிலே தேசிய நெடுஞ்சாலையாக இருந்தாலும், மாநில நெடுஞ்சாலையாக இருந்தாலும், அவற்றைப் பராமரித்துப் பாதுகாப்பது என்ற கடமை அரசுக்கு இருக்கிறது. அந்தச் சாலையை யாராவது ஆக்கிரமிப்பு செய்தாலோ அல்லது சாலையில் யாராவது ஆக்கிரமிப்பு செய்து சிற்றுண்டிக் கடைகள் வைத்தாலோ, அல்லது களமாகப் பயன்படுத்தினாலோ சட்டப்படி நடவடிக்கை எடுப்பதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. அதை இன்னும் கடுமையாக்குவதற்கு விரைவில் (Highways Act) நெடுஞ்சாலைச் சட்டம் என்ற ஒன்று இந்த அவையிலே வரவிருக்கிறது. அதிலே இவையெல்லாம் எடுத்துக்கொள்ளப்படும்.

[2000 நவம்பர் 11

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.எம். விஜயகுமார்.

**திரு. கே.எம். விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருப்புக்கோட்டை நகரிலே அமைந்திருக்கின்ற இரயில்வே மேம்பாலம் மிகவும் குறுகலானதாகவும், போக்குவரத்திற்கு இடைஞ்சலாகவும் அடிக்கடி விபத்துக்கள் நேருகின்ற ஒரு பாலமாகவும் இருக்கின்றது. ஏற்கெனவே நான் இரண்டு முறை இந்த அவையிலே அந்தப் பாலத்தை அகலப்படுத்தும் பணியைச் செய்ய வேண்டுமென்ற கோரிக்கையைப் பணிவோடு சமர்ப்பித்திருக்கிறேன். மேலும், அதற்கான ஆய்வுப் பணிகளெல்லாம் முடிந்து மதிப்பீடுகள் தயாரித்து அரசுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் அந்தப் பாலத்தை அகலப்படுத்தும் பணிக்கான நிதியை ஒதுக்கீடு செய்து இந்த ஆண்டே அந்தப் பணியைச் செய்வதற்குத் தக்க நடவடிக்கைகளை எடுப்பாரா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-00

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பாலம் அகலப்படுத்தப்பட வேண்டிய பாலம்தான். என்றாலும் புறவழிச் சாலை ஒன்று அருப்புக்கோட்டைக்கு அமைக்கப்பட்டுவிட்ட காரணத்தினால் அந்தப் பாலத்தில் போக்குவரத்து அவ்வளவாக இல்லை என்று கருதப்படுகிறது. என்றாலும்கூட அந்தப் பாலத்தை அகலப்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னிடத்திலே நிதியாதாரத்தைக் கேட்கிறார்கள். நானும் நிதியாதாரத்திற்காகத்தான் காத்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலைக்குச் சொந்தமான கிராமங்களை இணைக்கக்கூடிய சாலைகள் எடப்பாடி தொகுதியில் மட்டும் அல்ல தமிழகத்தின் பல்வேறு பகுதியிலே மிக மோசமான நிலையிலே இருப்பதை அரசு அறியுமா? அவற்றையெல்லாம் செப்பனிட இந்த அரசு என்ன திட்டம் தீட்டியிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கிராமப்புறச் சாலை என்று எதைக் குறிப்பிடுகிறார் என்று எனக்குத் தெரியவில்லை.



2000 நவம்பர் 11]

நெடுஞ்சாலைக்குச் சொந்தமான கிராமங்களை இணைக்கக்கூடிய மெட்டல் போடப்பட்ட சாலைகள் அல்லது ஏற்கெனவே தார் போடப்பட்ட சாலைகள் என்று இருக்கின்ற சாலைகள் Other District Roads என்ற வகையிலே, இதர மாவட்டச் சாலைகள் என்ற வகையிலே வருகின்றன. அவை ஏறத்தாழ தமிழ்நாட்டில் 40,000 கிலோ மீட்டர் இருக்கின்றன. இந்த 40,000 கிலோ மீட்டருமே ஏறத்தாழ கடந்த 18 ஆண்டு காலமாக பராமரிக்கப்படாமல் பாழ்பட்டுப் போயிருக்கின்றன என்பது உண்மை. அவற்றையெல்லாம் சீர்திருத்த வேண்டும், சீர்படுத்த வேண்டும் என்பதற்காக சிறப்பு நிதி பெறப்பட்டு அதிலே நமக்கு இருக்கிற சக்தி, இலாகாவினுடைய நிலைமை, தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய ஒப்பந்தக்காரர்களுடைய தன்மை இவற்றை எல்லாம் கணக்கிட்டு ஓராண்டு காலத்தில் 12,000 கிலோ மீட்டர்தான் சரி செய்ய முடியும் என்று கணக்கிடப்பட்டு அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 400 கோடி ரூபாய் ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். அந்த 400 கோடி ரூபாயில் 12,000 கிலோ மீட்டர் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. மீதிப் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் எஸ்.டி. மங்காடு பகுதியிலே ஒரு பாலம் இருந்தது. 100 மீட்டர் தூரம் உள்ள அந்தப் பாலம் உடைக்கப்பட்டு புதிய பணி ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் அந்தப் பணி நிறைவுபெறாத காரணத்தினால் அந்த 100 மீட்டர் தூரத்தைக் கடப்பதற்கு 15 கிலோ மீட்டர் சுற்றி வருகிற ஒரு துர்பாக்கிய நிலை கடந்த 3 ஆண்டுகளாக இருந்து வருகிறது. அதை நீங்கள் கனிவுடன் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, அந்த மேற்குக் கடற்கரைச் சாலையில் கிட்டத்தட்ட 30 கிலோ மீட்டர் சாலை என்னுடைய தொகுதியிலே வருகிறது. வேலை ஆரம்பிக்கப்பட்டு 3 ஆண்டுகளாகி விட்டன. இருந்த ரோடும் மிகவும் பழுதடைந்திருக்கின்ற ஒரு சூழ்நிலை. ஆடு நுனிப்புல் மேய்வதுபோல அங்கும் இங்குமாக தொட்டுத் தொட்டு வேலைகள் செய்திருக்கிறார்களே தவிர போக்குவரத்திற்கு ஏற்புடையதாக அந்தச் சாலை இல்லை. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மற்றும் நம்முடைய நிர்வாகத்தினுடைய செயலாளர் எல்லாம் வந்து பார்வையிட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அதைப் பற்றித் தெரியும். எப்போது அந்த வேலையை முடித்துத் தருவீர்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

[2000 நவம்பர் 11

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மங்காடு பாலம் அண்மையிலே 3 தலைமைப் பொறியாளர்களை அனுப்பி அதிலே இருக்கின்ற சிக்கல் ஆய்வு செய்யப்பட்டு இப்போது அந்தச் சிக்கல் என்ன என்று கண்டுபிடிக்கப்பட்டு, நோய் என்ன என்று கண்டுபிடிக்கப்பட்டு அதற்குரிய மருந்து செலுத்தப்பட்டிருக்கிறது. விரைவில் அந்தப் பாலம் கட்டி முடிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அவரிடத்திலே நான் கேட்டுக்கொள்வது மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களும், அந்த ஊர் பொதுமக்களும் சற்று ஒத்துழைக்க வேண்டும். அந்த ஒத்துழைப்பு முழுமையாக இல்லை என்று நான் அறிகின்றேன். யாராவது பணி செய்யப் போனால் ஏதாவது ஒரு பிரச்சினையைச் சொல்லி தகராறு செய்து அனுப்பிவிடுகிறார்கள். அதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவனத்திலே கொள்ள வேண்டும். அவரும் உதவ வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேற்குக் கடற்கரைச் சாலையும் அதுபோல Construction Corporation, கட்டுமானக் கழகத்தினிடத்திலே ஒப்படைக்கப்பட்டது. அப்படி ஒப்படைப்பதற்கே காரணம் கன்னியாகுமரி மாவட்டத்தில் குறிப்பாக ஒப்பந்தக்காரர்கள் அதை உரிய முறையில் எடுப்பதற்கு முன்வருவதில்லை. அது ஒரு சங்கடம். அப்படிப் போட்டாலும் அதிக தொகையிலே போடுகிறார்கள். அதை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அந்தச் சூழ்நிலையில் கட்டுமானக் கழகத்தினிடத்திலே ஒப்படைக்கப்பட்டது. கட்டுமானக் கழகப் பணியிலே சற்றுத் தொய்வு ஏற்பட்டிருக்கிறது என்ற காரணத்தினால் 4 பகுதிகள் அவர்களிடத்திலே கொடுக்கப்பட்டதிலிருந்து இரண்டு பகுதிகளை எடுத்து தனி கான்டராக்டரிடத்திலே இப்போது ஒப்படைத்திருக்கிறோம். தேவைப்பட்டால் இந்த இரண்டு பகுதிகளையும் எடுத்து தனி ஒப்பந்தக்காரரிடத்திலே கொடுப்பதற்கும் நான் ஏற்பாடு செய்திருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எவ்வளவு ஆர்வம் கொள்கிறார்களோ அதைவிட நான் அதிலே ஆர்வமாக இருக்கிறேன் மேற்கு கடற்கரைச் சாலையிலும், மங்காடு பாலத்திலும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 73, திரு. மு.பெ. சாமிநாதன், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.



2000 நவம்பர் 11]

**73—**

**சாலையை அகலப்படுத்துதல்**

**•29604—திரு. மு.பெ. சாமிநாதன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், வெள்ளக்கோவில் தொகுதி, சின்னதாராபுரம் — பள்ளப்பட்டிச் சாலையை அகலப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சாலையானது சின்னதாராபுரத்திலிருந்து அரவக்குறிச்சி வழியாக பள்ளப்பட்டி செல்லக்கூடிய சாலை. இந்தச் சாலையில் பெரும் பகுதி என்னுடைய தொகுதியின் வழியாகச் செல்கிறது. இது ஒரு விதத்தில் ஈரோடு மாவட்டத்தினுடைய தென் பகுதி மக்களுக்கு, மதுரை செல்லக்கூடியவர்களுக்கு ஒரு ஷார்ட்-கட்-ஆக அமைந்துள்ளது. ஆனால் தொலை தூரம் சென்று சுற்றி வரக்கூடிய வாகனங்கள் ஈரோடிலிருந்து கரூர், மற்ற பகுதிகளிலேயிருந்து கரூர் சென்று மதுரை செல்லக்கூடிய அளவிலே இருக்கின்றதை மாற்றி, இந்த வழியாகச் செல்வதற்கு குறுகிய வழிச் சாலையாக அமைந்திருக்கிறது. இந்தச் சாலையைச் செப்பனிட்டு, தரம் உயர்த்தித் தந்தால் நிச்சயமாக ஈரோடு மாவட்டத்தினுடைய தென்பகுதி மக்களுக்கு முழுப் பயன் அளிக்கக்கூடிய சாலையாக இருக்கும். அதனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து இந்தச் சாலையைச் செப்பனிட்டு அகலப்படுத்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-05*

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடனடியாக எடுத்துக்கொள்வதற்கு வாய்ப்பு இல்லை என்பதுதான் என்னுடைய பதிலிலே இருக்கிற அர்த்தம். இது ஏறத்தாழ 9.6 கிலோமீட்டர் தொலைவு இருக்கிறது. 9.6 கிலோமீட்டர்

வரையிலே உள்ள அந்தப் பகுதி 3.75 மீட்டர் அகலத்திலே இருக்கிறது; ஒரு வழிப்பாதையாகத்தான் இருக்கிறது. அதை மேம்படுத்துவதற்கு அல்லது அகலப்படுத்துவதற்கு 50 இலட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. நிதியாதாரம் கிடைக்கிறபோது இந்தச் சாலையை அகலப்படுத்தப்படுகிற பணிகள் எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 74, திருமதி வாசுகி முருகேசன், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**74—**

**கோவில் நிலங்களைக் கைப்பற்றுதல்**

***29533—திருமதி வாசுகி முருகேசன்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் நகரத்தில் பசுபதீஸ்வரர் கோவில் நிலங்கள் பலரால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதைக் கைப்பற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) நீண்டகாலமாக ஆக்கிரமிப்புகள் உள்ள நிலங்களுக்கு சிட்டா அடங்கல் நகல் பெற விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் திருக்கோவில் நிலங்களை சுவாதீனம் பெற வழக்குமன்றத்தில் வழக்குகள் தொடரப்பட்டும், 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலைக்கொடைகள் சட்டத்தின் புதிய சட்டப் பிரிவு 78 மற்றும் 79-ன்கீழ் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டும் வருகின்றன.

**திருமதி வாசுகி முருகேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோவிலுக்குச் சொந்தமாக எவ்வளவு ஏக்கர் நிலம் உள்ளது? அதில் கோவிலுக்கு என்று எவ்வளவு வருவாய் வருகிறது?





எவ்வளவு நிலம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கரூரில் இருக்கிற அருள்மிகு கல்யாண பசுபதீஸ்வரர் கோவில் என்பது சேக்கிழாரின் பெரியபுராணத்தோடு தொடர்பு கொண்ட எறிபத்தநாயனாருடைய வரலாற்றோடும், புகழ்ச் சோழன் வரலாற்றோடும் தொடர்புடைய கோவில். இதற்கு உண்மையிலே 3,071 ஏக்கர் நிலம் இருக்கிறது. ஆனால் அதில் வியப்பு என்னவென்றால், 40 ஆண்டுகளுக்கு முன்னாலே பல நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டு, இப்போது கோவில் கையில் இருக்கின்ற நிலம் 10 ஏக்கர் மட்டும்தான். கோவில் பெயரில் பட்டா இருக்கிற நிலம் 193 ஏக்கர். எனவே, முதலில் 183 ஏக்கர் பட்டா உள்ள நிலங்களை மீட்க வேண்டியிருக்கிறது. பிறகு நமது நிலங்களை, பிறர் பட்டா செய்துகொண்ட நிலங்களையெல்லாம் மீட்பதற்குக் கடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருக்கிறது. ஆக, இந்த கரூர், திருச்சி இரண்டு மாவட்டங்களில் 36 கிராமங்களில் இதற்கு 3,071 ஏக்கர் நிலங்கள் இருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

**திருமதி வாசுகி முருகேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கோவிலைப் போல தமிழ்நாட்டிலுள்ள மற்ற கோவில் நிலங்களில் ஆக்கிரமிப்பு உள்ளதை அகற்ற அரசு என்ன நடவடிக்கை எடுத்து வருகிறது? அதுபோல கோவில் நிலத்தில் பல ஆண்டுகளாகக் குடியிருப்பவர்களுக்குப் பட்டா ஏதாவது கொடுக்கப்பட்டுள்ளதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோவில் தொடர்பாகவே 127 வழக்குகள் நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. மேலும், அந்த நிலங்களை மீட்பதற்கு வழக்குகள் பதிவு செய்யப்பட வேண்டுமென்றால் அதிக அளவு நீதிமன்றக் கட்டணம் கட்ட வேண்டியிருக்கிறது. இந்தக் கட்டணத்தைக் கட்டுவதற்குக்கூட இந்தக் கோவில்களுக்கு அதிக வழி இல்லையென்பது குறிப்பிடத்தக்கது. எனவே, அரசு வேறு கோவில்களிலேயிருந்து இந்தக் கட்டணத்தைப் பெற்று இந்த வழக்குகளைத் தொடர வேண்டிய நிலை இந்த கரூர் பசுபதீஸ்வரர் கோவிலுக்கு இருக்கிறது. அதேநேரத்தில் அண்மைக் காலத்திலே தடை செய்யப்பட்ட அல்லது தவிர்க்க முடியாத நிலைகளில் பட்டாக்கள் வாங்கியவர்கள் பல பேர் இருக்கிறார்கள். எடுத்துக்காட்டாகச் சொல்ல வேண்டுமென்றால்

கரூரில் ஒரு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தன் பெயரிலே பட்டா வாங்கியிருக்கிறார். அது இப்போது இரத்து செய்யப்பட்டுள்ளது. அதுபோல திரு. இறையன்பு என்ற நம்முடைய மாவட்ட ஆட்சித் தலைவர் காஞ்சிபுரத்தில் இருந்தபோது வனச்சியம்மன் கோவிலுக்குச் சொந்தமானதை இன்னொருவர் பட்டா போட்டுக்கொண்டார். அதுவும் இரத்து செய்யப்பட்டுள்ளது. எனவே, யார் யாரெல்லாம் தவறான முறையில் பட்டா போட்டிருக்கிறார்களோ, மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம், வட்டாட்சியர் மூலம், தொடர்பு கொண்டு இது கோவிலுக்கு உடைமை என்று சொத்துப் பதிவேட்டில் ஆவணம் இருக்குமானால், அதை முறையாக இரத்து செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இன்னும் சொல்லப்போனால் அண்மையில் திருவான்மியூரில் இருக்கிற மருந்தீஸ்வரர் கோவிலுக்குச் சொந்தமான 6.79 ஏக்கர் நிலத்தில் 179 பேர் ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார்கள். இருபது நாட்களுக்கு முன்னாலே அவர்கள்மீது நடவடிக்கையெடுக்கப்பட்டு இப்பொழுது நான்கு பேர் மீது வழக்கு தொடரப்பட்டுள்ளது. மேலும், 179 இடங்களையும் மீட்பதற்கும், அதை முறைப்படுத்துவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இதுபோன்று பல பணிகள் தொடர்ந்து நடைபெறுகின்றன.

*முற்பகல் 10-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 75, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**75—**

**புதிய மாவட்டம்**

***38651—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர் மாவட்டத்திலிருந்து விருத்தாசலத்தைப் பிரித்து புதிய மாவட்டமாக அறிவிக்க அரசிடம் ஏதேனும் செயற்குறிப்பு உள்ளதா?

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



இல்லை.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது கடலூர் மாவட்டத்திலுள்ள விருத்தாசலம் பகுதியானது மிகவும் பிற்படுத்தப்பட்டிருக்கின்ற பகுதி ஆகும். அதுமட்டுமல்லாமல், அந்தக் கடலூர் மாவட்டம் கிழக்கு மேற்காக மிகத் தொலைவான தூரத்திலே பரந்து கிடக்கின்ற ஒரு மாவட்டம். இதிலே இந்த மாவட்டத்திலுள்ள திருமுட்டம் ஊரிலேயிருந்து மாவட்டத் தலைநகர் கடலூருக்குச் செல்வது என்றால் நேரடியாகப் போக்குவரத்து வசதிகூட கிடையாது. வடலூர் வந்து இன்னொரு பேருந்திலேதான் கடலூர் செல்ல வேண்டும். ஆகவே, இந்த விருத்தாசலம் பகுதியை மேம்படுத்துவதற்காக இங்கேயுள்ள பகுதிகளிலே பெரிய ஒன்றியமாக உள்ள காட்டுமன்னார் கோவில், கீரப்பாளையம் ஒன்றியத்திலிருந்து பகுதிகளைப் பிரித்து திருமுட்டத்தை ஒரு ஒன்றியமாக அமைத்து, அதோடு சேத்தியாத்தோப்பு பகுதியையும் சேர்த்து, சேத்தியாத்தோப்பு வட்டமாக அமைத்து இந்த விருத்தாசலம் மாவட்டம் என்ற ஒரு புதிய மாவட்டத்தை உருவாக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டங்கள் புதிதாகப் பிரிக்கப்பட வேண்டும்; வட்டங்கள் பிரிக்கப்பட வேண்டும்; அதுபோல வருவாய்க்கோட்டங்கள் பிரிக்கப்பட வேண்டுமென்பதிலே இந்த அரசுக்கு கருத்து வேறுபாடு கிடையாது. மாவட்ட நிர்வாகம் சிறப்பாகச் செயல்பட வேண்டுமேயானால், மக்கள் குறைகள் உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டுமானால், சமூக நலத் திட்டங்களைக் குறைபாடின்றி அமல் நடத்த வேண்டுமானால், பிற்படுத்தப்பட்ட மாவட்டம் உயர வேண்டுமானால் மாவட்டப் பிரிவினை வரவேற்கத் தகுந்த கொள்கைதான். அதன் அடிப்படையிலே இந்த அரசு கலைஞர் அவர்களின் தலைமையிலே பொறுப்பேற்றதற்குப் பிறகு 4 மாவட்டங்கள்—நாமக்கல், திருவள்ளூர், தேனி, திருவாரூர் ஆகியவற்றை — உருவாக்கியிருக்கிறது; புதிய வட்டங்கள் 24-ஐ உருவாக்கியிருக்கிறது; புதிய வருவாய்க் கோட்டங்கள் 8-ஐ உருவாக்கியிருக்கிறது. ஆனால் மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்கக்கூடிய கேள்வி ஒருபுறத்திலே நியாயமாக இருந்தாலும்கூட, நிதிநிலை நெருக்கடியின் காரணமாக தனி அதிகாரிகளை நியமனம் செய்ய வேண்டும், கட்டடம் கட்ட வேண்டும்; அதுபோலவே தொலைபேசி, வாகனங்கள்; இதற்கு நிதிப் பற்றாக்குறை இருக்கிற

[2000 நவம்பர் 11

காரணத்தினாலே இப்போதைக்கு அது ஆய்வில் இல்லை. அடுத்து வீட்டு பட்டியல் கணக்கெடுப்பு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மக்கள் தொகை கணக்கெடுப்பு 1-1-2001 இலேயிருந்து 31-3-2001 வரை நடந்து முடிந்ததற்குப் பிறகுதான் மாவட்டப் பிரிவினை சம்பந்தமாகவே பேச முடியும். இந்த நிலையில் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை நியாயமாக இருந்தாலும் இப்பொழுது அது இயலாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. குழந்தை தமிழரசன்.

**திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருத்தாசலத்தை மையமாகக் கொண்டு ஒரு தனி மாவட்டம் அமைப்பது முற்றிலும் சரியான கோரிக்கையாகும். இதை அந்தப் பகுதி மக்களும் நானும் பல ஆண்டுகளாகவே வற்புறுத்தி வருகிறோம். சோழர் காலத்திலேயுள்ள சோழர்கள் விருத்தாசலத்தை மையமாகக் கொண்டு அந்தப் பகுதியை ஆட்சி செய்து வந்திருக்கிறார்கள். தென்னார்க்காடு மாவட்டம் ஒன்றுபட்ட தென்னார்க்காடு மாவட்டமாக இருந்த நேரத்திலே, விருத்தாசலம், விழுப்புரம், கடலூர் ஆகிய 3 ஊர்களை மையமாக வைத்துப் பிரிப்பது அரசினுடைய எண்ணத்திலே இருந்தது. அது இப்பொழுது விழுப்புரம், கடலூர் என்று பிரிக்கப்பட்டிருக்கிறது. எனவே, விருத்தாசலத்தினுடைய நிர்வாக வசதிக்காகவும், தற்போது திட்டக்குடி பகுதியிலேயிருக்கின்ற மக்கள் 80 கிலோமீட்டர் தூரம் வந்து விருத்தாசலத்தைக் கடந்து கடலூருக்குத் தங்களுடைய குறைகளைப் போக்குவதற்காக வந்துகொர்ண்டிருக்கிறார்கள். இப்படிப் பல பிரச்சினைகளை சட்டம் ஒழுங்கு பிரச்சினை உட்பட, தீர்ப்பதற்காக அந்த விருத்தாசலத்தை மையமாகக் கொண்டு மாவட்டத் தலைநகரமாக அமைப்பது முற்றிலும் சரி. எனவே, அமைச்சரவர்களை நாங்கள் வேண்டுவது, பரிசிலனைக்கு எடுத்துக்கொண்டால்கூடப் போதும், நாங்கள் மிக்க மகிழ்ச்சியடைவோம்; இந்த அரசுக்கு நன்றி சொல்வோம். நிர்வாகத் திறன் கொண்டு கலைஞர் அவர்கள்தான் பல மாவட்டங்களை உருவாக்கியிருக்கிறார்கள். எனவே, கலைஞருடைய ஆட்சியில் இந்தக் கோரிக்கையை, மாண்புமிகு அமைச்சரவர்கள் பரிசிலனைக்கு எடுத்துக் கொள்கிறோம் என்று அறிவித்தால்கூடப் போதும். அதை அறிவிப்பார்களா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் தொகை கணக்கெடுப்புப் பணி முடிவடைந்ததற்குப் பிறகு பரிசிலிக்கப்படும்.



2000 நவம்பர் 11]

முற்பகல் 10-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ச. அழகிரி.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரம், காட்டுமன்னார்கோயில் பகுதிகளை உள்ளடக்கி திருமுட்டத்தை ஒரு தனிதாலுக்காவாகவும், ஊராட்சி ஒன்றியமாகவும் மாற்றவேண்டுமென்று 1991-லிருந்து நீண்டகாலமாக கோரிக்கைகளை வைத்து வருகிறோம். எனவே அதனை ஏற்று, திருமுட்டத்தை தனி ஊராட்சி ஒன்றியமாகவும், தனி வட்டமாகவும் மாற்றித்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே இருக்கக்கூடிய அத்தனை சட்டமன்ற உறுப்பினர்களைப் பொறுத்தமட்டில், நிர்வாக வசதிக்காக புதிய கோட்டங்களும் மாவட்டப் பிரிவினைகளும் தேவைப்படுகின்றன என்ற கருத்து தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு, அரசுக்குக் கடிதங்கள் மூலமாகவும் அவருடைய கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. ஏற்கெனவே இதுகுறித்து தடையாணை இருக்கிற காரணத்தாலே, மக்கள்தொகை கணக்கெடுப்பு (சென்சஸ்) முடிந்ததற்குப் பிறகுதான் மற்றவற்றைப் பரிசிலிக்கமுடியும் என்பதை நான் இங்கே பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 76, திரு. நா. பெரியசாமி, மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

**76—**

**நெசவாளர்க்குத் தனி வங்கி**

***37133-திரு. நா. பெரியசாமி:**

***மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—***

***(அ) நெசவாளர்களின் நலன் கருதி தனி வங்கி ஏற்படுத்துவது குறித்த கோரிக்கை அரசுக்கு வந்துள்ளதா?***

***(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?***

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தற்போது நிதி உதவி செய்யும் நிறுவனங்களே (குறிப்பாகக் கூட்டுறவு அமைப்பு) தமிழ்நாடு கைத்தறித் துறையில் உள்ள நிதி தேவைகளை அக்கறையுடன் கவனிக்க இயலும் என்பதாலும், இதில் ஏதேனும் இடர்பாடுகள் ஏற்படுமாகில் மேற்சொன்ன அமைப்புகளே தங்களுக்குள் ஒருங்கிணைந்து தீர்த்துக்கொள்ள இயலும் என்பதாலும், கைத்தறித் துறைக்கென தனி வங்கி தேவையில்லை என்று ரிசர்வ் வங்கி தெரிவித்த கருத்தினை ஏற்று, கைத்தறித் துறைக்கென தனி வங்கி அமைக்கும் செயற்குறிப்பு கைவிடப்பட்டது.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெசவாளர்களின் பிரச்சினை குறித்து ஆய்வு செய்வதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 1998 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்ட உயர்மட்டக் குழு, மாநிலம் முழுவதும் நெசவாளர்களைச் சந்தித்தபோது, ஒரு சேர மாநிலம் முழுவதும் வலியுறுத்திய கோரிக்கை, நெசவாளர்களுக்கு என்று தனி வங்கி அமைக்கவேண்டும் என்பதுதான். இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்த நிதி நிறுவனங்களில், அவர்கள் அன்றாட நடவடிக்கைகளை மேற்கொள்கிறபோது, ஏராளமான நடைமுறைப் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. எனவேதான் நெசவாளர்களுக்கு என்று தனி அமைப்பை ஏற்படுத்தி, அன்றாட நடவடிக்கைகளை எளிதாக மேற்கொள்வதற்காக தனி வங்கி அமைக்கவேண்டிய அவசியம் இருப்பதாக வலியுறுத்தப்பட்டு, அது உயர்மட்டக்குழுவாலும் பரிந்துரையாகச் செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே இதை மீண்டும் ரிசர்வ் வங்கிக்கு எடுத்துக்கூறி மத்திய அரசாங்கத்தோடு பேசி, தனி வங்கி அமைக்க மாநில அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு பொறுப்பேற்றபின்பு காசுக்கடன் வசதி என்பது என்ன காரணத்திற்காக உபயோகப்படுத்தப் படவேண்டுமோ அந்தக் காரணத்திற்காகத்தான் உபயோகப்படுத்தப்படவேண்டும் என்று சொல்லப்பட்டது. ஆனால் கடந்த காலத்திலே காசுக்கடனுடைய உச்ச எல்லையை, தெரிந்தோ தெரியாமலோ, தேவையிருந்தோ, தேவையில்லாமலோ, முழுமையாகப்





பெற்றுவிடக்கூடிய ஒரு சூழ்நிலை இருந்தது. அதற்காக வட்டி பெருமளவில் கட்டக்கூடிய சூழ்நிலையும் இருந்தது. அதன் காரணமாக நெசவாளர் சங்கங்கள் பெரும் நட்டத்தில் இருந்தது உண்மை. ஆனால் இந்த அரசு, காசுக்கடனைப் பொறுத்தவரையிலே, தேவையில்லாமல் காசுக்கடனை எடுக்க இயலாது என்ற ஒரு அணுகுமுறையைக் கடைப்பிடித்து வருவதாலும், அந்த அடிப்படையிலே இன்று நம்முடைய பெருந்துறை சட்டமன்ற உறுப்பினர் தொகுதியிலேயே, காஞ்சிக்கோயிலிலேயே ஒரு சங்கம் 54 இலட்சம் ரூபாய் பெற அவர்களுக்குத் தகுதி இருந்தும், அவர்கள் ஒரு ரூபாய்கூட கடன் பெறாமல், இப்போது இரண்டு கோடி ரூபாய் அளவுக்கு அவர்களுடைய விற்பனை நடைபெற்று, 18 இலட்சம் ரூபாய் அவர்கள் இலாபம் பெற்றிருக்கிறார்கள். அதைப்போலவே, சென்கோ டெக்ஸ் போன்ற பெரிய கூட்டுறவுச் சங்கங்களிலும் 1200 தறிகளிலே 4 கோடி ரூபாய் அவர்கள் கடனாக வாங்கத் தகுதி இருந்தும் ஒன்றரைக் கோடி ரூபாய்க்கு மேல் அவர்கள் காசுக்கடன் பெறமுடியாத சூழ்நிலை இருந்ததால், இப்போது அவர்களுடைய விற்பனை 14 கோடி ரூபாய். அவர்களுடைய இலாபம் 1.80 கோடி ரூபாய். ஆக எதிர்காலத்திலே சங்கங்களைத் தேடித்தான் வங்கிகள் வரவேண்டிய ஒரு சூழ்நிலையை இந்த அரசு உருவாக்கியிருக்கிறது. ஈரோடு, கரூர், சேலம், கோவை ஆகிய நான்கு பகுதிகளிலும் இன்று சங்கங்களுடைய நிதிநிலை நிச்சயமாக மிகச் சீராக இருப்பதால், நமக்கு என்று ஒரு தனி வங்கி தேவையில்லை என்ற அடிப்படையிலேதான் அது கைவிடப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது உலக வர்த்தகச் சந்தையில் பெரும் நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கிற துறை, கைத்தறித் துறையும், விசைத்தறித் துறையும். இந்தத் துறைக்காக தனி வங்கி அமைக்கவேண்டுமென்ற கோரிக்கை, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரியசாமி அவர்கள் சொன்னதைப்போல, எல்லா மாவட்டங்களிலிருந்தும் வந்திருக்கிறது. இதில் என்ன அரசு தனிக்கவனம் செலுத்தவேண்டும் என்றால், இப்போது கைத்தறித் துறையை நவீனப்படுத்துவதற்காக Technical Upgradation Fund என்ற ஒரு தனி நிதியத்தை மத்திய அரசு ஒதுக்கி இருக்கிறது. ஏறத்தாழ 25,000 கோடி ரூபாய் ஒதுக்கி இருக்கிறது. இதில் மகாராஷ்டிரா மாநிலம் முன்னிலையில் நின்று அதைச் சிறப்பாகப் பயன்படுத்தியிருக்கிறது. ஆகவே அத்தகைய நிதி நிலைமையை ஆதாரமாகக் கொண்டு, நெசவாளர்களுக்காகத் தனி வங்கி அமைப்பதன் மூலமாக,

[2000 நவம்பர் 11

நெசவாளர்களுக்கு உரிய தனி உரிமையை அரசாங்கம் நிலை நாட்ட முன்வரவேண்டும். பொதுவாக L.D. வங்கி போன்றவற்றில் கடன் வாங்கலாம். குறிப்பாக, வங்கிகளில் (மணியடிக்கப்பெற்றது) ஒரே ஒரு நிமிடம். முக்கியமான பாயிண்ட்....

முற்பகல் 10-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் கேள்வி, மத்திய அரசிலிருந்து பணம் வாங்கி, மாநில அரசு, வங்கியை ஆரம்பிக்க வேண்டும் என்பதா? வேறு ஏதாவது சொல்லுங்கள்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** Land Development Bank, Co-operative Bank போன்ற வங்கிகளிலே நெசவாளர்கள் கடன் வாங்குகின்றபோது, இப்போது வாங்கிய கடனுக்கு ஜப்தி நடவடிக்கை எடுக்கின்றபோது, இது பண்ணை சாரா கடன் என்று சொல்கிறார்கள். ஆகவே, அவர்களுடைய உரிமையை நிலைநாட்ட வேண்டும். நெசவாளர்களுக்குத் தனி வங்கியை அமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அதறகுரிய முயற்சியிலே அரசு ஈடுபடுமா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வங்கி என்பதே கடன் பெறுவதற்கு என்ற நோக்கத்திலேயே எல்லோரும் பேசிக் கொண்டிருக்கிறார்கள். வங்கியிலே வைப்புக்கும் வாய்ப்பு இருக்கிறது என்பதையும், அதை சங்கம் இப்போது அமல்படுத்தி வந்திருக்கிறது என்பதையும் இங்கே பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். T.U.F. பற்றி இங்கே நம்முடைய உறுப்பினர் டாக்டர் இராமன் அவர்கள் சொன்னார்கள். மூன்று மாதங்களுக்கு முன்பு மகாராஷ்டிரா முன்னணியிலே இருந்தது. குஜராத் அடுத்தபடி இருந்தது. அடுத்து தமிழகம் இருந்தது. ஆனால், இப்போது தமிழகம்தான் T.U.F. பெறுவதிலே முன்னணியிலே இருக்கிறது. ஏறத்தாழ நம்முடைய கோரிக்கை 1000 கோடி ரூபாய்க்கு இருக்கிறது. நமக்குக் கிடைத்திருப்பது 400 கோடி. இந்த மாதத்திலே மராட்டியத்தையும், குஜராத்தையும் மீறி, Technical Upgradation Fund பெறுவதிலே முன்னணியிலே நாம் இருக்கிறோம். ஆகவே, வங்கி நிச்சயம் தேவைப்பட்டால், அதற்குரிய காரணங்களை ஆராய்ந்து, சம்பந்தப்பட்ட ரிசர்வ் வங்கியினுடைய உத்தரவோடு அதை அமல்படுத்தக்கூடிய வாய்ப்பும் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2000 நவம்பர் 11]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வ. அன்பழகன்.

**திரு. வ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் கடந்த காலத்தில் நசிந்து போய்விட்டன. இப்போது அவை செயல்பட முடியாத சூழ்நிலையில் இருக்கின்றன. கூட்டுறவு வங்கிகளில் கடன் கோருகிறபோது, பழைய பாக்கியை வசூல் செய்தால்தான் கடன் வழங்க முடியும் என்று சொல்கிறார்கள். எனவே, இந்த நிலையை மாற்றிட, கைத்தறித் துறை மூலமாக நசிந்த சங்கங்களுக்கு உதவி செய்து, அந்தச் சங்கங்கள் மீண்டும் இயங்க நம்முடைய அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட சிரமத்திலே உள்ள சங்கங்களுடைய நிலையை எங்களுக்குத் தெரிவித்தால், அதற்குரிய நடவடிக்கையை எடுக்க துறையிலேயே வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரா. சேதுநாதன்.

**திரு. ரா. சேதுநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் நலிவடைந்த கூட்டுறவு நூற்பாலைகளை அரசு கணக்கிட்டு, அதில் பணியாற்றிய தொழிலாளர்களுக்கு Voluntary Retirement Scheme-ன் கீழ் பணத்தைக் கொடுத்து மகிழ்ச்சியோடு வீட்டிற்கு அனுப்பியிருக்கிறது. ஆனால், அந்தத் தொழிற்சாலைகளில் Voluntary Retirement Scheme-ன்கீழ் செல்லாத தொழிலாளர்கள்-குறிப்பாக திண்டிவனம் தாலுகாவில் இருக்கின்ற சாரம் கூட்டுறவு நூற்பாலையில் 300 தொழிலாளர்கள் Voluntary Retirement Scheme-ன் கீழ் சென்றுவிட்டார்கள்-116 தொழிலாளர்கள் இன்னும் இருக்கிறார்கள். அந்தத் தொழிலாளர்களை வைத்து அந்த சாரம் கூட்டுறவு நூற்பாலையை இயக்குவதற்கு அரசு எப்போது முன்வரும்; எப்போது இயக்கப்படும் என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே 4 ஆலைகளைப்பற்றி இந்த அவையிலே நான் தெரிவித்திருக்கிறேன். சாரம் நூற்பாலையினைப் பற்றி நம்முடைய உறுப்பினர் அவர்கள் சொல்லும்போது, தொழிலாளர்கள் மகிழ்ச்சியோடு Voluntary Retirement Scheme-லே சென்றதைப்பற்றித் தெரிவித்திருக்கிறார்கள். வேறு சில நிலுவைகள் ஆலைகளுக்கு இருக்கின்றன. அவற்றை

ஒழுங்குபடுத்துவதற்குரிய பணி இப்போது நடைபெற்று வருகிறது. அது சாரத்திற்கும் உண்டு; அரியூருக்கும் உண்டு; மேலூருக்கும் உண்டு; மிசோரியருக்கும் உண்டு. அந்த அடிப்படையிலே, புதுக்கோட்டை ஆலையினுடைய அடிப்படையிலே, 6000 spindles இலாபம் கிடைத்த உடனே 8000 spindles-க்கு சென்றிருக்கிறோம். அதையொட்டி, சாரம் ஆலை, அரியூர் ஆலை, மேலூர் ஆலை, மிசோரியர் ஆலை தொடங்கக்கூடிய சூழ்நிலை இன்று உருவாக்கப்பட்டு இருக்கிறது. Voluntary Retirement Scheme-லே செல்ல வேண்டியவர்கள் எல்லாம் சென்று விட்டார்கள்; மகிழ்ச்சியோடு சென்று விட்டார்கள். இன்னும் 4 கோடி ரூபாய் இந்த மாதம் அதிலே கொடுக்க வேண்டிய பாக்கி இருக்கிறது. அது முடிந்தவுடன் இந்த ஆலைகள் எல்லாம் திறக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *77 (குறுக்கீடு)*

**Thiru C. Gnanasekaran:** Hon. Speaker Sir...

**Hon. Speaker:** No. வினா எண் 77, திரு. ரா. ஈஸ்வரன், மாண்புமிகு இளைஞர் மற்றும் மாசு கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர். *(குறுக்கீடு)* You can't dominate the proceedings.

**77—**

**கழிவுநீரினால் பாதிப்பு**

***27470-திரு. ரா. ஈஸ்வரன்:**

மாண்புமிகு இளைஞர் மற்றும் மாசு கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வாசுதேவநல்லூர் தொகுதி, தரணி சர்க்கரை ஆலை கழிவு நீரினால் விவசாயம் மற்றும் குடிநீர் பாதிக்கப்படுவதைச் சரி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, இளைஞர் மற்றும் மாசு கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.





**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தரணி சர்க்கரை ஆலையிலிருந்து செல்லும் மொலாசஸ் கழிவு நீர் சுமார் 5 கிலோமீட்டருக்கு மேல் தேக்கி வைத்த காரணத்தினால், சுமார் 3 கிலோமீட்டர் சுற்றளவுக்கு குடிதண்ணீர் கெட்டு, விவசாயம் செய்ய முடியாத சூழ்நிலையில் பாதிக்கப்பட்டிருக்கிறது. அதுசம்பந்தமாக இந்தத் துறையின் மூலமாக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது? அமைச்சர் அவர்களுக்கு இதுகுறித்து நன்கு தெரியுமா? இதுகுறித்து அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய விவசாயிகள், குடிநீர்கூட குடிக்க முடியவில்லை. விவசாயத்திற்குப் பயன்படுத்தக்கூடிய தண்ணீருடைய நிறமும் மாறி போய் இருக்கிறது. ஆகவே, இதுசம்பந்தமாக துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று என்னிடம் சொல்லி இருக்கிறார்கள். சுமார் 2 கிலோ மீட்டர் சுற்றியுள்ள அனைத்து விவசாயிகளுமே புகார் செய்திருக்கிறார்கள். இந்த நியாயமான கோரிக்கையை இதுவரை தங்களுடைய கவனத்திற்கு அதிகாரிகள் யாராவது சொல்லி இருக்கிறார்களா? அல்லது அது மறைக்கப்பட்டு இருக்கிறதா என்ற விவரத்தை தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-25*

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தரணி தொழிற்சாலை கழிவுநீர் பல்வேறு சுத்திகரிப்பு அமைப்புகளால் சுத்திகரிப்பு செய்யப்பட்டு, சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் நிலத்தில் பதிக்கப்பட்ட பி.வி.சி. குழாய் வழியாக தொழிற்சாலைக்குச் சொந்தமான 6 கிலோமீட்டர் தொலைவில் உள்ள 70 ஏக்கர் பரப்பளவில் உள்ள விவசாய பண்ணைக்கும் 400 ஏக்கர் பரப்பளவில் உள்ள கரும்புப் பயிர் செய்வதற்கும் எடுத்துச் செல்லப்படுகிறது. தொழிற்சாலையிலிருந்து துர்நாற்றம் வீசுவதைத் தடுக்கும் பொருட்டு, சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை எக்காரணம் கொண்டும் தேக்கி வைக்கக்கூடாது என வாரியம் அறிவுறுத்தியுள்ளது. மேலும் சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீர் முழுவதையும் சர்க்கரை ஆலையிலிருந்து கிடைக்கும் கசடு மண்ணோடு சேர்த்து press mud உயிரினரக உரம் Bio-Composed தயாரிக்க வேண்டுமென்று வாரியம் அறிவுறுத்தியுள்ளது. இதனைத் தொடர்ந்து இத்தொழிற்சாலை தனது 5 ஏக்கர் நிலப்பரப்பை சமன் செய்து தளம் அமைத்து, அதில் உயிரினரக உரம் தயாரிக்க இப்போது தயார் நிலையில் உள்ளது. இவ்வாறு சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் முழுவதையும் உயிரினரக உரம் தயாரித்தால் விவசாய நிலம் மற்றும் குடிநீர் கிணறுகள் பாதிக்கப்படுவது வெகுவாக தடுக்கப்படும்.

[2000 நவம்பர் 11

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரா. ஈஸ்வரன்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக்கழிவு நீரைத் தேக்கி வைக்கக்கூடிய இடத்தில் சாதாரண புஞ்சை இடங்களிலே தரையிலோ அந்தத் தண்ணீர் போகக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அதை அவர்கள் தேக்கி வைக்கக்கூடிய இடத்தில் சரியான ஒரு கான்கிரீட் போட்டு அந்தத் தண்ணீரை தேக்கி வைத்தால் பூமியினுடைய அடியிலிருந்து அந்தத் தண்ணீர் 2 கிலோ மீட்டர்சுற்றளவுக்கு போய் இருக்காது. உண்மையிலேயே நானே நேரடியாக அங்கே போய்ப் பார்த்தேன். அந்தத் தண்ணீரைக் குடிக்கவும் முடியவில்லை; அங்கிருக்கக்கூடிய மீன்கள்கூட சாகின்றன. தண்ணீரினுடைய நிறம் வேறுமாதிரி மாறியிருக்கிறது. ஆக, அந்தத் தண்ணீரைத் தேக்கும்போது கீழே கான்கிரீட் போட்டு அதற்குப் பிறகு பூமியில் தேக்கி வைத்தால் விவசாயம் பாதிக்கக்கூடிய நிலைமை வராது. ஆக சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கு அந்தமாதிரி ஒரு ஆணையைப் போட்டு கீழே கான்கிரீட் தளம் போட்டு, அதற்குப் பிறகு அதைச்செய்வதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் மேலும் இத்தொழிற்சாலை தனது கழிவுநீரை, அதனுடைய திறனை மேம்படுத்தும் பொருட்டு நாகபுரியிலுள்ள தேசிய சுற்றுச்சூழல் ஆராய்ச்சி நிறுவனத்தின் மூலம் ஆய்வுகளை மேற்கொள்ள அறிவுறுத்தி வருகிறது. மேலும் இத்தொழிற்சாலைக்கு கரும்பு வரத்து இல்லாததால் கடந்த 2 மாதங்களாக மூடப்பட்டு இருக்கிறது. எதிர்காலத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனையைக் கருத்திற்கொண்டு வாரியம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 78, திரு. மு. ரங்கநாதன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

**78—**

### கால்நடை மருந்துவமனை

***29464—திரு. மு. ரங்கநாதன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2000 நவம்பர் 11]

*(அ) கோத்தகிரி வட்டம், கோத்தகிரி நகரில் ஒரு கால்நடை மருத்துவமனை ஆரம்பிக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) கோத்தகிரி வட்டம், கோத்தகிரி நகரில் ஒரு கால்நடை மருத்துவமனை ஆரம்பிக்க தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. ரங்கநாதன், இருக்கையில் இல்லை அடுத்து வினா எண் 79, திரு. வை. சிவபுண்ணியம், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர்.

**79—**

### உணவு வழங்குதல்

***24176—திரு.வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) ஆதிதிராவிட நலத்துறை மூலம் செயல்படும் கல்லூரி, பள்ளி மாணவ, மாணவியர் விடுதிகளில் உணவு வழங்குவதைத் தனியாரிடம் ஒப்படைப்பது தடை செய்யப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரிகளில் பள்ளிகளில் மாணவர்களுக்காக இயங்குகின்ற அந்த விடுதிகளில் உணவு, அரசாலே வழங்கப்பட்டு வந்தது. இப்போது அது தனியாரிடத்திலே ஒப்படைக்கப்பட்டு இருப்பதாக சொல்லப்படுகிறது.

கல்லூரிகளிலே அப்படி ஒப்படைக்கப்பட்டு மாணவர்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவித்து இருக்கிறார்கள். தனியாரிடம் ஒப்படைப்பதன் மூலமாக தரமான உணவை பெற முடியாத நிலை ஏற்பட்டு இருக்கிறது. ஆகவே, தனியாரிடம் ஒப்படைக்கப்படுவதை தடுப்பதற்கான முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ளுமா? அதோடு மாணவர்களுக்குரிய உணவுக் கட்டணத்தை உயர்த்துவதற்கான முயற்சிகளை இந்த அரசு எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் நலத் துறையின் மூலமாக மொத்தம் 1075 மாணவர் விடுதிகள் இயங்கி வருகின்றன. அதில் கல்லூரி மாணவர் விடுதிகள் மட்டும் 76 இயங்கி வருகின்றன. 76 கல்லூரி மாணவர் விடுதிகளில் 25 கல்லூரி மாணவர் விடுதிகளுக்கு பரீட்சார்த்தமாக, முன்னோடி திட்டமாக, தரமான உணவு வழங்குவதற்காக 1-6-1998 ஆம் தேதி முதல் உணவு, அரசு ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்பட்டு வந்தது. அதில் 25 கல்லூரி மாணவர் விடுதிகளில், சென்னை உட்பட, சேலம் மாவட்டத்திலுள்ள 6 கல்லூரிகளில் மட்டும் இதற்கு வரவேற்பு இருந்தது. மீதமுள்ள 19 கல்லூரி மாணவர் விடுதிகளில், 9 மாணவர் விடுதிகளுக்கு மாணவர்களின் விருப்பத்திற்கு ஏற்ப ஆதிதிராவிடர் நலத் துறையின் மூலமாக உணவு வழங்கப்பட்டு வருகின்றது. 5 விடுதிகளிலுள்ள மாணவர்கள் எதிர்ப்பு தெரிவித்ததன் காரணமாக அந்த 5 விடுதிகள் கைவிடப்பட்டன. அந்த மாணவர் விடுதிகள் இப்பொழுது அந்தந்த மாவட்டத்திலுள்ள மாவட்ட ஆட்சித் தலைவருடைய விருப்பத்திற்கு ஏற்பவும், மாவட்டத்திலுள்ள மாணவர்களின் விருப்பத்திற்கு ஏற்பவும், அவரவர்களுடைய மாவட்டத்தில் உள்ள சூழ்நிலைக்கு ஏற்பவும் விடுதிகள் இயங்கலாம் என அரசு ஆணை வெளியிட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

வினா எண் 80, திரு. எஸ். எஸ். மணி நாடார், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.





**80—**

**சுற்றுத்தலம்**

**வினா எண். *30384—திரு. எஸ்.எஸ். மணி நாடார்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதியில் திருமலைநம்பி கோயிலைச் சுற்றுலாத்தலமாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதியில் திருமலைநம்பி கோயிலை சுற்றுலாத்தலமாக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. எந்த ஒரு இடத்தையும் சுற்றுலாத்தலமாக அறிவிப்பது இல்லை. சம்பந்தப்பட்ட இடத்தில் தேவைக்கேற்பவும், நிதிநிலைக்கேற்பவும், அடிப்படை வசதிகளான குடிநீர், சாலை வசதி, கழிப்பிட வசதி, ஆடை மாற்றுமிடம், தங்குமிடம் ஆகியவை ஏற்படுத்தப்படுகிறது.

**திரு. எஸ். எஸ். மணி நாடார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டம், நாங்குநேரி தொகுதியில் திருக்கண்ணன்குடி என்ற ஊர் மலையடிவாரத்தில் இருக்கிறது. அங்கேயுள்ள திருமலைநம்பி கோயில் என்பது பிரசித்திபெற்ற கோயில். திருக்கண்ணன்குடியிலிருந்து சுமார் 10 கி.மீ. மேலே மலையில் திருமலைநம்பி கோயிலின் மூலவர் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக இருக்கிறார். அந்தக் கோயிலுக்கு தினமும் பக்தர்கள் ஆயிரம் பேர் போய் வருகிறார்கள். அதற்கு சரியான சாலை வசதி கிடையாது. அங்கே கோயிலில் கரண்ட்கூட கிடையாது. ஆகவே மாண்புமிகு அமைச்சரவர்கள் நேரடியாகப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தக் கோயிலுக்கு அருகில் நீர்வீழ்ச்சி இருக்கிறது. சுற்றுலா மையமாக்குவதற்கு எல்லாத் தகுதியும் பெற்ற இடமாக அது அமைந்திருக்கிறது. இதற்கும் மேலாக நெல்லை மாவட்டம், தூத்துக்குடி மாவட்டம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து மக்கள் அனைவரும் தினமும் சுமார் ஆயிரம் பேர் அந்த இடத்தற்கு வந்து

[2000 நவம்பர் 11

கொண்டிருக்கிறார்கள். அந்த இடத்தை அமைச்சரவர்கள் நேரடியாகப் பார்வையிட்டு, சுற்றுலாத்தலமாக ஆக்குவதற்கு முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமலைநம்பி கோயிலைப் பொறுத்தமட்டில் அங்கே விளக்கு வசதி இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் எடுத்துக் கூறினார். கோயிலைப் பொறுத்தமட்டில் அது இந்துசமய அறநிலையத் துறை மூலமாக செய்யவேண்டிய பணியாக இருக்கிற காரணத்தால், உறுப்பினருடைய கருத்து இந்துசமய அறநிலையத் துறைக்குத் தெரிவிக்கப்படும். மேலும் உங்களுடைய எண்ணத்தின் அடிப்படையில் ஆக்கபூர்மான பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்*

*(பட்டியல்கள் 11 முதல் 14 வரை)*

### பதினொன்றாம் பட்டியல்

1—

#### முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள்

**வினா எண் 41451—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*1999 ஆம் கல்வியாண்டில் எவ்வளவு முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள், ஆசிரியர்கள் தேர்வு வாரியக் குழுவால் தேர்ந்தெடுத்து பணியில் அமர்த்தப்பட்டனர்?*

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

*1999 ஆம் கல்வியாண்டில் 433 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் ஆசிரியர் தேர்வு வாரியத்தால் தேர்வு செய்யப்பட்டு பணியில் அமர்த்தப்பட்டனர்.*

*இப்பட்டியல்களில் உள்ள வினாக்களுக்காக விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தவையாகும்.



2000 நவம்பர் 11]

2—

#### நல்லாசிரியர் விருது

**வினா எண் 42575—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*1998-99 ஆம் கல்வியாண்டில் மத்திய அரசு நல்லாசிரியர் விருது எத்தனை ஆசிரியர்களுக்கு வழங்கியுள்ளது?*

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

*1999 ஆம் கல்வியாண்டில் மத்திய அரசு இம்மாநிலத்தைச் சார்ந்த 22 ஆசிரியர்களுக்கு நல்லாசிரியர் விருது வழங்கியுள்ளது.*

3—

#### பள்ளிக் கட்டடம் செப்பனிடல்

**வினா எண் 23091—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தாலுகா, ஒரத்தநாடு ஒன்றியம், சோழகன்குடிகாடு ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி கட்டடத்தை செப்பனிட்டுத்தர அரசு ஆவன செய்யுமா?*

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், சோழகன்குடிகாடு ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியினை ரூ.20,000/- மதிப்பீட்டில் கல்வி நிதியிலிருந்து பழுது நீக்கம் செய்வதற்கு வேலை ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.*

[2000 நவம்பர் 11

4—

## பள்ளிக்குக் கூடுதல் கட்டட வசதி

**வினா எண் 25725—திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், சேத்துப்பட்டு ஊராட்சி ஒன்றியம், இந்திரவனம் நடுநிலைப்பள்ளிக்குக் கூடுதலாக கட்டட வசதி செய்துதரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், சேத்துப்பட்டு ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த இந்திரவனம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளிக்கு கூடுதல் கட்டடம் கட்ட ரூ.2,39,000/-மதிப்பீட்டில் ராஜ்யசபா உறுப்பினர் திரு. ஆர். மார்க்கபந்து அவர்கள் பரிந்துரையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வேலைக்கு உடனடியாக மதிப்பீடு தயார் செய்து ஒப்பந்தப்புள்ளி முறையில் பணி நிறைவேற்றப்படும்.

5—

## கைபம்பு அமைத்தல்

**வினா எண் 26528—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, அச்சனஹள்ளி ஊராட்சி அனுமந்தபுரம் எஸ்.சி. காலனியில் குடிநீர் வசதிக்காக கைபம்பு ஒன்று அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**



2000 நவம்பர் 11]

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, அச்சனஹள்ளி ஊராட்சி அனுமந்தபுரம் எஸ்.சி. காலனியில் தற்போது கைபம்பு அமைக்கப்பட்டு நல்ல நிலையில் இயங்கி வருகிறது.

6—

## தெருவிளக்குகள்

**வினா எண் 26605—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, கெண்டையனஅள்ளி ஊராட்சியைச் சேர்ந்த ஆசாரிக்காடு காட்டுவளவு கிராமம் குட்டலான்வீடு அருகில், தின்னாம்புக்காரன் வீடு அருகில், தெருவிளக்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, கெண்டையனஅள்ளி ஊராட்சியில் போதுமான நிதிவசதி இல்லை. எனவே வினாவில் கேட்கப்பட்ட இடங்களில் தற்சமயம் தெருவிளக்குகள் அமைக்க சாத்தியக்கூறு இல்லை.

7—

## தெருவிளக்கு அமைத்தல்

**வினா எண் 26606—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, மஞ்சாரஅள்ளி ஊராட்சியைச் சேர்ந்த ஏர்கொல்லப்பட்டி கிராமம், பத்தரகாளி அம்மன் கொட்டாய், கட்டியண்ணன் கொட்டாய், பட்டக்காரன்பட்டி புதூர் கிராமம், சித்தாரப்பட்டி காட்டுவளவு ஆகிய இடங்களில் தெருவிளக்கு அமைக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, மஞ்சாரஅள்ளி ஊராட்சியில் போதுமான நிதிவசதி இல்லை. எனவே, தற்சமயம் அவ்விடங்களில் தெருவிளக்கு அமைக்கும் கருத்துரு ஏதுமில்லை.

8—

## தெருவிளக்குகள்

**வினா எண் 26608—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பெரும்பாலை ஊராட்சியைச் சேர்ந்த சோளிகவுண்டனூர் கிராமம் பஸ் நிறுத்தம் அருகில், மயானப்பாதை அருகில், சானராப்பட்டி, பூதநாயக்கன்பட்டி, பெரும்பாலை சாமந்தாள் கிராமங்களிலும் மற்றும் பெரும்பாலை ஊராட்சியில் சில இடங்களிலும் நடப்பாண்டில் தெருவிளக்குகள் அமைக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பெரும்பாலை ஊராட்சியில் போதுமான நிதி வசதி இல்லை. எனவே வினாவில் சொல்லப்பட்ட இடங்களில் தெருவிளக்குகள் அமைக்க கருத்துரு தற்போது ஏதுமில்லை.

9—

## தெருவிளக்கு அமைத்தல்

**வினா எண் 26617—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கெண்டையனஅள்ளி ஊராட்சியைச் சேர்ந்த காவக்காடு கிராமம் (1) பாலுக்காரன்வீடு (2) சுப்புருகொட்டாய் (வடக்கு) (3) பங்காருகுழிக்காடு ஆகிய கிராமங்களில் நடப்பாண்டில் தெருவிளக்கு அமைக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கெண்டையனஅள்ளி ஊராட்சியில் போதிய நிதி வசதி இல்லை. எனவே அவ்விடங்களில் தெரு விளக்கு அமைக்க சாத்தியக்கூறு இல்லை.

10—

## தெருவிளக்கு அமைத்தல்

**வினா எண் 26618—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கெண்டையனஅள்ளி ஊராட்சியைச் சேர்ந்த ஆத்துக்காடு கிராமம் பெருமாள் வீடு அருகில் தெருவிளக்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கெண்டையனஅள்ளி ஊராட்சியில் போதுமான நிதி வசதி இல்லை. எனவே தற்போது தெருவிளக்கு அமைக்க கருத்துரு ஏதுமில்லை.

[2000 நவம்பர் 11

11—

### தெரு விளக்கு

**வினா எண் 26619—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பிளியனூர் ஊராட்சியைச் சேர்ந்த பிக்கம்பட்டி, பாப்பாரப்பட்டி பேருந்து நிலையம் பகுதியில் தெருவிளக்கு எப்பொழுது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பிளியனூர் ஊராட்சியில் போதுமான நிதி வசதி இல்லை. எனவே அவ்விடங்களில் தெருவிளக்கு அமைக்க கருத்துரு ஏதும் இல்லை.

12—

### கைபம்பு அமைத்தல்

**வினா எண் 26629—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம், தொகுதி, பத்ரஅள்ளி ஊராட்சியைச் சேர்ந்த பூச்சூர் சென்றாய பெருமாள் கோவில் அருகில் மற்றும் ஆரல்குந்தி மேற்கு மற்றும் கிழக்கு பகுதிகள் காட்டுமோட்டூர் மற்றும் புலியம் பள்ளத்தூர் ஆகிய இடங்களில் கைபம்பு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**



2000 நவம்பர் 11]

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பத்ரஅள்ளி ஊராட்சியில் போதிய நிதி வசதி இல்லை. எனவே மேற்கூறிய இடங்களில் கைபம்பு அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

13—

### தெருவிளக்கு அமைத்தல்

**வினா எண் 27561—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, மஞ்சாரஅள்ளி ஊராட்சி, ஏர்கொல்லப்பட்டி கிராமம், கோம்பைகாடு, கொட்டன்பள்ளம், வெங்கட்டன்கொட்டாய், பட்டப்பன் கொட்டாய், செம்மேடு, கருங்கல்லூர், கருப்புசெட்டி வீடு ஆகிய இடங்களில் தெருவிளக்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மஞ்சாரஅள்ளி ஊராட்சி, ஏர்கொல்லப்பட்டி, கோம்பைகாடு, செம்மேடு, கருங்கல்லூர் ஆகிய இடங்களுக்கு தெரு விளக்குகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அதற்கான கட்டணம் சம்பந்தப்பட்ட ஊராட்சித் தலைவரால் மின்வாரியத்தில் செலுத்தப்பட்டு விட்டது, மின் வாரியத்தில் சர்வே பணி செய்யப்பட்டுள்ளது. இப்பணி முடிவுற்றதும் தெரு விளக்குகள் அமைக்கப்படும். இப்பணியினை துரிதப்படுத்த மின்வாரியத்துடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என பெண்ணாகரம் கூடுதல் வட்டார வளர்ச்சி அலுவலர் தெரிவித்துள்ளார்.

14—

### ஆழ்துளை கிணறு அமைத்தல்

**வினா எண் 27565—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 நவம்பர் 11

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, அஜ்ஜனஅள்ளி ஊராட்சி, மொலகன்கொட்டாய்க்கு இதுவரை ஆழ்துளை கிணறு அமைக்கப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் இங்கு ஆழ்துளை கிணறு அமைக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, அஜ்ஜனஅள்ளி ஊராட்சியில் போதுமான நிதிவசதி இல்லை. எனவே, இங்கு கைபம்பு அமைக்க சாத்தியக்கூறு இல்லை.

**15—**

**கூடுதல் தெருவிளக்கு**

**வினா எண் 27625—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, சுஞ்சல்நத்தம் ஊராட்சி, ஈச்சம்பட்டி கிராமம், குண்டத்துக்கொட்டாய், ஜோமாலிக்காடு ஆகிய கிராமங்களில் கூடுதலாக தெருவிளக்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பெண்ணாகரம் தொகுதி, சுஞ்சல்நத்தம் ஊராட்சி, ஈச்சம்பாடி கிராமம், குண்டத்தூர் கொட்டாய், ஜோமாலிக்காடு ஆகிய இடங்களில் தெரு விளக்குகள் அமைக்க மின்வாரியத்திற்கு சம்பந்தப்பட்ட ஊராட்சித் தலைவரால் விண்ணப்பக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது. சர்வே பணி முடிந்து மின் வாரியத்திடமிருந்து தொகை செலுத்த அறிவிப்பு வரப்பெற்றதும், உடன் தொகையினை செலுத்தி விளக்குகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



2000 நவம்பர் 11]

**16—**

**கூடுதலாக தெரு விளக்குகள்**

**வினா எண் 276256—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, சுஞ்சல்நத்தம் ஊராட்சியைச் சேர்ந்த பட்டணக்காரன் கொட்டாய், இம்மேரிக்கொட்டாய், கொங்கரப்பட்டி முருகன் கோவில், கோபால் கொட்டாய் ஆகிய இடங்களில் கூடுதலாக தெரு விளக்குகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சுஞ்சல்நத்தம் ஊராட்சி பட்டக்காரன் கொட்டாய், கொங்கரப்பட்டி முருகன் கோவில், கோபால் கொட்டாய் ஆகிய இடங்களில் தெரு விளக்குகள் அமைக்க விண்ணப்பக் கட்டணம் சம்பந்தப்பட்ட ஊராட்சித் தலைவரால் மின் வாரியத்திற்கு செலுத்தப்பட்டுள்ளது. மின்வாரியத்திடமிருந்து சர்வே பணி முடிந்து தொகை செலுத்த அறிவிப்பு வரப்பெற்றதுடன் உடன் தொகையினை செலுத்தி விளக்குகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**17—**

**தெரு விளக்கு**

**வினா எண் 27628—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பத்ரஅள்ளி ஊராட்சி, ஆரல்குந்தி கிராமம், ராமச்சந்திரன் காலனி, சீரங்கன் தெரு (வத்தல்பட்டி) குன்காட்டு தெரு ஆகிய இடங்களில் தெரு விளக்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பத்ரஅள்ளி ஊராட்சியில் போதிய நிதி வசதி இல்லை. எனவே, மேற்குறிப்பிட்ட இடங்களில் தெரு விளக்குகள் அமைக்க சாத்தியக்கூறு இல்லை.

**18—**

### தெருவிளக்கு அமைத்தல்

**வினா எண் 27631—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, அஞ்சேஅள்ளி ஊராட்சியைச் சேர்ந்த பூஞ்சோலை கிராமத்தில் மின் வசதியை துரிதப்படுத்தி தெருவிளக்கு அமைக்க அரசு நடப்பாண்டில் ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், அஞ்சேஅள்ளி ஊராட்சி, பூஞ்சோலை கிராமத்தில் மாவட்ட பரவலாக்கப்பட்ட திட்டத்தில் தற்போது 4 தெரு விளக்குகள் அமைக்கப்பட்டு நல்ல நிலையில் எரிகின்றன.

**19—**

### தெருவிளக்குகள் அமைத்தல்

**வினா எண் 27633—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பத்ரஅள்ளி ஊராட்சியைச் சேர்ந்த பூச்சூர் கிராமம், இருளப்பன் கொட்டாய், சென்றாய பெருமாள் கோவில், வரையான் கொட்டாய், மட்டகன் சின்னகவுண்டர் கொட்டாய், சொக்கலிங்கன் காலனி, மட்டகான்போயர் காலனி ஆகிய இடங்களில் தெருவிளக்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பத்ரஅள்ளி ஊராட்சியில் போதுமான நிதிவசதி இல்லை. எனவே மேற்கூறிய இடங்களில் தெருவிளக்கு அமைக்க சாத்தியக்கூறு இல்லை.

**20—**

### தெருவிளக்கு அமைத்தல்

**வினா எண் 27634—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கூத்தப்பாடி ஊராட்சி, கூத்தப்பாடி அம்மாப்பள்ளம், ராஜேரிக் கொட்டாய் இதுவரை மின்வசதியில்லாத கிராமத்தில் மின்வசதி செய்து, தெருவிளக்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பெண்ணாகரம் தொகுதி, கூத்தப்பாடி ஊராட்சி, கூத்தப்பாடி அம்மாப்பள்ளம், ராஜேரிக் கொட்டாய் ஆகிய இடங்களில்

[2000 நவம்பர் 11

ஆறு தெரு விளக்குகள் புதியதாக மாவட்ட பரவலாக்கப்பட்ட திட்டத்தில் அமைக்கப்படவுள்ளது. இதற்காக விண்ணப்பக் கட்டணம் மின்வாரியத்திற்கு செலுத்தப்பட்டுள்ளது. மின்துறையில் போதுமான கம்பங்கள் இல்லாததால் தாமதம் ஏற்பட்டுள்ளது. விரைவில் மேற்குறிப்பிட்ட இடங்களில் தெரு விளக்குகள் அமைக்கப்பட்டு விடும்.

21—

## ஆழ்துளை கிணறு

வினா எண் **27756—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட சஞ்சல் நத்தம் ஊராட்சி, இட்டேரிகொட்டாய் என்ற கிராமத்திற்கு இதுவரை ஆழ்துளை கிணறு அமைக்காமலிருப்பது அரசு கவனத்திற்கு வந்துள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் ஆழ்துளை கிணறு அமைக்கப்படுமா?*

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சுஞ்சல்நத்தம் ஊராட்சி, இட்டேரிக்கொட்டாய் கிராமத்தில் தற்சமயம் ஒரு கைபம்பு அமைக்கப்பட்டு நல்ல நிலையில் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

22—

## ஆழ்துளை கிணறு அமைத்தல்

வினா எண் **27757—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2000 நவம்பர் 11]

*(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, சுஞ்சல்நத்தம் ஊராட்சி, காமராஜ்பேட்டை அருகிலுள்ள ஜி.கே. நகருக்கு இதுவரை ஆழ்துளை கிணறு அமைக்காமலிருப்பது அரசு கவனத்திற்கு வந்துள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் ஆழ்துளை கிணறு அமைக்கப்படுமா?*

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சுஞ்சல்நத்தம் ஊராட்சி, காமராஜ்பேட்டை அருகிலுள்ள ஜி.கே. நகருக்கு தற்போது ஒரு கைபம்பு அமைக்கப்பட்டு அது நல்ல முறையில் இயங்கி பயன்பாட்டில் உள்ளதென பெண்ணாகரம் கூடுதல் வட்டார வளர்ச்சி அலுவலர் தெரிவித்துள்ளார்.

23—

## தெருவிளக்கு அமைத்தல்

வினா எண் **27761—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, சத்தியநாதபுரம் ஊராட்சி, மோட்டுப்பட்டி, கோ. மாரியப்பன் வீடு, ருத்தராச்சாரி வீடு அருகில், கண்ணப்பன் வீடு அருகில், முருகேசன் கொட்டாய் ஆகிய இடங்களில் இதுவரை தெருவிளக்கு அமைக்காமல் இருப்பது அரசு கவனத்துக்குத் தெரியுமா?*

*(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் மேற்கண்ட இடங்களுக்கு தெருவிளக்கு அமைக்கப்படுமா?*

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், சத்தியநாதபுரம் ஊராட்சி, மோட்டுப்பட்டி, கோ. மாரியப்பன் வீடு அருகில் ருத்தராச்சாரி வீடு, கண்ணப்பன் வீடு அருகில் முருகேசன் கொட்டாய் ஆகிய இடங்களில் தெரு விளக்கு அமைக்க மின்வாரியத்தால் மதிப்பீடு நிர்ணயிக்கப்பட்டு விரைவில் தெருவிளக்குகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**24—**

### கூடுதல் தெரு விளக்குகள்

**வினா எண் 30445—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நாகமரை ஊராட்சி கருங்காலிமேடு, ஏமனூர், சிங்கரிபுரம், கொண்டையனூர், நாகமரை, ஒட்டனூர், நெருப்பூர் ஆகிய கிராமங்களுக்குக் கூடுதலாக தெருவிளக்குகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நாகமரை ஊராட்சியில் போதுமான நிதி வசதி இல்லை. எனவே, வினாவில் கூறப்பட்ட கிராமங்களுக்கு தற்போது கூடுதலாக தெருவிளக்குகள் அமைக்கும் சாத்தியக்கூறு இல்லை.

**25—**

### மக்கான்கொட்டாய் அருகில் கைப்பம்பு வசதி

**வினா எண் 30451—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கெண்டையன அள்ளி ஊராட்சி, அத்திமரத்தூர் - மக்கான்கொட்டாய் அருகில் ஒரு கைப்பம்பு அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கெண்டையனஅள்ளி ஊராட்சி, மத்திரமத்தூர் கிராமத்தில் ஜனத்தொகை 250 ஆகும். இங்கு ஏற்கெனவே இரண்டு ஆழ்துளைக் குழாய் கிணறுகள் அமைக்கப்பட்டு போதிய நீர் ஆதாரம் உள்ளது. தற்போது மக்கான் கொட்டாய் அருகில் கைப்பம்பு அமைக்க ஊராட்சியில் போதிய நிதி வசதி இல்லை.

**26—**

### தெருவிளக்கு வசதி

**வினா எண் 30454—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நாகமரை ஊராட்சி, குருக்களையனூர் கிராமம், குஞ்சப்பன்கொட்டாய், பிளியனூர் ஊராட்சி, கருங்கனூர் கிராமம் கவுண்டர் வீடு பகுதி, குள்ளனூர் கிராமம், சாமியார் கொட்டாய், பிடிகாரன்கொட்டாய், மைராட பிளான் மகளிர் அலுவலகம், குப்பன் கொட்டாய், குள்ளனூர் பேருந்து நிலையம் ஆகிய பகுதிகளில் தெருவிளக்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நாகமரை ஊராட்சி, குருக்களையனூர் கிராமம், குஞ்சப்பன்கொட்டாய்,

[2000 நவம்பர் 11

பிளியனூர் ஊராட்சி, கருங்கனூர் கிராமம் கவுண்டர் வீடு பகுதி, குள்ளனூர் கிராமம், சாமியார் கொட்டாய், பிடிகாரன் கொட்டாய், மைராட பிளான் மகளிர் அலுவலகம், குப்பன் கொட்டாய், குள்ளனூர் பேருந்து நிலையம் ஆகிய பகுதிகளில் தெரு விளக்கு அமைக்க சம்பந்தப்பட்ட ஊராட்சியில் போதிய நிதி வசதி இல்லை. எனவே தற்போது அப்பகுதிகளில் தெருவிளக்கு அமைக்க சாத்தியக்கூறு இல்லை.

**27—**

### தெருவிளக்கு அமைத்தல்

**வினா எண் 30457—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, அரகாசன அள்ளி ஊராட்சி, பள்ளிமுத்தானூர் கிராமம் ஆச்சாரி தெரு, பதுசியம்மன் கோவில் ஆகிய பகுதிகளில் இதுவரை தெருவிளக்கு அமைக்காமலிருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் தெருவிளக்கு அமைக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்ட பகுதிகளில் தெரு விளக்கு அமைக்க சம்பந்தப்பட்ட ஊராட்சியிலிருந்து முன்மொழிவு எதுவும் வரப்பெறவில்லை. புதியதாக தெரு விளக்கு அமைக்க முன்மொழிவுகள் கோரப்படும்பொழுது சம்பந்தப்பட்ட ஊராட்சித் தலைவரிடமிருந்து முன்மொழிவுகள் பெற்று சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் தெரு விளக்கு அமைக்க தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**28—**

### கைப்பம்பு அமைத்தல்

**வினா எண் 30458—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2000 நவம்பர் 11]

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கெண்டையன அள்ளி ஊராட்சி, வெள்ளமண்மேடு மாரியம்மன் கோவில் அருகில் ஒரு கைப்பம்பு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கெண்டையன அள்ளி ஊராட்சி, வெள்ளம்மன்காடு கிராமத்தின் மக்கள்தொகை 300 ஆகும். இங்கு ஏற்கெனவே 3 ஆழ்துளைக் கிணறுகள் உள்ளன. 3 ஆழ்துளைக் குழாய் கிணறுகளும் பொய்த்துவிட்டன. அந்தப் பகுதி முழுமையான வறட்சிப் பகுதி ஆகும். நடப்பு நிதியாண்டில் ஒன்றியப் பொது நிதியிலிருந்து ஒரு கைப்பம்பு மாரியம்மன் கோவில் அருகில் அமைக்கப்பட்டுள்ளது.

**29—**

### கிராமங்களில் கைப்பம்பு வசதி

**வினா எண் 30459—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கெண்டையனஅள்ளி ஊராட்சி, வெள்ளமண்காடு கிராமம், வட்டக்கொரகாடு மற்றும் கெண்டையன அள்ளி, அன்பு கொட்டாய் ஆகிய இடங்களில் ஒரு கைப்பம்பு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கெண்டையன அள்ளி ஊராட்சி அன்பு கொட்டாயில் ஒரு கைப்பம்பு ஒன்றியப் பொது நிதியிலிருந்து அமைக்கப்பட்டு இயங்கி வருகிறது. தற்போது ஊராட்சியில் போதிய நிதி வசதி இல்லாத காரணத்தால் வெள்ளமண்காடு, வட்டக்கொரக்காடு, கெண்டையன அள்ளி ஆகிய இடங்களில் தற்போது கைப்பம்பு அமைக்க சாத்தியக்கூறு இல்லை.

30—

## குழாய் இணைப்பு வழங்குதல்

**வினா எண் 30562—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, மாங்கரை ஊராட்சி, சாலை குள்ளாத்திரம்பட்டி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து குடிநீர் வசதியில்லாத சத்தியா நகர் பேருந்து நிறுத்தத்திற்குக் குழாய் இணைப்பு வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, மாங்கரை ஊராட்சி சாலை குள்ளாத்திரம்பட்டி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து குடிநீர் வசதியில்லாத சத்தியா நகர் பேருந்து நிறுத்தத்திற்கு குழாய் இணைப்பு வழங்க சாலைக்குள்ளாத்திரம் பட்டியில் தற்போது ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்பட்டு வருகிறது.*

31—

## குடிநீர் வசதி

**வினா எண் 30563—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, அஜ்ஜனஅள்ளி ஊராட்சியைச் சேர்ந்த மொலுக்கன் கொட்டாயில் குடிநீர் வசதி இல்லாமலிருப்பது அரசு கவனத்துக்குத் தெரியுமா?*



*(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் அங்கு ஒரு கைப்பம்பு அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, அஜ்ஜனஅள்ளி ஊராட்சியில் போதுமான நிதி வசதி இல்லை. எனவே, தற்போது அங்கு கைப்பம்பு அமைக்க சாத்தியக்கூறு இல்லை.*

32—

## ஆழ்துளைக் கிணறு அமைத்தல்

**வினா எண் 30564—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, மாங்கரை ஊராட்சி வண்ணாத்திப்பட்டி பேருந்து நிறுத்தத்தில் ஒரு ஆழ்துளைக் கிணறு (கைப்பம்பு) அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, மாங்கரை ஊராட்சி, வண்ணாத்திப்பட்டி பேருந்து நிறுத்தத்தில் ஒரு கைப்பம்பு அமைக்கப்பட்டு நல்ல நிலையில் இயங்கி வருகிறது.*

33—

## கைப்பம்பு அமைத்தல்

**வினா எண் 30565—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 நவம்பர் 11

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, அஜ்ஜனஅள்ளி ஊராட்சி சின்னப்பன் கொட்டாய் கிராமத்தில் குடிநீர் கஷ்டத்தைப் போக்க அங்கு ஒரு கைப்பம்பு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, அஜ்ஜனஅள்ளி ஊராட்சியில் போதுமான நிதி வசதி இல்லை. எனவே சின்னப்பன் கொட்டாய் கிராமத்தில் தற்போது கைப்பம்பு அமைக்கும் சாத்தியக்கூறு இல்லை.

**34—**

**குடிநீர் வசதி**

**வினா எண் 30567—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, அஜ்ஜனஅள்ளி ஊராட்சி, சிவநாதன் வீடு (சிகரல அள்ளி) இடத்தில் கைப்பம்பு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, அஜ்ஜனஅள்ளி ஊராட்சி, சிவநாதன் வீடு (சிகரல அள்ளி) என்ற இடத்தில் பொது பைப் லைன் அமைக்கப்பட்டு குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளது.



2000 நவம்பர் 11]

**35—**

**கைப்பம்பு அமைத்தல்**

**வினா எண் 30568—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, அஜ்ஜனஅள்ளி ஊராட்சி, சின்னப்பன் கொட்டாய் கிராமத்தில் போதுமான குடிநீர் வசதி இல்லாமலிருப்பதால், அங்கு ஒரு கைப்பம்பு அமைக்க அரசு நடப்பாண்டில் ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, அஜ்ஜனஅள்ளி ஊராட்சியில் போதுமான நிதி வசதி இல்லை. எனவே சின்னப்பன் கொட்டாய் கிராமத்தில் தற்போது கைப்பம்பு அமைக்கும் சாத்தியக்கூறு இல்லை.

**36—**

**கைப்பம்பு அமைத்தல்**

**வினா எண் 30569—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, அஜ்ஜனஅள்ளி ஊராட்சி, சிகரல அள்ளி, தொழுமன்கொட்டாய் கிராமத்தில் குடிநீர் வசதிக்காக கைப்பம்பு ஒன்று அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, அஜ்ஜனஅள்ளி ஊராட்சி, தொழுமன்கொட்டாய் கிராமத்தில் ஒரு கைப்பம்பு அமைக்கப்பட்டு நல்ல நிலையில் இயங்கி வருகிறது.

37—

### குடிநீர் வசதி

**வினா எண் 30570—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, அஜ்ஜனஅள்ளி ஊராட்சி, சிகரலஅள்ளி வெற்றிலை தோட்டம், பொன்னுசாமி கொட்டாய் என்ற இடத்தில் சுமார் 30 வீடுகள் இருப்பதால், குடிநீர் வசதிக்காக இங்கு ஒரு கைப்பம்பு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, அஜ்ஜனஅள்ளி ஊராட்சியில் போதுமான நிதி வசதி இல்லை. எனவே, வினாவில் கேட்கப்பட்டுள்ள இடங்களில் தற்போது கைப்பம்பு அமைக்க சாத்தியக்கூறு இல்லை.

38—

### குடிநீர் வசதி

**வினா எண் 30578—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பனை குளம் ஊராட்சி, வத்தி மரத்தஅள்ளி அருள்மிகு மாதேஸ்வரன் கோவிலுக்கு குடிநீர் வசதியில்லாமலிருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் இங்கு குடிநீர் வசதி செய்து தர ஆவன செய்யுமா?



விடை—

**மாண்புமிகு திரு கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பனைகுளம் ஊராட்சியில் போதுமான நிதி வசதி இல்லை. எனவே, அங்கு கைப்பம்பு அமைக்க தற்போது சாத்தியக்கூறு இல்லை.

39—

### குடிநீர்க் குழாய் இணைப்பு

**வினா எண் 34997—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நல்லூர் பேரூராட்சி மற்றும் இடுவாய் ஊராட்சி, பாரதிபுரம், தந்தை பெரியார் நகர் பகுதிகளில் நல்ல குடிநீர்க் குழாய் இணைப்பு இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது குடிநீர் இணைப்பு வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் நல்லூர் பேரூராட்சி மற்றும் இடுவாய் ஊராட்சி பாரதிபுரம், தந்தை பெரியார் நகரில் நல்ல குடிநீர் இணைப்பு வழங்கிட தலைவருக்கு நேரில் அறிவுரை வழங்கி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

40—

### குடிநீர்

**வினா எண் 34999—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர், மங்கலம் ஊராட்சி, சுல்தான்பேட்டை ஆதிதிராவிடர் காலனி, சின்னப்புத்தூர் ஆரம்பப்பள்ளி, புதிய ஆதிதிராவிடர் காலனியில் குடிநீர்க் குழாய் இணைப்பு இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், குடிநீர் வழங்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மங்கலம் ஊராட்சி, சுல்தான்பேட்டை ஆதிதிராவிடர் காலனி, சின்னப்புத்தூர் ஆரம்பப்பள்ளி புதிய ஆதிதிராவிடர் காலனியில் குடிநீர்க் குழாய் இணைப்பு வழங்க ஊராட்சியின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

41—

### குடிநீர் இணைப்பு

**வினா எண் 35000—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர், ஈட்டிவீரன்பாளையம் ஊராட்சி, அப்பியாபாளையம், காரக்காடு, தொட்டிப்பாளையம் ஊராட்சி, வடிவேல் நகர், அவிநாசி நகர் பகுதிகளில் குடிநீர்க் குழாய் இணைப்பு இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது குடிநீர் இணைப்பு வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த ஈட்டிவீரன்பாளையம் ஊராட்சி, அப்பியாபாளையம், காரக்காடு, தொட்டிப்பாளையம் ஊராட்சியினைச் சேர்ந்த வடிவேல் நகர், அண்ணா நகர் பகுதிகளில் புதிதாக குடிநீர் வசதி செய்யக்கோரி சம்பந்தப்பட்ட ஊராட்சித் தலைவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



42—

### பள்ளிக்கட்டடம் பழுதுபார்த்தல்

**வினா எண் 36052—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டம், தஞ்சாவூர் ஒன்றியம், குருங்குளம் மேற்கு ஊராட்சிக்கு உட்பட்ட மின்னாத்தூர் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளி கட்டடம் பழுதடைந்துள்ளதை செப்பனிட்டுத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் ஒன்றியம், குருங்குளம் மேற்கு ஊராட்சிக்குட்பட்ட மின்னாத்தூர் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளிக்கு ஆர்.சி.சி. கட்டடம் ஒன்றும், ஆஸ்பெஸ்டாஸ் கட்டடம் ஒன்றும் உள்ளது. ஆர்.சி.சி. கட்டடம் 1998ஆம் ஆண்டு பராமரிப்பு செய்யப்பட்டுள்ளது. மாணவர்களின் வருகை 51 மட்டுமே உள்ளதால் ஆர்.சி.சி. கட்டடம் ஒன்று மட்டுமே போதுமானதாக உள்ளது.

43—

### தொடக்கப்பள்ளிக்குக் கூடுதல் கட்டடம்

**வினா எண் 36410—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் ஒன்றியம், கண்டிதம்பட்டு ஊராட்சியில் பொட்டுமாச்சாவடி ஒன்றிய தொடக்கப்பள்ளிக்கு கூடுதல் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் ஒன்றியம், கண்டிதம்பட்டு ஊராட்சியில் பொட்டுமாச்சாவடி ஒன்றிய தொடக்கப்பள்ளிக் கட்டடத்திற்கு மிக அதிகமாக பழுதுகள் உள்ளன. இதனை பழுதுநீக்கம் செய்தால், பிற்காலத்தில் தாங்கக்கூடிய வலு இல்லாமல் போய் விடுமாதலால், 2000-2001 ஆம் ஆண்டு ஜவஹர் கிராம வளர்ச்சித் திட்டத்தில் ரூ.2.85 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு ஆர்.சி.சி. கட்டடம் கட்ட நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**44—**

**தடுப்புச்சுவர் அமைத்தல்.**

**வினா எண் 36816—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், தெற்கு கருங்குளம் ஊராட்சி நடுநிலைப்பள்ளிக்குத் தடுப்புச்சுவர் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**45—**

**ஈஸ்வரன் கோயில் சொத்து**

**வினா எண் 14831—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, தெசவிளக்கு கிராமத்திலுள்ள ஈஸ்வரன் கோயில் சொத்து முறையாகப் பராமரிக்கப்பட்டு வருகிறதா?



(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) ஆம். முறையாகப் பராமரிக்கப்பட்டு வருகிறது.

(ஆ) மேற்கண்ட திருக்கோயிலுக்குச் சொந்தமாக 13.65 ஏக்கர் புஞ்சை நிலங்கள் உள்ளன. மேற்கண்ட நிலங்களை திருக்கோயிலின் பரம்பரை அறங்காவலர்களே சொந்தமாக சாகுபடி செய்து பூஜை செய்து வருவதால் மேற்படி நிலத்தை பொது ஏலத்தில் குத்தகைக்கு விட்டு வருமானத்தைப் பெருக்கவும், பழுதடைந்த நிலையிலுள்ள திருக்கோயிலைப் புதுப்பிக்கவும் பரம்பரை அறங்காவலருக்குத் தக்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. குத்தகை வருமானத்தைக் கொண்டு தினந்தோறும் பூஜை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேற்கண்ட நிலங்களைத் தவிர மேற்படி திருக்கோயிலுக்கு பொன், வெள்ளி இனங்கள் மற்றும் உலோகச் சிலைகள் எதுவும் இல்லை.

**46—**

**பட்டா மாறுதல் பணி**

**வினா எண் 38557—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலத்தை ஒருவரிடமிருந்து வாங்கும்போது பதிவு அலுவலகத்தில் நிலம் பதிவு செய்து பெயர் மாற்றப் படிவத்திலும் எழுதிக் கொடுத்தும் நிலம் வாங்கியவர் பெயரில் உடனே பட்டா மாற்றுவதில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசின் நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத்தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பட்டா மாறுதல் மனுக்கள் ஆவணங்கள் பதிவிற்கு பதிவு அலுவலரிடம் தாக்கல் செய்யப்படும்போது, உரிய கட்டணத்துடன் பதிவு அலுவலரால் பெறப்படுகிறது. ஆவணப்பதிவிற்குப்

[2000 நவம்பர் 11

பின் ஆவணப்பதிவு விவரங்களுடன் இந்த பட்டா மாறுதல் மனுக்கள் உரிய வட்டாட்சியருக்கு பட்டா மாறுதல் மேற்கொள்ளும்பொருட்டு அனுப்பப்படுகிறது. இப்பணி ஒவ்வொரு வாரமும் பதிவு அலுவலகங்களில் மேற்கொள்ளப்படுகிறது. நில உடமைப் பதிவேடுகள் வருவாய்த் துறையினரால் பராமரிக்கப்படுவதால், பட்டா மாறுதல் பணி அத்துறையினரால் மேற்கொள்ளப்படுகிறது.

47—

**முத்திரைத்தாள் விற்பனையாளராக நியமித்தல்**

**வினா எண் 39678—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) படித்து பட்டம் பெற்று வேலையில்லா பட்டதாரிகளை ஊக்குவிக்க தமிழ்நாடு அரசு முத்திரைத்தாள் விற்பனையாளராக நியமிக்க அரசு முயற்சி செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத்தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) படித்து பட்டம் பெற்று வேலையில்லா பட்டதாரிகளும் முத்திரைத்தாள் விற்பனையாளராக நியமிக்கப்படுகின்றனர். ஆனால், அவர்களுக்கு முன்னுரிமை அளிக்கும் உத்தேசம் ஏதும் அரசுக்கு இல்லை.

48—

**குடியிருப்பு வழங்குதல்**

**வினா எண் 22130—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, குறிச்சியிலும், சின்ன பெரிச்சிபாளையத்திலும், ஓரிச்சேரியிலும், மோளக்கவுண்டன் புதூரிலும் அட்டவணை, முகாசி பூனாச்சி பகுதிகளிலும் ஆதிதிராவிட மக்கள் குடியிருக்க இடமில்லாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?



2000 நவம்பர் 11]

(ஆ) ஆம் எனில், அவர்களுக்கு இடம் ஒதுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) அரசுக்குத் தெரியும்.

(ஆ) குடியிருப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

49—

**இலவச வீட்டுமனைப்பட்டா**

**வினா எண் 33064—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், இருக்கன் துறை ஊராட்சி, வண்ணாங்குளம் கிராம ஆதிதிராவிட மக்களுக்கு இலவச வீட்டுமனைப்பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) அரசு முன்வரும்.

(ஆ) இந்நிதியாண்டிலேயே பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

50—

**பட்டா வழங்குதல்**

**வினா எண் 34423—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 நவம்பர் 11

(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, பெரியபுலியூர் ஊராட்சி, சேவாக் கவுண்டலூரில் குடியிருக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பட்டா இல்லாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அவர்களுக்கு பட்டா கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) தெரியும்.

(ஆ) ஆவன செய்யும்.

## பன்னிரெண்டாம் பட்டியல்

1—

### தமிழ்ப் புத்தகங்கள் வழங்குதல்

**வினா எண் 7816—திரு. பி.என். சுப்பிரமணி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மணிப்பூர் மாநிலத்தில் பர்மா நாட்டு எல்லை, மோரே நகரத்தில் வசிக்கும் தமிழர்கள் தமிழ் பயில, தமிழ்ப் புத்தகங்கள் வழங்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

மணிப்பூர் மாநிலத்தில் உள்ள மோரே நகர தமிழ்மக்கள் 5000 பேர் படிப்பதற்கு ஏதுவாக, ஏற்கெனவே தமிழ்நாட்டுப் பாடநூல் கழகத்தால் வெளியிடப்படும் தமிழ்ப் பாடநூல்களை மணிப்பூர் மாநிலம் மோரே நகரைச் சார்ந்த விட்ரா பியூப்பிள் கிளப் என்ற நிறுவனத்திற்கு 1998-99 ஆம் கல்வியாண்டு முதல் இலவசமாக வழங்க அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.



2000 நவம்பர் 11]

2—

### பணியிடங்கள் நிரப்புதல்

**வினா எண் 35613—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி அரசு தலைமை மருத்துவமனையில் பிளம்பர், எலக்ட்ரிசியன், காவலர் பணியிடங்கள் ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி அரசு தலைமை மருத்துவமனையில் பிளம்பர், எலக்ட்ரிசியன் மற்றும் காவலர் பணியிடங்கள் ஏற்படுத்தும் செயற்குறிப்பு தற்பொழுது அரசிடம் இல்லை.

(ஆ) வினா எழாது.

3—

### ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம்

**வினா எண் 37529—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் ஒன்றியம், ஆலக்குடி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

[2000 நவம்பர் 11

தஞ்சாவூர் மாவட்டம், ஆலக்குடி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டடம் கட்ட நிலம் தேர்வு செய்யப்பட்டு பொதுப்பணித் துறையிடம் ஒப்படைக்கப்பட்டு கட்டுமானப் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

4—

**இளநிலை உதவியாளர் நியமித்தல்.**

**வினா எண் 38868—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி, அரசு மருத்துவமனைக்கு இளநிலை உதவியாளர் இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், உடனடியாக இளநிலை உதவியாளர் நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) எடப்பாடி அரசினர் மருத்துவமனைக்கு இளநிலை உதவியாளர் பணியிடம் அரசால் ஒப்புதலளிக்கப்படவில்லை. எனினும், இம்மருத்துவமனைக்கு இளநிலை உதவியாளர் பணியிடத்துக்கு மேல் நிலையில் உள்ள உதவியாளர் பணியிடம் ஒப்புதலளிக்கப்பட்டு ஒரு உதவியாளர் இங்கு பணிபுரிந்து வருகிறார்.

(ஆ) இம்மருத்துவமனைக்கு இளநிலை உதவியாளர் பணியிடம் உருவாக்கிட அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இப்பொழுது இல்லை.

5—

**இரத்த வங்கி**

**வினா எண் 43270—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2000 நவம்பர் 11]

(அ) சேலம் மாவட்டத்தில் எத்தனை அரசு மருத்துவமனைகளில் இரத்த வங்கி உள்ளது?

(ஆ) அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டத்தில் ஒரு இரத்த வங்கி மட்டும் இயங்கி வருகிறது. இது சேலம் அரசினர் மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இயங்கி வருகிறது. இங்கு கடந்த 1999 ஆம் ஆண்டில் மொத்தம் 1700 யூனிட் சேமிக்கப்பட்டுள்ளது.

6—

**தொடக்கப்பள்ளிக்குக் கூடுதல் கட்டடம்**

**வினா எண். 17929—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் ஊராட்சி ஒன்றியம், பூங்குளம் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளிக்குக் கூடுதல் பள்ளிக் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலை மாவட்டம், பூங்குளம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளிக்கு 2000-2001 ஆம் ஆண்டில் வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் கூடுதல் பள்ளிக்கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

[2000 நவம்பர் 11

7—

புதிய தெருவிளக்குகள் அமைத்தல்.

**வினா எண் 19454—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் கிராமப் பஞ்சாயத்துக்களில் புதிய தெரு விளக்குகள் அமைப்பதற்கு வைப்புத்தொகை ரூ3,600/-ஆக உயர்த்தப்பட்டுள்ளதால் கிராமங்களில் புதிய தெரு விளக்குகள் அமைக்க முடியாத நிலை உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஒவ்வோர் ஆண்டும் அரசு நிதியிலிருந்து ஊரகப் பகுதிகளில் தெரு விளக்குகள் அமைக்க குறியீடு நிர்ணயிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கான நிதியை அரசு ஏற்றுக்கொள்கிறது. இதைத்தவிர ஊராட்சி மன்ற நிதியிலிருந்து அமைக்கப்படும் புதிய மின் விளக்கிற்காக தமிழ்நாடு மின்சார வாரியத்தால் நிர்ணயிக்கப்படும் தொகையை செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையை அரசால் தற்போது தளர்த்த இயலாது.

8—

மெர்குரி லைட் அமைத்தல்

**வினா எண் 19792—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர் மாவட்டம், திட்டக்குடி வட்டம், சென்னை-திருச்சி நெடுஞ்சாலையில் இராமநத்தம் பகுதியில் 20 மெர்குரி லைட் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**



2000 நவம்பர் 11]

கடலூர் மாவட்டம், திட்டக்குடி, சென்னை-திருச்சி நெடுஞ்சாலையில் இராமநத்தம் பகுதியில் தற்போது 7 மெர்குரி விளக்குகள் பொருத்தப்பட்டு நல்ல நிலையில் இயங்கி வருகிறது. மீதமுள்ள 13 மெர்குரி விளக்குகள் பொருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

9—

ஊதியத்தை உயர்த்துதல்

**வினா எண் 20671—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள மேல்நிலை குடிநீர்த் தொட்டி இயக்குபவர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தை உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கிராம ஊராட்சிப் பணியமைப்பைச் சீரமைப்பது குறித்து ஆய்வு செய்ய அமைக்கப்பட்ட குழுவின் பரிந்துரையை ஏற்று, மேல்நிலை குடிநீர்த் தொட்டி இயக்குபவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த தொகுப்பூதியம் 10-5-2000 நாளிட்ட ஊரக வளர்ச்சித் துறை அரசாணை (நிலை) எண். 119-ன்படி ரூ.350/-லிருந்து ரூ.400/-ஆக உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது. மேலும் கூடுதலாக பராமரிக்கும் விசைப் பம்பு ஒவ்வொன்றுக்கும் ரூ.150/-வீதம் கூடுதல் தொகுப்பூதியம் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

10—

தெரு விளக்குகள் அமைத்தல்

**வினா எண் 29727—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 நவம்பர் 11

(அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, பங்குநத்தம் ஊராட்சியைச் சேர்ந்த காஜாகொல்லஅள்ளி கிராமத்தில் கூடுதலாக 4 தெரு விளக்குகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, பங்குநத்தம் ஊராட்சியில் தற்போது போதிய நிதி வசதி இல்லை. எனவே காஜாகொல்லஅள்ளி கிராமத்தில் கூடுதலாக 4 தெருவிளக்குகள் அமைக்க தற்போது சாத்தியமில்லை.

**11—**

**மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி அமைத்தல்**

**வினா எண் 30682—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி உட்கோட்டம், பாட்டப்பத்து ஊராட்சிப் பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து புதிய குடிநீர்த் திட்டம் ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி ஒன்றியம், பாட்டப்பத்து ஊராட்சியிலுள்ள பாட்டப்பத்து மற்றும் துவரங்குளம் குடியிருப்பின் மக்கட்தொகை 1991-ஆம் ஆண்டு மறு ஆய்வின்படி முறையே 1274 மற்றும் 300 ஆகும். பாட்டப்பத்து கிராமத்திற்கு 1982 ஆம் ஆண்டு ஆழ்குழாய்க் கிணற்றினை நீராதாரமாகக் கொண்டு 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய மின்விசைத் திட்டம் வாரியத்தால் 1982-ஆம் ஆண்டு செயல்படுத்தப்பட்டு பராமரிப்பிற்காக ஊராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திலிருந்து துவரங்குளம் கிராமத்திற்குக் குழாய் நீட்டிப்பு செய்து மூன்று பொதுக் குழாய்கள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது ஆழ்குழாய்க் கிணற்று



2000 நவம்பர் 11]

நீராதாரம் பழுதடைந்துள்ளது. மாற்று நீராதாரம் அமைக்க மாவட்ட நிர்வாகத்திடம் நிதி பெறுவதற்கு சம்பந்தப்பட்ட ஊராட்சியால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இக்குடியிருப்பிற்கு தற்போது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் திட்டம் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

**12—**

**சாலை வசதி**

**வினா எண் 35189—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகர், 6வது வார்டு, காட்டன் மில் பகுதி வீதிகள், திருவள்ளுவர் நகர் கிழக்கு 2வது வீதி, ராஜாஜி நகர் 2வது வீதி, நெசவாளர் காலனி முதல் வீதி 7வது வார்டு, இளங்கோ நகர் முதல் கிராஸ் வீதி, 8வது வார்டு, குமரானந்தபுரம் 60 அடி ரோடு முதல் பிச்சம்பாளையம் இட்டேரி வரையிலும், அருள்ஜோதிபுரம் 1,2 வீதிகளிலும், 9வது வார்டு எஸ்.வி. காலனி, 7வது வீதி வார்டு, காலனி வடக்கு புறம்போக்கு வீதிகளிலும் சாலை வசதி இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போழுது சாலை அமைத்துத் தரப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் நகர், 6வது வார்டு, காட்டன் மில் பகுதி வீதிகள், திருவள்ளுவர் நகர் கிழக்கு 2வது வீதி, ராஜாஜி நகர் 2வது வீதி, நெசவாளர் காலனி முதல் வீதி மற்றும் 7வது வார்டு, இளங்கோ நகர் முதல் இராஜ வீதி வரையிலான இடங்களில் 2000-2002 முதல் 2003-2004 ஆண்டுகளுக்கான நகர கூட்டாண்மை திட்டத்தின் மூலம் சாலை வசதிகள் ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

8வது வார்டு குமரானந்தபுரம் 60 அடி சாலை முதல் பிச்சம்பாளையம் இட்டேரி சாலை வரை தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சாலை அமைக்கும் பணி தொடங்கும் நிலையில் உள்ளது.

அருள் ஜோதிபுரம் 1 மற்றும் 2 வீதிகள் அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவு என்பதால் அங்கு நகராட்சியால் சாலைப்பணிகள் செய்ய இயலவில்லை.

9வது வார்டு எஸ்.வி. காலனி 7வது வீதி விரிவு ஆகியவற்றில் சாலை அமைக்கும் பணி 2001-2002 ஆம் ஆண்டு நகர கூட்டாண்மைத் திட்டத்தின் மூலம் நிறைவேற்றத் திட்டமிடப்பட்டுள்ளது.

**13—**

**பிரதான சாலையை தார்ச்சாலையாக மாற்றுதல்**

**வினா எண் 35451—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) திருப்பூர் 22வது வார்டு பூத்தார் தியேட்டர் பிரதான சாலை தார்ச்சாலையாக மாற்றப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் நகர் 22வது வார்டு பூத்தார் தியேட்டர் பிரதான சாலையை விதை முதலீட்டுத் திட்டத்தின்கீழ் (Seed Capital Works) தார்ச்சாலையாக மாற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**14—**

**கட்டட வசதி**

**வினா எண் 36421—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டம், தஞ்சாவூர் ஒன்றியம், காட்டூர் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளி கூரைக் கட்டடத்தை ஓட்டுக் கட்டடமாக செப்பனிட்டுத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**





தஞ்சாவூர் மாவட்டம், காட்டூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளிக்கு ஒரு ஓட்டுக் கட்டடமும், ஒரு ஆஸ்பெஸ்டாஸ் கூரைக் கட்டடமும் உள்ளன. கூரைக் கட்டடம் ஏதுமில்லை. மேலும், இங்கு 61 ஆண்களும், 66 பெண்களும் கல்வி பயின்று வருகிறார்கள். இவர்களுக்கு இவ்விடம் போதுமானதாகவுள்ளது.

**15—**

**மானியத்தொகை**

**வினா எண் 39292—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள பேரூராட்சிகளுக்கு புதிய மின் விளக்குகள் அமைக்க அரசால் கடந்த 1998-1999 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட மானியத் தொகை எவ்வளவு?

(ஆ) அதில் செலவிடப்பட்ட தொகை எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) 1998-1999 ஆம் ஆண்டு அடிப்படை வசதித் திட்டத்தில் பேரூராட்சிகளுக்குப் புதிய தெரு விளக்கு அமைக்க அரசால் ரூபாய் 3,95,04,000/- மானியம் வழங்கப்பட்டது.

(ஆ) மானியத் தொகை முழுவதும் செலவிடப்பட்டுள்ளது.

**16—**

**பஞ்சாயத்து உதவியாளர்களின் மாதச்சம்பளம்**

**வினா எண் 40172—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பஞ்சாயத்தில் பணிபுரியும் பஞ்சாயத்து உதவியாளர்களுக்குக் கொடுக்கப்படும் மாதச் சம்பளம் எவ்வளவு?

(ஆ) இவர்களின் சம்பளத்தை அரசே நிர்ணயம் செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) நிலை-I கிராம ஊராட்சியில் பணிபுரியும் முழுநேர எழுத்தர்களுக்கு தொகுப்பூதியம் மாதம் ரூ.1800/-க்கு மிகாமலும் இதர கிராம ஊராட்சி பகுதிநேர எழுத்தர்களுக்கு தொகுப்பூதியம் மாதம் ரூ.800/-க்கு மிகாமலும வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

(ஆ) ஊராட்சிகள் சட்டம், 1994, பிரிவு 102(1)-ன்கீழ் ஊராட்சிப் பணியாளர் தொடர்பான விதிகள் வகுக்க அரசுக்குள்ள அதிகாரத்தின்படி, ஊராட்சிப் பணியாளர்களின் ஊதிய உச்சவரம்பை அரசுதான் அவ்வப்பொழுது நிர்ணயித்து வருகின்றது.

**17—**

**உதவி இயக்குநர் அலுவலகம் ஏற்படுத்துதல்**

**வினா எண் 38427—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், வீரகேரளம்புதூர் வட்டத்திற்கென வேளாண்மை விரிவாக்க மையம் ஏற்படுத்தி சுரண்டையில் வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம் ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) 1. அரசின் நிர்வாகச் செலவுகளைக் கட்டுப்படுத்த அனைத்துத் துறைகளிலும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும், அனைத்துச் செலவினங்களிலும் சிக்கனத்தைக் கடைபிடிக்க வேண்டுமென்றும் நிலை நிதிக்குழு முடிவு செய்துள்ளதால் வரவு-செலவு திட்டத்தில் சேர்க்கப்படாத



அல்லது சட்டமன்றப் பேரவையில் இதுவரையில அறிவிக்கப்படாத புதிய திட்டங்களுக்கு இந்த நிதியாண்டில் ஒப்புதல் அளிக்க இயலாது. எனவே வீரகேரளம்புதூர் வட்டத்தில் வேளாண்மை விரிவாக்க மையம் ஏற்படுத்த இந்நிதியாண்டில் வாய்ப்பில்லை.

2. ஒரு தாலுக்காவின் தலைமையிடத்தில் மட்டுமே, வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம் இதுவரையில் தொடங்கப்பட்டு, செயல்பட்டுக்கொண்டு வருகிறது. இதனை மாற்றி, தாலுக்காவின் தலைமையிடத்தில் வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம் அமைப்பதற்குப் பதிலாக வேறு இடத்தில் அமைத்தால் பல நிர்வாகச் சிக்கல்கள் ஏற்படும். எனவே சுரண்டையில் உதவி வேளாண்மை இயக்குநர் அலுவலகம் அமைக்க இயலாது.

(ஆ) கேள்வி எழவில்லை.

**18—**

**வழக்குகள்**

**வினா எண் 35207—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பொதுப்பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டத்தில் சந்தன மரம் மற்றும் பலவகைப்பட்ட காட்டு மரங்கள் குறித்த திருட்டு வழக்குகள் 1996 முதல் 2000 வரை பதிவான வழக்குகள் எத்தனை?

(ஆ) அதில் முடிவடைந்த வழக்குகள் எத்தனை?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) வேலூர் மாவட்டத்தில் 1996 முதல் 2000 வரையில் 2151 சந்தனமரக் கடத்தல் குற்ற வழக்குகளும், 8 பலவகைப்பட்ட காட்டு மரங்கள் (அட்டவணைப்படுத்தப்பட்ட மரங்கள்) குறித்த திருட்டு வழக்குகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

(ஆ) பதிவு செய்யப்பட்ட 2151 சந்தனமரக் குற்ற வழக்குகளில் 400 வழக்குகளும், 8 பல்வகை காட்டு மரங்கள் (ஷெட்யூல்டு டிம்பர்) வழக்குகளில் 4 வழக்குகளும் முடிவு செய்யப்பட்டுள்ளன.

[2000 நவம்பர் 11

19—

### விபத்துகள் எண்ணிக்கை

**வினா எண் 21086—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1996-1997, 1997-1998 ஆம் ஆண்டு ஜூன் வரை மின் கம்பங்களில் வாகனங்கள் மோதி உயிர் இழந்தவர்கள் எத்தனை பேர்?

(ஆ) எத்தனை விபத்துகள் நடந்துள்ளன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மின்கம்பங்களில் வாகனங்கள் மோதி உயிர் இழந்தவர்கள்:

| | |
|---|---|
| 1996 - | 4 |
| 1997 - | 7 |
| 1998 ஜூன் வரை - | 2 |

(ஆ) நடந்துள்ள விபத்துகளின் எண்ணிக்கை:

| | |
|---|---|
| 1996 .. | 207 |
| 1997 .. | 245 |
| 1998 ஜூன் வரை | 130 |

20—

### தனிச் சட்டம்

**வினா எண் 29600—திரு. வி.ஜி. தனபால்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2000 நவம்பர் 11]

(அ) குடிசைத் தொழிலான தீப்பெட்டித் தொழிலையும், அபாயகரமான பட்டாசுத் தொழிலையும் இணைத்து இப்போதைய தொழிற்சாலைச் சட்டம் 85(I) விருந்து பிரித்து தனித் தனிச் சட்டம் இயற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தீப்பெட்டித் தொழில் என்பது குடிசைத் தொழிலாக மட்டும் நடைபெறுவதில்லை. இயந்திரங்களைக் கொண்டும் பெரிய அளவில் நடைபெற்று வருகிறது. தீப்பெட்டித் தொழிலகங்களில் பயன்படுத்தப்படும் வேதியியல் பொருட்கள் அபாயம் விளைவிக்கக் கூடியவையாகும். மேலும் எளிதில் தீப்பற்றிக் கொள்ளும் தன்மையுடையனவாகும். கலால் துறையினரால் 'சி' கிளாஸ் மற்றும் 'டி' கிளாஸ் என வகைப்படுத்தப்பட்ட தீப்பெட்டித் தொழிலகங்கள் மிக அதிக அளவில் உள்ளன. இவை பெரும்பாலும் வீடுகள் மிகுந்த பகுதிகளில் நடத்தப்பட்டு வருகின்றன. இவ்வகைத் தொழிலகங்களில் குழந்தைத் தொழிலாளர்கள் பணிக்கமர்த்தப்பட்டு வருகிறது. உச்சநீதிமன்றத் தீர்ப்பின்படி, குழந்தைத் தொழிலாளர்களைப் பணிக்கு அமர்த்துவதைத் தடை செய்ய சீரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இந்நேர்வில், குழந்தைத் தொழிலாளர்களைப் பணிக்கு அமர்த்துவதைத் தடை செய்யவும், மேற்குறிப்பிட்டுள்ளவாறு அபாயகரமான தொழிலகமாக வகைப்படுத்தப்பட்டு உள்ளதாலும், குடிசைத் தொழிலாக நடைபெறும் தீப்பெட்டித் தொழிலகங்கள் தொழிற்சாலைச் சட்டப்பிரிவு 85(I)-ன்கீழ் கொண்டு வரப்பட வேண்டும். இதற்கான நடவடிக்கைகள் தொழிற்சாலை ஆய்வகத் தொழில் துறை ஆய்வர்களால் சீரிய முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேற்குறிப்பிட்டுள்ள காரணங்களினால், தீப்பெட்டித் தொழிலை தொழிற்சாலை சட்டப்பிரிவு 85(I)-ல் இருந்து பிரித்து தனிச்சட்டம் இயற்றும் சூழல் எழாது.

[2000 நவம்பர் 11

21—

### தொலைபேசி இணைப்பு

**வினா எண் 32288—திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு தொலைபேசி இணைப்பு இல்லாமலிருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், வழங்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம், தெரியும்.

(ஆ) தொலைபேசி இணைப்புகள் வழங்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

22—

### தடை

**வினா எண் 34116—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகர் பெரியபள்ளிவாசல் அமைந்துள்ள குறுகலான சாலையில் கனரக வாகனங்கள் செல்வது தடை செய்யப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**



2000 நவம்பர் 11]

(அ) மற்றும் (ஆ) இது ஒரு வழிப்பாதையாக மாற்றப்பட்டு விட்டதால் கனரக வாகனங்கள் செல்வதைத் தடை செய்ய அவசியமில்லை.

23—

### வேகத்தடை

**வினா எண் 34117—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகர் 50-வது வார்டு திரு.வி.க. நகர் 6வது வீதி சந்திப்பில் வேகத்தடை அமைக்குமாறு அரசிற்குக் கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை

24—

### சிறு பேருந்துகள்

**வினா எண் 35225—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1998-99ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை தமிழகத்தில் சிறு பேருந்துகள் (மினி) இயக்குவதற்காக எத்தனை விண்ணப்பங்கள் அரசுக்கு வந்துள்ளன?

(ஆ) அவற்றில் எத்தனை மனுக்கள் பரிசிலனை செய்து, எத்தனை நபர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளன?

[2000 நவம்பர் 11

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) 4017 விண்ணப்பங்கள் வந்துள்ளன.

(ஆ) 669 நபர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**25—**

### ரவுண்டானா ஏற்படுத்துதல்

**வினா எண் 36936—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாநகரில் புறவழிச்சாலையில் திருவாக்கவுண்டனூர் மற்றும் சிவதாபுரம் ஆகிய இடங்களுக்குச் செல்லும் ரோடுகளில் விபத்துகளைத் தவிர்க்க ரவுண்டானா ஏற்படுத்தி போக்குவரத்தைக் கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

சேலம் மாநகரில் புறவழிச்சாலையில் திருவாக்கவுண்டனூர் மற்றும் சிவதாபுரம் ஆகிய இடங்களில் ரவுண்டானா ஏற்படுத்தினால் போக்குவரத்தைச் சீர் செய்து விபத்து ஏற்படுவதைத் தவிர்க்கலாம் என்பதை அரசு அறியும். இது தொடர்பாக நெடுஞ்சாலைத் துறையினரால் மேற்படி இடங்களில் நான்கு வழிப்பாதை அமைக்கப் பணி நடைபெற்று வருவதால் இப்பணி நிறைவு பெறும்போது தக்க போக்குவரத்து பாதுகாப்பு வசதிகள் செய்யப்படும்.

**26—**

### கடனுதவி

**வினா எண் 40369—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2000 நவம்பர் 11]

பிரதமர் நிதியுதவித் திட்டத்தின்கீழ் படித்த இளைஞர்களுக்கு சுயதொழில் தொடங்க வங்கிகளில் கடன் கிடைக்க நடைமுறைச் சிக்கலை எளிதாக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைப் பொறுத்தமட்டில் படித்த இளைஞர்கள் சொந்தமாகத் தொழில் தொடங்கி வேலை செய்ய அரசு உதவியளிக்கும் திட்டங்கள் ஏதும் செயல்படுத்தப்படவில்லை.

**27—**

### மேலாளர் பதவி பெயர் மாற்றம்

**வினா எண் 37856—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெடுஞ்சாலைத் துறையில் பணிபுரியும் மேலாளர்களின் பதவியின் பெயரை அக்கவுண்ட்ஸ் ஆபிசர் என்று பெயர் மாற்றம் செய்ய வேண்டி உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை எப்போது எடுக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நெடுஞ்சாலைத் துறையில் பணிபுரியும் மேலாளர்களின் பதவியின் பெயரை கோட்டக் கணக்கு அலுவலர் என்று பெயர் மாற்றம் செய்யக்கோரி தமிழ்நாடு நெடுஞ்சாலை ஊரகப்பணித் துறை கோட்டக் கணக்கர்கள் சங்கம் அரசிற்கு கோரிக்கை வைத்தது. அக்கோரிக்கையானது அரசால் பரிசீலிக்கப்பட்டு மேற்படி பெயர் மாற்றத்திற்கான கோரிக்கையினை பொது சம்பளத் திருத்தத்தின்போது (General Pay Revision) அமைக்கப்படும் ஊதியக்

குழுவிடம் உரிய நேரத்தில் வைக்குமாறு மேற்படி சங்கத்திற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

28—

## தேரழுந்தூர் கம்பர் கோட்டம்

**வினா எண் 24715—திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செய்தி மக்கள் தொடர்புத் துறையிலிருந்து மாற்றப்பட்டு இந்து சமய அறநிலையத் துறையின் நிர்வாகத்தில் உள்ள குத்தாலம் தொகுதி "தேரழுந்தூர் கம்பர் கோட்டம்" நிர்வாக வசதி கருதி உள்ளாட்சித் துறைக்கு மாற்றித் தரப்படுமா?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

அரசு கடிதம் (நிலை) எண் 597, தமிழ் வளர்ச்சி பண்பாடு மற்றும் அறநிலையத் துறை, நாள் 18-12-1998-ன்படி தேரழுந்தூர் அருள்மிகு ஆமருவிப் பெருமாள் திருக்கோயில் வளாகத்தில் அமைந்துள்ள கம்பர் கோட்டத்தை குத்தாலம் ஊராட்சி ஒன்றியத்திற்கு மாற்றம் செய்திட அரசு அனுமதி வழங்கியுள்ளது.

29—

## மின்சார மயானங்கள்

**வினா எண் 37910—திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டிலுள்ள பெரிய நகரங்களில் எல்லாம் இந்து சமய அறநிலையத் துறையின் மூலம் மின்சார மயானங்கள் அமைக்க அரசு முன்வருமா?





விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

இந்து சமய அறநிலையக் கொடைகள் சட்டப்பிரிவின்படி தமிழ்நாட்டிலுள்ள பெரிய நகரங்களில் மின்சார மயானம் அமைக்க, திருக்கோயிலின் உபரி நிதியை செலவிட இயலாது. மேற்படி சட்டத்தில் வழிவகைகள் செய்யப்படாத நிலையில், மின்சார மயானம் அமைக்க இயலாது.

30—

## தங்க, வைர நகைகள் ஏலம்

**வினா எண் 39013—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்குவிடையளிப்பாரா—

(அ) 1999-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முடிய தமிழகத்திலுள்ள திருக்கோயில்களில் எவ்வித பயனுமின்றி உள்ள தங்க, வைர நகைகளை அரசு ஏலம் விட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மதிப்பு எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள, திருக்கோயில்களில் உள்ளதும், எவ்வித பயனும் இன்றி உள்ளதுமான தங்க, வைர நகைகள் அந்தந்த திருக்கோயில்களில் பாதுகாப்புடன் வைக்கப்பட்டுள்ளன. திருக்கோயில் நகைகள் பழமையும், புராதனத் தன்மையும் வாய்ந்தவை என்பதால் இவைகள் ஏலத்தில் விடப்படுவதில்லை.

31—

## சேர்க்கை எண்ணிக்கை

**வினா எண் 31604—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 நவம்பர் 11

(அ) திருநெல்வேலி மேடை தளவாய் மேலாண்மை பயிற்சி நிலையத்தில் மாணவர்களின் சேர்க்கை எண்ணிக்கையை அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) திருநெல்வேலி மேடை தளவாய கூட்டுறவு மேலாண்மை நிலையத்தின் 2000-2001ஆம் ஆண்டு பயிற்சிக்கான மாணவர்கள் எண்ணிக்கை, மேலாண்மை நிலையத்தின் உள்கட்டமைப்புக்கு (Infrastructure) ஏற்றவாறு பரிசீலிக்கப்பட்டு 600 (அறு நூறு) என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

32—

கட்டடம்

**வினா எண் 36728—திரு. பி. இராசமாணிக்கம்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஒரத்தநாடு தொகுதி, பொன்னாப்பூர், நெடுவாக்கோட்டை (தஞ்சாவூர் மாவட்டம்) ஆகிய கிராமங்களில் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு நிரந்தரக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

பரிசீலனையில உள்ளது.



2000 நவம்பர் 11]

33—

சிறு வணிகக் கடன்

**வினா எண் 38320—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கூட்டுறவு வங்கிகள் மூலம் வழங்கப்படும் சிறு வணிகக்கடன் திட்டத்தின்கீழ் இதுவரை எத்தனை ஏழைப்பெண்கள் பயன் அடைந்து உள்ளனர்?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

16-8-2000 வரை தமிழகமெங்கும் 1,26,127 மகளிர், ரூ. 14.16 கோடி அளவுக்கு மகளிர் சிறு வணிகக் கடன் திட்டத்தின்கீழ் பயனடைந்துள்ளனர்.

34—

கூட்டுறவு பால் இணையம்

**வினா எண் 6212—திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு பால்வளத் துறை அமைசசர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி கூட்டுறவு பால் இணையம் (கிருஷ்ணகிரி பால் பதனிடும் தொழிற்சாலை) கடந்த காலத்தில் தயாரிப்புச் செலவைவிட குறைந்த விலைக்கு பால் துகள்களை விற்பனை செய்து நிர்வாகத்திற்கு பெரும் நட்டம் ஏற்படுத்தியதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதனமீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம், கிருஷ்ணகிரி பால் பதனிடும் தொழிற்சாலையில் உற்பத்தி

[2000 நவம்பர் 11

செய்யப்பட்ட பால் துகள்கள் (Milk Powder) தயாரிப்புச் செலவைவிட குறைந்த விலைக்கு விற்பனை செய்ததால் மேற்படி ஒன்றியத்திற்கு ரூ.2,81,17,930/- நட்டம் ஏற்பட்டுள்ளது. மேற்படி நட்டம் 1989-90 முதல் 1992-93 வரையுள்ள காலங்களில் ஏற்பட்ட நட்டம் ஆகும். தருமபுரி மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியத்தின் பால் உபபொருட்களை தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையத்தின் மூலமாகத்தான் மேற்படி காலங்களில் விற்பனை செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஒன்றிய பால் துகள்களுக்கு போதுமான விலை கிடைக்காததால், உற்பத்திச் செலவைவிட குறைந்த விலைக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதால் மேற்படி நட்டம் ஏற்பட்டுள்ளது. இது ஒரு வியாபார நட்டமாகும் (Business Loss) இதற்கு மேற்படி ஒன்றியத்தில் பணிபுரிந்த நிர்வாக இயக்குநரையோ அல்லது தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையத்தின் அலுவலரையோ, பொறுப்பாக்க இயலாது. இதனால், மேற்படி ஒன்றியத்திற்கு பால்பண்ணை விற்பனை செய்ததில் நட்டம் ஏற்பட்டுள்ளதை இவ்வலுவலகம் தெரிந்திருந்தும், 1983ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டப்பிரிவு 87-ன்கீழ் தண்ட வசூல் நடவடிக்கை எடுக்கவில்லை.

35—

### கட்டட வசதி

**வினா எண் 31009—திரு சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேடசந்தூர் தொகுதி, மாரம்பட்டி ஊராட்சிக்கு புதிதாக பால் கூட்டுறவு சங்கக் கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:**

வேடசந்தூர் தொகுதி எம்.எஸ்.551 மாரம்பட்டி பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்க அலுவலகம் வாடகை, கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. மேற்படி சங்கத்திற்குச் சொந்தமான காலிமனை ஏதும் இல்லை. சங்கத்திற்குச் சொந்தமாக காலிமனை வாங்கப்பட்டதும் அரசு நலத் திட்டத்தின்கீழ் கட்டடம் கட்டுவதற்குத் தேவையான தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



2000 நவம்பர் 11]

36—

### பட்டா மாறுதல்

**வினா எண் 17591—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் உள்ள வட்டாட்சியர் அலுவலகத்தில் பட்டாவை மாற்றம் செய்ய வேண்டி எவ்வளவு பேர் விண்ணப்பித்துள்ளனர்? அதில் எத்தனை பேருக்கு பட்டா மாறுதல் கொடுக்கப்பட்டது? (1996 முதல் 1998 வரை)

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், வருவாய்த் துறை அமைச்சர்:**

1996-1998ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் உள்ள வட்டாட்சியர் அலுவலகங்களில் பட்டா மாறுதல் வேண்டி 20529 பேர் விண்ணப்பித்திருந்தனர். அவற்றில் 177 விண்ணப்பங்கள், சிட்டாவில் உள்ள பட்டாதாரர் பெயருக்கும் நிலம் விற்பனைதாரர் பெயருக்கும் வேறுபாடு இருந்ததாலும், பட்டாவில் உள்ள பெயருக்கும் விண்ணப்பதாரர் பெயருக்கும் தொடர் ஆவணங்கள் இல்லாததாலும், சில புலங்கள் தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்குகள் நடைபெற்று வருவதாலும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. 20352 விண்ணப்பதாரர்களுக்கு பட்டா மாறுதல் வழங்கப்பட்டுள்ளது.

37—

### நிவாரணப் பணி விவரம்

**வினா எண் 36781—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் 1999-2000ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட துயர் நிவாரணப் பணிகளின் விவரமென்ன?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், வருவாய்த் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டத்தில் 1999-2000ஆம் ஆண்டில் நலிந்தோர் நலத்திட்டம் மற்றும் விபத்து நிவாரணத் திட்டங்களின்கீழ் மேற்கொள்ளப்பட்ட துயர் நிவாரணப் பணிகள் பின்வருமாறு:

[2000 நவம்பர் 11

(1) நலிந்தோர் நலத் திட்டத்தின்கீழ் பயனடைந்தவர்களின் எண்ணிக்கை-935

(2) நலிந்தோர் நலத் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட நிவாரணத் தொகை-ரூ.59.90 இலட்சங்கள்

(3) விபத்து நிவாரணத் திட்டத்தின்கீழ் பயனடைந்தோர்களின் எண்ணிக்கை-63

(4) விபத்து நிவாரணத் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட நிவாரணத் தொகை ரூ. 6.30 இலட்சங்கள்

**38—**

**நில உரிமைப் பட்டா புத்தகம்**

**வினா எண் 40581—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு முழுவதும் விவசாயிகளுக்கு நில உரிமைப் பட்டா புத்தகம் விரைந்து வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) நில உரிமைப் பதிவேடு திட்டம் தற்போது வேலூர் மாவட்டத்தில் முழுமையாகச் செயல்படுத்தப்பட்டுள்ளது. தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், கோயம்புத்தூர், மதுரை தேனி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் நில உரிமைப் பதிவேடுகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுவிட்டன. கடலூர், தர்மபுரி, சேலம், நாமக்கல், திண்டுக்கல், இராமநாதபுரம் மற்றும் திருநெல்வேலி ஆகிய ஏழு மாவட்டங்களில் 1-9-1999 முதல் இத்திட்டத்தைச் செயல்படுத்த ஆணையிடப்பட்டது. சென்னை நீங்கலாக, எஞ்சியுள்ள 12 மாவட்டங்களுக்கும் நில உரிமைப பதிவேடுகள் வழங்க அரசு ஆணையிட்டுள்ளது. அவ்வாணை 1-7-2000-இல் இருந்து செயலுக்கு வந்தது. வரும் 31-3-2001-க்குள் நில உரிமைப் பதிவேடுகள்



2000 நவம்பர் 11]

19 மாவட்டங்களில் உள்ள விவசாயிகளுக்கும் வழங்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**39—**

**அஞ்சல்வழிக் கல்வி**

**வினா எண் 40659—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மத்தியச் சிறையில் உள்ள கைதிகள் எவ்வளவு பேர் அஞ்சல்வழிக் கல்வி மூலம் பயின்று வருகிறார்கள்?

(ஆ) இதற்காக ஆகும் கல்விக் கட்டணத்தை அரசு ஏற்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மத்தியச் சிறையில் ஒன்பது சிறைவாசிகள் அஞ்சல் வழிக் கல்வி மூலம் பயின்று வருகிறார்கள்.

(ஆ) ஆம்.

தமிழ்நாடு சிறை நடைமுறை நூல், தொகுதி-2ல் விதி எண் 291 (12)ன்படி சிறைவாசிகள் பல்வேறு பல்கலைக்கழகத்தினரால் நடத்தப்படும் இளங்கலை மற்றும் முதுகலை கல்வி பயில அரசு செலவில் அனுமதி வழங்க சிறைத் துறைத் தலைவருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

**40—**

**கைதிகள்**

**வினா எண் 41944—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடந்த 1999-2000ஆம் ஆண்டு சிறைக் கைதிகள் இறந்தவர்கள் எத்தனை பேர்?

(ஆ) அதன் மேல் அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

[2000 நவம்பர் 11

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) கடந்த 1999-2000ஆம் ஆண்டு 125 சிறைக் கைதிகள் இறந்துள்ளனர்.

(ஆ) சிறைச்சாலையில் மரணமுற்ற சிறைவாசிகளின் எண்ணிக்கை மிகவும் குறைவானதாகும். சிறைவாசிகள் சிகிச்சைக்காக வெளியே தலைமை அரசு மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டு சிகிச்சை பயனின்றி நோயின் தன்மையால் இயற்கையாக மரணமடைகின்றனர். சிறைவாசிகள் சிறையினுள் மரணம் அடைந்தாலும், வெளியே அரசு மருத்துவமனைகளில் மரணம் அடைந்தாலும், ஒவ்வொரு நேர்விற்கும் சிறைவாசிகள் இறப்பு குறித்து கோட்டாட்சித் தலைவரால் விசாரணை செய்யப்பட்டு, உசாவல் அறிக்கை மற்றும் பிணககூறாய்வு அறிக்கையின் பேரில் மாவட்ட ஆட்சியரால் அறிக்கை அரசுக்கு அனுப்பப்பட்டு, சிறைவாசியின் இறப்பு தொடர்பாக ஒவ்வொரு நேர்விற்கும் அரசு ஆணையிடுகிறது. இறப்பிற்கான காரணத்தை கோட்டாட்சியரின் அறிக்கை மற்றும் மாவட்ட ஆட்சியரின் அறிக்கையின் மூலமாக அரசு ஆராய்ந்து முடிவு செய்கிறது. புதுடெல்லியிலுள்ள தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் அறிவிப்புகளுக்கிணங்க சில நேர்வுகளில் உரிய அறிக்கைகளும் அரசால் அதற்கு அனுப்பப்படுகிறது.

*41*—

## இலவச வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 35207—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதியில் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கான இலவச வீட்டுமனைப் பட்டா பெற்றவர் எத்தனை பேர்?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

ஓமலூர் தொகுதியில் 762 மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள் இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் பெற்றுள்ளனர்.



2000 நவம்பர் 11]

*42*—

## மாவட்ட விளையாட்டு அலுவலர்கள்

**வினா எண் 24132—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு இளைஞர் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்ட அளவில் விளையாட்டுத் துறையில் தற்பொழுது எத்தனை மாவட்ட விளையாட்டு அலுவலர்கள் பணிபுரிந்து வருகிறார்கள்?

(ஆ) இவர்களது பணியிடம் பிற அரசுத் துறையில் உள்ள மாவட்ட அலுவலர்கள் பணியிடத்திற்கு ஒப்பானதா?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, இளைஞர் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் விளையாட்டுத் துறையில் மாவட்டத்திற்கு ஒரு மாவட்ட அலுவலர் என்ற அடிப்படையில் 29 மாவட்ட விளையாட்டு அலுவலர்கள் பணிபுரிந்து வருகிறார்கள்.

(ஆ) இவர்களது பணியிடம் பிற அரசுத் துறைகளில் உள்ள மாவட்ட அலுவலர் பணியிடத்திற்கு ஒப்பானதாகக் கருதப்பட வேண்டும். ஆனால் ஊதிய விகிதத்தைப் பொறுத்தவரை ஒப்பானதாக இல்லை. மாவட்ட விளையாட்டு அலுவலர்களின் ஊதிய விகிதம் ரூ.5900-200-9900 ஆகும். ஆனால் பிற துறைகளில் உள்ள மாவட்ட அலுவலர்களின் ஊதிய விகிதம் ரூ. 8000-275-13,500 ஆகும். பிற அரசுத் துறைகளில் உள்ள மாவட்ட அலுவலர்களின் ஊதியத்திற்கு ஒப்பாக தங்களது ஊதிய விகிதம் திருத்தி அமைக்கப்பட வேண்டுமென மாவட்ட விளையாட்டு அலுவலர்கள் கோரியுள்ளனர். இவர்களின் கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

*43*—

## பணியிடங்கள் நிரப்புதல்

**வினா எண் 33766—திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு இளைஞர் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2000 நவம்பர் 11

தஞ்சாவூர் மாவட்டத்தில் விளையாட்டுத் துறையில் நீண்ட நாட்களாக காலியாகவுள்ள மாவட்ட விளையாட்டு அலுவலர், மேலாளர், பயிற்சியாளர் பணியிடங்களை நிரப்ப அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, இளைஞர் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டத்தில் விளையாட்டுத் துறையில் மாவட்ட விளையாட்டு அலுவலர் பணியிடம் காலியாக இல்லை. இம்மாவட்ட, விளையாட்டுத் துறைக்கு ''மேலாளர்'' பதவி ஏதும் ஒப்பளிக்கப்படவில்லை.

கால்பந்து, கூடைப்பந்து மற்றும் கோகோ/கபடி விளையாட்டுகளுக்குப் பயிற்றுநர்கள் உள்ளனர். இவர்கள் தவிர, வளைகோல்பந்துக்கென இந்திய விளையாட்டுக் குழுமப் பயிற்றுநர் ஒருவர் பணிபுரிந்து வருகிறார். தடகளத்திற்கென ஒரு பயிற்றுநரை இந்திய விளையாட்டுக் குழுமத்தின் வாயிலாக நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

*44—*

## முத்திரைக் கட்டணம் குறைத்தல்

**வினா எண் 40347—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் பின்தங்கிய பகுதி என்று அரசு அறிவித்ததில் அங்குள்ள வீட்டுமனை, வீடுகள் பதிவு செய்ய சார்பதிவாளர் அலுவலகத்திற்கு முத்திரைக் கட்டணம் குறைக்கலாம் என்ற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டத்தின்படி (மத்தியச் சட்டம்/1899) முத்திரைத்தீர்வை விதிக்கப்படுகின்றது.

சேலம் மாவட்டத்தில் பின்தங்கிய பகுதிகளில் உள்ள வீட்டுமனை, வீடுகள் குறித்த ஆவணங்களின் பதிவிற்கு முத்திரைத் தீர்வை அளவைக்



2000 நவம்பர் 11]

குறைப்பது குறித்த செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

*45—*

## விரிவுபடுத்தல்

**வினா எண் 41244—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

டான்சி நிறுவனத்தை வியாபார ரீதியாக விரிவுபடுத்தவும், அரசுத் துறைகளுக்கு அந்நிறுவனம் மூலம் வேண்டிய பொருட்களைப் பெறவும் அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

டான்சி நிறுவனம் வியாபார ரீதியாகச் செயல்படும் ஒரு நிறுவனம் (Commercial Organisation) ஆகும். டான்சி நிறுவனத்தை வியாபார ரீதியாக விரிவுபடுத்துவது குறித்த முடிவுகள் எடுப்பது அந்நிறுவனத்தின் இயக்குநர் குழுமத்தைச் சாரும். எனினும் இந்நிறுவனத்தின் தற்போதைய நிதிநிலை காரணமாக, இதனை வியாபார ரீதியாக விரிவுபடுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. அரசுத் துறைகள், பிற அரசுத் துறை நிறுவனங்கள், வாரியங்கள் போன்றவை தம் தேவைக்கு பொருட்களை வாங்கும்போது 50 விழுக்காட்டுக்கு மிகாமல் பொருட்கள் ஒப்பந்தப்புள்ளியில் பெறப்பட்டு நிர்ணயிக்கப்படும் குறைந்த விலையில் பொதுத் துறை நிறுவனங்களிடமிருந்து வாங்க வேண்டுமென்று அரசு ஆணையிட்டுள்ளது. இது டான்சி நிறுவனத்திற்கும் பொருந்தும்.

*46—*

## தொகுப்பு வீடுகள்

**வினா எண் 18509—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, செமலூர் ஒன்றியம், முத்துநாயக்கன்பட்டி ஊராட்சியிலுள்ள மரத்துக்குட்டப்பட்டி காலனிக்குப் பட்டா வழங்கி தொகுப்பு வீடு கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

[2000 நவம்பர் 11

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், முத்துநாயக்கன்பட்டி ஊராட்சி, மரத்துக்குட்டப்பட்டி காலனியில் வசிக்கும் 6 அருந்ததியக் குடும்பங்களுக்கு ஏற்கெனவே பட்டா வழங்கப்பட்டு விட்டது. இவர்கள் அனைவருக்கும் தொகுப்பு வீடு கட்டிக் கொடுகக ஊராட்சிமன்றத் தலைவரால் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**47—**

**புத்தகப் பணம்**

**வினா எண் 33077—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அஞ்சல்வழிக் கல்வி பயிலும் ஆதிதிராவிடர்/பழங்குடியின மாணவ, மாணவியர்களுக்கு புத்தகப் பணமாக மாநில அரசு 1998-99-ஆம் ஆண்டில் எவ்வளவு தொகை வழங்கியது?

(ஆ) எத்தனை மாணவ/மாணவியர்கள் பயன் அடைந்தனர்?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அஞ்சல்வழிக் கல்வி பயிலும் ஆதிதிராவிடர்/ பழங்குடியின மாணவ, மாணவியர்களுக்குப் புத்தகப் பணமாக தனியாக மாணவர்களுக்கு வழங்கப்படுவதில்லை. ஆனால் பள்ளி இறுதி வகுப்பு வரையிலும் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு பாடப் புத்தகங்கள், குறிப்பேடுகள் போன்றவை இலவசமாக வழங்கப்படுகின்றன. பள்ளி இறுதி வகுப்பிற்குப் பிந்தைய வகுப்புகளில் பயிலும் ஆதிதிராவிடர்/ பழங்குடியின மாணவ/ மாணவியர்களுக்கு கல்வி உதவித் தொகை



2000 நவம்பர் 11]

வழங்கப்படும்போதே அவர்களுக்கு புத்தகத்திற்காகவும் சேர்த்தே கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது. தனியாக புத்தகப் பணம் என வழங்கப்படுவதில்லை. இது தவிர புத்தக வங்கித் திட்டத்தின்கீழ் மருத்துவம், பொறியியல், சட்டம் பயிலும் மாணவ/மாணவியர்களுக்கு புத்தக வங்கிகள் அந்தந்த கல்லூரிகளில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஆதிதிராவிட/பழங்குடியின மாணவர்கள் அப்புத்தகங்களை எடுத்து, படித்து பயன் பெறலாம்.

**48—**

**பழம் பக்குவப்படுத்துதல்**

**வினா எண் 26423—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு கதர்த் தொழில் வாரியத்தால் நடத்தப்பட்டு வந்த பழம் பக்குவப்படுத்துதல் அலகு மூடப்பட்டுள்ளது குறித்து அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதை மீண்டும் இலாபகரமாக இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தர்மபுரி மாவட்டத்தில் கிருஷ்ணகிரியில் பழம் பக்குவப்படுத்தும் அலகு ஒன்று செயல்பட்டு வந்தது. இவ்வலகு இதற்கு முன்னர் திண்டுக்கல், குன்றக்குடி மற்றும் திருவொற்றியூரில் இயங்கி வந்தது. மேற்கண்ட அலகு 1988 முதல் 1994 வரை தொடர்ச்சியாக நட்டத்திலேயே இயங்கி வந்தது. மேலும் கிருஷ்ணகிரியில் செயல்பட்ட நாள் முதல் அதாவது 14-7-1993 முதல் மார்ச் 1994 வரை இவ்வலகின் உற்பத்தி ரூ.40,250/-, ஆனால் செலவினம் ரூ.95,839/-ஆகும். இதனால் வாரியத்திற்கு ஏற்பட்ட நட்டம் ரூ.55,589/- இவ்வலகினை இப்படியே தொடரவிட்டால் வாரியம் பெரும் நட்டத்தை மேற்கொள்வதோடு, மேலும் அபிவிருத்தி செய்ய சாத்தியக்கூறுகள் இல்லாததால் 13-5-1994 அன்று வாரிய நிலையான நிதிக் குழுக் கூட்டத்தில் இவ்வலகினை மூடிவிட உத்தேசிக்கப்பட்டு, இவ்வலகு 30-6-1994ல் மூடப்பட்டது.

49—

## நிதியுதவி

**வினா எண் 34515—திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசு, காதி ஆணையம் ஊரகத் தொழிலுக்கு நிதியுதவி அளிக்கும் திட்டத்தைச் செயல்படுத்த உள்ளதா?.

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கிராமப்புறக் கைவினைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்திடுவதற்கான கதர் ஆணைக் குழுவின் விளிம்புத் தொகைத் திட்டத்தின்கீழ் கதர் கிராமத் தொழில்களுக்கு தேசிய வங்கியின் மூலம் கடன் பெறுபவர்களுக்கு கடன் தொகையில் 25 அல்லது 35 சதவீதம் மானியமாக வழங்கப்படுகிறது. தனி நபர்களுக்கு (கிராம கைவினைஞர்களுக்கும், தொழில் துறை உரிமையாளர்களுக்கும் ரூ.10 இலட்சமும், நிறுவனங்கள் மற்றும டிரஸ்டுகளுக்கு ரூ.25 இலட்சமும். வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் கிராமப்புறங்களில் அமைக்கப்படுகின்ற வாய்ப்புள்ள அனைத்து கிராமத் தொழில் திட்டங்களுக்கும் பொருந்தக்கூடியதாகும். இத்திட்டம் தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியத்தால் 1996-99ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 31-3-2000 வரை தேசிய வங்கிகள் மூலம் 97 நபர்களுக்கு ரூ.109.21 இலட்சம் கடன் வழங்கப்பட்டு அதற்கான விளிம்புத் தொகை ரூ.29.73 இலட்சம் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தால் விளிம்புத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

50—

## ஊதியக்குழுவின் பரிந்துரை

**வினா எண் 37914—திரு. டி. மணி:** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1996-97 ஆம் ஆண்டு கதர்த் துறையில் பணியாற்றி ஓய்வு பெற்ற அலுவலர்களுக்கு ஆறாவது ஊதியக் குழுவின் பரிந்துரைப்படி பயன்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர்த் துறை அமைச்சர்:**

1996-97 ஆம் ஆண்டு கதர்த் துறையில் பணியாற்றி ஓய்வு பெற்ற அலுவலர்களுக்கு ஆறாவது ஊதியக் குழுவின் பரிந்துரைப்படி பயன்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரிய ஓய்வு பெற்ற ஓய்வூதியர்களுக்கு இதுவரை ரூ.423.28 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. தொகுப்பூதியத் தொகை ரூ.57.55 இலட்சம் வழங்குவதற்கும் விரைவு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

# பதிமூன்றாம் பட்டியல்

1—

## கல்லூரிகளில் முன்னுரிமை

**வினா எண் 4511—திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டிலுள்ள மருத்துவம், பொறியியல் கல்லூரிகளில் படிக்க பர்மா தமிழ் அகதிகளுக்கு முன்னுரிமை அளிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

தமிழ்நாட்டில் தற்போது பொறியியல் கல்லூரிகளில் பர்மா தமிழ் அகதிகள் என்ற வகையில் சிறப்பு ஒதுக்கீடு ஏதும் வழங்கப்படவில்லை. தாயகம் திரும்பிய இலங்கை மற்றும் பர்மா தமிழர்களுக்காக மொத்தமாக இரண்டு இடங்கள் சிறப்பு ஒதுக்கீடாக வழங்கப்படுகிறது. மருத்துவக் கல்லூரிகளைப் பொறுத்தவரை பர்மா தமிழ் அகதிகளுக்கென சிறப்பு ஒதுக்கீடு ஏதும் செய்யப்படவில்லை.

2—

## நூலகத்திற்கு அரசு உதவி

**வினா எண் 34207—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் 15-வேலம்பாளையம் மக்கள் பொது நல இயக்கத்தின் சார்பாகத் திறக்கப்பட்டுள்ள நூலகத்திற்கு அரசு செய்துள்ள உதவிகள் என்ன?

(ஆ) அவற்றிற்கான புத்தகங்களை வார, மாத வெளியீடுகளை அரசு வாங்கித்தர முன்வருமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) பொதுமக்கள் பொது நலச் சங்கத்தின் சார்பாகத் திறக்கப்பட்டுள்ள நூலகம் ஒன்று திருப்பூர் 15-வேலம்பாளையம் பேரூராட்சி அனுப்பர்பாளையம், ஆத்துப்பாளையம் சாலையில் செயல்பட்டு வருகிறது. இது இப்பகுதியைச் சார்ந்த பொதுமக்களாலும், மேற்படி மக்கள் பொது நல இயக்கத்தினராலும் இயக்கப்பட்டு வருகிறது. இந்நூலகம் தனியார் நூலகம் என்பதாலும் பொது நூலகத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் வராததாலும் இந்நூலகத்திற்கு அரசு உதவிகள் ஏதும் செய்து கொடுக்கப்படவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

3—

## சோடியம் ஆவி விளக்குகள்

**வினா எண் 33772—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி நகராட்சிக்கு 15 சோடியம் ஆவி விளக்குகள் 1998-99ல் மானியமாக வழங்க அரசு முன்வருமா?





(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி நகராட்சியில் 1997-98ல், 16 சோடியம் ஆவி விளக்குகளும், 1998-99ஆம் ஆண்டில் 7 சோடியம் ஆவி விளக்குகளும் அமைக்கப்பட்டுள்ளன. தற்போது அந்நகரில் மொத்தம் 23 சோடியம் ஆவி விளக்குகள் உள்ளன.

4—

## சாலை புதுப்பித்தல்

**வினா எண் 33806—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி நகராட்சியில் 1999-2000 ஆம் ஆண்டுகளில் போக்குவரத்து அதிகமுள்ள சாலைகள், இணைப்புச் சாலைகள் புதுப்பிக்க அரசு முழு மானியம் அளிக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

எடப்பாடி நகராட்சியில் போக்குவரத்து அதிகமுள்ள சாலைகளைப் புதுப்பிக்கும் பணிக்காக தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி மேம்பாட்டு நிறுவனம் மூலம் 1999-2000-ல் ரூ.25.00 இலட்சம் கடன் பெற்றும், 2000-2001ஆம் ஆண்டில் ரூ.40.00 இலட்சம் கடன் பெற்றும், அத்துடன் நகராட்சி நிதி ரூ.8.00 இலட்சம் சேர்த்து மொத்தம் ரூ.73 லட்சம் செலவில் மொத்தம் 34 சாலைப் பணிகள் (1999-2000-ல் 12, 2000-2001-ல் 22) எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

[2000 நவம்பர் 11

5—

## கழிவுநீர் வடிகால்

**வினா எண் 33900—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) திருப்பூர் நகரில் 1,19,21,22,23,24 ஆகிய வார்டுகளில் கழிவுநீர் ஓடக்காட்டில் ஒரு தனியார் நிலத்தில் கடல்போல் தேங்கியுள்ளதை அரசு அறியுமா?*

*(ஆ) அதை வடிகால் மூலம் வடித்து வெளியேற்ற அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?*

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் நகரில் 1,19,21,22,23,24, ஆகிய வார்டு பகுதிகளில் வரும் கழிவுநீர் முருங்கப்பாளையம், இட்டேரி வழியாக வந்து தனியார் திருமதி லீலாவதி மற்றும் பலரின் இடத்தின் வழியாக தெற்கு நோக்கிச் சென்று தேங்கி நிற்கிறது. அந்த இடத்திலுள்ள கழிவுநீரை வெளியேற்றுவதற்காக அந்த இட உரிமையாளர்களிடமிருந்து இடத்தை தானமாகப் பெற்று கழிவுநீர் கால்வாய் அமைத்து சாதிக்பாட்சா நகர், நகராட்சி சாலை வழியாகக் கொண்டுசென்று கழிவுநீரை கல்லம்பாளையம் நகராட்சி கால்வாயோடு இணைப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

6—

## கழிவுநீர் தேக்கம்

**வினா எண் 33905—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2000 நவம்பர் 11]

*(அ) திருப்பூர் நகராட்சி எல்லைக்குள் தங்கள் வீடுகளின் கழிவுநீரை தங்கள் வீட்டு முன் குழிதோண்டி தேக்கி வைத்துள்ள குடும்பங்கள் எத்தனை?*

*(ஆ) என்ன காரணத்தால் அவர்கள் அவ்வாறு தேக்கி வைக்கிறார்கள்?*

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) சுமார் 750 குடும்பங்கள்.

(ஆ) இவர்கள் அங்கீகரிக்கப்படாத மனைப் பகுதிகளில் வீடுகள் கட்டி உள்ளனர். இங்கு போதுமான சாக்கடை வசதி இல்லாததால் கழிவுநீரை தங்கள் வீடுகளுக்கு முன் குழிவெட்டி தேக்கி வைக்கிறார்கள். இக்கழிவுநீர் நகராட்சி லாரிகள் மூலம் அகற்றப்பட்டு வருகிறது.

7—

## வடிகால் வசதி

**வினா எண் 35184—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) திருப்பூர் 10 வது வார்டு காமாட்சியம்மன் கோயில் வீதியில் சாலை மற்றும் வடிகால் வசதிகள் இல்லை என்பதை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது அமைத்துத் தரப்படும்?*

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் நகர் 10வது வார்டு காமாட்சியம்மன் கோயில் வீதியில் 2001-2002ஆம் ஆண்டு நகர கூட்டாண்மைத் திட்டத்தின் கீழ் சாலை மற்றும் வடிகால் வசதிகள் செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

[2000 நவம்பர் 11

8—

## பணியமர்த்துதல்

**வினா எண் 57179—திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறை ஆறு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் பொருத்துனர், பராமரிப்பு உதவியாளர், மின் பொறியாளராகப் பல ஆண்டுகள் பணியாற்றிய 21 பேர்கள் பணியிலிருந்து விலக்கப்பட்டுள்ளதால், அவர்களைத் திரும்பவும் பணியில் அமர்த்துவதாக 31-7-1998 இல் நிர்வாக இயக்குநர் அறிவித்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறை ஆறு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் பணிபுரிந்து பணியிலிருந்து விலக்கப்பட்டதாகக் கூறப்படும் தொழிலாளர்கள் தினப் பணியாளர்களாக ஒப்பந்தக்காரர்களிடம் பணிபுரிந்தவர்கள். இவர்கள் தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியத்தில் தொடர்ச்சியான இரண்டு ஆண்டுகளில் 480 நாட்கள் பணிபுரியவில்லை. வாரியத்திற்கும், தொழிலாளர் சங்கங்களுக்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தின்கீழும் அவர்கள் வரவில்லை. வாரியத்தினால் வேலைவாய்ப்பகம் மூலமாகவும் தேர்ந்தெடுக்கப்படவில்லை. இவர்களைத் திரும்பவும் பணியில் அமர்த்துவதாக வாரிய இயக்குநரால் அறிவிக்கப்படவில்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

9—

## ஆழ்துளை கிணறு

**வினா எண் 38013—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2000 நவம்பர் 11]

(அ) வேலூர் டவுன் சாரதி நகரில் குடிநீர்ப் பற்றாக்குறை அதிகமாக உள்ளதால் குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்க ஆழ்துளைக் கிணறு அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் நகராட்சி, வார்டு எண் 7-ல் உள்ள சாரதி நகர் பகுதியில் தினசரி குடிநீர்க் குழாய்களில் தண்ணீர் விநியோகம் செய்யப்படுகிறது. மேலும் லாரி மூலமும் அவ்வப்பொழுது குடிநீர் விநியோகம் செய்யப்படுகின்றது. அது தவிர, அப்பகுதியில் ஐந்து ஆழ்துளைக் கிணறுகள் உபயோகத்தில் உள்ளன. மேலும் 2000-2001ஆம் ஆண்டிற்கான சட்டமன்ற உறுப்பினர் திட்டம் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் திட்டத்தின் மூலம் சாரதி நகர் பகுதியில் டான்சி பின்புறம், சீனிவாசா தியேட்டர் எதிர்புறம் ஆழ்துளைக் கிணறுகள் புதியதாக அமைக்கப்பட்டு தற்பொழுது உபயோகத்தில் உள்ளன.

10—

## அரசு குடிநீர் வழங்குதல்

**வினா எண் 38949—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர், சத்துவாச்சாரி பகுதி மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைப் போக்க பொன்னையாற்றிலிருந்து அரசு குடிநீர் வழங்க ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், திட்டம் எப்போது தொடங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு ஆணை நிலை எண் 106, ந.நி.(ம) கு.வ. (குவ1) துறை, நாள் 11-8-2000-ல் வேலூர் மாவட்டம், வேலூர் நகராட்சி, சத்துவாச்சாரி நகரப் பேரூராட்சி மற்றும 12 வழியோர கிராமங்களுக்கான

[2000 நவம்பர் 11

கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு அரசு நிர்வாகம் ஒப்புதல் வழங்கியுள்ளது. நடப்பு 2000-2001 ஆம் ஆண்டு இத்திட்டப் பணிகள் தொடங்கப்பட்டு இத்திட்டம் செயல்படுத்தும்போது, சத்துவாச்சாரி பகுதிக்கு பொன்னையாற்றிலிருந்து பாதுகாக்கப்பட்ட குடிநீர் நாளொன்றுக்கு 4.8 மில்லியன் லிட்டர் வழங்கப்படும்.

**11—**

**தூர் எடுத்தல்**

**வினா எண் 24380—திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், குண்டடம் ஊராட்சி ஒன்றியத்தில் பழைய கசிவுநீர்க் குட்டையைத் தூர் எடுக்க கோப்பணகவுண்டன் பாளையமும், புதிய குட்டை அமைக்க புதுஜயப்பநாயக்கன் பாளையமும் தேர்ந்தெடுக்கும் வேலை தொடங்கவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு நிதி ஒதுக்கீடு செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், குண்டடம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கோப்பண்ணகவுண்டன்பாளையத்திலுள்ள கசிவு நீர்க் குட்டை தூர் எடுக்கும் பணி, வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் 1997-98 ஆம் ஆண்டில் செய்து முடிக்கப்பட்டுள்ளது. புதுஜயப்பநாயக்கன்பாளையம் கிராமத்தில் புதிய கசிவுநீர்க் குட்டை அமைக்க ரூ. 5.00 இலட்சம் அளவில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையில் நிதி ஆதாரம் கிடைத்ததும் பணி மேற்கொள்ளப்படும்.

**12—**

**விவசாயிகளை ஊக்குவித்தல்**

**வினா எண் 35341—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2000 நவம்பர் 11]

(அ) விளைச்சலைப் பெருக்கவும், விவசாயிகளை ஊக்குவிக்கவும் பயிர் விளைச்சல் போட்டித் திட்டத்தினை வட்டம் அளவிற்குக் கொண்டு வந்து கவர்ச்சிகரமாக நடத்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உணவு உற்பத்தியைப் பெருக்கவும், விவசாயிகளிடையே போட்டி மனப்பான்மையை உருவாக்கவும், மாநில அளவு மற்றும் மாவட்ட அளவில் பயிர் விளைச்சல் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. மாவட்டங்களைப் பிரித்து வரையறுத்துள்ள நிலையில் உள்நிலை மகசூலை நிர்ணயிக்க இந்த மாவட்ட எல்லை போதுமானது என கருதப்படுகிறது. எனவே வட்ட அளவில் தனியாக பயிர்விளைச்சல் போட்டி நடத்த வேண்டிய அவசியம் எழவில்லை.

ஆண்டுதோறும் சுமார் 16 இலட்ச ரூபாய் செலவில் பயிர் விளைச்சல் போட்டி நடத்தப்படுகிறது. இதில் மாநில அளவில் நெல், மணிலா (இறவை மற்றும் மானாவாரி) பாசிப்பயறு (இறவை மற்றும் மானாவாரி) உளுந்து (இறவை மற்றும் மானாவாரி) ஆகிய பயிர்களுக்கும் மற்றுமுள்ள 27 மாவட்டங்களில் எந்தெந்த பயிர்கள் பயிரிடப்படுகின்றனவோ, அவைகள் அனைத்திற்கும் விவசாயிகள் ஆர்வமுடன் பங்கு கொள்ளும்வகையில் மாவட்ட அளவில் பயிர் விளைச்சல் போட்டி நடத்தப்படுகிறது. வட்டத்திலுள்ள ஆர்வமுள்ள விவசாயிகள் மாநில மற்றும் மாவட்ட அளவு போட்டிகளில் பங்குகொள்ளும் வாய்ப்புள்ளது. இச்சூழ்நிலையில் வட்ட அளவில் பயிர் விளைச்சல் போட்டி நடத்தும் உத்தேசம் எதுவும் தற்போது இல்லை.

**13—**

**ஆழ்துளைக் கிணறு**

**வினா எண் 39142 —திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயப் பொறியியல் துறை மூலம் தமிழகத்திலுள்ள ஒவ்வொரு தொகுதியிலும் ஆழ்துளைக் கிணறு அமைக்க இலக்கு நிர்ணயம் செய்யப்படுகின்றதா?

[2000 நவம்பர் 11

(ஆ) ஆம் எனில், அதன் விவரத்தை அரசு தெரிவிக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) விவசாயப் பொறியியல் துறை மூலம் ஆழ்துளைக் கிணறு அமைக்க கோட்டவாரியாக மட்டுமே இலக்கு நிர்ணயிக்கப்படுகிறது. விவரங்கள் கீழ்க்கண்டவாறு அளிக்கப்படுகின்றன:

| வரிசை எண் | கோட்டம் | இலக்கு |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. | காஞ்சிபுரம் | 172 |
| 2. | திருவள்ளூர் | 284 |
| 3. | விழுப்புரம் | 264 |
| 4. | கடலூர் | 1339 |
| 5. | திருவண்ணாமலை | 28 |
| 6. | வேலூர் | 12 |
| 7. | கோவை | 16 |
| 8. | திருச்சி | 36 |
| 9. | பெரம்பலூர் | 257 |
| 10. | கரூர் | 60 |
| 11. | புதுக்கோட்டை | 230 |
| 12. | திருவாரூர் | 367 |
| 13. | நாகை | 689 |
| 14. | தஞ்சாவூர் | 906 |
| 15. | திண்டுக்கல் | 12 |
| 16. | மதுரை | 24 |
| 17. | தேனி | 56 |
| 18. | சிவகங்கை | 108 |
| 19. | இராமநாதபுரம் | 108 |
| 20. | தூத்துக்குடி | 8 |
| 21. | திருநெல்வேலி | 24 |
| | மொத்தம் .. | 5000 |



2000 நவம்பர் 11]

**14—**

**வனத் துறை செக்போஸ்ட் அகற்றுதல்**

**வினா எண் 38382—திரு. என்.ஆர். அழகராஜா:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேனி மாவட்டம், சுருளி அருவி செல்லும் சாலையில் உள்ள வனத் துறை செக்போஸ்ட் சுற்றுலாப் பயணிகள் நலன் கருதி அகற்றப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) தேனி மாவட்டம், சுருளி அருவி செல்லும் சாலையில் உள்ள வனத் துறை செக்போஸ்ட் வனச் சட்டப்படி தினமும் காலை 6 மணிக்குத் திறந்துவிடப்பட்டு மாலை 6 மணிக்கு மூடப்பட்டு வருகிறது. மாலை 6 மணிக்கு மேல் செல்லும் வாகனங்கள் தணிக்கைக்குப் பின்பு அனுமதிக்கப்படுகின்றன. இதனால் இரவு நேரங்களில் சுருளி அருவிக்குச் சென்று முறைகேடான செயல்கள் எதுவும் நடைபெறாமல் பாதுகாக்கப்படுகிறது. மேலும் வனப் பகுதிக்குள் சமூக விரோதிகள் நுழைந்து திருட்டுத்தனமாக மரம் வெட்டுதல் மற்றும் வேட்டையாடுதல் தவிர்க்கப்படுகிறது. சுருளி அருவிக்குச் செல்லும் சாலையில் தடுப்புக் கம்பம் இருப்பதினால் பயணிகள் மற்றும் பக்தர்களின் நலன் எவ்விதத்திலும் பாதிக்கப்படுவதில்லை.

(ஆ) இந்த வினா எழவில்லை.

**15—**

**செக்போஸ்ட் கட்டுதல்**

**வினா எண் 40326—திரு. டி. மணி:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வனப் பகுதியான ஆறுகாணியில் செக்போஸ்ட் கட்டும் நடவடிக்கையை அரசு மேற்கொண்டுள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

ஆறுகாணியில் செக்போஸ்ட் கட்டும் பணி தொடங்கப்பட்டு கட்டடம் முடிவடையும் நிலையில் உள்ளது.

**16—**

### பட்டு நூல் உற்பத்தித் தொழிற்சாலை

**வினா எண் 13290—டாக்டர் காஞ்சனா கமலநாதன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி அணை-பெரியமுத்தூரில் அரசிற்குச் சொந்தமான பட்டு நூல் உற்பத்தித் தொழிற்சாலை மூடப்பட்டிருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மூடப்படவில்லை.

(ஆ) எழாது.

**17—**

### தொழிலாளர் நல வாரியம்

**வினா எண் 30214—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) தமிழகத்தில் கட்டடத் தொழிலாளர் நல வாரியம் சிறப்பாகச் செயல்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், கடந்த ஆண்டில் பெறப்பட்ட தொகை எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 1-4-1999 முதல் 31-3-2000 வரையிலான நிதியாண்டில் பெறப்பட்ட தொகை ரூ.8,91,00,137/- ஆகும்.

**18—**

### காகித ஆலை

**வினா எண் 38687—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானிசாகர், புங்கார் கிராமத்தில் தனியார் காகித ஆலை இயங்கி வருகிறதா?

(ஆ) ஆம் எனில், அங்கு பணிபுரியும் நிரந்தரத் தொழிலாளர்கள், தினக்கூலி தொழிலாளர்கள் எத்தனை பேர்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம். ஈரோடு மாவட்டம், பவானிசாகர், புங்கார் கிராமத்தில் பால்காட் பிரதர்ஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட் என்ற பெயரில் இயங்கி வந்த காகித ஆலையை நிர்வாகம் 27-2-2000 முதல் உற்பத்தி நிறுத்தம் செய்துள்ளது.

(ஆ) நிரந்தரத் தொழிலாளர்கள் — 194 பேர்கள்

தினக்கூலித் தொழிலாளர்கள் — இல்லை.

19—

## மருந்தாளுநர் நியமனம்

**வினா எண் 38894—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மருந்தாளுநர் பயிற்சி முடித்து, பட்டயச் சான்று பெற்று வேலை கோரி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டவர்கள் எத்தனை பேர் நிலுவையில் உள்ளார்கள்?

(ஆ) ஆம் எனில், காலி பணியிடங்களில் அவர்களை நியமிக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) தமிழகம் முழுவதும் 30-6-2000 நாளில் 9,162 மருந்தாளுநர்கள் பட்டயம் பெற்று, வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலம் வேலைவேண்டி வேலைவாய்ப்பகங்களில் பதிவு செய்துள்ளனர்.

(ஆ) மைய மற்றும் மாநில அரசின் மருத்துவத் துறை தனியார் மற்றும் அரசு மருத்துவமனைகள் மருந்தாளுநர் பணி காலியிடத்தை வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்குத் தெரிவிக்கும்பொழுது அக்காலியிட அறிவிப்பின் மீது மருந்தாளுநர்கள், அவர்களுக்குரிய பதிவு மூப்பு, வயது அடிப்படையில் வேலைவாய்ப்பு அலுவலகங்களால் பரிந்துரை செய்யப்படுகின்றனர்.

20—

## தனி ஆணையர் அலுவலகம்

**வினா எண் 40523—திரு. ஜி. கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள விவசாயத் தொழிலாளர்களுக்கென தனி ஆணையர் அலுவலகம் தொழிலாளர் நலத் துறையின் மூலம் அமைக்கப்படுமா?





(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விவசாயத் தொழிலாளர் நலன் பேண திரு. கோலப்பன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட குழு தனது பரிந்துரையில் விவசாயத் தொழிலாளர்களுக்காக வாரியம் அல்லது தனித் துறை ஒன்றை உருவாக்க வேண்டும் என்று பரிந்துரைத்துள்ளது. மேற்படி கோலப்பன் குழுவின் பரிந்துரைகளைச் செயல்படுத்த அமைக்கப்பட்ட உயர் மட்டக் குழுவும் வாரியம் அமைக்க பரிந்துரைத்துள்ளது. மேற்கண்ட பரிந்துரையை ஏற்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 2000-2001 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் வேளாண் தொழிலாளர்களுக்கு நல வாரியம் ஒன்று வரும் நிதியாண்டில் அமைக்கப்படும் என்று அறிவித்தார்கள். அதன்படி மேற்படி வேளாண்மைத் தொழிலை ஒரு தொழிலாக 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர் சட்டப் பட்டியலில் நல வாரியம் அமைப்பதற்கு ஏதுவாகச் சேர்த்து முதனிலை அறிவிக்கை தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையால் வெளியிடப்பட்டுள்ளது. பொதுமக்கள் ஆலோசனை மற்றும் எதிர்ப்பைப் பெற்று இறுதி அறிக்கை வெளியிடப்படும். பின்னர் நல வாரியம் அமைப்பது மற்றும் நிர்வகிப்பது தொடர்பான பணிகளை வருவாய்த் துறை செயல்படுத்தும் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆனால் விவசாயத் தொழிலாளர்களுக்கென தனி ஆணையர் அலுவலகம் அமைக்க இத் துறையில் நடவடிக்கை ஏதுமில்லை.

21—

## சாலை செப்பனிடுதல்

**வினா எண் 28651—திரு. ஜி. கே. மணி:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டம், பி. அக்ரஹாரம் பஸ் நிலைய நெடுஞ்சாலையில் தார்ச் சாலை மிகவும் பழுதடைந்துள்ளது அரசின் கவனத்திற்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், உடனே தார்ச் சாலையைச் செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) பெரிய மாவட்ட சாலையான தர்மபுரி ஒகேனக்கல் சாலையில் பி. அக்ரஹாரம் பஸ் நிலைய சாலைப் பகுதியில் பழுதடைந்த சாலைப் பகுதி சீர் செய்யப்பட்டு, தார்ச் சாலை புதுப்பிக்கப்பட்டு தற்போது சாலை நல்ல நிலையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

**22—**

**சாலை செப்பனிடல்**

**வினா எண் 34553—திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், குத்தாலம்-கீழவெளி நச்சினார்குடி ஸ்ரீகண்டபுரம் சாலை மிகவும் பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், உடனடியாக அந்தச் சாலை செப்பனிடப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கி.மீ. 0/0-3/-0 வரை நீளமுள்ள கீழவெளி ஒன்றியச் சாலை தார் பரத்தப்பட்ட இதர மாவட்ட சாலையாகும். இச்சாலையில் கி.மீ. 0/0-1/0 வரையிலான சாலையினை ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டிலும், கி.மீ.1/0-3/0 வரையிலான சாலையினை ரூ.5.50 இலட்சம் மதிப்பீட்டிலும், ஆக மொத்தம் ரூ.8.50 இலட்சம் மதிப்பீட்டில் 1999-2000 ஆண்டு இதர மாவட்ட சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மேம்படுத்துவதற்கு அரசாணை நிலை எண் 6, நெடுஞ்சாலைத் (எச்என்.1) துறை, நாள் 21-1-2000-ல் ஆணை வழங்கப்பட்டுள்ளது. இப்பணிகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. விரைவில் இப்பணிகள் அனைத்தும் முடிக்கப்படும்.





**23—**

**சொந்த நிலங்களின் விவரம்**

**வினா எண் 5103—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் அருள்மிகு விஸ்வேஸ்வரசாமி திருக்கோயில், அருள்மிகு வீரராகவப் பெருமாள் கோயில்களுக்குச் சொந்தமான நிலங்கள் எவ்வளவு?

(ஆ) அவை யாருடைய கட்டுப்பாட்டின்கீழ் இருக்கின்றன?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் அருள்மிகு விஸ்வேஸ்வரசாமி மற்றும் அருள்மிகு வீரராகவப்பெருமாள் கோயிலுக்கு 1963 ஆம் ஆண்டு மைனர் இனாம் ஒழிப்புச் சட்டத்தின்படி 106.59 ஏக்கர் நிலம் கோயில் பெயரில் பட்டா வழங்கப்பட்டது.

திருப்பூர் வீரபாண்டி கிராமத்தில் இத்திருக்கோயிலுக்கு இனாம் ஒழிப்புச் சட்டத்தின்கீழ் 62.32 ஏக்கர் நிலம் இரயத்துவாரி பட்டா கொடுக்கப்பட்டது. இதில் பெரும்பாலான நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டதால் ஆக்கிரமிப்பை அகற்ற திருக்கோயில் சார்பாக வழக்கு தொடரப்பட்டது. வழக்கு திருக்கோயிலுக்குச் சாதகமாக முடிந்ததால் ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களில் தனியார் பெயரில் கொடுக்கப்பட்ட பட்டா ரத்து செய்யப்பட்டு 1999-ல் மீண்டும் கோயில் பெயரில் பட்டா பெறப்பட்டது.

திருப்பூர் நகரில் திருக்கோயிலுக்குச் சொந்தமான சர்வே எண் 128/2ஏ-யில் 1.33 ஏக்கர் நிலம் தனியார் ஒருவர் நீண்ட காலமாக ஆக்கிரமிப்பு செய்து அவரே முன்வந்து விலைக்கு வாங்கிக்கொள்வதாக விண்ணப்பம் கொடுத்துள்ளார்.

[2000 நவம்பர் 11

சாமணாபுரத்தில் சர்வே எண் 466/2-ல் உள்ள 27.60 ஏக்கர் நிலத்தில் பெரும்பகுதி வன இலாகாவின் நிர்வாகத்தின்கீழ் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டு மீண்டும் திருக்கோயில் சுவாதீனத்தில் கொண்டு வரப்பட்டது.

திருப்பூர் நகரில் சர்வே எண் 189-ல் 7.68 ஏக்கர் நிலம் கோபி செட்டில்மெண்ட் தாசில்தார் உத்தரவுப்படி தனியாருக்கு இரயத்துவாரி பட்டா கொடுக்கப்பட்டதை எதிர்த்து திருக்கோயில் சார்பில் வழக்கு தொடரப்பட்டது. வழக்கு திருக்கோயிலுக்குப் பாதகமாக அமைந்ததால் திருக்கோயில் சார்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது.

திருப்பூர் டவுனில் சர்வே எண் 99-ல் 8.12 ஏக்கர் நிலம் பல வருடங்களுக்கு முன் தனியாரால் வீட்டுமனையாகப் பிரிக்கப்பட்டு பட்டாவும் பெற்றுள்ளனர். தனியாருக்குக் கொடுக்கப்பட்ட பட்டாவை ரத்து செய்யக் கோரியும், திருக்கோயில் பெயரில் பட்டா கொடுக்க கோரியும் மாவட்ட ஆட்சியர் மற்றும் வட்டாட்சியரிடம் விண்ணப்பிக்கப்பட்டு நிலுவையில் உள்ளது. மேலும் திருப்பூர் நகரில் சர்வே எண் 152/1 முதல் 152/4 மற்றும் 1/49-ல் 3.72 ஏக்கர் நிலம் ஆக்கிரமிப்புதாரர்களால் ஆக்கிரமிக்கபபட்டு, வீட்டுமனைகளாகப் பிரிக்கப்பட்டு, கட்டடங்கள் எழுப்பப்பட்டு பட்டாவும் பெற்றுள்ளனர். மேற்படி பட்டாவை ரத்து செய்து திருக்கோயில் பெயரில் படடா கொடுக்கும்படி வட்டாட்சியருக்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. ச.எண் 145-ல் 11.34 ஏக்கர் நிலம் திருக்கோயில் அர்ச்சகர்களுக்கு மானியமாகக் கொடுக்கப்பட்டது. பல ஆண்டுகளுக்கு முன்னால் ஆக்கிரமிப்புதாரர்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. மேற்படி நிலத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளவர்கள் கோயிலுக்கு வாடகை செலுத்தக் கோரி திருக்கோயில் சார்பாக வழக்கு தொடரப்பட்டு நிலுவையில் உள்ளது.

ச.எண் 209/1-ல் 8 ஏக்கர் 13 சென்ட் நிலம் தனியார் பலர் ஆக்கிரமிப்பில் இருந்து வருகிறது. இந்நிலத்தில் குடியிருந்து வரும் சிலரிடம் மட்டும் வாடகை திருக்கோயில் மூலம் வசூலிக்கப்பட்டு வருகிறது. மீதியுள்ள இடங்களை சுவாதீனத்தில் கொண்டுவர உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு, நிலுவையில் உள்ளது.



2000 நவம்பர் 11]

24—

## கோயில் சொத்து

**வினா எண் 14831—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, தெசவிளக்கு கிராமத்திலுள்ள ஈஸ்வரன் கோயில் சொத்து முறையாகப் பராமரிக்கப்பட்டு வருகிறதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) ஆம். முறையாகப் பராமரிக்கப்பட்டு வருகிறது.

(ஆ) மேற்கண்ட திருக்கோயிலுக்குச் சொந்தமாக 13.65 ஏக்கர் புஞ்சை நிலங்கள் உள்ளன. மேற்கண்ட நிலங்களை திருக்கோயிலின் பாரம்பரை அறங்காவலர்களே சொந்தமாகச் சாகுபடி செய்து பூஜை செய்து வருவதால் மேற்படி நிலத்தை பொது ஏலத்தில் குத்தகைக்கு விட்டு வருமானத்தைப் பெருக்கவும், பழுதடைந்த நிலையிலுள்ள திருக்கோயிலைப் புதுப்பிக்கவும் பரம்பரை அறங்காவலருக்குத் தக்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. குத்தகை வருமானத்தைக்கொண்டு தினந்தோறும் பூஜை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்கண்ட நிலங்களைத் தவிர, மேற்படி திருக்கோயிலுக்கு பொன், வெள்ளி இனங்கள் மற்றும் உலோகச் சிலைகள் எதுவும் இல்லை.

25—

## உள்ளாட்சித் துறைக்கு மாற்றுதல்

**வினா எண் 24715—திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செய்தி மக்கள் தொடர்பு துறையிலிருந்து மாற்றப்பட்டு இந்து சமய அறநிலையத் துறையின் நிர்வாகத்தில் உள்ள குத்தாலம் தொகுதி "தேரழுந்தூர் கம்பர் கோட்டம்" நிர்வாக வசதி கருதி உள்ளாட்சித் துறைக்கு மாற்றித்தரப்படுமா?

[2000 நவம்பர் 11

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

அரசு கடிதம் (நிலை) எண் 597, தமிழ் வளர்ச்சி, பண்பாடு மற்றும் அறநிலையத் துறை, நாள் 18-12-1998-ன்படி தேரழுந்தூர் அருள்மிகு ஆமருவிப் பெருமாள் திருக்கோயில் வளாகத்தில் அமைந்துள்ள கம்பர் கோட்டத்தை குத்தாலம் ஊராட்சி ஒன்றியத்திற்கு மாற்றம் செய்திட அரசு அனுமதி வழங்கியுள்ளது.

26—

**நில விற்பனை**

**வினா எண் 31890—திரு. கே. சுப்பராயன்** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயில் மற்றும் மடாலயங்களுக்குச் சொந்தமான நிலம் விற்பனை செய்வது குறித்து பொதுக் கருத்து உருவாக்க அரசு முயன்று வருகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயில் மற்றும் மடாலயங்களுக்குச் சொந்தமான நிலம் விற்பனை செய்வது குறித்து பொதுக் கருத்து உருவாக்க அரசளவில் கருத்துரு ஏதுமில்லை.

27—

**இட ஒதுக்கீடு**

**வினா எண் 32310—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2000 நவம்பர் 11]

(அ) திருக்கோயில் செயல் அலுவலர்கள் நியமனத்தில் தங்களுக்கு குறிப்பிட்ட விழுக்காடு இட ஒதுக்கீடு வேண்டுமென்று திருக்கோயில் பணியாளர்கள் கோரிக்கை கொடுத்துள்ளனரா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது என்ன முடிவு எடுக்கப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) செயல் அலுவலர் பணி, அரசுப் பணியாதலால், தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் தேர்வாணையம் மூலமாகத்தான் நியமனம் செய்ய இயலும். சங்கக் கோரிக்கைப்படி நேரடியாக நியமிக்க இயலாது. செயல் அலுவலர் நியமனத்தில் திருக்கோயில் பணியில் இல்லாதவர்களும், திருக்கோயில் பணியில் உள்ளவர்களும் தகுதியில் இணையாக இருந்தால், திருக்கோயில் பணியில் குறைந்தபட்சம் 5 ஆண்டுகள் பணிபுரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது. இடஒதுக்கீடு ஏதும் செய்யப்படவில்லை.

28—

**ஆக்கிரமிப்பு**

**வினா எண் 34014—திரு. கே. ரவி அருணன்** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி, அருள்மிகு காசி விஸ்வநாதர் திருக்கோயில் நிர்வாகத்தின் கட்டுப்பாட்டிலுள்ள சில நிலங்கள் தென்காசி நகராட்சிப் பகுதியில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

[2000 நவம்பர் 11

(அ) மற்றும் (ஆ) ஆக்கிரமிப்பு ஏதும் இல்லை.

**29—**

**கோயிலுக்கு வருமானம்**

**வினா எண் 34669—திரு. ஐ. கணேசன்** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சமயபுரம், அருள்மிகு மாரியம்மன் கோயிலுக்கு 1999 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை எவ்வளவு வருமானம் வந்துள்ளது?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

சமயபுரம், அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலுக்கு 1-1-1999 முதல் 31-12-1999 வரை ரூ.5,28,00,274.90 (ரூபாய் ஐந்து கோடியே இருபத்தெட்டு இலட்சத்து இருநூற்று எழுபத்தி நான்கு மற்றும் தொண்ணூறு பைசா) வருமானம் வந்துள்ளது.

**30—**

**கோயில் வருமானம்**

**வினா எண் 34670—திரு. ஐ. கணேசன்** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சமயபுரத்திலுள்ள அருள்மிகு மாரியம்மன் கோயில் சுவாமி தரிசனத்துக்காக சிறப்பு வழிபாட்டின் மூலம் எவ்வளவு ரூபாய் வசூலானது?

(ஆ) பூஜைக்குரிய சுவாமி பிரசாதம் டிக்கட் விற்பனையில் எவ்வளவு கிடைத்தது?



2000 நவம்பர் 11]

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) சமயபுரம், அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலில் அம்பாள் தரிசனத்திற்காக சிறப்பு தரிசனக் கட்டணம் 1-1-1999 முதல் 31-12-1999 வரை ரூ.62,03,010/- (ரூபாய் அறுபத்திரண்டு இலட்சத்து மூவாயிரத்து பத்து மட்டும்) வசூலாகியுள்ளது.

(ஆ) திருக்கோயிலில் பூஜைக்குரிய சுவாமி பிரசாத விற்பனைச் சீட்டு என தனியே விற்பனை செய்யப்படுவதில்லை. மாறாக பிரசாதங்கள் விற்பனை உரிமம் பொது ஏலம் மூலம் பசலிதோறும் (ஒரு ஆண்டுக்கு) விடப்படுகிறது. நடப்பு பசலி 1409-க்கு (1-7-1999 முதல் 30-6-2000 வரை) பிரசாத விற்பனை உரிமம் ரூ.14,96,000/-க்கு (ரூபாய் பதினான்கு இலட்சத்து தொண்ணூற்றாறாயிரம் மட்டும்) ஏலம் விடப்பட்டு முழுத் தொகையும் வசூல் செய்யப்பட்டுள்ளது.

**31—**

**ஊதிய விகிதங்களை மாற்றி அமைத்தல்**

**வினா எண் 35489—திரு. கே. ரவி அருணன்** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருக்கோயில் பணியாளர்களின் ஊதிய விகிதங்கள் திருத்தியமைக்க நியமிக்கப்பட்ட வல்லுநர் குழுவின் அறிக்கை அரசுக்கு வரப்பெற்றுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அந்த அறிக்கையின் பரிந்துரைகளை நிறைவேற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

(இ) எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

[2000 நவம்பர் 11

(ஆ) மற்றும் (இ) வல்லுநர் குழுவின் அறிக்கை குறித்து இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆணையர் மற்றும் சம்பந்தப்பட்ட திருக்கோயில் பணியாளர்கள் சங்கங்களுடன் கலந்தாலோசித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**32—**

**அதிகக் கட்டணம் வசூலித்தல்**

**வினா எண் 35923—திரு. கே. ரவி அருணன்** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி அருள்மிகு காசி விஸ்வநாதர் திருக்கோயிலில் பொருட்கள் பாதுகாக்கும் இடத்தில் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்திற்கு மேல் அதிகமாக வசூல் செய்யப்படுவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது சம்பந்தமாக அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) தென்காசி அருள்மிகு காசி விஸ்வநாதசுவாமி திருக்கோயிலில் பொருட்கள் பாதுகாக்கும் வகைக்கு கட்டணம் வசூலிப்பது நடைமுறையில் இல்லை. பாதணி காவல் மட்டும்தான் பொது ஏலத்தில் குத்தகைக்கு விடப்பட்டு கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது. பாதணி கட்டணம் தொடர்பாக எவ்வித புகாரும் இதுவரை பெறப்படவில்லை. பாதணி பாதுகாவலுக்கு உரிய கட்டணம் மட்டும் பொதுமக்கள் பார்வையில் தெரியும் வகையில் எழுதி வைக்கப்பட்டுள்ளது. அதுவும் எவ்விதப் புகாருமின்றி நல்லமுறையில் நடைபெற்று வருகிறது.



2000 நவம்பர் 11]

**33—**

**ஓய்வூதியம்**

**வினா எண் 36986—திரு. ஆர்.ஆர்.சேகரன்** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதியில் 60 வயதைக் கடந்த எத்தனை பூசாரிகளுக்கு ஓய்வூதியம் வழங்கப்படுகிறது?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டத்தில் இதுவரை 31 கிராமக் கோயில் பூசாரிகளுக்கு ஓய்வூதியம் அனுமதிக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது. சேலம் மாவட்டம் ஓமலூர் தொகுதியிலிருந்து இதுவரை ஓய்வூதியம் வேண்டி மனுக்கள் வரப்பெறவில்லை. விண்ணப்பங்கள் வரப்பெற்றால் தகுதிகள் குறித்து பரிசீலித்து ஓய்வூதிய தேர்வுக் குழுவின் பரிசீலனைக்கு வைக்கப்படும்.

**34—**

**சொத்து விவரம்**

**வினா எண் 37148—திரு. ஐ. கணேசன்** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேஸ்வரர் ஆலயத்திற்குச் சொந்தமான சொத்து விவரம் என்ன?

(ஆ) ஆம் எனில், அந்தச் சொத்துக்கள் மூலம் ஆலயத்திற்கு ஆண்டுதோறும் கிடைக்கும் வருமானம் என்ன?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

[2000 நவம்பர் 11

(அ) அருள்மிகு அருணாசலேசுவரர் திருக்கோயிலுக்கு கீழ்க்கண்ட விவரப்படியான சொத்துக்கள் உள்ளன—

| | | |
|---|---|---|
| நிலங்கள் | | ஏ.செ. |
| நன்செய் | — | 91.99 |
| புன்செய் | — | 262.13 |
| | | **354.12** |

கட்டடங்கள், வீடுகள், மனைகள் விவரம்—

| | | |
|---|---|---|
| கட்டடங்கள் | — | 137 |
| வீடுகள் | — | 2 |
| மனைகள் | — | 91 |
| | | **230** |

சென்னை அடையாறில் உள்ள மனைகள் விவரம்:- மொத்த மனைகள் 313 கிரவுண்ட் 621 சதுர அடி.

சென்னை மீர்சாகிப்பேட்டை மனைகள் பரணி அபிசேக கட்டளை மனைகள்-104 கிரவுண்ட் 635 சதுர அடி.

(ஆ) மேற்படி சொத்துக்கள் மூலம் கிடைக்கும் வருமானம் பின்வருமாறு:

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | நன்செய் நிலக் குத்தகை மூலம் வரவு | — | ரூ. | 69,940 |
| 2. | புன்செய் | — | ரூ. | 55,405 |
| 3. | கட்டட வாடகை மூலம் வரவு | — | ரூ. | 8,45,115 |
| 4. | மனைவாடகை மூலம் வரவு | — | ரூ. | 4,34,820 |
| 5. | சென்னை அடையார் மனை வாடகை | — | ரூ. | 64,055 |
| 6. | சென்னை மீர்சாகிப்பேட்டை வாடகை | — | ரூ. | 29,964 |
| | ஆக மொத்தம் | — | ரூ. | **14,99,299** |



2000 நவம்பர் 11]

**35—**

## உதவித் தொகை

**வினா எண் 37658—திரு. ஐ. கணேசன்** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் கடந்த 1999-2000 ஆம் ஆண்டில் கோயில்களில் முறைப்படி பூஜை செய்ய உதவித் தொகை கோரி மனுக்கள் எத்தனை வந்துள்ளன?

(ஆ) அவைகளில் உதவித்தொகை வழங்கப்பட்ட மனுக்கள் எத்தனை?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நிதிப் பற்றாக்குறை காரணமாக தினசரி ஒரு வேளை பூசை கூட செய்ய நிதி வசதியில்லாத திருக்கோயில்களில் தினசரி ஒரு வேளையாவது பூஜை நடைபெற வேண்டுமென்ற சீரிய நோக்கில் திருக்கோயில் ஒன்றிற்கு ரூ. 25,000 வீதம் வைப்பு நிதி ஏற்படுத்தி, அதிலிருந்து கிடைக்கும் மாதாந்திர வட்டித் தொகையைக் கொண்டு ஒருகால பூசை நடைபெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் பொதுமக்களையும் ஈடுபடுத்தும் நோக்கில், திருக்கோயில் ஒன்றிற்கு பொதுமக்கள் நன்கொடையாக ரூ. 2,500 மட்டும் செலுத்தினால், மீதமான ரூ. 22,500-யும் இத் துறை மூலம் சேர்த்து ரூ. 25,000 வீதம் வைப்பு நிதி ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 1999-2000ஆம் ஆண்டுக்கு மேலும் 500 திருக்கோயில்களுக்கு இத்திட்டம் விரிவாக்கப்படுமென மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, பொதுமக்கள் நன்கொடையாக திருக்கோயில் ஒன்றிற்கு ரூ. 2,500 வீதம் 500 திருக்கோயில்களுக்கும் நன்கொடை பெறப்பட்டு, இதுவரை 450 திருக்கோயில்களுக்கு வைப்பு நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. மீதமுள்ள 50 திருக்கோயில்களுக்கும் வைப்பு நிதி ஏற்படுத்த விரைவு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 1993 ஆம் ஆண்டு முதல் இதுவரை மொத்தம் 8160 திருக்கோயில்களுக்கு வைப்பு நிதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

[2000 நவம்பர் 11

36—

## திருட்டு வழக்கு

**வினா எண் 39000—திரு. ஐ. கணேசன்** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1999-2000 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முடிய தமிழகத்திலுள்ள கோவில்களில் விக்கிரகங்கள் திருட்டு போயின என வழக்கு பதிவாகியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு வழக்குகள் பதிவாகின?

(இ) எத்தனை பேர் மீது வழக்கு தொடரப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) ஆம். வழக்குகள் பதிவாகி உள்ளன.

(ஆ) 1999-2000 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முடிய 14 திருக்கோயில்களில் விக்கிரகங்கள் திருட்டு போயுள்ளன என 14 காவல் நிலையங்களில் வழக்குகள் பதிவாகி உள்ளன.

(இ) 14 வழக்குகளில் ஒரு வழக்கு கண்டுபிடிக்கப்பட்டு, 2 நபர்கள் மீது நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எஞ்சியுள்ளவை புலனாய்வில் உள்ளன.

37—

## நகை ஏல மதிப்பு

**வினா எண் 39013—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1999 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முடிய தமிழகத்திலுள்ள திருக்கோயில்களில் எவ்வித பயனுமின்றி உள்ள தங்க, வைர நகைகளை அரசு ஏலம் விட்டுள்ளதா?



2000 நவம்பர் 11]

(ஆ) ஆம் எனில், அதன் மதிப்பு எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள, திருக்கோயில்களில் உள்ளதும், எவ்வி பயனும் இன்றி உள்ளதுமான தங்க, வைர நகைகள் அந்தந்த திருக்கோயில்களில் பாதுகாப்புடன் வைக்கப்பட்டுள்ளன. திருக்கோயில் நகைகள் பழமையும், புராதனத் தன்மையும் வாய்ந்தவை என்பதால் இவைகள் ஏலத்தில் விடப்படுவதில்லை.

38—

## பகுதிநேர அங்காடி

**வினா எண் 33789—திரு. துரை. சந்திரசேகரன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டம், குழிமாத்தூர் நியாயவிலைக் கடையிலிருந்து அந்தளி கிராமத்துக்கு பகுதிநேர அங்காடி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டம், நடுக்காவேரி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி நடத்தும் குழிமாத்தூர் நியாயவிலைக் கடையில் உள்ள 228 குடும்ப அட்டைகளிலிருந்து 114 குடும்ப அட்டைகளைப் பிரித்து அந்தளி கிராமத்தில் பகுதிநேர கடை அமைக்க தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக்கொண்டார். இக்கடையை மகளிர் நியாயவிலைக் கடையாக மகளிர் மேம்பாட்டுக் கழகம் மூலம் இயக்கினால் ரூ. 813

அரசுக்கு கூடுதல் நிதிச் சுமை ஏற்படும். அரசு நிபந்தனைகளின்படி கிராமப்புற முழு நேர நியாயவிலைக் கடையில் 500 குடும்ப அட்டைகளுக்கு குறையாமலும், பகுதிநேர நியாயவிலைக் கடைகளில் 200 குடும்ப அட்டைகளுக்கு குறையாமலும் இருக்க வேண்டும். குழிமாத்தூர் நியாயவிலைக் கடையில் 228 குடும்ப அட்டைகளே உள்ளதால் அவற்றைப் பிரித்து அந்தளி கிராமத்தில் தனியே பகுதிநேரக் கடை அமைக்க வாய்ப்பில்லை.

39—

## சிறப்பு அங்காடி

**வினா எண் 36002—திரு. சி. ஞானசேகரன்** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் கற்பகம் சிறப்பு அங்காடி இலாபத்தில் இயங்குகிறதா?

(ஆ) இல்லையெனில், அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) (1) பண்டகசாலையின் நட்டத்திற்கு முக்கியக் காரணமான பணியாளர் செலவுகளைக் குறைக்க தன்விருப்ப ஓய்வுத் திட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது.

(2) புதிய வணிகங்களில் ஈடுபட பண்டகசாலைக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

(3) பண்டகசாலையின் வட்டிச் சுமையை குறைக்க பண்டகசாலையால் பயன்படுத்தப்படாத அசையாச் சொத்துக்களை விற்பனை செய்து கடனைத் தீர்க்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

(4) பொது விநியோகத் திட்டத்திற்கு வழங்கப்படும் விளிம்புத்தொகை குவிண்டால் ஒன்றுக்கு ரூ.28-லிருந்து ரூ.45 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.





40—

## சாலை ஆக்கிரமிப்பு

**வினா எண் 33986—திரு. கே. ரவி அருணன்** மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தென்காசி வீட்டு வசதி வாரியக் குடியிருப்பில் பிளாட் எண். எச்75 வீட்டின் கிழ்ப்புறம் பூங்காவிற்கென ஒதுக்கப்பட்டுள்ள சாலை செல்லும் பாதையில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது குறித்து அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி, வீட்டு வசதித் துறை அமைச்சர்**

தென்காசி புறநகர்த்திட்டம் பகுதி 1-ல் வீட்டு எண் எச்.75 திரு. கே. பாண்டியன் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. திரு.கே. பாண்டியன் அவர்கள் தனக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட வீட்டின் அருகேயுள்ள பூங்கா நிலத்தை ஆக்கிரமித்து கடை கட்டியுள்ளார். ஆகவே, அன்னார் செய்துள்ள ஆக்கிரமிப்பை அகற்ற சட்ட விதிமுறைகளுக்குட்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டது. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்காதவாறு தென்காசியிலுள்ள மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் திரு.கே. பாண்டியன் வழக்கு தொடர்ந்தார். இவ்வழக்கில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்குச் சாதமாக 26-11-1999 அன்று நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. ஆக்கிரமிப்பை அகற்ற தற்போது வீட்டு வசதி வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

41—

## வீடுகள் விற்றல்

**வினா எண் 35090—திரு. கே. சுப்பராயன்** மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் 21வது வார்டு முருங்கப்பாளையம் அரசு வீட்டு வசதி வாரியக் குடியிருப்பில் குடியிருக்கும் அரசு ஊழியர்களுக்கே வீடுகளை விற்றுவிடும் கருத்துரு அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி, வீட்டு வசதித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்பொழுது இக்கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

**42—**

**ஜாதிய சங்கங்கள்**

**வினா எண் 22736—திரு. கே. சுப்பராயன்** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதார உயர்வு, சமூக மதிப்பு போன்றவைகளைப் போதிய அளவில் பெறமுடியாத நிலைமைதான் ஜாதிய சங்கங்கள் வலுப்பெறக் காரணம் என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசின் மாற்று ஏற்பாடு என்ன?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சாதிய சங்கங்கள் அமைக்கப்படுவதற்குக் கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதார உயர்வு, சமூக மதிப்பு போன்றவைகளைப் போதிய அளவில் பெற முடியாத நிலைமைதான் காரணம் என்று சொல்ல முடியாது. இந்த எல்லா துறைகளிலும் மேம்பட்டுள்ள சாதிகளுக்குக் கூட சங்கங்கள் இருக்கின்றன.

**43—**

**மறுமண நிதியுதவி**

**வினா எண் 24612—திரு. ஐ. கணேசன்** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) 1998-99 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் வரை சேலம் எடப்பாடி தொகுதியில் எத்தனை விதவைப் பெண்கள் டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண நிதியுதவித் திட்டத்திற்கு விண்ணப்பித்திருந்தார்கள்?

(ஆ) அந்நிதியுதவி கிடைக்காதவர்கள் அதனைப் பெற அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) 1998-99 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் வரை சேலம் மாவட்டம் எடப்பாடி தொகுதியில் விதவைப் பெண்கள் எவரும் டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண நிதியுதவித் திட்டத்திற்கு விண்ணப்பிக்கவில்லை.

(ஆ) எடப்பாடி தொகுதியில் விண்ணப்பங்கள் இல்லாததால் இக்கேள்வி எழாது.

**44—**

**திருமண நிதியுதவி**

**வினா எண் 25212—திரு. ஐ. கணேசன்** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் 1998-99 பிப்ரவரி முடிய அன்னை அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமண நிதியுதவித் திட்டத்தின்கீழ் யாராவது பயன் அடைந்துள்ளார்களா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு பேர்?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

[2000 நவம்பர் 11

**45—**

**ஆதிதிராவிடர்களுக்கு நிலப்பட்டா**

**வினா எண் 12831—திரு. கே. சுப்பராயன்** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* திருப்பூர் தொகுதி, பல்லடம் வட்டம், சாமளாபுரம் பேரூராட்சிக்குட்பட்ட அம்பேத்கர் நகரில் வீடு கட்டிக் குடியிருந்து வருகிற ஆதிதிராவிட மக்களுக்குப் பட்டா கோரி அரசுக்கு முறையீடு வந்துள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது பட்டா வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* திருப்பூர் தொகுதி, பல்லடம் வட்டம், சாமளாபுரம் கிராமம், அம்பேத்கர் நகரில் குடியிருந்து வரும் 100 ஆதிதிராவிடர்களில் 34 பேருக்கு பூமலூர் கிராமம் வலையபாளையத்தில் பல்லடம் வருவாய் வட்ட ஆட்சியரால் இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டன. பட்டா பெற்றவர்கள் பட்டா வழங்கப்பட்ட இடம் தொலைவில் உள்ளதால் அந்த இடத்திற்குப் போகாமல், தற்போது குடியிருக்கும் இடத்திற்கே பட்டா கோருகின்றனர். இவர்கள் பட்டா கோருவது நீர்வழி புறம்போக்காக உள்ளது. இவர்களது கோரிக்கையின் பேரில் திருப்பூர் சார் ஆட்சியாளர் நேரில் புலத்தணிக்கை மேற்கொண்டு, மேற்படி நிலம் தாழ்வாக உள்ளதாலும், வெள்ள அபாயம் ஏற்பட வாய்ப்புள்ளதாலும், பட்டாக்கள் வழங்க இயலாது எனக் கருத்து தெரிவித்துள்ளார். இந்நிலையில் மேற்படி நபர்களுக்கும், ஏனைய வீடு இல்லாத ஆதிதிராவிடர்களுக்கும் சாமளாபுரம் கிராம் க.ச.184/4-ல் 4.69 ஏக்கர் மற்றும் 498/1, 499/1ஏ சாலைகளில் 3.86 ஏக்கர் நிலத்தை தமிழ்நாடு அரிசன நலத் திட்டங்களுக்காக நிலங்களைக் கையகப்படுத்தும் சட்டத்தின்கீழ் கையகப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்போது தேர்வு செய்யப்பட்டுள்ள நிலத்தில் குடியேற, ஆதிதிராவிடர்களும் சம்மதம் தெரிவித்துள்ளனர் என கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.



2000 நவம்பர் 11]

**46—**

**வீட்டுமனைப்பட்டா**

**வினா எண் 22543—திரு. கே. சுப்பராயன்** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* திருப்பூர், கூலிப்பாளையம் ஆதிதிராவிடக் காலனி க.ச.506-ல் குடியிருப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* திருப்பூர் வட்டம், நெருப்பெரிச்சல் கிராமம், மஜரா கூலிப்பாளையம் புல எண்.506 என்பது பட்டா பூமியாகும். இதில் ஆதிதிராவிடர் எவரும் குடியில்லை. எனவே புல எண்.506 குறித்து, பட்டா வழங்கும் கேள்விக்கு இடமில்லை. ஆனால் திருப்பூர் கூலிபாளையத்தில் க.ச.507 விஸ்தீரணம் 0.88.0 மந்தை புறம்போக்கில் 24 ஆதிதிராவிட குடும்பங்கள் குடியிருந்து வருகின்றனர். இவர்களுக்கு பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் இது தவிர இந்த கிராமத்தில் உள்ள பிற ஆதிதிராவிட மக்களிடமிருந்து வீட்டுமனை கோரி வேறு விண்ணப்பங்கள் ஏதும் வரப்பெறவில்லை என கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

**47—**

**பட்டா வழங்குதல்**

**வினா எண் 22544—திரு. கே. சுப்பராயன்** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* திருப்பூர், கூலிப்பாளையம் க.ச.எண். 406-ல் வசித்து வருகின்ற ஆதிதிராவிடர்களுக்கு பட்டா வழங்கக் காலதாமதம் ஏற்படுவதை அரசு அறியுமா?

[2000 நவம்பர் 11

(ஆ) ஆம் எனில், எப்போது பட்டா வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் வட்டம், நெருப்பெரிச்சல் கிராமத்தைச் சேர்ந்த கூலி பாளையம் க.ச.406-ல் மொத்தம் 7 உட்பிரிவுகள் உள்ளன. புல எண். 406-ல் மொத்த பரப்பு 0.94.5 எக்டேர். இவை அனைத்தும் பட்டா புன்செய் பூமியாகும். இந்த பூமியில் சோளம் பயிரிடப்படுகிறது. இங்கு ஆதிதிராவிடர்கள் யாரும் குடியில்லை. யாரும் குடியில்லாததால் பட்டா வழங்கும் கேள்வி எழுவதில்லை என கோவை மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளார்.

**48—**

## வீட்டுமனை வழங்குதல்

**வினா எண் 22546—திரு. கே. சுப்பராயன்** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர், சொக்கனூர் ஆதிதிராவிடக் காலனியில் குடியிருக்க வீடில்லாமல் உள்ள ஆதிதிராவிடக் குடும்பங்கள் எத்தனை?

(ஆ) அவர்களுக்கு வீட்டுமனை வழங்க நிலம் கையகப்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் வட்டம், சொக்கனூர் கிராமம் க.ச. 225/3 (விஸ்தீரணம் 4.79.0 எக்டேர்) மற்றும் 225/4 (விஸ்தீரணம் 0.27.0 எக்டேர்) ஆகிய காலைகளில் சொக்கனூர் நத்தம் 60 ஆதிதிராவிட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர். இந்தக் குடும்பங்களில் மேலும் 40 பேர் கூட்டுக் குடும்பங்களாக வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் தனியாக வீட்டுமனை கோருகின்றனர். இதற்காக இந்தக் கிராமத்தில் பட்டா பூமிகள் தணிக்கை செய்யப்பட்டு மேற்படி கிராமம் க.ச.83/2, 83/3 மற்றும் 83/4 காலைகளில் உள்ள 0.62.5 புஞ்சை எக்டேர் நிலம் பட்டா வழங்க தேர்வு



2000 நவம்பர் 11]

செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட பட்டா பூமிகளை தமிழ்நாடு ஆதிதிராவிட நலத் திட்டங்களுக்காக நிலங்களைக் கையகப்படுத்தும் சட்டத்தின்கீழ் கையகப்படுத்த உரிய முன்மொழிவுகளை அனுப்ப திருப்பூர் ஆதிதிராவிடர் நலத் தனி வட்டாட்சியர் அறிவுறுத்தப்பட்டுள்ளார். முன்மொழிவுகளை பெற்று விரைவில் பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளார்.

**49—**

## பட்டா வழங்குதல்

**வினா எண் 22663—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா.

(அ) திருப்பூர், இடுவாய் ஊராட்சி, ராஜகணபதி நகர் ருகேயுள்ள 40 ஏக்கர் ஆதிதிராவிடத் துறைக்கான நிலம் எத்தனை பேருக்கு பட்டா வழங்கப்பட்டது?

(ஆ) பட்டா பெற்ற அனைவரும் நிலத்தை கையகப்படுத்திக் கொண்டனரா?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர்எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் வட்டம், இடுவாய் கிராமம், க.ச.145/1ஏ, 2ஏ, 2பி, 146/2ஏ, 147, 149, 150 மற்றும் க.ச.176/1பி காலைகளில் மொத்தம் 42.04 ஏக்கர் ஆதிதிராவிடர் நலத் துறை மூலம் கையகப்படுத்தப்பட்டு, மொத்தம் 1204 நபர்களுக்கு 16-8-1995-ல் பட்டா வழங்கப்பட்டுள்ளது. இது தனியாருக்கு பாத்தியப்பட்ட லே-அவுட் மனையிடங்களாக பிரிக்கப்பட்ட, 'ராஜகணபதி நகர்' என பெயரிடப்பட்ட இடத்திற்கு அருகில் உள்ளது. தனியார் லே-அவுட் இடத்திற்கு அருகில் ஆர்ஜிதம் செய்யப்பட்ட பூமியும் இருப்பதால் ஆர்ஜிதம் செய்யப்பட்ட இடத்தில் வாழும் சில ஆதிதிராவிட மக்கள் இந்த அரசு ஆர்ஜிதம் செய்த இடத்திற்கும் 'ராஜ கணபதி நகர்' எனப் பெயரிட்டு அழைத்து வருகின்றனர். வேறு சிலர் கையகப்படுத்தப்பட்ட பகுதியை பாரதிபுரம் என அழைத்து வருகின்றனர். அரசு ஆர்ஜிதம் செய்த 42.04 ஏக்கரில் தனியார் யாரும் லே-அவுட் போடவில்லை. இந்த ஆர்ஜிதம் செய்யப்பட்ட இடத்தில் மொத்தம் 1204 மனையிடங்களாக பிரிக்கப்பட்டு அனைத்து மனையிடங்களுக்கும் பட்டாக்கள்

வழங்கப்பட்டதில் தற்பொழுது 456 நபர்கள் பட்டாக்கள் பெற்றும் வீடுகள் கட்டவில்லை. அவர்களது பட்டாக்களை இரத்து செய்து புதிய பயனாளிகளைத் தேர்வு செய்து பட்டாக்கள் வழங்க திருப்பூர் ஆதிதிராவிடர் நலத் தனி வட்டாட்சியரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று கோவை மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

50—

**வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி**

**வினா எண் 37645—திரு. ஐ. கணேசன்** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலிருந்து கதர்த் துறை மற்றும் பல்வேறு கதர் வாரிய தயாரிப்புப் பொருள்கள் வெளி நாடுகளுக்கு அரசு ஏற்றுமதி செய்கிறதா?

(ஆ) கடந்த 1999-2000-ல் ஏற்றுமதி செய்யப்பட்டது எவ்வளவு?

(இ) அதனால் அரசுக்கு கிடைத்த வருவாய் எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர்த் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் உற்பத்தியாகும் சோப்பு வகைகள் மட்டும் தற்போது வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

(ஆ) ரூ.86,400/-மதிப்புடைய சோப்பு வகைகள் 1999-2000 ஆம் ஆண்டில் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

(இ) ரூ.22,425/- வருவாய் கிடைத்துள்ளது.

## பதினான்காம் பட்டியல்

1—

**நூலகங்கள் திறத்தல்**

**வினா எண் 38040—திரு.சி. ஞானசேகரன்** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—





வேலூர் மாவட்டத்தில் இந்நிதியாண்டில் கிளை நூலகங்கள், இயங்கு நூலகங்கள், ஊர்ப்புற நூலகங்கள், பகுதிநேர நூலகங்கள் புதியதாக திறக்க அரசிடம் கருத்துரு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

வேலூர் மாவட்டத்தில் இந்நிதியாண்டில் (2000-2001) வெள்ளகுட்டை என்னும் ஊரில் கிளை நூலகம் திறக்க அனுமதியளிக்கப்பட்டுள்ளது. இதைத் தவிர இந்நிதியாண்டில் வேலூர் மாவட்டத்தில் ஊர்ப்புற நூலகங்கள், இயங்கு நூலகங்கள் மற்றும் பகுதிநேர நூலகங்கள் திறக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

2—

**மின் நிலைய விவரம்**

**வினா எண் 31897—திரு. கே. சுப்பராயன்** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், செய்யூரில் அமையவுள்ள அனல் மின் நிலையத்திற்கு பொது மக்கள் எதிர்ப்பு இருக்கிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 14-7-1999 அன்று நடைபெற்ற மக்கள் கருத்தறியும் குழுக் கூட்டத்தில் கருத்து தெரிவித்த அப்பகுதி மக்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வேலை வாய்ப்பு, சுற்றுப்புற கிராமங்களுக்கு நலத் திட்டங்கள் போன்ற கோரிக்கைகளை முன் வைத்துள்ளனர். இதன் அடிப்படையில் மாவட்ட அளவிலான மக்கள் கருத்தறியும் குழு தேசிய அனல் மின் கழகம் மேற்கொள்ள வேண்டிய ஒரு சில நடவடிக்கைகளுடன் இத்திட்ட அமுலாக்கத்திற்கு அரசுக்கு பரிந்துரைத்துள்ளது. இக்கூட்டத்தில் பெருவாரியான மக்கள் இத்திட்ட அமுலாக்கத்தினை வரவேற்றுள்ளனர்.

[2000 நவம்பர் 11

3—

## மின் விளக்குகள் பழுது பார்த்தல்

**வினா எண் 33094—திரு. மு. அப்பாவு** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், விஜயாபதி ஊராட்சி விஸ்வாமித்திரர் கோவில் (சுற்றுலா மையம்) சாலையில் தெரு மின் விளக்குகளுக்காக போடப்பட்ட மின் கம்பிகள் காணாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், விஜயாபதி ஊராட்சி விஸ்வாமித்திரர் கோவில் (சுற்றுலா மையம்) சாலையில் உள்ள இரு தெரு விளக்குகளும் பழுதடைந்து இருந்தன. அவைகளை பழுதுபார்த்து எரிய வைப்பதற்கான வேலையை ஊராட்சி ஒன்றியம் மேற்கொள்ளவில்லை. மேலும் கடற்கரைக் காற்றினால் மேற்கூறிய தெரு விளக்குகளுக்கான மின் கடத்திகள் அறுந்து விழுந்துவிட்டன. பாதுகாப்பு கருதி, மின் கடத்திகள் கழற்றப்பட்டு கூடங்குளம் மின் பகிர்மானப் பிரிவு அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்தன. தற்பொழுது ஊராட்சி ஒன்றியத்தால் இரண்டு புதிய மின் விளக்குகள் வழங்கப்பட்டு கழற்றி வைக்கப்பட்டிருந்த மின் கடத்திகள் மீண்டும் அமைக்கப்பட்டு மின் விளக்குகள் எரிய வைக்கப்பட்டுள்ளன.

4—

## குறைந்த மின் அழுத்தம் சீர் செய்தல்

**வினா எண் 34213—திரு. கே. சுப்பராயன்** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2000 நவம்பர் 11]

(அ) திருப்பூர் நகர் 12-வது வார்டு, வ.உ.சி. நகரில் குறைந்த மின் அழுத்தம் நிலவுவதால் விளக்குகள் நன்கு எரிவதில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசின் நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் நகரம் 12-வது வார்டு வ.உ.சி. நகரில் கூடுதலாக 100 கே.வி.ஏ. மின் திறன் கொண்ட மின் மாற்றி ஜனவரி 2000-த்தில் அமைக்கப்பட்டு அப்பகுதியில் ஏற்பட்டு வந்த குறைந்த மின் அழுத்தம் நிவர்த்தி செய்யப்பட்டு, சீரான மின் விநியோகம் நடைபெற்று வருகிறது.

5—

## குறைந்த மின் அழுத்தத்தை போக்குதல்

**வினா எண் 34967—திரு. கே. சுப்பராயன்** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் தொட்டிப்பாளையம் ஊராட்சி பாரதி நகர் சின்ன பொம்ம நாயக்கன் பாளையம் பகுதிகளில் குறைந்த மின் அழுத்தம் நிலவுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைப்போக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் தொட்டிப்பாளையம் ஊராட்சி பாரதி நகர் சின்ன பொம்ம நாயக்கன் பாளையம் பகுதிகளில் ஏற்படும் குறைந்த மின் அழுத்தத்தை போக்குவதற்காக 100 கே.வி.ஏ./11 கி.வோ.

திறனுடைய ஒரு புதிய மின் மாற்றி அமைக்கப்பட்டு 20-6-2000 அன்று இயக்கி வைக்கப்பட்டது. தற்போது மேற்கண்ட பகுதிகளில் சீரான மின் அழுத்தம் இருந்து வருகிறது.

6—

**புதிய மின் மாற்றி**

**வினா எண் 34968—திரு. கே. சுப்பராயன்** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) திருப்பூர் நெறிப்பறைச்சல் ஊராட்சி பாண்டியன் நகர் மின்மாற்றி அதிக லோடு உள்ளதால் பாதிக்கப்பட்டுள்ளதை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், புதிய மின் மாற்றி எப்போது அமைக்கப்படும்?*

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருப்பூர் நெறிப்பறைச்சல் ஊராட்சி பாண்டியன் நகர் பகுதியில் ஒரு புதிய 63 கே.வி.ஏ./11 கி.வோ. திறனுடைய மின் மாற்றி அமைக்கப்பட்டு 20-5-2000 அன்று இயக்கி வைக்கப்பட்டுள்ளது. தற்பொழுது அப்பகுதியில் உள்ள அனைத்து மின் மாற்றிகளிலும் இணைக்கப்பட்டுள்ள மின் பளு வரையறைக்குட்பட்டுள்ளது.*

7—

**மின் வாரிய லைன்மேன் நியமனம்**

**வினா எண் 35034—திரு. கே. சுப்பராயன்** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) திருப்பூர் பட்டம்பாளையம் ஊராட்சிப் பகுதியில் மின் வாரிய லைன்மேன் இல்லை என்பதை அரசு அறியுமா?*



*(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?*

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருப்பூர் பட்டம்பாளையம் ஊராட்சிப் பகுதிக்கு மின் வாரிய கம்பியாளர் பதவி நிரப்பப்பட்டு அவர் 5-1-2000 அன்று பணியில் சேர்ந்துள்ளார்.*

8—

**தெரு விளக்கு அமைத்தல்**

**வினா எண் 35239—திரு. கே. சுப்பராயன்** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) திருப்பூர் மங்கலம் ஊராட்சி, வேட்டுவபாளையம் ஆதிதிராவிடர் காலனி வீடுகளுக்கு இலவச மின்சாரம் வழங்கி தெருவிளக்கு அமைத்துத் தருமாறு அரசிற்கு கோரிக்கை வந்துள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது செய்து தரப்படும்?*

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) திருப்பூர் - மங்கலம் ஊராட்சி, வேட்டுவபாளையம் ஆதிதிராவிடர் காலனியில் உள்ள வீடுகளுக்கு இலவச மின் இணைப்பு வேண்டி 27-1-1999 அன்று 12 விண்ணப்பங்கள் பெறப்பட்டன.*

*(ஆ) 2000-2001 ஆம் ஆண்டு சோமனூர் கோட்டத்தில் 17 ஆதிதிராவிடர் காலனி தொகுப்பு குடியிருப்புகளுக்கு இலவச மின் இணைப்பு வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. வரிசையின் அடிப்படையில் வேட்டுவபாளையம் ஆதிதிராவிடர் காலனியில் உள்ள 8 குடியிருப்புகளுக்கு கடந்த ஆகஸ்ட் 2000 அன்று மின் இணைப்பு வழங்கப்பட்டது. மீதம் உள்ள 4 குடியிருப்புகளுக்கு வரும் 2001-2002-ம் ஆண்டில் நிர்ணயிக்கப்படும் இலக்கின் அடிப்படையில் வழங்கப்படும்.*

[2000 நவம்பர் 11

மற்றும் வேட்டுவபாளையத்தில் உள்ள 5 தொகுப்பு வீடுகளுக்கு (ஜே.வி.வி.டி.) மின் இணைப்பு வேண்டி கடந்த 30-7-1999 அன்று விண்ணப்பம் பெறப்பட்டது. இந்த தொகுப்பு வீடுகளுக்கு வரும் 2001-2002-ம் ஆண்டில் நிர்ணயிக்கப்படும் இலக்கைப் பொறுத்து மின் இணைப்பு வழங்கப்படும்.

திருப்பூர் மங்கலம் ஊராட்சி, வேட்டுவபாளையம் ஆதிதிராவிடர் காலனியில் தெரு விளக்கு அமைக்க விண்ணப்பங்கள் பெறப்படவில்லை. அவ்வாறு விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றால் உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

9—

**மின் மாற்றிகள் விவரம்**

**வினா எண் 36115—திரு. ஆர்.ஆர். சேகரன்** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓமலூர் தொகுதியில் மொத்தம் எத்தனை மின் மாற்றிகள் நிறுவப்பட்டுள்ளது?

(ஆ) நடப்பு ஆண்டில் எத்தனை புதிய மின் மாற்றிகள் நிறுவப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மின் பகிர்மான வட்டத்திற்குட்பட்ட ஓமலூர் தொகுதியில் மொத்தம் 170 மின் மாற்றிகள் நிறுவப்பட்டு உள்ளன.

(ஆ) நடப்பு ஆண்டில் 7 புதிய மின் மாற்றிகள் நிறுவப்படும்.

10—

**மின் இணைப்பு விவரம்**

**வினா எண் 36477—திரு. மா. இராமச்சந்திரன்** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2000 நவம்பர் 11]

(அ) தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் தொகுதிக்கு உட்பட்ட தஞ்சாவூர், திருவோணம், ஒரத்தநாடு ஒன்றிய பகுதிகளில் விவசாய மின் இணைப்பு வழங்கக் கோரி வந்துள்ள மனுக்கள் எத்தனை?

(ஆ) எத்தனை மனுக்களுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டது?

(இ) நிலுவையில் உள்ள மனுக்களுக்கு நடப்பு ஆண்டில் மின் இணைப்பு வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் தொகுதிக்கு உட்பட்ட தஞ்சாவூர், திருவோணம், ஒரத்தநாடு ஒன்றிய பகுதிகளில் விவசாய மின் இணைப்பு கோரி வந்த மனுக்கள் 1200.

(ஆ) மின் இணைப்பு வழங்கியவை 225.

(இ) மனுக்களின் முன்னுரிமைக்கு ஏற்பவும் ஆண்டு இலக்கீட்டிற்கேற்பவும் வரிசைப்படி மின் இணைப்பு வழங்கப்படும்.

11—

**தொகுப்பு வீட்டிற்கு மின்சாரம்**

**வினா எண் 38061—திரு. சி. ஞானசேகரன்** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் சதுப்பேரி கிராமத்திலுள்ள தொகுப்பு வீட்டிற்கு மின்சாரம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இந்த நிதியாண்டில் சதுப்பேரி கிராமத்தில் அண்ணா மறுமலர்ச்சி திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இந்தக் கிராமத்தில் 25 தொகுப்பு வீடுகளுக்கு மின் இணைப்பு வழங்க விண்ணப்பங்கள் பெறப்பட்டு உள்ளன. இந்தத் தொகுப்பு வீடுகளுக்கு 31-12-2000-க்குள் மின் இணைப்பு வழங்கப்படும்.

**12—**

**குடிசை விளக்குகள்**

**வினா எண் 38272—திரு. மா. இராமச்சந்திரன்** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஒரத்தநாடு வட்டம், திருவோணம் ஒன்றியம், தோப்பு விடுதி ஊராட்சியில் பத்துப்புளி விடுதி கிராமத்தில் குடிசை விளக்கு தேவையானவர்களுக்குப் போட்டுத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

ஒரத்த நாடு வட்டம், திருவோணம் ஒன்றியம் தோப்பு விடுதி ஊராட்சியில் பத்துப்புளி விடுதி என்ற கிராமத்தில் குடிசை விளக்கு கோரும் விண்ணப்பங்கள் 75 நிலுவையில் உள்ளன. வாரிய குறியீட்டின்படியும் வரிசைக்கிரமத்தின்படியும் குடிசை விளக்குகள் கொடுக்கப்பட்டு வருகின்றன. இவ்வாண்டு இலக்காக ஒரத்தநாடு கோட்டத்திற்கு 836 குடிசைகளுக்கு மின்னிணைப்பு கொடுக்கப்பட இருக்கிறது. ஒரத்தநாடு கோட்டத்தில் பல கிராமங்கள் இருப்பதால் விண்ணப்பப் பதிவு மூப்பு அடிப்படையிலும், மேற்படி 75 விண்ணப்பங்கள் தகுதி அடிப்படையிலும், நடவடிக்கை எடுத்து இவ்வாண்டு குறியீட்டில் சேர்க்கப்பட்டு 31.10.2000-க்குள் மின் இணைப்பு வழங்கப்படும்.

**13—**

**மின் வசதி**

**வினா எண் 39935—திரு. ஆர்.ஆர். சேகரன்** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



ஓமலூர் தொகுதி, நடுப்பட்டி ஊராட்சி, காக்காயன் காட்டில் இருந்து பெருமாள் கோவில் வரை மின் வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்ட, ஓமலூர் வட்டம், நடுப்பட்டி ஊராட்சி, காக்காயன் காட்டிலிருந்து பெருமாள் கோவில் வரை தெரு விளக்கு அமைத்துக் கொடுக்க வேண்டி தலைவர் நடுப்பட்டி ஊராட்சி அவர்கள் கொடுத்த விண்ணப்பத்தின் பேரில் மதிப்பீடு அனுமதிக்கப்பட்டு மதிப்பீட்டுத் தொகை ரூ.12,430/-ஐ செலுத்துமாறு 26.6.2000 அன்று தலைவர் நடுப்பட்டி ஊராட்சி அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. மதிப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டவுடன் தெரு விளக்கு அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**14—**

**மின் உற்பத்தி**

**வினா எண் 41749—திரு. ஐ. கணேசன்** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தனியார் துறையில் உற்பத்தி செய்யும் மின்சாரத்தை அதிகவிலை கொடுத்து தமிழக அரசு வாங்குவதன் நோக்கம் என்ன?

(ஆ) ஆம் எனில், குறைந்த செலவில் மின் வாரியமே மின் உற்பத்தி செய்ய அரசு ஊக்குவிக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தனியார் மின் திட்டங்கள் இரு வகைப்படும்.

[2000 நவம்பர் 11

**வகை (1) கருத்தளவு ஒப்பந்த முறையிலான மின் திட்டங்கள்:-**

இம்மின் திட்டங்களினால் பெறப்படும் மின்சாரத்திற்கு மின் கொள்முதல் ஒப்பந்தத்தின்படி விலை கொடுக்கப்படுகிறது. இந்திய அரசின் வழிகாட்டுதலின்படி அமைந்துள்ள மின் கொள்முதல் கொள்கையின்படி மின் கொள்முதல் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

**வகை (2) பன்னாட்டு ஒப்பந்த புள்ளி முறையிலான மின் திட்டங்கள்:-**

குறைந்த மின் கட்டண அடிப்படையின்படி தனியார் மின் திட்டங்களிலிருந்து மின்சாரம் பெற அரசு திட்டமிட்டுள்ளது. இவ்வகையான தனியார் மின் திட்டங்கள் பன்னாட்டு ஒப்பந்த புள்ளி முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. ஆகையால், தனியார் மின் திட்டங்களிலிருந்து அதிகவிலை கொடுத்து மின்சாரத்தை வாங்குவது என்ற வினா எழவில்லை.

கருத்தளவு ஒப்பந்தம் மூலம் செயல்படும் திட்டங்களின் மின் கட்டணம் இரு அம்சங்களை உள்ளடக்கியது.

(1) நிலையான கட்டணம் (2) மாறுபாடு கட்டணம்.

(1) நிலையான கட்டணம் வணிக இயக்க நாளுக்குப் பிறகு இறுதியாக மைய அரசின் அதிகார மின் குழுமத்தினால் அனுமதிக்கப்படும் திட்ட முதலீட்டுத் தொகையைப் பொறுத்தது. மாறுபடும் கட்டணம் மின்சார உற்பத்திக்குத் தேவையான எரிபொருளின் விலையை பொறுத்தது.

பன்னாட்டு ஒப்பந்தப்புள்ளி மூலம் செயல்பட உள்ள திட்டங்களிலும் மின் கட்டணம் இரு அம்சங்களை உள்ளடக்கியது. அதாவது நிலையான கட்டணம் மற்றும் மாறுபடும் கட்டணம். நிலையான கட்டணம் ஒப்பந்தப் புள்ளிகள் கொடுக்கு பொழுதே அதில் குறிப்பிடப்படுகிறது. இது ஒப்பந்தகாலம் முழுவதும் மாறாமல் இருக்கும். மாறுபடும் கட்டணம் மின் உற்பத்திக்குத் தேவையான எரிபொருளின் விலையைப் பொறுத்தது.

**15—**

## நீர் மின்சார அளவு

**வினா எண் 41787—திரு. இ. கணேசன்** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2000 நவம்பர் 11]

தமிழ்நாட்டில் கடந்த ஆண்டில் உற்பத்தி செய்த மொத்த நீர் மின்சாரம் எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் கடந்த ஆண்டில் உற்பத்தி செய்த மொத்த நீர் மின்சாரம் 4443.429 மில்லியன் யூனிட்டுகள் ஆகும்.

| வரிசை எண் | மாதம் | மில்லியன் யூனிட்டுகள் |
|---|---|---|
| 1. | ஏப்ரல் 1999 | 222.409 |
| 2. | மே 1999 | 168.894 |
| 3. | ஜூன் 1999 | 315.976 |
| 4. | ஜூலை 1999 | 486.484 |
| 5. | ஆகஸ்ட் 1999 | 558.330 |
| 6. | செப்டம்பர் 1999 | 464.528 |
| 7. | அக்டோபர் 1999 | 324.107 |
| 8. | நவம்பர் 1999 | 511.152 |
| 9. | டிசம்பர் 1999 | 394.785 |
| 10. | ஜனவரி 2000 | 319.481 |
| 11. | பிப்ரவரி 2000 | 313.072 |
| 12. | மார்ச் 2000 | 364.202 |
| | மொத்தம் .. | **4443.429** |

**16—**

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 28422—திரு.ஜி.கே. மணி** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி பாகலஅள்ளி ஊராட்சி மேட்டுக்கொட்டாய் கிராமத்திற்கு மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு.கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம் நல்லம்பள்ளி ஒன்றியம், பாகலஅள்ளி ஊராட்சியில் உள்ள மேட்டுக்கொட்டாய், பச்சையப்பன் கொட்டாய் மற்றும் வேட்டராயன்கொட்டாய் ஆகிய மூன்று குடியிருப்புகளின் தற்போதைய மற்றும் உச்சக்கட்ட மொத்த மக்கள் தொகை 925 மற்றும் 1295 ஆகும். மேல்குறிப்பிட்டுள்ள மூன்று குடியிருப்புகளுக்கு 1998-99 ஆம் ஆண்டு குடிநீர் திட்டம் ரூ.8.38 இலட்சத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, 60000 லிட்டர் கொள்ளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மேட்டுக்கொட்டாய் குடியிருப்பில் கட்டப்பட்டு மூன்று குடியிருப்புகளுக்கும் முழுமையாக பகிர்மானக் குழாய் பதிக்கப்பட்டு நாளொன்றுக்கு நபர் ஒன்றுக்கு 40 லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

**17—**

### ஏரியில் குப்பை கொட்டும் திட்டம்

**வினா எண் 31830—திரு. கே. சுப்பராயன்** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, அம்பத்தூர் நகராட்சி, அம்பத்தூர் ஏரியில் குப்பை கொட்ட அனுமதி கோரி அரசிற்குக் கடிதம் எழுதியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அம்பத்தூர் நகராட்சியில் இருந்து அம்பத்தூர் ஏரியில் குப்பைகளைக் கொட்டுவதற்கு அனுமதி கோரி கடிதம் ஏதும் அரசுக்கு எழுதப்படவில்லை. மேலும் அம்பத்தூர் ஏரியில் குப்பைகள் கொட்டுவதற்கு நகராட்சியில் எந்தத் திட்டமும் இல்லை.





**18—**

### பேருந்து நிலையம் மாற்றுதல்

**வினா எண் 32707—திரு. ஆர்.ஆர். சேகரன்** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் சந்திப்பு அருகே உள்ள பேருந்து நிலையத்தை சூரமங்கலம் காவல் நிலையத்திற்கு அருகே மாற்றும் திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் சந்திப்பு அருகே உள்ள பேருந்து நிலையத்தை சூரமங்கலம் காவல் நிலையத்திற்கு அருகே மாற்றும் திட்டம் ஏதும் தற்போது மாநகராட்சி மற்றும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**19—**

### கிணறு மூடுதல்

**வினா எண் 34110—திரு. கே. சுப்பராயன்** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் 34-வது வார்டு தென்னம்பாளையம் சாலையை ஒட்டி அபாயகரமான முறையில் தனியார் கிணறு இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதை மூடிவிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

[2000 நவம்பர் 11

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் நகர், 34-வது வார்டு தென்னம்பாளையம் பிரதான சாலையில் தனியாருக்குச் சொந்தமான கிணறு ஒன்று உள்ளது. இக்கிணற்றைச் சுற்றி பொது மக்கள் பாதுகாப்பு கருதி சுற்றுச்சுவர் அமைக்க நகராட்சி மூலம் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

**20—**

**சாக்கடை சீரமைக்கும் பணி**

**வினா எண் 34111—திரு. கே. சுப்பராயன்** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகர், 10-வது வார்டு, காமராஜ் நகர் 1-வது வீதி சாக்கடை ஆழமில்லாததால் சாக்கடை நீர் வீடுகளுக்குள் புகுந்து கொள்வதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் நகர், 19-வது வார்டு, காமராஜ் நகர் 1-வது வீதியில் சாக்கடை நீர் வீடுகளுக்குள் புகுந்து கொள்வதைத் தடுத்து சீரமைக்கும் பணியை, 2000-2001 ஆம் ஆண்டு நகர கூட்டாண்மைத் திட்டத்தின் மூலம் நிறைவேற்றுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

**21—**

**சாக்கடை வசதி**

**வினா எண் 34124—திரு. கே.சுப்பராயன்** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகர் மாரியம்மன் லே அவுட் 1,2,3,4, வீதிகள் கோட்டைத் தோட்டத் தெரு, பிச்சம்பாளையம் இட்டேரி பகுதி ஆகிய இடங்களில் சாக்கடை வசதி செய்து தரப்படவில்லை என்பதை அரசு அறியுமா?



2000 நவம்பர் 11]

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் நகர், மாரியம்மன் லே அவுட் 1,2,3,4 வீதிகளில் வரும் 2001-2002 நிதியாண்டில் சாக்கடை வசதி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பிச்சம்பாளையம் இட்டேரி சாலை சாக்கடை வசதி செய்யும் பணி 1999-2000-ம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் 1-ன் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

**22—**

**கம்ப்ரசர் மோட்டார் அமைத்தல்**

**வினா எண் 34228—திரு. கே. சுப்பராயன்** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் நகர், கே.ஜி. லே அவுட் ஆழ்குழாய் கிணற்றுக்கு கம்ப்ரசர் மோட்டார் அமைத்திட அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருப்பூர் நகர், கே. ஜி. லே அவுட் ஆழ்குழாய் கிணற்றுக்கு நடப்பு நிதியாண்டில் கம்ப்ரசர் மோட்டார் அமைக்கப்படும்.

**23—**

**குடிநீர் வசதி**

**வினா எண் 35058—திரு. கே. சுப்பராயன்** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 நவம்பர் 11

(அ) திருப்பூர் நகர், 32வது வார்டு தெற்கு தோட்டம் 3வது வீதியில் குடிநீர் வசதி இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அங்கு எப்போது குடிநீர் வசதி செய்து தரப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் நகர், 32-வது வார்டு, தெற்குத் தோட்டம் 3வது வீதியில் குடிநீர் வசதிகள் செய்ய, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்துடன் இணைத்து நேராய்வு செய்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மூன்றாவது குடிநீர்த் திட்டம் செயல்பாட்டுக்கு வந்தவுடன் குடிநீர் வசதி முழுமையாகும்.

**24—**

**வடிகால்களுக்கு மூடுகல்**

**வினா எண் 35086—திரு. கே. சுப்பராயன்** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகர், 34வது வார்டு, பூம்புகார் நகர் மேற்குப் பகுதியில் கட்டப்பட்டுள்ள வடிகால்களுக்கு மூடுகல் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் நகரம், 34-வது வார்டு மேற்குப் பகுதியில் கட்டப்பட்டுள்ள வடிகால்களுக்கு நடப்பு நிதியாண்டு (2000-2001) நகர் கூட்டாண்மைத் திட்டத்தின் மூலம் மூடுகல் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.



2000 நவம்பர் 11]

**25—**

**குடிநீர் வசதி**

**வினா எண் 35099—திரு. கே. சுப்பராயன்** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகர், 4-வது வார்டு குமரானந்தபுரம் அண்ணா வீதியில் மேற்குப்பகுதி உயரமாக உள்ளதால் குடிநீர் சரியாக வருவதில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இக்குறை தீர்க்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் நகர், 4வது வார்டு குமரானந்தபுர அண்ணா வீதி மேற்குப்பகுதியில் சில அபிவிருத்திப் பணிகள் செய்யப்பட்டு தற்போது குடிநீர் விநியோகம் சீராக உள்ளது.

**26—**

**வடிகால் மற்றும் சாலை வசதிகள்**

**வினா எண் 35116—திரு கே. சுப்பராயன்** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் 22-வது வார்டு கொங்கணகிரி பகுதி மக்களுக்கு வடிகால் அமைப்பு மற்றும் சாலை வசதிகள் இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

[2000 நவம்பர் 11

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் 22-வது வார்டு கொங்கணகிரி பகுதி மக்களுக்கு மழைநீர் வடிகால் மற்றும் சாலை வசதிகள் 2002-2003 நிதியாண்டில் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

27—

### வடிகால் வசதி

**வினா எண் 35183—திரு. கே. சுப்பராயன்** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகரம் 3-வது வார்டு டீச்சர்ஸ் காலனி, சிங்காரவேலர் நகர், பிச்சம்பாளையம் விரிவு, மருதாசலபுரம் போன்ற பகுதிகளில் வடிகால் நீர் வடிந்திட வடிகால் வசதி இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைத்துத் தரப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் நகர், 3-வது வார்டு, டீச்சர்ஸ் காலனி, சிங்கார வேலர் நகர், பிச்ச பாளையம் விரிவு, மருதாசலபுரம் ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால்கள் கட்டும் பணியினை, 2000-2001 முதல் 2002-2003 ஆண்டுகளுக்கான நகர கூட்டாண்மைத் திட்டங்களின் கீழ் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

28—

### சாலை மற்றும் வடிகால் வசதி

**வினா எண் 35185—திரு. கே. சுப்பராயன்** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகர், 12-வது வார்டு கட்டபொம்மன் நகர், மூர்த்தி நகர், 5-வது வீதி, பாப்பம்நாயக்கன்பாளையம், அருள்ஜோதி நகர் பகுதிகளில் சாலை மற்றும் வடிகால் வசதி இல்லை என்பதை அரசு அறியுமா?



2000 நவம்பர் 11]

(ஆ) ஆம் எனில், எப்போது அமைத்துத் தரப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் நகர், 13-வது வார்டு, கட்டபொம்மன் நகர், மூர்த்தி நகர், 5-வது வீதி, பாப்பநாயக்கன்பாளையம், அருள்ஜோதி நகர் ஆகிய பகுதிகளில் சாலை மற்றும் வடிகால் வசதிப் பணிகளை 2000-2001 முதல் 2002-2003 வரையிலான ஆண்டுகளின் நகர கூட்டாண்மை திட்டங்களில் சேர்த்து, நிறைவேற்றிட திட்டமிடப்பட்டுள்ளது.

29—

### சாலை பழுதுபார்த்தல்

**வினா எண் 35188—திரு. கே. சுப்பராயன்** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் 2-வது வார்டு ஜீவா நகர் மெயின்ரோடு பழுதுபட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது பழுதுபார்த்து சரி செய்யப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் 2-வது வார்டு, ஜீவா நகர் மெயின்ரோடு தார்ச்சாலை அமைக்கும் பணியை 2001-2002, நகரக் கூட்டாண்மைத் திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ள நகராட்சி உத்தேசித்துள்ளது.

30—

### சிமெண்ட் தளம் அமைத்தல்

**வினா எண் 35398—திரு. கே. சுப்பராயன்** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 நவம்பர் 11

(அ) திருப்பூர் நகர், 42-வது வார்டு அகத்தியர் சந்து, மமூசா ராவுத்தர் சந்துகளில் சிமெண்ட் தளம் அமைக்குமாறு அரசிற்குக் கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி.மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் நகர், 42வது வார்டு, அகத்தியர் சந்து மற்றும் மமூசா ராவுத்தர் சந்துகளில் 2000-2001-ஆம் ஆண்டு நகர கூட்டாண்மைத் திட்டத்தின்கீழ் சிமெண்ட் கான்கிரீட் தளம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

**31—**

**சாலை வசதி**

**வினா எண் 35400—திரு. கே.சுப்பராயன்** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் நகர் 34-வது வார்டு, தட்டான்தோட்டம் 1, 2, 3, குறுக்கு வீதிகள், முத்தையா நகர், டைமண்ட் தியேட்டர் பாலம் முதல் சந்தைப்பேட்டை வரையும், 49-வது வார்டு தங்கா கவுண்டர் லே-அவுட் தெற்குத் தோட்டம் பகுதிகளில் சாலை வசதிகள் இல்லை என்பதை அரசு அறியுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி.மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருப்பூர் நகர், 34-வது வார்டு, தட்டான்தோட்டம் 1,2,3, குறுக்கு வீதி, தெற்குத் தோட்டம் பகுதிகளில் உள்ள சாலைகளுக்கு தார்சாலை அமைக்கும் பணிகள் நகரக் கூட்டாண்மைத் திட்டம் 2001-2002-ல் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. முத்தையா நகர், டைமண்ட் தியேட்டர் பாலம் முதல் சந்தைப்பேட்டை வரை ஓடையின் கீழ்புறம் விரைவில் சாலைகள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. 49-வது வார்டு தங்காகவுண்டர் லே அவுட் (தெற்கு தோட்டம்) பகுதிகளில் சாலைப் பணிகள் 2002-2003ஆம் ஆண்டு நகரக் கூட்டாண்மைத் திட்டத்தில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.



2000 நவம்பர் 11]

**32—**

**கடை அல்லது சட்டமன்ற உறுப்பினர் கட்டடம் கட்டுதல்**

**வினா எண் 37707—திரு. சி. ஞானசேகரன்** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் 'லாங்குபஜார்' சண்முகனடியார் சங்கம் கட்டடத்திற்கு பக்கத்திலுள்ள நகராட்சிக்குச் சொந்தமான இடம் பல வருடங்களாக் காலியாக உள்ளதால் இதனை கடைகளாகவோ அல்லது சட்டமன்ற உறுப்பினர் கட்டடமாகவோ கட்டி விட்டால் பொதுமக்களுக்கு வசதியாக இருக்கும் என்பதால் இதனை செய்ய அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி.மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வேலூர் நகரம், லாங்குபஜார் சண்முகனடியார் சங்கம் கட்டடத்திற்கு பக்கத்தில் உள்ள நகராட்சிக்குச் சொந்தமான 3795 சதுர அடி திட்டத்தில் பழ மார்க்கெட் மற்றும் கடைகள் ரூ.22.00 லட்சம் மதிப்பீட்டில் கட்ட நகராட்சியால் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக மத்திய ஒருங்கிணைந்த சிறிய மற்றும் நடுத்தர நகரங்கள் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் (IDSMT) டிபிட்கோ (TUFIDCO) மூலம் கடன்பெற நகராட்சியால் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

**33—**

**சிமெண்ட் சாலை**

**வினா எண் 38020—திரு. சி. ஞானசேகரன்** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 நவம்பர் 11

(அ) வேலூர் மாவட்டம், வேலூர் நகரம் சலவன்பேட்டை ராமசாமி தேசிகர் தெருவுக்கு சிமெண்ட் சாலை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி.மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், வேலூர் நகரம் சலவன்பேட்டை ராமசாமி தேசிகர் தெருவிற்கு சிமெண்ட் சாலை அமைப்பதற்கான பூர்வாங்கப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**34—**

**மாநகராட்சிப் பள்ளிகள் விவரம்**

**வினா எண் 39308—திரு. ஐ. கணேசன்** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகராட்சிக்குட்பட்ட ஆரம்பப் பள்ளிகள் எத்தனை?

(ஆ) நடுநிலைப் பள்ளிகள் எத்தனை?

(இ) உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகள் எத்தனை?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி.மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாநகராட்சிக்குட்பட்ட ஆரம்பப் பள்ளிகள் 42.

(ஆ) நடுநிலைப் பள்ளிகள் 13 உள்ளன.

(இ) உயர்நிலைப்பள்ளிகள் 4-ம், மேல்நிலைப்பள்ளிகள் 5-ம் உள்ளன.



2000 நவம்பர் 11]

**35—**

**தொலைபேசி வசதி**

**வினா எண் 36022—திரு. கே. ரவி அருணன்** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் தொலைபேசி வசதி ஏற்படுத்திக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை, வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம் உட்பட தொலைபேசி வசதி இல்லாத அனைத்து வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகங்களுக்கும் தொலைபேசி வசதி செய்து தருவது குறித்து வேளாண்மை இயக்குநர் அரசுக்குக் கருத்துரு அனுப்பியுள்ளார். அக்கருத்துருவை அரசு பரிசீலித்து வருகிறது. அரசின் நிதி நிலைமைக்கேற்ப அரசு முடிவெடுக்கும்.

**36—**

**ஓட்டுநர் பயிற்சி பள்ளி விவரம்**

**வினா எண் 32698—திரு. ஐ. கணேசன்** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1998-99, 1999-2000ஆம் ஆண்டில் ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிக்கு எவ்வளவு மாணவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்?

(ஆ) ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிக்கு மேலும் அனுமதி வழங்கி, எளிதில் உரிமம் கிடைக்க வழிவகை செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் தரமணி சாலைப் போக்குவரத்து நிறுவனம், கும்மிடிப்பூண்டி மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் ஓட்டுநர் பயிற்சி நிறுவனங்களை நடத்துகின்றது. மேலும் இந்நிறுவனம் அரசு போக்குவரத்துக் கழகத்துடன் இணைந்து மதுரை, பொள்ளாச்சி, சேலம், திருநெல்வேலி, விழுப்புரம், காரைக்குடி, நாகர்கோவில், திண்டுக்கல், ஈரோடு, தருமபுரி, கும்பகோணம் ஆகிய இடங்களில் ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகளை நடத்துகின்றது. சாலைப் போக்குவரத்து நிறுவனத்துடன் அரசுப் போக்குவரத்துக் கழகம் இணைந்து நடத்தும் ஓட்டுநர் பயிற்சிப் பள்ளியில் 1998-99ஆம் ஆண்டில் 3261 மாணவர்களும் 1999-2000ஆம் ஆண்டில் 3216 மாணவர்களும் பயிற்சி பெற்றுள்ளனர். இவை தவிர 1116 தனியார் ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகள் இயங்குகின்றன. இத்தனியார் ஓட்டுநர் பயிற்சிப் பள்ளி 1998-99-ல் 3,70,869 மாணவர்களும், 1999-2000-ல் 3,48,420 மாணவர்களும் பயிற்சி பெற்றுள்ளனர்.

**37—**

**அலுவலகத்திற்கு நிரந்தர கட்டடம்**

**வினா எண் 34335—திரு. கே. ரவி அருணன்** மாணபுமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசியில் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்திற்கு நிரந்தர கட்டடம் அமைத்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) தென்காசி பகுதி அலுவலகத்திற்கு இட ஒதுக்கீடு தொடர்பாக மாவட்ட ஆட்சியர், திருநெல்வேலி அவர்கள் தக்க நடவடிக்கை எடுத்து வருகிறார்.

(ஆ) தகுந்த நிலம் ஒதுக்கீடு செய்த பிறகு சொந்தக் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.





**38—**

**போக்குவரத்து அலுவலகங்களை அரசு கட்டடத்தில் இயக்குதல்**

**வினா எண் 34881—திரு. ஐ. கணேசன்** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் எத்தனை வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் தனியார் கட்டடத்தில் இயங்கி வருகின்றன?

(ஆ) இவைகளை அரசு கட்டடத்தில் இயங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) தமிழகத்தில் 44 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. இதில் 28 வட்டார போக்குவரத்து அலுவலகங்கள் தற்போது தனியார் கட்டடத்தில் இயங்கி வருகின்றன.

(ஆ) தனியார் கட்டடத்தில் இயங்கும் வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்ட நிலம் கையகப்படுத்த அரசு முனைப்பான நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. நிலம் கையகப்படுத்தப்பட்டபின், நிதி நிலைமைக்கேற்ப கட்டடம் கட்டப்படும்.

**39—**

**போக்குவரத்து அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம்**

**வினா எண் 35864—திரு. ஆர்.ஆர். சேகரன்** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மண்டலப் போக்குவரத்து அலுவலகத்திற்கு சொந்த கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டித் தரப்படும்?

[2000 நவம்பர் 11

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட சேலம் வட்டம், கந்தப்பட்டி கிராமத்தில் நிலம் தெரிவு செய்யப்பட்டு, போக்குவரத்துத் துறைக்கு நிலமாற்றம் செய்வது குறித்த செயற்குறிப்பு வருவாய்த் துறையின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) உரிய நிலம் போக்குவரத்துத் துறைக்கு மாற்றம் செய்யப்பட்டபின், அரசின் நிதிநிலைக்கேற்ப, ஒப்புதல் அளிக்கப்பட்டு உரிய ஆணைகள் வழங்கப்படும்.

**40—**

**கட்டடம்**

**வினா எண் 39343—திரு. ஜி.கே. மணி** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெண்ணாகரம் தொகுதி, கோணங்கி அள்ளி ஊராட்சி, சி.புதூர் கிராம நியாயவிலைக் கடைக்கு நடப்பாண்டில் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கோணங்கிஅள்ளி ஊராட்சி, சி.புதூர் கிராமத்தில் இயங்கி வருவது பகுதிநேர நியாயவிலைக் கடையாதலால், இக்கடைக்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு விதிகளில் இடமில்லை.

**41—**

**நியாயவிலைக் கடைக்குக் கட்டடம்**

**வினா எண் 39344—திரு. ஜி.கே.மணி:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2000 நவம்பர் 11]

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி கோணங்கிஅள்ளி ஊராட்சி, சிக்கனம்பட்டி கிராமத்தில் இயங்கிவரும் நியாயவிலைக் கடைக்கு கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கோணங்கிஅள்ளி ஊராட்சி, சிக்கனம்பட்டி கிராமத்தில் இயங்கி வரும் நியாயவிலைக் கடை, பகுதிநேர நியாயவிலைக் கடையாதலால், இக்கடைக்கு கட்டடம் கட்ட விதிகளில் இடமில்லை.

**42—**

**வீட்டுவசதி வாரிய வீடுகள் சொந்தமாக்கும் திட்டம்**

**வினா எண் 25218—திரு. பெ.சு. திருவேங்கடம்** மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையிலுள்ள வீட்டு வசதி வாரிய வீடுகளை அதில் குடியிருப்போருக்குச் சொந்தமாக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி, வீட்டு வசதித் துறை அமைச்சர்:**

(அ) சென்னை மாநகரிலுள்ள வீட்டு வசதி வாரிய பொது வாடகை வீடுகளை அதில் குடியிருப்போருக்குச் சொந்தமாக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இல்லை.

[2000 நவம்பர் 11

43—

### கைவினைஞர்களுக்கு மானியம்

**வினா எண் 34507—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1996-97ஆம் ஆண்டு தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் மேற்கொண்ட கைவினைஞர்கள் நலத் திட்டத்தில் திருநெல்வேலி மாவட்டத்தில் வாகைகுளம் கிராமத்தில் எத்தனை கைவினைஞர்கள் பயன்பெற்றுள்ளனர்?

(ஆ) அவர்களுக்கு எவ்வளவு மானியம் வழங்கப்பட்டுள்ளது?

(இ) எத்தனை தொழிற்கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) 1996-97ஆம் ஆண்டு தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் மேற்கொண்ட கைவினைஞர்கள் நலத் திட்டத்தில் திருநெல்வேலி மாவட்டம் வாகைகுளம் கிராமத்தில் 60 கைவினைஞர்களுக்குத் தொழிற்கூடம் அமைக்க நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது;

(ஆ) ஒரு நபருக்கான மொத்த மானியத் தொகையான ரூ.4,000/-ல் முதல் தவணையாக தலா ரூ. 2,000/- வீதம் 60 கைவினைஞர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள ரூ. 2,000/- மத்திய அரசிடமிருந்து கோரப்பட்டுள்ளது. இதற்காக இடைவிடாத தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மானியத்தொகை கிடைத்தவுடன் கைவினைஞர்களுக்கு வழங்கப்படும்.

(இ) 60 தொழிற்கூடங்களும் கைவினைஞர்களால் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இதற்குரிய சான்றிதழ்கள் அபிவிருத்தி ஆணையர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.



2000 நவம்பர் 11]

44—

### மருந்தகங்கள் தரம் உயர்த்துதல்

**வினா எண் 26382—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் எத்தனை கால்நடை மருந்தகங்கள் கால்நடை மருத்துவமனைகளாக நிலை உயர்த்தப்படவுள்ளது?

(ஆ) ஆம் எனில், எடப்பாடி தொகுதியில் எத்தனை மருந்தகங்கள் மருத்துவமனைகளாக தரம் உயர்த்தப்படவுள்ளது?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் நரசோதிப்பட்டி மற்றும் தம்மம்பட்டி ஆகிய இரண்டு கால்நடை மருந்தகங்கள் மருத்துவமனைகளாக தரம் உயர்த்த தகுதியுள்ளவையாகும்.

(ஆ) எடப்பாடி தொகுதியில் இருப்பாளி, சிலுவம்பாளையம், கொங்கணாபுரம், வெள்ளாளபுரம், வைகுந்தம் மற்றும் மகுடஞ்சாவடி ஆகிய 6 கால்நடை மருந்தகங்கள் மருத்துவமனைகளாக தரம் உயர்த்த தகுதியுள்ளது.

45—

### கால்நடை மருந்தகக் கட்டடம்

**வினா எண் 34530—திரு. என்.ஆர். அழகராஜா:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேனி மாவட்டம், ஓடைப்பட்டி பேரூராட்சியில் உள்ள வெள்ளையம்மாள்புரத்தில் கால்நடை மருந்தகக் கட்டடம் கட்ட ஆவன செய்யப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2000 நவம்பர் 11

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) வெள்ளையம்மாள்புரம் கிராமத்தில் கால்நடை மருந்தகம் செயல்படவில்லை. அங்கு ஒரு கால்நடை கிளை நிலையம்தான் செயல்பட்டு வருகிறது. மேலும், அங்கு கால்நடை கிளை நிலையத்திற்கு கட்டடம் கட்ட தேனி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்கு பிரேரணை அனுப்பப்பட்டுள்ளது.

(ஆ) மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையிலிருந்து நிதி ஒதுக்கீடு பெறப்பட்டவுடன் கட்டடம் கட்டப்படும்.

**46—**

**கால்நடை மருத்துவமனைகள் விவரம்**

**வினா எண் 37127—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) 1999-2000-ல் சேலம் மாவட்டத்தில் புதியதாக தொடங்கப்பட்ட கால்நடை மருத்துவமனைகள் எத்தனை?*

*(ஆ) அதன் விவரம் ஊர் வாரியாக அரசு தெரிவிக்குமா?*

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) 1999-2000ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் சேலம் மாவட்டமும் சேர்த்து புதியதாக எந்த ஒரு கால்நடை மருத்துவமனையும் தொடங்கப்படவில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.



2000 நவம்பர் 11]

**47—**

**கால்நடை மருத்துவமனைகள் விவரம்**

**வினா எண் 37128—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் கடந்த 1999-2000ஆம் ஆண்டில் புதியதாக தொடங்கப்பட்ட கால்நடை மருத்துவமனைகள் எத்தனை?*

*(ஆ) அதன் விவரம் என்ன?*

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) 1999-2000ஆம் ஆண்டில் பகுதி-2 திட்டத்தின்கீழ் கால்நடை மருந்தகங்கள் கால்நடை மருத்துவமனைகளாக தரம் உயர்த்தப்படவில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**48—**

**மாணவ-மாணவியருக்கு தங்கும் விடுதிகள்**

**வினா எண் 39486—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் தொகுதியில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ-மாணவியருக்கு உணவுடன் கூடிய தங்கும் விடுதிகள் எத்தனை உள்ளன?*

*(ஆ) நடப்பு ஆண்டில் (2000-2001) புதிய விடுதிகள் திறக்கும் உத்தேசம் உள்ளதா?*

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர்எஸ். செல்வராசு, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) 3 விடுதிகள்*

*(ஆ) உத்தேசம் இல்லை.*

*49—*

**தாட்கோ கடன் விவரம்**

**வினா எண் 39506—திரு. ஆர். ஆர். சேகரன்:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) ஓமலூர் தொகுதியில் தாட்கோ கடன் கேட்டு வரப்பெற்ற மனுக்கள் எத்தனை?*

*(ஆ) எத்தனை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு கடன்கள் கொடுக்கப்பட்டன?*

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ)* ஓமலூர் தொகுதியில் *1999-2000-ஆம்* ஆண்டில் தாட்கோ மூலம் கடன் கேட்டு மனு செய்தவர்கள் மற்றும் அம்மனுக்களில் கடன் பெற்றவர்கள் பற்றிய விவரங்கள் வருமாறு:—

| திட்டம் | கடன்கேட்டு மனு செய்தவர்கள் | கடன் பெற்றவர்கள் |
|---|---|---|
| 1. தனிநபர் தொழில் முனைவோர் திட்டம் | 53 | 4 |
| 2. விவசாயம் அதனைச் சார்ந்த திட்டம் | 15 | 5 |
| 3. தேசிய ஆதிதிராவிடர் நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகத் திட்டங்கள் | 20 | 2 |





**50—**

**பணியிடங்கள் நிரப்புதல்**

**வினா எண் 41469—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) 1999 ஆம் ஆண்டு மற்றும் 2000 ஆம் ஆண்டு பிப்ரவரி அரசுப் பணிகளில் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினத்தவர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் எவ்வளவு பணியிடங்கள் இன்னும் நிரப்பப்படாமல் உள்ளன?*

*(ஆ) அவைகளை உடனடியாக நிரப்ப அரசு நடவடிக்கை எடுக்குமா?*

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

*(அ)* ஒவ்வொரு ஆண்டுக்கும் என தனியாக பணியிடங்கள் ஒதுக்கப்படுவதில்லை. பணியிடங்கள் ஏற்படும்போது இட ஒதுக்கீட்டுமுறை பின்பற்றப்பட்டு பணி நியமனம் செய்யப்படுகிறது.

*(ஆ) 1-4-1989* முதல் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பணியிடங்களில் இன சுழற்சி முறையில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்களை பணியமர்த்துவதில் ஏற்பட்டுள்ள பின்னடைப் பணியிடங்கள் கணக்கிடப்பட்டு, அப்பணியிடங்களில் ஐந்தாண்டு காலத்திற்குள் பணியமர்த்தப்பட வேண்டும் என ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. அப்பணியிடங்களில் பணியமர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

(**குறிப்பு: ஓர் உரையின்** தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.)

[2000 நவம்பர் 11

## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு

### தேயிலை, கொப்பரைத் தேங்காய் விலை வீழ்ச்சி மற்றும் கரும்பு விலையை டன்னுக்கு ஆயிரம் ரூபாயாக உயர்த்துவது குறித்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, தமிழ்நாட்டில் தேயிலை, கொப்பரைத் தேங்காய்....(குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** தமிழகத்தில் போக்குவரத்துக் கழகங்கள் எல்லாம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் இப்பொழுது எடுப்பது சிறப்புக் கவன ஈர்ப்புத் கொஞ்சம் உட்காருங்கள். நான் இதைப் படிக்கும்போது எழுந்து நின்றால் என்ன அர்த்தம்?

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Zero hour...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதுவும் Zero hour-தான் உட்காருங்கள். தமிழகத்தில் தேயிலை, கொப்பரைத் தேங்காய் விலை வீழ்ச்சி குறித்தும், கரும்புக்கு டன் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாயாக உயர்த்துவது குறித்தும் ஒத்திவைப்புத் தீர்மான அறிவிப்பாக திருவாளர்கள் ஞானசேகரன், எஸ்.வி. திருஞானசம்பந்தம், மு. அப்பாவு, சோ. பாலகிருஷ்ணன், ஜி. பழனிசாமி, டி. சுதர்சனம், டாக்டர் க. கிருஷ்ணசாமி ஆகியோரும், சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்பாக திருவாளர்கள் ஜி.கே. மணி, பி.ஆர். சுந்தரம், லா. சந்தானம், சொ. கருப்பசாமி, இரா. விசுவநாதன், ஐ. கணேசன், கே. சுப்பராயன், சி. வேலாயுதன், டாக்டர் செல்லக்குமார், பா. மு. முபாரக், டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், ஜே. ஹேமச்சந்திரன், டி. மணி ஆகியோரும், கவன ஈர்ப்பு அறிவிப்பாக திருவாளர்கள் சி. ஞானசேகரன், ஐ. கணேசன், பி.ஆர். சுந்தரம், ப. மோகன் கந்தசாமி ஆகியோரும் அறிவிப்புகளைக் கொடுத்திருக்கிறார்கள். இதனை சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரைப் பேச அழைக்கின்றேன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இன்று விவசாயிகள் பல துன்பங்களுக்கும் துயரங்களுக்கும் ஆளாகியிருக்கிறார்கள். குறிப்பாக, நீலகிரி மாவட்டத்தில் தேயிலை விவசாயிகள், 25 ஆயிரம் குடும்பங்கள், இன்று பச்சைத்



2000 நவம்பர் 11] [திரு. சோ. பாலகிருஷ்ணன்]

தேயிலைக்கு விலை இல்லாத காரணத்தால் வறுமையில் வாடிக் கொண்டிருக்கிறார்கள். இதற்காக ஏராளமான போராட்டங்கள் எல்லாம் நடத்தி அரசுக்கு பல கோரிக்கைகள் எல்லாம் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இறக்குமதி செய்யப்படுகின்ற பச்சைத் தேயிலைக்கு 100 சதவீதம் சுங்க வரி விதிக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைத்தோம். அதேபோல, அரசே நேரடியாக தலையிட்டு தேயிலை விவசாயிகளிடமிருந்து ஒரு கிலோவுக்கு 15 ரூபாய்க்குக் குறையாமல் தேயிலையை வாங்க வேண்டுமென்ற கோரிக்கையை வைத்தோம்.

*முற்பகல் 10-35*

கொப்பரைத் தேங்காயைப் பொறுத்தவரை, எங்களுடைய கோரிக்கையை ஏற்று தமிழக அரசே 32 ரூபாய் ஒரு கிலோ என்கிற விலையில் நிர்ணயம் செய்து பல இடங்களிலே வாங்குகிறார்கள். ஆனால், அதிலும் பல குறைபாடுகள், ஊழல்கள் எல்லாம் ஏற்பட்டிருக்கின்றன என்று இன்று பத்திரிகையிலே செய்திகள் வந்து பரவலாகப் பேசப்படுகின்றன. நாங்களும் நேரடியாக விசாரித்த இடங்களில் இந்தக் கொப்பரைத் தேங்காயை 32 ரூபாய்க்கு அரசு வாங்கினாலும்கூட, அது வியாபாரிகளுக்கும், இடைத்தரகர்களுக்கும்தான் போய்ச் சேருகிறதே தவிர, உண்மையான விவசாயிகளுக்குப் போய்ச் சேரவில்லை என்ற ஒரு பெரிய குறைபாடு இருக்கிறது. அதற்காக, கொப்பரையாக வாங்குவதற்குப் பதிலாக, தேங்காயாகவே வாங்குவதற்கு இந்த அரசு ஆணையிடுமானால் விவசாயிகளுக்கு நேரடியாக அந்தப் பணம் போய்ச் சேரும் என்கிற ஒரு கருத்து நம்முடைய விவசாயிகள் மத்தியிலே நிலவுகிறது.

அடுத்தபடியாக, கரும்புக்கு நாங்கள் எல்லாம் பல தடவை கோரிக்கை வைத்து, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் அறிக்கையிலேயே ஒரு டன்னுக்கு ஆயிரம் ரூபாய் தருகிறோம் என்று அறிவித்தபடி இப்போது அறிவித்திருக்கிறார்கள். ஆனால், அவர்கள் அறிவித்தபடி இப்போது அறிவித்திருக்கிறார்கள். ஆனால், அது விவசாயிகளை ஏமாற்றுகின்ற அறிவிப்பாக இருக்கிறதே தவிர உண்மையான அறிவிப்பல்ல. 8.5 சதவீதம் பிழிதிறன் உள்ள கரும்புக்கு ஆயிரம் ரூபாய் என்பதுதான் எங்களுடைய கோரிக்கை. ஆனால், 10 சதவீதம் பிழிதிறன் உள்ள கரும்புக்குத்தான் ஆயிரம் ரூபாய் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்தியாவிலே எங்கேயோ சில இடங்களில் மட்டும்தான் 10 சதவீதம் பிழிதிறன் உள்ள கரும்பு அபூர்வமாகக் கிடைக்கிறது. அதற்கு செங்கரும்பு என்றுகூட ஏதோ ஒரு கருத்தைச்

சொல்கிறார்கள். அப்படிப்பட்ட கரும்புகளில்தான் அதிக பிழிதிறன் இருக்குமே தவிர, சாதாரண விவசாயிகளுக்கு இது எட்டாக் கனியாக இருக்கின்ற காரணத்தினால் 8.5 சதவீதம் பிழிதிறன் உள்ள கரும்புக்கு ஆயிரம் ரூபாய் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கையை இந்த அவையிலே வலியுறுத்த விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, நம்முடைய கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் தீபாவளிக்குக்கூட விவசாயிகளுக்கு பணம் கிடைக்கவில்லை என்று பரவலாகப் பல இடங்களிலிருந்து கோரிக்கைகள் வந்திருக்கின்றன. தனியாரும்கூட, அரசாங்கம் கொடுத்தால் நாங்கள் கொடுக்கிறோம், இந்த விலைக்கு நாங்கள் கொடுக்க முடியாது என்று பல இடங்களில் விவசாயிகளுக்கு பாக்கி வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இதோடு, நெல்லுக்கும் கூடுதலாக ஒரு குவிண்டாலுக்கு 100 ரூபாயாவது கொடுங்கள் என்று பல இடங்களிலே கேட்டிருக்கிறார்கள். கூடுதலாக 100 ரூபாய் நெல்லுக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறோம்.

இதற்கு மேலாக இந்த அவையில் எல்லா எதிர்க்கட்சிகளும் சேர்ந்து நம்முடைய அரசுக்கு ஒரு கோரிக்கை வைத்தோம். விவசாயிகள் கூட்டுறவுக் கடனில் மூழ்கித் தவிக்கிறார்கள். இந்த ஆண்டு தஞ்சாவூரில் ஒரு விவசாயிகூட கூட்டுறவுக் கடன் பெற முடியவில்லை. காரணம், ஏற்கெனவே, எல்லா கூட்டுறவுச் சங்கங்களும் கடனில் மூழ்கிவிட்ட காரணத்தினால் அவர்கள் இந்த ஆண்டு விவசாயத்திற்கு எந்தவிதமான உதவியும் பெற முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இவைற்றையெல்லாம் சென்ற பட்ஜெட் கூட்டத் தொடரில் நாங்கள் எல்லாம் விரிவாக, விளக்கமாகப் பேசி மிகப் பெரிய போராட்டங்கள் எல்லாம் நடத்தி, கடுமையான வெயிலில் நடு ரோட்டில் நின்று, போராட்டம் நடத்தினோம். அதன் பிறகு, மறுநாள், இந்த அவையிலே மறுபடியும் நாங்கள் எழுந்தபோது நம்முடைய முதலமைச்சர் அவர்கள், நீங்கள் எதிர்க்கட்சிக்காரர்கள் எல்லாம் சேர்ந்து ஒரு உருப்படியான கோரிக்கையை என்னிடம் கொடுங்கள், நான் பரிசீலிக்கிறேன் என்று சொன்னார்கள். அதன் அடிப்படையில், நாங்கள் அத்தனைபேரும், இங்கேயிருக்கின்ற எதிர்க்கட்சிகள் எல்லாம் சேர்ந்து, ஒரு நியாயமான, அரசுக்குத் தொல்லை கொடுக்காத வகையில் ஒரு கோரிக்கையை வைத்தோம். அதாவது, நம்முடைய விவசாயிகள் பட்டிருக்கின்ற கடனை, அவர்களுடைய வட்டியையும், தண்ட வட்டியையும், அபராத வட்டியையும் தள்ளுபடி செய்துவிட்டு, அவர்களுடைய அசல்





தொகையை மூன்று தவணைகளில் செலுத்துவதற்கு நீங்கள் உத்தரவிட வேண்டுமென்று கையெழுத்துப்போட்டு, நம்முடைய முதலமைச்சர் அவர்களிடம் கொடுத்தோம். அவர்கள் அதை வாங்கி வைத்துக் கொண்டார்களே தவிர, இதுவரை எந்தவிதமான பதிலும் வரவில்லை. ஆகவே, இந்த நிலைமையில், இன்று தமிழகத்தில் இருக்கின்ற அத்தனை பகுதி விவசாயிகளும் இப்போது இந்த அரசுமீது மிகுந்த அதிருப்தியோடு, கவலையோடு இருக்கின்றார்கள் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். இன்று சட்டமன்றத்தில் நம்முடைய 4½ ஆண்டுக் காலம் முடிந்து, தேர்தலைச் சந்திக்கின்ற இந்த நேரத்திலாவது, பெருவாரியான விவசாயிகளுடைய வாக்குகளைப் பெற்ற இந்த அரசு, அவர்களுக்கு ஒரு நல்ல செய்தியை....

*முற்பகல் 10-40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது கடைசிக் கூட்டம் மாதிரி பேசக் கூடாது. உறுதியாக, சனவரியில் கூட்டம் இருக்கிறது.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** நம்முடைய அரசு விவசாயிகளுடைய உள்ளத்தில் மகிழ்ச்சி ஏற்படுத்துகின்ற வகையில் நல்ல அறிவிப்புகளை அறிவித்து நான் இங்கே சொன்ன கோரிக்கைகளை எல்லாம் நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய அமைச்சரவைக் கூட்டத்தில் ஒரு தீர்மானம் நிறைவேற்றியதாக பத்திரிகையில் பார்த்தேன். விவசாயிகள் கூட்டுறவுக் கடன் ரூ. 25 ஆயிரம் பெற்றவர்களுக்கு வட்டி 12½ சதவீதத்திலிருந்து 13 சதவீதமாக ஏற்றியதையும், ரூ. 25 ஆயிரத்துக்கு மேல் ரூ. 50 ஆயிரத்துக்குள் கடன் பெற்றவர்களுக்கு வட்டி 15 சதவீதத்திலிருந்து 16 சதவீதமாக ஏற்றியதையும் நாங்கள் குறைத்துவிட்டோம் என்று பத்திரிக்கையில் செய்தி பார்த்தேன். நான் நம்முடைய கூட்டுறவுச் சங்கங்களிடம் இதுபற்றி கேட்டபோது, அவர்கள் சொன்னார்கள், இப்படி ஒரு சட்டமே வரவில்லை; நாங்கள் 12 சதவீதம்தான் வசூலித்துக் கொண்டிருக்கிறோம். அதேபோல் ரூ. 50 ஆயிரம் வரை 15 சதவீதம்தான் வசூலித்துக் கொண்டு இருக்கிறோம். ஆனால், இந்த சதவீத உயர்வை பத்திரிகையிலேதான் நாங்களும் பார்த்தோம் என்று சொன்னார்கள். அமைச்சரவையில் இப்படி ஒரு தீர்மானம் வந்திருக்கிறதே; இது விவசாயிகளுக்கு நாங்கள் இந்த மாதிரி சட்டம் போட்டோம்; அதை நிறைவேற்ற முடியவில்லை; திருப்பி வாங்கிக் கொண்டோம் என்று சொன்னால் பரவாயில்லை. ஆனால், நாங்கள் வசூலித்துக் கொண்டிருப்பதைக் குறைத்துக் கொண்டிருக்கிறோம் என்று

சொன்னால், இது இந்த நாட்டில் விவசாயிகள் என்ன ஏமாளிகளா? அவர்கள் என்ன பூ சுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்று நினைக்கிறீர்களா? போன்ற தவறான காரியங்களை நீங்கள் செய்வது, மிகத் தவறானது, ஆகவே, இந்தக் கூட்டுறவுக் கடன் என்று சொன்ன உடனே, நீங்கள் சொல்வீர்கள், நபார்டு நிறுவனத்திலிருந்து எங்களுக்குக் கடுமையான உத்தரவு வந்திருக்கிறது என்று சொல்வீர்கள். நபார்டு என்ன அமெரிக்காவிலா இருக்கிறது? நம்முடைய நாட்டிலேதான் நபார்டு இருக்கிறது; ரிசர்வ் வங்கியினுடைய பொறுப்பிலேதான் அது இருக்கிறது. மத்திய அரசாங்கம் உங்களுடைய கன்ட்ரோலில்தான் இருக்கிறது. ஆகவே, அவர்களை எல்லாம் கலந்து பேசி விவசாயிகளுடைய மொத்த சுமையையும் குறைக்கின்ற வகையில் அசலை மட்டும் வசூல் செய்வதற்கு, அதையும் தவணை முறையில் வசூல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளினுடைய முதுகெலும்பாக நம்முடைய நாடு இருக்கிறது. (குறுக்கீடு) விவசாயிகள் நம்முடைய நாட்டின் முதுகெலும்பாக இருக்கின்றனர். தமிழகத்தில் உள்ள தென்னை உற்பத்தியாளர்கள் பல்வேறு சோதனைக்கு உள்ளாகி இருக்கிறார்கள். இந்த மாமன்றத்திலே தென்னை விவசாயிகளின் பிரச்சினைகளுக்காக பல்வேறு கவன ஈர்ப்பு அறிவிப்பு மூலமாக அரசுக்கும் வேளாண்மைத் துறைக்கும் சில வேண்டுகோள்கள் வைக்கப்பட்டன. கடந்த பல ஆண்டு காலமாக, தேங்காயில் நோய் ஏற்பட்டு, விவசாயிகள் பெரிய அளவுக்கு பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். தேங்காயில் வரும் சிலந்தி பூச்சியை இன்னும் தமிழகத்தில் கட்டுப்படுத்த முடியவில்லை. வேளாண்மைத் துறையிலே ஆராய்ச்சி செய்து, சரியான முறையிலே அந்த விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்க வேளாண்மைத் துறை தவறி இருக்கிறது. இப்போது தேங்காயின் விலை படுமோசமாகக் குறைந்து இருக்கிறது. அதற்கு அடிப்படைக் காரணம் என்னவென்று சொன்னால், புதிய பொருளாதாரக் கொள்கையால், இறக்குமதிக் கொள்கையால், விலையில் பெரிய வீழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது. எல்லா விவசாயிகளும் தங்களுடைய உற்பத்திக்கு ஏற்ற வகையில் விலை கிடைக்காமல் இப்போது பாதிப்புக்கு உள்ளாகி இருக்கிறார்கள். இறக்குமதிக் கொள்கையால் இப்போது தேங்காய் விவசாயிகள் பெருமளவிற்கு பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, இதை உணர்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழக அரசு இந்தியாவில் இருக்கிற பல்வேறு மாநிலங்களை உதாரணம்





காட்டி, அங்கே விலை கூடி இருக்கிறது; இங்கே குறைந்திருக்கிறது; அங்கே விலை ஏற்றம் இருக்கிறது என்றெல்லாம் உதாரணங்களைக் காட்டக்கூடிய அளவிற்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரும் வேளாண்மைத் துறை அமைச்சரும் பதில் அளிக்கிற பழக்கங்கள் நம்முடைய அவையிலே ஏற்பட்டிருக்கிறது. எனவே, அதை நீங்கள் பின்பற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்போது தேங்காய் உற்பத்தியாளர்களுடைய பாதிப்பை உணர்ந்து பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கேரளாவை எடுத்துக்கொண்டோம் என்று சொன்னால், கேரளாவிலே 3 தினங்களாக தேங்காய்களை நேரடியாகக் கொள்முதல் செய்ய வேண்டுமென்று சொல்லி, விலை நிர்ணயிக்கப்பட்டு இருக்கிறது. 4 ரூபாய் 50 பைசா, 3 ரூபாய் 75 பைசா, 5 ரூபாய் 25 பைசா என்று சொல்லி இப்போது 3 தரமாகப் பிரித்து, தேங்காயை விவசாயிகளிடமிருந்து நேரடியாகக் கொள்முதல் செய்ய வேண்டுமென்று ஆணையிட்டு கேரள அரசு கொள்முதல் செய்து கொண்டிருக்கிறது. அதை தமிழக அரசு பின்பற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-45*

தேங்காய் கொப்பரைகளை இப்போது கொள்முதல் செய்கிறார்கள், 13 ரூபாய் 50 பைசாவுக்கு தேங்காய் கொப்பரை கொள்முதல் செய்யப்படுகிறது. ஆனால் தேங்காய் விவசாயிகளிடமிருந்து இந்தத் தேங்காய் கொப்பரையை யாரும் கொள்முதல் செய்வதில்லை. அவர்களில் யாரும் இதற்கு ஏஜென்சி எடுக்க முடியவில்லை. யாரோ ஒரு வியாபாரி, வழக்கமான வியாபாரிகள் ஏஜென்சி எடுத்துக்கொண்டு கொப்பரைகள் தரங்கெட்டுப் போனது என்று சொல்லி 13 ரூபாய்க்கு, 15 ரூபாய்க்கு மேலே வாங்குவதில்லை. தேங்காய் கொப்பரையைப் பாதுகாக்க வேண்டுமென்றால் அது வெள்ளையாக இருக்க வேண்டும். கறுப்புக்கலராகக் கூடாது; அதில் பூசணம் பிடிக்கக்கூடாது, இப்படியெல்லாம் விதிமுறைகளை வைத்து, கொப்பரைகளைக் கொள்முதல் செய்யக்கூடிய சென்ட்டரிலே பார்த்தீர்களென்றால், 15 நாட்கள், 20 நாட்கள் விவசாயிகள் வேதனையோடு இருக்கின்றார்கள். ஆகவே, கேரளாவைப் போல உடனடியாக இங்கேயும் தேங்காய்க்கு விலை நிர்ணயம் செய்ய வேண்டும். கொப்பரை கொள்முதலிலே நடக்கின்ற தவறுகளை, முறைகேடுகளை உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டும். எங்கே தேங்காய் உற்பத்தியாகிறதோ அங்கே அது கொள்முதல் செய்யப்பட வேண்டும்.

உதாரணத்திற்கு என்னுடைய தொகுதியைக்கூட

எடுத்துக்கொள்ளலாம். முத்துப்பேட்டையிலே தேங்காய் உற்பத்தி இருக்கிறது. அபிராமபட்டணத்திலே தேங்காய் உற்பத்தி இருக்கிறது என்று சொன்னால், கொள்முதல் அங்கே இல்லை. தேங்காயே விளையாத இடத்திலே ஒரு ஏஜென்ட் எடுத்துக்கொண்டு கொள்முதல் செய்து கொண்டிருக்கிறார்கள். இது என்ன முறை? எந்த விவசாயிகளுக்காக நிற்கிறீர்கள்? இவற்றையெல்லாம் அரசு பரிசிலிக்க வேண்டும். தேங்காயை கேரளாவைப் போன்று கொள்முதல் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டாவதாக, இதே புதிய பொருளாதாரக் கொள்கைதான் எந்த அளவிற்கு இப்போது இந்தியாவைப் பாதித்திருக்கிறது, விவசாயிகளைப் பாதித்திருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். உதகமண்டலத்திலே உள்ள விவசாயிகளுக்கு 3 ரூபாய் 75 பைசா, 4 ரூபாய் 50 பைசாவுக்கு மேலே தேயிலைக்கு விலையே இல்லை. சில பேர் பச்சைத் தேயிலை, பசுந்தேயிலைக்கு விலை கிடைக்க வேண்டுமென்பதற்காக ஒரு கோரிக்கையை கலெக்டரிடத்திலே கொடுக்கிறார்கள். விவசாயிகள் ஒன்று கூடிப் பேசுகிறார்கள். பேசுகிற இடத்தில் கடந்த ஜூன் மாதம் 21, 22 ஆம் தேதிகளில், அங்கே காவல் துறையினர் 'உங்களுடைய கோரிக்கைகளை எடுத்து வைக்க, உங்கள் எல்லோரையும் கலெக்டரிடம் அழைத்துப் போகிறேன், ஆர்.டி.ஓ.விடம் அழைத்துப் போகிறேன்' என்று சொல்லி பெண்கள் உட்பட இந்த விவசாயிகளை ரோட்டிலே புதருக்குப் பக்கத்திலே பாதாளமான பள்ளத்திலே வைத்து அடித்து, நிர்வாணமாக்கி, மானபங்கப்படுத்தப்பட்டு, ஜட்டியோடு நடக்கவிட்ட கொடுமை வேறு எங்கேயும் கிடையாது. இந்தத் தடவை நடந்திருக்கிறது. இதுவரை இந்தத் தேயிலை விவசாயிகள் நடத்திய போராட்டத்தில் இப்படி நடந்ததாக வரலாறே கிடையாது. கேட்டது என்ன? பச்சைத் தேயிலைக்கு விலை கொடுங்கள் என்று கேட்டார்கள். தவறா இது? தன்னுடைய கோரிக்கைகளை வைக்கக் கூடாதா? அரசாங்கம் வேண்டுமானால் அவர்களோடு பேசுங்கள். மத்திய அரசு சம்பந்தப்பட்டிருக்கிற பிரச்சினை இது. மத்திய அமைச்சர் அதற்கான விலையை நிர்ணயிப்பதற்குப் பல முறை வாக்குறுதி கொடுத்துள்ளார்கள். அவர்களை அழைத்துப் பேசுவதற்கு, எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. என்ன தீர்வு? 15 ரூபாய், 10 ரூபாய்க்கு விற்றுக்கொண்டிருந்த தேயிலை வரலாறு காணாத வகையில், இந்த ஓராண்டு மட்டும்தான் 4 ரூபாய் 50 பைசாவுக்கு மேலே அதனுடைய விலை ஏறவே இல்லை. என்ன காரணம் இதற்கு? இதிலே முறைகேடாக காவல் துறை நடந்துகொண்டிருக்கிறது. அதற்குரிய விசாரணை இன்னும்





நடைபெறவில்லை. வீட்டிலிருந்த பெண்களை எல்லாம் அழைத்துச் சென்று ஜெயிலில் அடைத்துவிட்டார்கள். சட்டமன்றக் குழுவின் சார்பாக ஜூன் 21 மற்றும் 22 ஆம் நாட்களில் சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் போய்ப் பார்த்தோம். மிகவும் கொடுமையான நிகழ்ச்சி. அதை ஆய்வுசெய்து அரசுக்கு ஒரு அறிக்கையைச் சமர்ப்பிக்கிறோம். அதன்மேல் உரிய நடவடிக்கை எடுங்கள்; விசாரணை நடத்துங்கள்; இப்படி முறைகேடாக காவல் துறையினர் நடந்திருக்கிறார்கள். பச்சைத் தேயிலைக்கு விலை கேட்டு மனு கொடுக்கக்கூட மாவட்ட ஆட்சியரிடத்திலே போகக் கூடாதா? இப்படிப்பட்ட கொடுமைகள் அங்கே நிகழ்ந்திருக்கிறது என்று சொல்லிக்கொள்கிறேன். இப்போது அங்கே தேயிலைக்குச் சரியான விலை கிடைக்கவில்லை. இன்றுகூட 4.60 ரூபாய்க்கு மேலே விலை கிடையாது. எப்படி உற்பத்தி செய்யமுடியும்? எடுக்கிற கூலிகூட கொடுக்க முடியாது. இது புதிய பொருளாதாரக் கொள்கை, இறக்குமதிக் கொள்கையின் விளைவாக இன்றையதினத்திலே ஏற்பட்டிருக்கிறது. இதை உடனடியாகக் கவனித்து, தேயிலைக்கு விலை நிர்ணயம் செய்ய வேண்டுமென்று நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டது போன்று, சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரிலே நாங்கள் எல்லாம் தொடர்ந்து கேட்டோம். விவசாயிகள் தொடர்ந்து வெள்ளம், வறட்சி, போன்ற பல இயற்கைச் சீற்றத்தால், காவிரி நதி நீர்ப் பிரச்சினைக்கு இடைக்காலத் தீர்வு ஏற்படாததன் காரணமாக 1974 ஆம் ஆண்டு முதற்கொண்டு, இப்போது 2000ஆம் ஆண்டு வரை பல்வேறு பாதிப்புகளுக்கு உள்ளாகியிருக்கின்றார்கள். அவர்கள் பட்ட கடனை, கூட்டுறவு நாணயச் சங்கங்கள் பெற்ற கடனைத் திருப்பி, நாணயமாகச் செலுத்த முடியாத அளவிற்கு விவசாயிகள் இருந்துகொண்டிருக்கிறார்கள். பலமுறை பேசினோம். மாண்புமிகு முதலமைச்சர் 'நபார்டு' வங்கி ஏற்றுக்கொள்ளவில்லை; முன்னாள் முதலமைச்சர் "கடனைத் தள்ளுபடி செய்ய மாட்டேன், வட்டியைத் தள்ளுபடி செய்ய மாட்டேன்" என்று சொல்லி ஒப்பந்தம் செய்திருக்கிறார்கள்' என்றெல்லாம் சொன்னார்கள்.

அதற்குப் பின்னால் நாடாளுமன்றத்திலே நடந்த விவாதத்திலே மத்திய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களே 'எந்த அரசிடமிருந்தும் இந்த மாதிரி தாக்கீது வரவில்லை, வட்டியோ, கடனோ தள்ளுபடி செய்ய வேண்டுமென்று எந்த மாநிலமும் தீர்மானம் போட்டு அனுப்பவில்லை' என்று நாடாளுமன்றத்தில் அறிவித்தார்கள். மத்திய அரசானது உங்களோடு சேர்ந்து அமைந்துள்ள கூட்டணி அரசு.

உங்களுடைய மந்திரி சபையிலே இருக்கிற வேளாண்மைத் துறை அமைச்சர்தான் இதைச் சொல்கிறார். ஏன் அதற்கான ஒரு தீர்மானத்தை மாமன்றத்திலே போட்டு அனுப்பக் கூடாது? அப்படி அனுப்பியிருந்தால் விவசாயிகள் பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வு கண்டிருக்க முடியுமல்லவா? அன்றைக்குக் கூட நானும், எதிர்க்கட்சித் தலைவரும், மற்றவர்களும் இருந்தபோது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதற்கு உங்கள் கட்சியின் சார்பாகத் தீர்வு காண்பதற்கு நல்ல ஆலோசனை கூறுங்கள் என்று சொன்னார்கள். அப்போதுதான் சொன்னோம், அந்த வட்டியையும், அபராத வட்டியையும் முழுமையாகத் தள்ளுபடி செய்து அசலை மட்டும் மூன்றாண்டு காலத் தவணையிலே கட்டச் சொல்லுங்கள், நாங்கள் கட்டிவிடுகிறோம் என்று விவசாயிகளிடம் கலந்து பேசி சொன்னோம். இதுவரையிலே—மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விவசாயிகளை அழைத்துப் பேசுவதாகச் சொன்னார்கள்—எந்தப் பேச்சும் இல்லை, என்ன முறை?

*முற்பகல் 10-50*

விவசாயிகள் இப்போது உற்பத்தி செய்கின்ற பொருள்களுக்கு நியாயமான விலை கிடைக்கிறதா? இல்லை. நெல்லுக்கு நல்ல விலை கிடைக்கிறதா? இல்லை. எல்லா விலைவாசியும் ஏறிப்போயிருக்கிறது. மத்திய அரசு உரத்தினுடைய விலையை மூன்று முறை உயர்த்தியிருக்கிறது. டீசல் விலையை மூன்று முறை உயர்த்தியிருக்கிறது. ஆக டீசல் விலை உயர்வு மூலமாகவும் உர விலை உயர்வு மூலமாகவும் இப்போது எல்லா விலைவாசியும் உயர்ந்திருக்கிறது. நெல் உற்பத்திக்குத் தகுந்த விலை கிடைக்க முடியாத மோசமான நிலைமை இருக்கிறது. விவசாயிகளுடைய குடும்பம் என்பது, வாழ்க்கை என்பது இப்போது மிகவும் நலிந்துபோன நிலைமையில் இருந்துகொண்டிருக்கிறது. ஆகையினால் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டது போன்று நீங்கள் அந்த வட்டியையாவது முழுமையாகத் தள்ளுபடி செய்ய வேண்டும். அபராத வட்டியைத் தள்ளுபடி செய்ய வேண்டும், அசலை மட்டும் மூன்றாண்டுகளில் கட்டுவதற்கு அரசு உத்தரவிட வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோன்றுதான், இப்போது இருக்கக்கூடிய கரும்புக்கு விலை, 8.5 சதவீதம் பிழிதிறன் கொண்டது தானே தமிழ்நாட்டில் விளைய முடியும். பீகார், உத்தரபிரதேசம், மத்திய பிரதேசம் போன்ற குளிர்ப் பிரதேசங்களில்தான் 10.5% பிழிதிறன் கொண்ட கரும்பு விளைய



முடியும். தமிழ்நாட்டிலே விளையவே முடியாது. காரணம் என்னவென்று கேட்டால், இங்கே வெப்பம் அதிகமாக இருக்கிற காரணத்தால் விளையவே விளையாது, அப்படி விளைந்ததாக வரலாறே இல்லை.

***மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்தில் 11.5 சதவீதம் வரையில் பிழிதிறன் கொண்ட கரும்பு விளைந்து கொண்டிருக்கிறது. அதுபோல இரண்டு கூட்டுறவு ஆலைகளுக்கு 10%, 11% வரையில் பிழிதிறன் கொண்ட கரும்பு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி. பழனிசாமி:** மூன்று ஆலைகளுக்கு 10 சதவீதத்திற்கு மேல் இனிப்புச் சத்துள்ள கரும்பு விளைந்து வருவதாகக் கூறியிருக்கிறார்கள். ஆகையினால் மற்ற ஆலைகளுக்கு அப்படி வருவதில்லை. அதற்கு சாத்தியங்களும் கிடையாது. ஏனென்றால் இறைவைப் பாசனங்கள் அதிகமாக வைத்து உற்பத்தி நடைபெறுகிறது. அதனால் பயிர்கள் காய்ந்து காய்ந்து திரும்பத் தண்ணீர் வைக்கிற காரணத்தால், கரும்பின் சத்துக்கள் குறைவதற்கான வாய்ப்புகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆகவே நீங்கள் விவசாயிகளை ஏமாற்றுகின்ற வகையில் அப்படிப்பட்ட உத்தரவை 10.5% பிழிதிறன் கொண்ட கரும்புக்குத்தான் டன் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் கொடுக்கப்படும் என்று சொல்வது என்பது விவசாயிகளை ஏமாற்றுவதாகும். ஆகையினால் அரசு இதைப் பரிசீலனை செய்ய வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் இது இறுதிக் கூட்டம் அல்ல, மீண்டும் ஜனவரி மாதம் கூட்டம் நடக்கும் என்று இப்போது சொன்னார்கள், உண்மையிலேயே நாங்கள் வரவேற்கிறோம். வேண்டாம் என்று சொல்லவில்லை. இருந்தாலும் இதை இறுதிக் கூட்டமாக, கடைசிக் கூட்டமாக தமிழ்நாட்டு மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள், இதில் நல்ல அறிவிப்பு வரும் என்று. அந்த வகையிலே கரும்புக்கு டன் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் விலை நிர்ணயம் செய்து அறிவிக்க வேண்டுமென்று கேட்டு, இது சம்பந்தமாக அமைச்சர் அவர்களுடைய பதிலை எதிர்பார்க்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சொ. கருப்பசாமி.

***திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் தென்னை மரங்களுக்கு ஏற்பட்டுள்ள மர்ம நோய் காரணமாக தென்னை விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். தேங்காய் உற்பத்தியில் விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள நட்டத்தை

ஈடுகட்டும் வகையில் மத்திய அரசு கொப்பரைத் தேங்காய் கொள்முதலில் அளித்த ஆதரவு, கொப்பரைத் தேங்காய் கொள்முதலில் அளித்த இந்த அதிக விலையில் ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் மிகுந்த முறைகேடுகளைச் செய்து பல கோடி ரூபாய் ஊழல் செய்துள்ளார்கள். குறிப்பாக கூட்டுறவு வங்கி மூலமாக கொப்பரைத் தேங்காய் கொள்முதல் செய்வதாகப் பதிவு செய்துகொண்டு விவசாயிகளுக்கு, குறிப்பாக கொப்பரைத் தேங்காய் 1 கிலோவிற்கு ரூ. 32.50 காசு என்று நிர்ணயம் செய்யப்பட்டாலும் விவசாயிகளுக்கு முறையாக 24 ரூபாய், 25 ரூபாய் வரைதான் கொடுக்கப்படுகிறது. குறிப்பாக விவசாயிகள் பயன்பெறவில்லை. வியாபாரிகள்தான் பயன்பெற்று வருகிறார்கள். இதைக் கண்டித்து, எங்களுடைய கழகப் பொதுச் செயலாளர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அறிக்கை விட்டிருக்கிறார்கள். இந்த முறைகேடுகள் அரசன் முதல் அடுப்படி வரை சென்றிருக்கிறது. காரணம் தேங்காய் வைத்து அரைத்து சட்டினி வைக்கக்கூடிய பெண்கள் முதல் இந்த கொப்பரைத் தேங்காய் முறைகேடுகளை விவரமாகத் தெரிந்து வைத்திருக்கிறார்கள். ஆகவே இப்பேர்ப்பட்ட முறைகேடுகளையெல்லாம் வெளியில் கொண்டுவர பணியில் இருக்கிற உயர்நீதிமன்ற நீதிபதிகளை வைத்து நீதி விசாரணை வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-55*

அடுத்தபடியாக, மத்திய அரசின் தவறான பொருளாதாரக் கொள்கையினாலும், வெளிநாடுகளிலிருந்து தேயிலை இறக்குமதி செய்யப்படுவதாலும் இங்கு உற்பத்தி செய்கின்ற பச்சைத் தேயிலையின் விலை மிகவும் வீழ்ச்சியடைந்துவிட்டதாலும் தேயிலை விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். குறிப்பாக, நீலகிரி மாவட்டத்தில் 6 இலட்சம் தேயிலை விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். நியாயமான விலை கேட்டு, முறையாக போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் செய்தாலும் இந்த அரசு காவல் துறையினரை வைத்து அடி அடி என்று அடித்து வழக்கும் போட்டு விவசாயிகளை பல இன்னல்களுக்கு ஆளாக்குகிறது. ஆனால், ஆளும்கட்சியைச் சார்ந்தவர்கள், ஆர்ப்பாட்டம், ஊர்வலம் செய்தால் ஒரு நீதி, எதிர்க்கட்சிக்கு ஒரு நீதியா? நியாயமான முறையில் தொழிலாளர்கள், விவசாயிகள் போராட்டம் செய்தால், ஆர்ப்பாட்டம் செய்தால் வழக்குகளைப் போட்டு அவர்களை மிகுந்த பாதிப்புக்கு உள்ளாக்குகிறது. முறையாக, தேயிலை விவசாயிகளின் குடும்பங்களைக் காப்பாற்றும் வகையில், பச்சைத் தேயிலைக்கு உரிய விலை நிர்ணயம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





அதைப்போல கரும்பு விவசாயிகள். தமிழ்நாட்டில் கரும்பு எந்த அளவுக்கு உற்பத்தி செய்யப்படுகிறது என்பதை நன்கு அறிந்திருக்கின்ற இந்த அரசு கரும்புக்கு டன் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் என்று போலி விளம்பரம் செய்து நாடகமாடிக்கொண்டிருக்கிறது. விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகக்கூடிய விலை கிடைக்கவில்லை. குறிப்பாக, விவசாயிகள் ஆலையில் மாட்டிக்கொண்ட கரும்பைப்போல சிக்கித் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். 10 சதவீதம் பிழிதிறன் கொண்ட கரும்புக்கு ஆயிரம் ரூபாய் என்பதை மாற்றி, தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற அனைத்து ரக கரும்புக்கும் டன் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கரும்பு விவசாயிகளுக்கு ஆலைகள் வழங்க வேண்டிய நிலுவைத் தொகையை, பாக்கித் தொகையை உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல தென்மாவட்டங்களில், குறிப்பாக நெல்லை மாவட்டத்தில் இப்போது மழை பொய்த்ததன் காரணமாக விவசாயிகள் பல பேர் கேரளாவிற்குப் பிழைப்பிற்காகச் சென்றுவிட்டார்கள். வாக்காளர் அடையாள அட்டை எடுத்துக் கொண்டிருக்கின்ற இந்தச் சூழ்நிலையில் விவசாயிகள் மிகவும் கஷ்டத்தால் பாதிப்புக்கு உள்ளாகிறார்கள். இந்நிலையில் விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற பொருட்களுக்கு விலை நிர்ணயம் செய்யப்பட வேண்டும். குறிப்பாக நெல் விவசாயிகள், வேளாண்மைத் துறையின் மூலமாக வழங்கப்படுகின்ற விதைகளை வாங்கச் சென்றால், அங்கே இருக்கின்ற வேளாண்மைத் துறை அதிகாரிகள் அவர்களை மிகவும் கேலி செய்கின்றார்கள். சங்கரன்கோயிலைச் சார்ந்த சுப்பையாகண்ணு என்ற ஒரு விவசாயி வேளாண்மைத் துறையில் நெல் விதை வாங்கச் சென்றபோது ‘நெல் விதையும் இல்லை, கில் விதையும் இல்லை’ என்று ஏளனமாகப் பேசி, அவர் வருத்தப்பட்டு, விவசாயிகளின் மூலமாக ஒரு போராட்டத்தைச் செய்து, என்னிடத்திலே தகவல் சொல்லி விவசாயத் துறை இணை இயக்குநரிடம் முறையாக புகார் செய்யப்பட்டு இதுவரையில் எந்த நடவடிக்கையும் இல்லை. அந்த அளவுக்கு விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

அதேபோல, வெங்காயத்தை உற்பத்தி செய்கின்ற விவசாயிகள், அதை உற்பத்தி செய்வதற்கு, நடவு செய்வதற்கு, ஒரு கிலோ வெங்காயத்தை 20 ரூபாய் விலை கொடுத்து வாங்கி வருகிறார்கள். ஆனால் உற்பத்தி செய்து அதை விற்கும்போது ஒரு கிலோவிற்கு

இரண்டு ரூபாய் தான் கிடைக்கிறது. இதற்கு என்ன காரணம்? விவசாயிகள்தான் பாதிக்கப்படுகிறார்கள். பயிர்களுக்கு வேண்டிய பூச்சி மருந்தை முறையாக வாங்கித் தெளிக்கும்போது, அந்தப் பூச்சிகள்தான் சிறப்பாக வளர்கின்றன; நோய்கள் கட்டுப்படுவதில்லை. காரணம் அந்த மருந்துகள் எல்லாம் பழைய மருந்துகள். காலாவதியான தேதியில் உள்ள மருந்துகளை மாற்றாமல் தொடர்ந்து பழைய மருந்துகள் விவசாயிகளுக்குக் கொடுக்கப்படுவதால் காலாவதியானதன் காரணமாக, பூச்சிமருந்தால் எந்தவித பலனும் இல்லாமல் விவசாயிகள் மீண்டும் பாதிப்புக்கு ஆளாகிறார்கள். ஆகவே, இப்படிப்பட்ட நிலையில் விவசாயிகள் கஷ்டப்படுவதால் விவசாயிகள் பட்ட அனைத்துக் கடன்களையும் இரத்து செய்ய வேண்டும், இல்லாவிட்டால் விவசாயிகள் வாங்கிய கடனுக்கு வட்டியையாவது முழுமையாக இரத்து செய்ய வேண்டுமென்று விவசாயிகளின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன். இந்த நிலைமை நீடிக்குமானால், கண்டிப்பாக அடுத்த கால கட்டத்தில் வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் விவசாயிகள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்குத்தான் வாக்குகளை அளிப்பார்கள். மக்களும், விவசாயிகளும் அதற்குத் தயாராகிவிட்டார்கள் என்பதைச் சொல்லி அமர்கிறேன், வணக்கம்.

*முற்பகல் 11-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே கவன ஈர்ப்புத் தீர்மானத்திலே பேசிய நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், அதேபோல என்னுடைய அருமை அண்ணன் பழனிசாமி அவர்களும் விவாதத்தை ஆரம்பித்து வைத்தார்கள். ஒரு மனிதனுக்கு முதுகெலும்பு எவ்வளவு முக்கியமோ, ஒரு வண்டிக்கு அச்சாணி எவ்வளவு முக்கியமோ அதுபோல, ஒரு நாட்டிற்கு விவசாயிகள் மிகமிக முக்கியம். ஒரு நாடு முன்னுக்கு வரவேண்டுமானால், கிராமங்கள் முன்னுக்கு வரவேண்டும்; கிராமங்கள் முன்னுக்கு வரவேண்டுமானால், அங்கேயிருக்கக்கூடிய விவசாயிகள் முன்னுக்கு வரவேண்டும்; விவசாயிகள் நலிந்துவிட்டால் நாடு நலிந்துவிடும்; தெரிந்துகொள்ளுங்கள். விவசாயிகள் சோர்ந்துவிட்டால் நாடு சோர்ந்துவிடும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைத் தலைவரைப் பார்த்துப் பயமுறுத்துகிறீர்களே, நீங்கள், நானும் ஒரு விவசாயிதான்; பேசுங்கள்.





**திரு. ஐ. கணேசன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் எங்களைவிடப் பெரிய விவசாயி. சிறிய விவசாயி அல்ல; பெரிய விவசாயி. உங்களுக்கு விவசாயிகளுடைய அன்றாடப் பிரச்சினைகள் மிகத் தெளிவாகத் தெரியும். ஏன், இந்தப் பொறுப்பை ஏற்றிருக்கக்கூடிய அமைச்சர் அவர்களும் ஒரு விவசாயிதான். அதுவும் எங்களுக்குத் தெரியும். ஆனால், அவர்கள் விவசாயம் செய்ய உள்ளே வருவதில்லை. அதுதான் வேதனை. காரணம், அவர்களுடைய வேலைப்பளு அப்படி.

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ. கணேசன் அவர்கள் சொன்னதைப்போல, நான் விவசாயிதான். இன்னும் சொல்லப்போனால், பண்ணை வீட்டிலேயே குடியிருக்கின்றேன். ஆகவே, அவரைவிட எனக்கு விவசாயம் அதிகம் தெரியும் என்று நான் அவரைத் தாழ்த்திப் பேச விரும்பவில்லை. விவசாயம் எனக்கு நன்றாகத் தெரியும்.

**திரு. ஐ. கணேசன்:** கொல்லன் தெருவிலே ஊசி விற்பதைப்போல இந்தக் கதை இருக்கிறது. அவர் என்னைத் தாழ்த்தவில்லை; விவசாயிகளை மேம்படுத்த வேண்டுமென்று சொல்கிறேன். விவசாயிகளினுடைய உணர்வுகளைப் புரிந்தவர் நம்முடைய முதல்வர் அவர்கள். தேயிலைப் பிரச்சினையின்போது, முதல்வர் அவர்கள் இந்த நாட்டிலே இருக்கக்கூடிய 6 கோடி மக்களுடைய உள்ளங்களைக் கவரக்கூடிய திட்டங்களை அறிவித்தார்கள். தேயிலைத் தொழிலிலே ஈடுபட்டிருக்கக்கூடிய 25,000 ஏழை விவசாயிகள் படக்கூடிய துயரைப் போக்க, வரியை 8 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாகக் குறைத்துக் காட்டினார்கள். அதேபோல, ஏற்றுமதிக்கென்றிருந்த கிலோ ஒன்றிற்கு இரண்டு ரூபாய் வரியை இரத்து செய்ய முயற்சி எடுத்துக் கொண்டார்கள். மத்திய அமைச்சர் திரு. மாறனிடத்திலே அணுகி, 4 சதவிகிதமாக இருந்த வரியை 2 சதவிகிதமாகக் குறைத்தார்கள். அதுமட்டுமல்ல, திரு. மாறன் அவர்கள் இன்று உடல்நிலை சரியில்லாதபோதிலும், நம்முடைய முதல்வர் அவர்கள் மிக வருத்தத்தோடு இருக்கக்கூடிய காரணத்தினால், இந்த ஏழையெளிய விவசாயிகளுடைய பிரச்சினைகளைத் தயவுசெய்து, குறிப்பாக தேயிலை விவசாயிகளின் பிரச்சினைகளை நீங்கள் மத்திய அரசிடம் எடுத்துச் சொல்ல வேண்டும்; வாதிட வேண்டும். இறக்குமதித் தேயிலைக்கு 15 சதவிகிதத்திலிருந்து 35 சதவிகிதமாக நீங்கள் வரியை உயர்த்தியிருக்கிறீர்கள். அப்படிச் செய்தும், இந்தத் தேயிலைக்கு விலை

கிடைக்கவில்லை. இந்தத் தேயிலைக்கு ஏன் விலை கிடைக்கவில்லை என்று, உண்மையிலேயே பச்சைத் தேயிலைத் தொழிலாளர்களெல்லாம் துடித்துத் கொண்டிருக்கிறார்கள். அருமை பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக அரசுக்கு நான் தெரியப்படுத்திக் கொள்வதெல்லாம் இரண்டு ரூபாய், இரண்டரை ரூபாய்க்குக் கீழாக பச்சைத் தேயிலை விற்கக்கூடிய ஒரு கொடூரமான நிகழ்ச்சி, நாலரை ரூபாய்க்கு விற்கக்கூடிய ஒரு கொடூரமான நிகழ்ச்சி தமிழ்நாட்டிலே இருக்கிறது.

*முற்பகல் 11-05*

அதுமட்டுமல்ல; தேங்காய் உற்பத்தியைப்பற்றி. அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். சங்ககிரி பகுதியில் தேங்காய்க்கு என்றே ஒரு சந்தை இருக்கிறது. சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமைகளில் அங்கே தேங்காய் சந்தை நடைபெறுகிறது. அங்கே 10 தேங்காய்களைக் கூறுகட்டி விற்கிறார்களய்யா, 5 ரூபாய்க்கு, 10 தேங்காய். ஆனால், எண்ணெய் விலை குறையவில்லை. விவசாயி உருப்படுவானா? இதற்கு மாற்று வழி என்ன? நாம் அதனைக் கண்டறிய வேண்டாமா? 10 தேங்காய் 5 ரூபாய் என்றால், அவன் எப்படி மரத்திலே ஏறி, பறித்து, கொண்டுவந்து, மட்டையை உரித்து, சேர்த்து, சந்தைக்குத் தூக்கிக் கொண்டுவந்து விற்கிறான் என்றால், அவனுடைய கோரமான நிலை எப்படி இருக்கும்? அருமைத் தம்பி அவர்கள் பேசும்போது இது ஒரு மர்ம நோய் என்று சொன்னார்கள். (சிரிப்பு) அதைக் கேட்டு சிரித்தீர்கள். மர்ம நோயைவிட கேவலமாக இருக்கிறது விவசாயிகளினுடைய பிழைப்பு முட்டுவழிச் செலவு அதிகம். ஆனால், விலை மிகமிகக் குறைவு. இதுதான் புரியவில்லை. நெல்லின் விலை மிகக் குறைவு. அரிசி, கிலோவுக்கு 25 ரூபாய், 27 ரூபாய் என்கிறான், கடையிலே. நெல்லின் விலையைப் பார்த்தால், 7 ரூபாய், 6 ரூபாய். அவன் எப்படி உருப்படுவான்? விவசாயி நிலத்தைப் பண்படுத்தி, உழுது பயிரிட்டு அதை வளர்த்து எடுத்து, களத்திலே அடித்து, சந்தைக்குக் கொண்டு வந்து போட்டால், அந்த விவசாயினுடைய முதுகு தேய்ந்து விடுகிறது. அவனுக்கு நியாயமான விலை கிடைக்கவில்லை. ஆனால், அரிசியின் விலை அதிகமாக இருக்கிறது. இதிலே எத்தனை இடைத்தரகர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதைச் சிந்திக்க வேண்டும். எப்படியாவது நெல்லின் விலையை, அரசு, நம்முடைய அமைச்சர் அவர்கள்...(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஏகப்பட்ட காகிதங்களைக் கையிலே வைத்திருக்கிறீர்கள்; எவ்வளவு நேரம் பேசப் போகிறீர்கள்?



**திரு. ஐ. கணேசன்:** எப்படியாவது அந்த ஏழை விவசாயிகளினுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு தயதுசெய்து அரசு முன்னுக்கு வரவேண்டும். நம்முடைய முதல்வர் அவர்கள், ஒரு விவசாயியை, விவசாய அமைச்சராக ஆக்கியிருக்கும்போதுகூட, ஏன் நெல்லின் விலை உயரவில்லை? ஏன் நியாயமாக தேங்காய்க்கு விலை கிடைக்கவில்லை? ஏன் நியாயமாக தேயிலைக்கு விலை கிடைக்கவில்லை? இதைச் சிந்திக்க வேண்டாமா? முட்டுவழிச் செலவைக் குறைக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிவிக்க வேண்டுகிறேன்.

அதேபோல், 1996-லே தி.மு.க.-வினுடைய தேர்தல் அறிக்கையிலே
சொன்னதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள்.
கரும்புக்கு டன் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் அளிப்பதாக உத்தரவாதம்
அளிக்கப்பட்டது தேர்தல் அறிக்கையிலேதான், நாங்கள் ஆட்சிக்கு,
வந்தால் கொடுப்போம் என்று சொன்னீர்கள். அதேபோல், இந்த
அவையிலே பலமுறை நாங்கள் பேசினோம், கேட்டோம். அதையொட்டி,
நாங்கள், பாட்டாளி மக்கள் கட்சி சார்பாக வெளிநடப்புச் செய்தோம்.
அப்போதுகூட, இன்னும் ஐந்தாண்டுகள் எங்களை முழுமையாக
ஆளவிடுங்கள்; நாங்கள் ஆயிரம் ரூபாய் தருகிறோம் என்று சொன்னார்
நம்முடைய முதல்வர் அவர்கள். அது இந்த அவையிலே
சொல்லப்பட்டது. ஆனால், நம்முடைய அமைச்சர் அவர்கள் எந்த
காரணத்தினாலோ தெரியவில்லை, தமிழ்நாட்டிலே எத்தனையோ
சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன; அவற்றிலே 3 சர்க்கரை ஆலைகளில்
மட்டும் 10.5 சதவிகிதம் பிழிதிறன் கொண்டதற்கு ஆயிரம் ரூபாய்
என்கிறார்கள். இது நியாயமா? தர்மமா? நீதியா? சிந்திக்க வேண்டாமா?
அத்தனை சர்க்கரை ஆலைகளிலேயும் இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு
நீங்கள் கொடுக்கக்கூடிய அந்தப் பணம் போதுமானதா? 10 மாதத்தில்
வெட்ட வேண்டிய கரும்பை 15 மாதத்தில் வெட்டுகிறீர்களே அந்தக்
கரும்பிலே பிழிதிறன் வருமா? இதைச் சிந்திக்க வேண்டாமா? 10
மாதத்தில் வெட்டவில்லை என்றால், 11-வது மாதம் அதற்குண்டான
'பெனால்ட்டி' போட்டுக் கொடுக்க வேண்டும் விவசாயிகளுக்கு.
இதுதான் தர்மம். 15 மாதமாக இருந்தால், 2 போகம் வெள்ளாமை
கிடைக்கிறது. அவனுக்கு 2 மடங்கு அந்தப் பணம் கொடுக்க வேண்டும்.
ஆகவே இவற்றையெல்லாம் கருதி, அரசாங்கம் விவசாயிகள்மீது தனிக்
கவனம் செலுத்தி, கரும்பு டன் ஒன்றுக்கு 8.5 சதவிகிதம் பிழித்திறன்
வந்தாலே, ஆயிரம் ரூபாய் கொடுக்க வேண்டுமென்ற ஒரு உத்தரவினை,
ஏழை விவசாயியாக இருந்து அமைச்சராகிய அமைச்சர் அவர்கள்
அறிவிக்க வேண்டும். இந்த அரசு அறிவிக்க வேண்டும்.

(மேசையைத் தட்டும் ஒலி) அப்போதுதான் விவசாயிகளினுடைய உண்மையான உணர்வுகளைப் புரிந்த, இந்த தி.மு.க. அரசு மீண்டும் ஆட்சிக்கு வரும். ஆகையினால், தயவுசெய்து நான் சொல்லக்கூடிய கருத்தினை, அமைச்சர் அவர்கள் நம்முடைய முதலமைச்சரிடத்திலே எடுத்துச் சொல்ல வேண்டும். இன்று அவருடைய மன நிலை சரியில்லாமல் இருக்கலாம்; நிச்சயமாக, நம்முடைய அன்புதனைக் கொள்ளை கொண்டுள்ள தமிழ்நாட்டினுடைய தொழில் வளத்தை மேம்படுத்த வேண்டும் என்று எண்ணி, எண்ணிக் கனவு கண்ட மத்திய அமைச்சர் திரு. மாறன் அவர்கள் நல்ல உடல் திறத்துடன் வெளியே வர இருக்கிறார். வெளியே வர வேண்டும் (மேசையைத் தட்டும் ஒலி) என்று பாட்டாளி மக்கள் கட்சி சார்பாகவும், அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களின் சார்பாகவும் எங்களுடைய விருப்பத்தைச் சொல்லி, நம்முடைய முதல்வர் அவர்களும் நல்ல உடல் திறத்தோடு இருக்க வேண்டும், அதேசமயம் ஏழை விவசாயிகளையும் காப்பாற்ற வேண்டும், இதுதான் எங்களுடைய ஆழமான அழுத்தமான கோரிக்கை. போதுமான விலை விவசாயிகளுக்கு இல்லை. முட்டுவழிச் செலவு அதிகம். முட்டுவழி என்றால் என்ன என்று கேட்கிறார்கள். நாம் நெல்லை உற்பத்தி செய்வதற்கு சிறுக சிறுக பணத்தைச் செலவு செய்கிறோமே, அந்த உற்பத்திச் செலவை, அதைத்தான் எங்களுடைய பகுதியிலே முட்டுவழிச் செலவு என்போம். அந்த உற்பத்திச் செலவு மிக, மிக அதிகம் ஐயா. அதைக் குறைப்பதற்கும், அதேபோல இங்கே பேசியவர்கள் சொன்னார்கள், அந்த மருந்துகள், அரசாங்கம் சிபாரிசு செய்கிற மருந்துகளும் அதுபோல இருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது).

*முற்பகல் 11-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுடைய சொல்லுக்கு என்றைக்கும் கட்டுப்பட்டவன் நான். இருப்பினும், விவசாயிகளுடைய உணர்வுகளை இந்த அரசு புரிந்து நியாயமான விலை விவசாயிகளுக்கு கிடைக்க வழி செய்ய வேண்டும். அப்போதுதான் மகாத்மா கண்ட கிராம இராஜ்யம் மலரும் என்று சொல்லி விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் மிகுந்த உணர்வோடு பேசியிருக்கிறீர்கள் என்று நானே உங்களுக்கு வாழ்த்துத் தெரிவிக்கின்றேன். அடுத்து திரு. லா. சந்தானம்.



***திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகுக்கு வெளிச்சம் தர வேண்டுமென்ற நோக்கத்தோடு தன்னை அழித்துக்கொள்கிற மெழுகுவர்த்தி போல, இப்போது விவசாயிகள் நாட்டினுடைய இன்றைய நிலையில் தங்களை அழித்துக்கொண்டு, இந்த நாட்டினுடைய உற்பத்தியைப் பெருக்கிக் கொண்டிருக்கின்ற விவசாயிகளுடைய கஷ்டங்களை, இந்த மாமன்றத்திலே தேயிலை விவசாயிகளைப் பொறுத்தளவிலே சென்ற கூட்டத் தொடரிலேகூட, அனைத்து எதிர்க்கட்சிகளைச் சார்ந்தவர்களும் எடுத்து வைத்திருக்கின்றோம்.

நீலகிரி பகுதியிலே இருக்கின்ற தேயிலை விவசாயிகள் எல்லாம் தங்களுடைய தேயிலையைக் கிள்ளி எடுக்கின்ற அளவிற்குக்கூட வருமானத்தைப் பெறமுடியவில்லையென்கின்ற நிலையிலே பல்வேறு போராட்டங்களை நடத்தியிருக்கிறார்கள். அவற்றையெல்லாம் இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, அவர்களுடைய குறைகளை நீக்குவதற்காக, இந்த அரசே கொள்முதல் நிலையங்களையெல்லாம் திறந்து, கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக அந்தத் தேயிலையைக் கொள்முதல் செய்து, பாதிக்கப்பட்ட விவசாயிகளைக் காக்க வேண்டுமென்கின்ற நிலையை எடுத்துதிருக்கின்றோம்.

அதுபோல, இந்தத் தென்னை விவசாயிகள் இப்போது தாங்கள் செய்கின்ற விவசாயத்தில் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். பல்வேறு விவசாயங்களிலும், நஷ்டத்தைச் சந்தித்துக் கொண்டிருக்கின்ற விவசாயிகள் தென்னை விவசாயத்தின் மூலமாக தங்களைக் காத்துக் கொள்ளலாம் என்று அதைச் செய்கிற நேரத்தில், இப்போது சிலந்தி பூச்சி தாக்குதலின் காரணமாக தென்னை விவசாயிகள் மிகுந்த பாதிப்புக்குள்ளாகியிருக்கிறார்கள். அவர்கள் உற்பத்தி செய்கின்ற தேங்காயினுடைய விலை, இங்கு குறிப்பிட்டது போல, ஒரு ரூபாய்க்குக்கூட குறைவாக விற்கின்ற ஒரு அவலமான நிலையிலே இருக்கிறது. அரசு அந்த விவசாயிகளைக் காக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு கொப்பரைத் தேங்காய் கொள்முதல் செய்கின்ற நிலையங்களைத் திறந்திருந்தாலும்கூட, அந்த நிலையங்களின் மூலமாக, தென்னை விவசாயிகள் பயன்படுகிறார்களா என்று சொன்னால், அது இல்லை என்கின்ற நிலைதான் இப்போது இருந்து கொண்டிருக்கின்றது.

என்னுடைய தொகுதியிலேகூட, சோழவந்தானிலும் ஒரு கொள்முதல் நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. ஆகஸ்ட் மாதம் 14ஆம் தேதி, அந்த

நிலையம் தொடங்கப்பட்டது என்பதை நான் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மூலமாக தெரிந்துகொண்டேன். ஆனால், எனக்குக்கூட அந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் என்கின்ற முறையிலே அழைப்பு விடுக்கப்படவில்லை. இருந்தாலும், மறுநாள் ஆகஸ்ட் 15ஆம் தேதி அரசு விடுமுறை, நான் அந்த இடத்திற்கு தேசியக் கொடியை ஏற்றி வைத்து பேசுவதற்காக சென்ற அந்த இடத்திலே, ரோட்டிலே இருமருங்கிலும் 10, 15 லாரிகள் அங்கே நின்று கொண்டிருந்தன.

முற்பகல் 11-15

என்ன இந்த லாரிகள் என்று கேட்கின்றபோது, தேங்காய் கொப்பரை ஏற்றி வந்திருக்கின்ற லாரிகள் என்கின்ற நிலையை அறிந்தேன். (மச· நாள் அந்தக் கொள்முதல் நிலையம் திறக்கப்பட்டிருக்கிறது. மறு... அரசு விடுமுறை என்கின்ற நிலைகூட இல்லாது 10,15 லாரிகளிலே அந்தக் கொப்பரைத் தேங்காய் கொண்டு வந்து அங்கே எடை போடப்பட்டுக்கொண்டிருக்கிறது. என்ன என்று கேட்கின்ற நிலையில், எப்படி இந்த ஒரு நாளைக்குள்ளாக விவசாயிகளுக்கு, விவசாயத் துறையின் மூலமாக .அத்தாட்சி கார்டுகள் வழங்கப்பட்டு எப்படி இவ்வளவு கொப்பரைகள் இங்கு வருகின்றன என்று கேட்கின்ற நேரத்தில் உரிய பதில, உரிய அதிகாரிகளிடமிருந்து பெறப்பட முடியவில்லை. இப்படித்தான் இருக்கிறது. விவசாயிகள் பயன்பெற வேண்டும் என்பதற்காக திறக்கப்பட்ட கொள்முதல் நிலையங்களிலே அதனுடைய பயனை யாரோ அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்கின்ற இக்கட்டான நிலையைத்தான் நாம் இப்போது சந்தித்துக் கொண்டிருக்கின்றோம். எனவே, இப்போது கேரள மாநிலத்திலே இருப்பதை போல—நமது தமிழகத்திலும் கொப்பரைத் தேங்காயை உற்பத்தி செய்து கொடுக்கின்ற நிலை சாதாரண விவசாயிகள் செய்ய முடியாத ஒரு நிலை என்பதனை உணர்ந்து, அவர்களுடைய தேங்காயையே கொள்முதல் செய்கின்ற—ஒரு நிலையை இந்த அரசு எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல கரும்பு விவாசாயிகள். என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையிலே இரண்டு சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. இங்கு 1,000 ரூபாய் ஒரு டன்னுக்குக் கொடுக்க வேண்டும். அதுவும் 8.5 பிழி திறனுள்ள கரும்புக்குக் கொடுக்க வேண்டும் என்று நாங்கள் வாதிட்டாலும்கூட, இன்று அரசு நிர்ணயித்துக் கொடுக்கின்ற விலையைகூட அந்த விவசாயிகள் ஏறத்தாழ 5,6 மாதங்களாக இன்னும் பெற முடியாத நிலையிலே இருந்து கொண்டிருக்கிறார்கள். சென்ற



மாதம்கூட நானும் நிலக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் அக்காள் பொன்னம்மாளும்—அங்கு விவசாயிகளெல்லாம் தங்களுக்கு கரும்புக்குக் கொடுக்கப்பட வேண்டிய விலை, அந்தப் பணம் இன்னும் ஆலை செலுத்தவில்லை, பணத்தைக் கொடுக்கவில்லை என்று சொல்லி மறியலிலே ஈடுபடுகின்ற நேரத்திலே நாங்கள்—சென்று உங்களுக்கு தீபாவளிக்குள்ளாக அந்தப் பணத்தையெல்லாம் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்கிறோம் என்று சொல்லிவிட்டு வந்தோம். ஆனால், நாங்கள் சொன்ன அந்த வார்த்தையை எங்களால் நிறைவு செய்ய முடியவில்லை. காரணம், இன்னும் அந்த விவசாயிகளுக்கு அந்தப் பணம் கிடைக்கவில்லை. இப்படி இருக்கின்ற நிலையில் 5 மாதங்களாக தாங்கள் ஆலைகளுக்குக் கொடுத்த கரும்புக்கு பணம் கிடைக்காத நிலையிலே விவசாயிகள் அல்லல்பட்டுக் கொண்டிருக்கிற நேரத்தில், அவர்கள் உற்பத்தி செய்கின்ற நேரத்திலே கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக அவர்கள் பெற்ற கடனுக்கு அபராத வட்டியோடு அந்தக் கடனை வசூலிக்கின்ற ஒருநிலை இருக்கிறது. விவசாயி தான் உற்பத்தி செய்த கரும்பை ஆலைக்குக் கொடுத்து விட்டான். ஆலையினுடைய நிர்வாகம் கூட்டுறவோ அல்லது தனியார் நிர்வாகமோ அவனுக்கு 6 மாதங்களாக பணத்தைக் கொடுக்கவில்லை. ஆனால், அவன் பெற்றிருக்கிற கடனுக்கு அபராத வட்டியோடு அரசுக்கு வட்டி செலுத்த வேண்டிய ஒரு இக்கட்டான நிலையிலே இப்போது அவன், வைக்கப்பட்டிருக்கிறான். இந்த அரசு 'விவசாயிகளுக்கு அபராத வட்டியை தள்ளுபடி செய்கிறேன் என்று சென்ற முறை அறிவித்தது. ஆனால், இந்த அபராத வட்டியை தள்ளுபடி செய்கின்ற நிலையில், அந்த விவசாயி கூட்டுறவு வங்கிகளுக்குச் சென்று தன்னுடைய கடனை செலுத்த செல்கின்ற நேரத்தில் அந்த அபராத வட்டியையும் சேர்த்து நீங்கள் செலுத்தி விட்டு, பின்புதான் அதைத் திருப்பிப் பெற வேண்டும் என்கின்ற ஒரு நிலையை கூட்டுறவுச் சங்கங்கள் எடுத்திருக்கின்றன. ஏற்கெனவே அவன் கடன் சுமையிலே அமிழ்ந்திருக்கின்ற நிலையில் தான் பெற்றிருக்கின்ற கடனை கட்ட முடியாமல் வட்டிச் சலுகையாவது வேண்டும் என்ற வாட்டத்திலேதான் ஏறக்குறைய 4, 5 ஆண்டுகளாக அவர்கள் இருக்கிறார்கள். பெற்ற கடனைக்கூட செலுத்த முடியாத நிலையில் அரசு கொடுத்த சலுகையும் முழுமையாக அனுபவிக்க முடியாமல் இருக்கிறார்க வட்டிச் கட்டிவிட்டு திரும்ப அதனைப் பெறவேண்டும் என்கின்ற ஒருநிலையை அரசு 'எடுக்குமேயானால், அதை எப்படி அவனால் செலுத்த முடியும்.? தன்னால் சுமையைத் தாங்க முடியவில்லை என்பதற்காகத்தான் அரசிடத்திலே சலுகையை கேட்டுக் கொண்டிருக்கிறான்.

[2000 நவம்பர் 11

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் விரைவிலே பேசி முடியுங்கள்.

**திரு. லா. சந்தானம்:** அப்படிக் கேட்டுக் கொண்டிருக்கிற அந்த விவசாயிகளுக்கு அரசு கொடுக்கின்ற சலுகையையாவது கழித்துக் கொண்டு மீதித் தொகையைக் கட்டினால் போதும் என்கின்ற ஒரு நிலையை எடுத்தால்தானே அவனால் செலுத்த முடியும். அவனுக்கு இந்த அரசு கொடுத்த, அந்த அபராத வட்டி சலுகையைக் கூடப் பெற முடியாத நிலையிலே எத்தனையோ விவசாயிகள் வைக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே, இந்த அரசு கடன் சுமையிலே இருக்கின்ற விவசாயிகளைக் காப்பாற்ற வேண்டும். அவன் உற்பத்தி செய்கின்ற அத்தனை பொருள்களுக்கும் இப்போது உரிய விலை கிடைக்கவில்லை. அதுபோன்று, நெல், பருத்தி போன்றவைகள் எல்லாம் இப்போது பூச்சித் தாக்குதல்களால் மிகவும் பாதிப்புக்குள்ளாகி இருக்கிற இந்த நிலையில் அரசு நிச்சயமாக அவன் பட்டிருக்கின்ற கடனைத் தள்ளுபடி செய்வதற்கு முடியவில்லை என்று சொன்னாலும், முழுமையாக வட்டியை தள்ளுபடி செய்கின்ற அறிவிப்பையாவது இந்த அரசு செய்ய வேண்டுமென்று கேட்டு அமைகின்றேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 11-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

***திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோதனைக்கு மேல் சோதனைக்கு ஆளாக்கப்பட்டிருக்கக்கூடிய மக்களாக இன்று தமிழகத்திலே விவசாய மக்கள் மாறிக் கொண்டிருக்கிறார்கள் என்பது மிகவும் வேதனைக்குரிய ஒன்று. ஏற்கெனவே நீலகிரியிலே உள்ள தேயிலை விவசாயிகளைப் பற்றி விரிவாக இந்த மன்றத்தில் விவாதிக்கப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் சில சலுகைகளை அந்தத் தொழிலைக் காப்பாற்றுவதற்காக, அந்த விவசாயிகளைக் காப்பாற்றுவதற்காக அறிவித்தார்கள். ஆனால் துரதிருஷ்டவசமான நிலை என்ன என்றால் அந்தச் சலுகைகள், அல்லது விவசாயிகளுக்குப் போய்ச் சேர வேண்டும் என்று சொன்ன அந்த விஷயங்கள் விவசாயிகளுக்குப் போய்ச் சேரவில்லை என்பதுதான் இன்று நாம் பார்த்துக் கொண்டிருக்கின்ற உண்மை. நம்முடைய முன்னாள் பிரதமர் திரு. தேவ கௌடா அவர்களுடைய தலைமையிலே ஒரு பிரம்மாண்டமான மறியல் போராட்டத்தைக்கூட அந்த மாவட்டத்திலே இருக்கிற விவசாயிகள் நடத்தினார்கள். அன்று நாங்கள் நேரடியாகப் பார்த்தோம் எப்படிப்பட்ட வேதனைக்கு அந்த விவசாயிகள் ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள் என்று. அவர்களுக்கு நாம் அறிவித்திருக்கிற பலன் போய்ச் சேரவேண்டுமானால் அதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும் என்பதுதான் எங்களுடைய தாழ்மையான கருத்து. இன்று விவசாயிகளைப் பொறுத்த அளவிலே அதுவும் சிறு விவசாயிகளைப் பொறுத்த அளவிலே அவர்கள் உற்பத்தி செய்கிற தேயிலையை வாங்கிப் பயன்படுத்திக் கொண்டிருந்த கூட்டுறவு தேயிலை factory-களும் இப்போது மூடுவிழா என்ற இடத்திலே இருந்து கொண்டிருக்கின்றன. பல factory-கள் இப்போது செயல்படவில்லை. தொழிலாளிகளும் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். பல சிறு தோட்டங்கள் மூடப்பட்டு இருக்கின்றன. இப்படிப்பட்ட ஒரு மிகப் பெரிய அவல நிலைக்கு—அங்கே இருக்கின்ற தேயிலை விவசாயத்தோடு சம்பந்தப்பட்டிருக்கிற அதிலும் குறிப்பாக—30,000 சிறு விவசாயிகள் கடுமையான பாதிப்புக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, இது சம்பந்தமாக என்னுடைய தாழ்மையான கருத்து என்னவென்றால் இப்போது மத்திய அரசு ஏற்படுத்தியிருக்கிற இறக்குமதிக் கொள்கையின் காரணமாக வந்திருக்கின்ற பிளவு என்ற முறையிலே இதிலிருந்து உதவிகளைப் பெறுவதற்கு இப்போது மத்திய அரசை நாம் அணுகி அந்த விவசாயிகளுக்குக் கட்டுப்படியான விலை கிடைப்பதற்கு வழிசெய்ய வேண்டும் அவர்கள் உற்பத்தி செய்கிற தேயிலை, அந்தக் கொழுந்தை அரசே State Trading Corporation அல்லது மற்ற கூட்டுறவு சங்கங்கள் வழியாக வாங்கி அங்கே இருக்கிற கூட்டுறவு தேயிலை factory-களுக்குக் கொடுத்து தேயிலை factory-களையும் செயலாக்க வைத்து அதிலே வேலை செய்து கொண்டிருக்கின்ற தொழிலாளிகளுக்குத் வேலைவாய்ப்பையும் ஏற்படுத்தி சிறு விவசாயிகளுக்குக் கட்டுப்படியான விலையையும் கொடுக்கக்கூடிய முறையிலே ஒரு நிலையை உருவாக்கித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். அது சம்பந்தமாக அரசு தீவிரமாகப் பரிசீலிக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.



2000 நவம்பர் 11] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

இப்போது 5 ரூபாய்கூட அந்த தேயிலே உற்பத்தியாளர்களுக்கு, சிறு விவசாயிகளுக்குக் கிடைக்கவில்லை. 15 ரூபாய் அவர்களுக்கு கிடைத்தால்தான் அவர்களுடைய உற்பத்திச் செலவை அவர்களால் ஈடுகட்டக்கூடிய முறையிலே உள்ள ஒரு கட்டுப்படியான விலையாக அது இருக்கும். ஆகவே, அந்த முறையிலே 15 ரூபாய் அவர்களுக்கு கிடைக்கக்கூடிய முறையிலே அந்த விவசாயிகளிடமிருந்து அந்த பச்சைக் கொழுந்தைக் கொள்முதல் செய்வதற்கு அரசு முன்வர வேண்டும். அந்த பச்சைக் கொழுந்தை நாம் இப்போது அந்த factory-களிலே பயன்படுத்திக் கொள்ள முடியும்.

இதே நிலைதான் இன்று தேங்காய் விவசாயத்தைப் பொறுத்த அளவிலே ஏற்பட்டிருக்கிறது. எங்களுடைய கன்னியாகுமரி மாவட்டத்திலே இப்போது அரசு எடுத்துக் கொண்டிருக்கின்ற ஒரு நடவடிக்கை என்னவென்றால் அதாவது கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு பாமாயிலினுடைய அளவு குறைக்கப்பட்டிருக்கிறது. அது சரியான நடவடிக்கைதானா என்பதை அரசு பரிசீலிக்க வேண்டும். அதன் காரணமாக பாமாயிலினுடைய விலை இப்போது கூடக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. கிராமப் பஞ்சாயத்திலே வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கின்ற மக்களுக்கு இப்போது பாமாயிலினுடைய அளவு குறைக்கப்பட்டதனால் சில இடத்தில் பாமாயிலே கிடைக்கவில்லை. இதன் காரணமாக அந்தப் பகுதியிலே தேங்காயினுடைய விலை உயர்ந்து இருக்கிறது. ஆகவே, தேங்காயைப் பொறுத்த அளவிலே ஏற்கெனவே எதிர்க்கட்சித் தலைவர் அவர்களாலும் அதேபோன்று மற்ற தலைவர்களாலும் அந்த விஷயத்தைப்பற்றி ஏராளமான கருத்துகள் இங்கே எடுத்து வைக்கப்பட்டிருக்கின்றன. அந்த உணர்வுகளோடு என்னுடைய உணர்வையும் இணைத்துக்கொண்டு ஒன்றைமட்டும் இந்த நேரத்திலே வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

*முற்பகல் 11-25*

கேரள மாநிலத்திலே அரசு செய்திருப்பதுபோல, தேங்காயைக் கொள்முதல் செய்வதற்கு தமிழக அரசு முன்வர வேண்டும். அதுதான் இப்போது விவசாயிகளுக்குப் பலனைக் கொடுக்கும் இன்று இந்த விஷயத்திலே அரசு எடுத்திருக்கிற . 'கொப்பரா பர்ச்சேஸ்' என்று சொல்வது தரகர்களுக்குத்தான் பயன்படுகிறதே தவிர, விவசாயிகளுக்குப் பயன்படவில்லை.—தேயிலையைப் பொறுத்த அளவிலே அரசால் அறிவிக்கப்பட்டிருக்கிற அந்தச் சலுகைகள் எல்லாம் தரகர்களுக்குப் போய்ச் சேருகிறது. இடையில் intermediaries அதைத் தட்டிக் கொண்டு செல்கிற ஒரு துரதிருஷ்டவசமான நிலையத்தான் இப்போது நாம் பார்த்துக் கொண்டிருக்கின்றோம். அந்த நிலைதான் இப்போது தேங்காய் விவசாயிகளைப் பொறுத்த அளவிலும் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அவர்களையும் பாதுகாத்துக் கொள்வதற்கு அரசு கொள்முதல் செய்வதற்கு முன் வர வேண்டும்.

இந்த நேரத்திலே நான் துரதிருஷ்டவசமான மற்றொரு விஷயத்தையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். விவசாயிகள், அவர்களுடைய வேதனையைச் சுட்டிக்காட்டுவதற்காக சென்ற 25ஆம்தேதி மாநிலத்தினுடைய பல பகுதிகளிலும் ஆர்ப்பாட்டங்களையும் மறியல்





போராட்டங்களையும் நடத்தினார்கள். ஆனால், அரசு அவர்களுடைய கருத்தினை, அந்த எண்ணத்தினை வேறு முறையிலே எண்ணி, அவர்களை அடித்து உதைக்கக்கூடிய ஒரு துரதிருஷ்டவசமான நிலை ஏற்பட்டது. சென்னை நகரத்திலேகூட காவல் துறையினுடைய அத்துமீறிய நடவடிக்கையின் காரணமாக, விவசாயிகளினுடைய மண்டைகள் உடைக்கப்பட்டன; கை-கால்கள் அடித்து நொறுக்கப்பட்டன.

இப்போது விவசாயிகளைப் பொறுத்த அளவிலே இருக்கிற யதார்த்தமான பிரச்சினை இதுதான். நான் குறை சொல்வதற்காகச் சொல்லவில்லை. இப்போது இந்த நிலை விவசாயிகளுக்கு வருவதற்குப் பிரதானமான காரணம், மத்திய அரசினுடைய பொருளாதாரக் கொள்கையும், ஏற்றுமதி இறக்குமதிக் கொள்கையும்தான். அந்தக் கொள்கையின் காரணமாகத்தான் இப்போது விலைவாசி உயர்வு ஏற்பட்டிருக்கின்றன. மத்திய அரசினுடைய நடவடிக்கைகள்தான் விலைவாசி உயர்வை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன. ஆந்திர மாநிலத்தினுடைய முதலமைச்சர் திரு. சந்திரபாபு நாயுடு அவர்கள்கூட 'Roll back your policy' என்று சொல்கிறார்கள். ஆனால் அந்த அளவிற்குக்கூட தமிழக அரசு தன்னுடைய கருத்தைத் தெரிவிக்கவில்லை என்பதை நான் இந்த நேரத்திலே வேதனையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்னொன்றையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்த அளவிலே, ரப்பர் இன்று கடுமையான பாதிப்பிற்கு ஆளாக்கப்பட்டிருக்கின்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் இருக்கிற பொருளை விட்டுவிட்டு மற்ற 3 பொருள்களைப் பற்றி வரிசையாக ரப்பர், நெல் என்று பேசிக் கொண்டிருந்தால் எப்படிச் சரியாக வரும்?

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** இதோடு பேச்சை முடித்துவிடுகிறேன். ஆகவே, ரப்பர் தொழிலைப் பொறுத்த அளவிலே இப்போது கடுமையாகப் பாதிக்கப்பட்டிருப்பது அரசினுடைய நிறுவனம்தான். இப்போது அவர்கள் தொழிலாளர்களுக்கு ஊதியம் கொடுப்பதற்குக்கூட முடியவில்லை என்று சொல்லி மார்க்கெட்டிலே இருக்கிற விலையைவிட 7 ரூபாய் குறைத்து அவர்களுடைய ரப்பர் ஸ்டாக்கை விற்று, தொழிலாளர்களுக்குச் சம்பளம் கொடுக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது. ஆகவே, இந்த விஷயங்களிலேயெல்லாம் அரசே

கவனம் செலுத்தி இவைகளைக் கொள்முதல் செய்து கட்டுப்படியான விலை உற்பத்தியாளர்களுக்குக் கிடைக்கக்கூடிய முறையிலே நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். இப்போது அந்த முறையிலே விவசாயிகளுக்கு ஆசுவாசம் கொடுக்கக்கூடிய முறையிலே உள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இங்கே கரும்பு விவசாயிகளினுடைய பிரச்சினையைப் பற்றிச் சொன்னார்கள். எனவே, நான் அதை மீண்டும் எடுத்துச் சொல்ல விரும்பவில்லை. ஆயிரம் ரூபாய் கரும்பிற்குக் கட்டுப்படியான விலையாகக் கரும்பு விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை இப்போது நாடு ஆதரிக்கிறது என்பதை இந்த அரசு நன்கறியும். அந்த முறையிலே கரும்பு விவசாயிகளானாலும் சரி, தென்னை விவசாயிகளானாலும் சரி, தேயிலை விவசாயிகளானாலும் சரி, ரப்பர் விவசாயிகளானாலும் சரி, அப்படிப்பட்ட ஏராளமான விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கிற துயரத்தை மாற்றுவதற்குத் தகுந்த நடவடிக்கைகளை அரசு எடுக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகக் கேட்டு, அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன். மிகவும் சுருக்கமாகப் பேசி முடிக்க வேண்டும்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பச்சைத் தேயிலை விலையைப் பொறுத்தமட்டில் அதனுடைய விலை மிகவும் கீழ் நிலையில் இருந்தது. மத்திய, மாநில அரசுகளினுடைய ஓரளவு முயற்சியின் காரணமாக, மானியம் வழங்கியது, அதேபோன்று இறக்குமதியினுடைய வரியைக் கூட்டியது போன்ற நடவடிக்கைகளின் காரணமாக ஓரளவுக்கு, அதிகபட்சமாக 5 ரூபாய் 60 காசுகள் என்ற அளவுக்கு விலை வந்திருக்கிறது. அது போதாது. நிச்சயமாகக் குறைந்தபட்சமாக 10 ரூபாயாவது, கிடைக்க வேண்டும். அதற்கு என்ன செய்ய வேண்டுமோ அதை அரசாங்கம் செய்ய வேண்டும்.

அதேபோன்று, தேங்காயைப் பொறுத்தமட்டில், நம்முடைய மாநிலத்தில் மட்டுமல்ல, மற்ற மாநிலங்களிலும் இந்தப் பிரச்சினை உள்ளது என்று சொல்கிறார்கள். இருந்தாலும், உள்ளே இருக்கக்கூடிய தேங்காய் எந்த அளவிற்குப் பருமன் இருக்கிறதோ அந்த அளவிற்குத் தேங்காயினுடைய தோட்டோடு—சுதம்பை என்று சொல்லக்கூடிய அந்தத் தோட்டோடு— சேர்ந்திருக்கிறது. அந்த அளவிற்குத் தேங்காய் வர வரச் சுருங்கி விட்டது. தமிழகத்தில், கன்னியாகுமரி மாவட்டத்தைப்



பொறுத்தமட்டில், தேங்காயிலே இரண்டும் கெட்டான் நிலை இருக்கிறது என்று பல விவசாயிகள் நெல் வயலில் கூட தென்னையை நட்டு, அந்த இரண்டும் இல்லாமல், 'இருதலைக் கொள்ளி எறும்பு' என்று சொல்லக்கூடிய அளவிற்கு அவர்கள் வந்துவிட்டார்கள். பல பெரிய பெரிய தென்னந்தோப்பு வைத்திருக்கக்கூடிய முதலாளிகள்கூட தென்னை மரத்திலிருந்து தேங்காய் வெட்டுவது கிடையாது. காரணம், வெட்டி சுமப்பதற்காக உண்டான அந்தக் கூலிகூட கிடைக்காத நிலை, வேதனைப்படக்கூடிய நிலை இருக்கிறது.

*முற்பகல் 11-30*

அடுத்து கயிறு தும்பு. அந்தக் கயிறு தயாரிப்பதற்காக தும்பு வாங்குகிறவர்கள்கூட வாங்குவதில்லை. காரணம், கிட்டத்தட்ட 1 அடி நீளம் உள்ள தும்பானது இப்போது 1/2 அடிகூட இல்லை. 3 அங்குலம், 4 அங்குலம் என்று சொல்லக்கூடிய அளவிற்கு வந்துவிட்டது. ஆக, மொத்தத்திலே விவசாயிகளினுடைய நிலை என்பது பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது. மத்திய, மாநில அரசாங்கங்கள் நம்முடைய அரசாங்கங்கள்தான்; இருந்தாலும்கூட, இந்த விவசாயிகளினுடைய பிரச்சினை என்று சொல்வது வரக்கூடிய காலகட்டங்களில், விவசாயிகள் தங்களுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் யாரும் விவசாயம் செய்ய வேண்டும் என்று விரும்புவது இல்லை. அந்த அளவிற்கு அவர்களுடைய வாழ்க்கை வெகுவாகப் பாதிக்கப்பட்டுவிட்டது. சமீபத்திலே இந்த இராமர் மூலிகைப் பெட்ரோல் வந்தபோது, ஒரு விவசாயி இன்னொரு விவசாயியிடம் பேசிக் கொண்டிருந்தபோது, மூலிகையிலேயிருந்து பெட்ரோல் கிடைக்கிறதில்லையா, அந்த அரபு நாடுகளிலிருந்து இங்கு படையெடுப்பவர்களைப் போல இங்கு வருவார்கள் என்று சொல்கிறார். காரணம் அவர்களுக்கு இந்த நாட்டு நடப்பு தெரியாது. வரக்கூடிய காலக்கட்டங்களில் விவசாயிகள் தங்களுடைய விவசாயத்தை விட்டு கடைசியில் நெல் எந்த மரத்தில் கிடைக்கிறது என்று கேட்கக்கூடிய நிலை ஏற்பட்டுவிடும். ஆக, இது ஒரு பெரிய பாதிப்பாக மாறும். வேலையில்லாத பிரச்சினை அதிகமாக ஆகும். பாரத நாட்டினுடைய வருங்காலமே பாதிக்கும். விவசாயிகளை எந்த அளவிற்கு முன்னேற்றிக் கொண்டு வரமுடியுமோ அந்த அளவிற்கு மத்திய, மாநில அரசாங்கங்கள் நல்ல நிபுணர்களோடு ஆலோசித்து, அதாவது உலகத்தில் அனைத்து உற்பத்தியாளர்களும் தாங்கள் உற்பத்தி பண்ணக்கூடிய பொருட்களுக்கு, தங்களுடைய செலவுகள் எல்லாவற்றையும் கணக்கிட்டு விலை நிர்ணயிக்கிறார்கள். ஆனால், விவசாயிகள் மட்டும் தாங்கள் உற்பத்தி

பண்ணக்கூடிய பொருட்களுக்கு தாங்களே விலை நிர்ணயிக்க முடியவில்லை என்பது மட்டுமல்ல, தங்களுக்குக் கட்டுப்படியான விலை கிடைக்க முடியாத நிலை இருக்கிறது. எனவே, இது வருங்காலத்தில் ஒரு பெரிய பாதிப்பை நம்முடைய நாட்டுக்கு ஏற்படுத்திவிடும். ஆகவே, விவசாயிகள் விஷயத்தில் அரசாங்கம் அதிகக் கவனம் கொடுத்து, ஏதேதோ விஷயங்களுக்கு எல்லாம் அதிகக் கவனம் கொடுத்து மானியங்கள் எல்லாம் கொடுத்து பலவகைகளில் முன்னேற்றிக் கொண்டிருக்கிறோம். அதேபோல இதிலேயும் அதிகக் கவனம் கொடுத்து விவசாயிகளினுடைய பிரச்சினையில் நல்லமுடிவு எடுக்க வேண்டும். இப்போது வியாபாரிகளினுடைய மகன்கள் எம்.காம்., பி.காம்., பி.ஏ., என்று படித்தால்கூட திரும்பவும் வியாபாரம் செய்கிறார்கள். காரணம் அதிலே இலாபம் இருக்கிறது. எனவே, அதில் அவர்களுக்கு ஆர்வம் இருக்கின்றது. ஆனால், விவசாயிகள் தங்களுடைய எந்த மகன்களையும் விவசாயம் செய்ய வேண்டாம் என்று சொல்லக்கூடிய நிலை வந்து விட்டது. அதுபோலவே, வியாபாரிகளினுடைய ஆர்வமான தொழில் போன்று விவசாயத்தையும் ஆர்வம் உள்ளதாக உண்டாக்கி பயன்பெறச் செய்ய வேண்டும். பாரத நாட்டில் வேலை இல்லை என்று சொல்லக்கூடிய இந்த வேலையில்லா பிரச்சினை இருக்காது. வேலை இல்லாத பிரச்சினை வாராது. அனைத்து சுபிட்சமும் ஏற்படும். எனவே, விவசாயிகள் விஷயத்தில் அரசாங்கம் அதிகக் கவனம் கொடுத்து, அதனுடைய முன்னேற்றத்திற்குப் பாடுபட்டு நம்முடைய நாட்டினுடைய மறுமலர்ச்சிக்கு என்ன செய்யலாம் என்பதை ஆராய வேண்டும் என்று சொல்லி வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன். பாரத் மாதா கி ஜே.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா.மு. முபாரக், நீங்கள் தேயிலை ஒன்றின் மீதுதான் பேச வேண்டும் என்று கேட்டீர்கள் சுருக்கமாகப் பேசி முடியுங்கள்.

**திரு. பா.மு. முபாரக்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த நிதிநிலை அறிக்கைக் கூட்டத் தொடரின்போது நீலகிரி மாவட்டத்தில் தேயிலை விவசாயிகளுக்கு ஏற்பட்ட பாதிப்பு குறித்து நீண்ட விவாதம் செய்யப்பட்டு, அதில் அனைத்துக் கட்சிகளினுடைய தலைவர்களும் தங்களுடைய கருத்துக்களைச் சொல்லி, அதனுடைய அடிப்படையில் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் தயாரிக்கப்பட்ட தேயிலைத் தூளுக்கு 8 சதவீதமாக இருந்த வரியை 4 சதவீதமாகக் குறைத்தும், 4 சதவீதமாக இருந்த Central Sales Tax-ஐ 2 சதவீதமாகக் குறைத்தும் இந்த அவையில் அறிவித்து அவர்களுக்கு உதவி செய்தார்கள்.





அதைத் தொடர்ந்து இறக்குமதி செய்யப்படுகிற தேயிலைத் தூளுக்கு 15 சதவீதம் என்பதை 35 சதவீதமாக உயர்த்த வேண்டும் என்றும் மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்து அதையும் செய்தார்கள். அத்தோடில்லாமல், பாதிக்கப்பட்டிருக்கிற விவசாயிகளுக்கு நேரடியாக உதவி செய்ய வேண்டும் என்கிற நல்ல எண்ணத்தோடு மத்திய வர்த்தகத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. முரசொலி மாறன் அவர்களோடு தொடர்பு கொண்டு விவசாயிகளுக்காக 1 ரூபாய் 25 பைசா, 1 கிலோ பச்சைத் தேயிலைக்கு மானியமாக வழங்குவதற்கும் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்பாடு செய்தார்கள். இதுவும் போதவில்லை என்ற நிலை ஏற்பட்டபோது விவசாயிகள் இன்னும் தங்களுடைய பாதிப்பிலிருந்து மீளவில்லை என்ற நிலை வந்தபோது அதுகுறித்தும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் நானும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும் எடுத்து வைத்த கோரிக்கைகளையும் தொடர்ந்து இன்னும் அரசியல் கட்சிகளினுடைய கோரிக்கைகளையும் ஏற்றுக் கொண்டு, இந்த மானியத் தொகையை அதிகப்படுத்த வேண்டும் என்கிற கோரிக்கையை மத்திய அரசுக்கு முதலமைச்சரே நேரடியாகத் தெரிவித்து, நம்முடைய மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. முரசொலி மாறன் அவர்கள் ஒன்றேகால் ரூபாய் என்பதை 2 ரூபாயாக உயர்த்தியும் கொடுத்தார்கள். ஆக, இப்போது நீலகிரியில் பாதிக்கப்பட்டிருக்கிற விவசாயப் பெருமக்களுக்கு நம்முடைய முதலமைச்சரவர்களுடைய அரசினுடைய முயற்சியால் ஏறத்தாழ 10 கோடி ரூபாய் இதுவரையிலும் மானியமாக வழங்கப்பட்டிருக்கிறது. இன்றுவரையிலும் 9 கோடியே 75 இலட்சத்து 81 ஆயிரத்து 424 ரூபாய், 2 ரூபாய் மானியம் என்கிற வகையில் வழங்கி உதவி செய்யப்பட்டிருக்கிறது. இதில் ஏறத்தாழ இன்று வரையிலும் 25 ஆயிரத்து 721 விவசாயிகள் பயனும் அடைந்திருக்கிறார்கள். இனியும் மானியமாகக் கொடுப்பதற்கு 7 கோடி ரூபாய் அளவிற்குத் தேவையென்று மாவட்ட நிர்வாகம் மத்திய அரசுக்கு இதுகுறித்துத் தகவல் கொடுத்து அதுவும் கிடைப்பதற்கு நடைமுறை ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

*முற்பகல் 11-35*

இப்போது நம்முடைய மாண்புமிகு மத்திய அமைச்சரவர்கள் மருத்துவமனையில் இருக்கிறார்கள். நேற்றைக்கு மருத்துவர்கள் குறிப்பில் 15 நாட்களில் அவர் மீண்டும் பழைய நிலையில் செயல்பாடுகளைத் தொடங்குவார்கள் என்கிற மகிழ்ச்சியான அறிவிப்பைத் தந்திருக்கிறார்கள். அந்த அறிவிப்பு நமக்கெல்லாம் மகிழ்ச்சியைத் தந்திருக்கிறது.

மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவதற்கு ஒரு நாளைக்கு முன்பு, 27-10-2000 அன்று நம்முடைய முதலமைச்சரவர்களிடத்திலும், மத்திய அமைச்சரிடத்திலும் நான் அரை மணி நேரம், இந்த விவசாயிகள் பிரச்சினை குறித்துச் சொன்னேன். அப்பொழுது ஒரு வேண்டுகோள்கூட என் சார்பிலே, என் மாவட்ட மக்களின் சார்பிலே வைக்கப்பட்டது. ஆறு மாதத்திற்கு மானியத் தொகை என்று குறிப்பிடப்பட்டிருப்பது நிறைவு பெற்றுவிட்டால், விவசாயிகள் பாதித்து விடுவார்கள். ஆகவே, தயாரிக்கப்பட்ட தேயிலைத் தூள் ஏல மையத்தில் கிலோ 55 ரூபாய்க்கு என்றைக்கு ஏலம் போகிறதோ அதுவரையிலும் அந்த மானியத் தொகையை நிறுத்தாமல் கொடுக்க வேண்டுமென்று அவரிடத்திலே நான் கேட்டேன். அவரும் கூட இதற்கு 100 கோடி ரூபாய்க்கு மேல் ஆகுமே என்று சொன்னாலும், இருந்தாலும், பாதிக்கப்பட்டிருக்கிற விவசாயிகளைப் பாதுகாக்க வேண்டியது நம்முடைய கடமை என்பதை நம்முடைய முதலமைச்சரும், மத்திய அமைச்சரும் கலந்து பேசிவிட்டு என்னிடத்தில் நாளை அல்லது நாளைமறுநாள் இது குறித்துப் பேசலாம் என்று அவர்கள் சொல்லியிருந்தார்கள். அதற்குள் உடல் நலக் குறைவு அவருக்கு ஏற்பட்டு விட்டது.

நானும்கூட, நம்முடைய முதல்வரவர்களிடத்தில் மானியத் தொகையை இன்னும் உயர்த்தி, சரியான விலை கிடைக்கிற வரைக்கும் அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறேன். ஆகவே, நம்முடைய அரசின் சார்பில், நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சரவர்கள் இந்த மானியத் தொகையைப் பொறுத்தவரையிலும் தயாரிக்கப்பட்ட தேயிலைத் தூளுக்கு ஏல மையத்தில் கிலோ 55 ரூபாய் விலை கிடைக்கிற வரையிலும் மத்திய அரசு தொடர்ந்து மானியத் தொகையை வழங்க வேண்டும் என்கிற ஒரு வற்புறுத்தலை மத்திய அரசுக்குத் தெரிவிக்க வேண்டுமென்று நான் மிகுந்த அன்போடு அந்த மாவட்ட மக்களின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-40*

பச்சைத் தேயிலையைப் பொறுத்தவரைக்கும் ஒவ்வொருவரும் ஒரு விலையை இங்கே குறிப்பிட்டார்கள். ஆனால், இப்போது பச்சைத் தேயிலை 5 ரூபாயிலிருந்து 6 ரூபாய் வரையிலும் நீலகிரி மாவட்டத்தில் விற்பனையாகிறது. அதற்கு 2 ரூபாய் மானியமும் அதற்குமேல் தரப்படுகிறது. இரண்டே முக்கால் ரூபாய், இரண்டரை ரூபாய் என்கிற அளவுக்கெல்லாம் . தேயிலை, பச்சைத் தேயிலையினுடைய விலை இறங்கியிருக்கிறது என்று நாமே பிரச்சாரத்தைச் செய்ய வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.



குன்னூரில் 6 ரூபாய் அளவிற்கும், கோத்தகரி பகுதியில் 5 ரூபாய் அளவிற்கும், ஊட்டி, கூடலூர், பகுதிகளில் 4 ரூபாய் 75 பைசா என்கிற அளவிற்கும் பச்சைத் தேயிலை இருக்கிறது. இது ஏதோ இன்றைக்குத்தான் இப்படி ஆகிவிட்டது என்பதும் அல்ல. 1992, 1993, 1994ஆம் ஆண்டுகளில் இரண்டே முக்கால் ரூபாய், 3 ரூபாய், 3 ரூபாய் 50 பைசா, 4 ரூபாய்க்குக்கூட பச்சைத் தேயிலை விற்றிருக்கிறது. அதற்காக நானோ, இந்த அரசோ அதை உதாரணம் காட்டிச் சொல்வதற்காகச் சொல்லவில்லை இந்த விவசாயிகளினுடைய நிலைக்காக வேண்டி, அன்றைக்கிருந்த எந்த அரசும்கூட இதுமாதிரியான சலுகைகளை நிச்சயமாக வழங்கவில்லை. ஆனால், விவசாயிகளுக்கு 1993 இல் எப்படிப் பாதிப்பு ஏற்பட்டதோ அதேமாதிரி பாதிப்பு 1999ஆம் ஆண்டில் ஏற்பட்ட பொழுது, மிகக் கவனமாக நம்முடைய அரசு செயல்பட்டிருக்கிறது. இன்னும் அதற்கான நல்ல உதவிகளைச் செய்வதற்காக வேண்டி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதில் யாருக்கும் மாறுபட்ட கருத்து இல்லை.

இரஷ்ய நாட்டில் நீலகிரி தேயிலைத் தூளை மிக ஆர்வமாக வாங்கிக் கொண்டிருந்தார்கள். அது இரண்டாண்டுகளாக நிறுத்தப்பட்டு, கென்யா நாட்டிலிருந்து தேயிலைத் தூளை இரஷ்ய உபயோகத்திற்காக வாங்குவதுதான் இந்த விலை குறைவிற்கு மிக முக்கியமான காரணம் என்பதை அந்த விவசாயிகளும் உணர்ந்து இருக்கிறார்கள்.

விவசாயிகளைப் பொறுத்தவரையிலும் பலவிதமான போராட்டங்களை அவர்களாகவே நடத்தினார்கள். அதோடு பல அரசியல் கட்சிகள் அந்தப் போராட்டத்தைத் தங்கள் கையில் எடுத்துக் கொண்டதால் இதில் அரசியல் சாயம் பூசப்பட்டுவிட்டது என்பதை உணர்ந்த விவசாயிகள் தற்பொழுது போராட்டங்கள் செய்வதைவிட, அரசோடு தொடர்பு கொள்வதில், கவனத்தை ஈர்ப்பதில் எந்தெந்த வகையில் செயல்பட வேண்டும் என்பதில் தான் முனைப்பு காட்டி வருகிறார்கள்.

*முற்பகல் 11-45*

நம்முடைய மேன்மைக்குரிய மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. பழனிசாமி அவர்கள் பேசும்போது, மாவட்ட ஆட்சித் தலைவரிடம் Petition கொடுக்கப் போனவர்களுக்கு இந்த நிலை ஏற்பட்டது என்று சொன்னார்கள். அதில் ஒரு சின்னத் திருத்தம். காவல் துறை அத்துமீறி நடந்து கொண்டது என்று செய்தி வந்தவுடன், உடனடியாக நாங்களும்

கூட சென்னைக்குத் தொடர்பு கொண்டு, முதலமைச்சரிடத்தில் இந்தச் செய்தியைச் சொல்ல வேண்டும், அப்படி ஒரு நிகழ்வு நடந்து விட்டது என்று சொல்ல முயற்சித்த அதே நிமிடத்தில், அடுத்த தகவலும் வருகிறது; ஆர்.டி.ஓ. விசாரணைக்கு முதலமைச்சரே உத்தரவு போட்டார் என்ற செய்தியும் தொடுத்து வருகிறது. ஆகவே, எந்த ஒரு பகுதியில் யார் ஒருவர் பாதிக்கப்பட்டாலும் அவர்களைப் பாதுகாக்கிற அரசு, பாதுகாக்கிற முதலமைச்சர் கலைஞர் என்பதை அன்றைக்கே நிரூபித்தார்கள். ஆகவே, ஏதோ போலீசார் நடவடிக்கை எடுத்துவிட்டார்கள் என்பதற்காக (குறுக்கீடு)...

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அந்த R.D.O. முன்னிலையில்தான் போலீசார் தீவிரமாக அடித்தார்கள் தேயிலை விவசாயிகளை. அந்தத் தேயிலை விவசாயிகள் கேட்டது நீதி விசாரணை. ஆனால் கிடைத்ததோ ஆர்.டி.ஓ. விசாரணை.

**திரு. பா.மு. முபாரக்:** தலைவர் அவர்களே, இதுவும் ஒரு தவறான தகவல். பிரச்சினை நடந்த இடமே மிக்கேரி என்கிற இடம். (குறுக்கீடு) நீங்கள் போய்விட்டு வந்திருக்கலாம். அங்கே அடித்ததை... (குறுக்கீடு) இல்லை, இல்லை; ஒரே ஒரு விஷயம். (மணியடிக்கப்பெற்றது) போலீசார் விவசாயிகளைத் தாக்கியதைத் தி.மு.க.வும் கூட கண்டிக்கிறது. அதில் ஒன்றும் மாறுபட்ட கருத்து இல்லை. ஆனால், அந்த முறையைச் சொல்லும்போது, Petition கொடுக்க வந்தார்கள், அப்போது அடித்து விட்டார்களே என்று சொல்லி பிரச்சினையைத் திசை திருப்புவது சரியல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போதும், நீங்கள் அதோடு உரையை முடித்துக் கொள்ளுங்கள். அடுத்து டாக்டர் கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Please sit down. டாக்டர் கிருஷ்ணசாமி. (குறுக்கீடு) இல்லை. இல்லை, நீங்கள் உட்காருங்கள்.

**திரு. பா.மு. முபாரக்:** நான் முழுமையாக அதைச் சொல்லவில்லை என்றால் வேறு விதமாக அர்த்தம் ஆகிவிடும். தயவுசெய்து அனுமதியுங்கள். தேயிலைத் தொழிலாளர்களை போலீசார் அடித்தார்கள் என்று இங்கே சொல்வதே தவறு. ஒரு கருத்தை மட்டும் சொல்லிப் பதிய வைக்கிறேன். ஒரே ஒரு வேண்டுகோள்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதிலே புதிதாக என்ன வேண்டுகோள் வைக்கப்போகிறீர்கள்?

**திரு. பா.மு. முபாரக்:** நான் சரியாக அதைச் சொல்லவில்லை என்றால் அந்த ஊரில் பிரச்சினையாகிவிடும். ஒரே ஒரு வேண்டுகோள். அதை மட்டும் சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள்தான் தி.மு.க. வே அதைக் கண்டிக்கிறது என்று சொல்லிவிட்டீர்களே. அதற்கு மேல் என்ன? சொல்லுங்கள்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கிளாரிபிகேஷன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடிக்கட்டும். நீங்கள் உட்காருங்கள்.

**திரு. பா.மு. முபாரக்:** காவல் துறை வந்து நடவடிக்கை எடுத்ததை உடனடியாக இந்த அரசாங்கம் கண்டித்திருக்கிறது என்பதை நான் இங்கே பதிவு செய்கிறேன். அவ்வளவுதான். இதில் வேறு விஷயம் இல்லை. மேலும், இந்த அரசைப் பொறுத்தவரையில் அந்த விவசாயிகளுக்கு நிறைய உதவிகள் செய்ய வேண்டும் என்பதில் மிகுந்த கவனமாக இருக்கிறோம். அதேநேரத்தில் தேயிலைத் தூள் ஏல மையத்தில் கிலோ 55 ரூபாய்க்கு என்றைக்கு ஏலம் போகிறதோ அதுவரையிலும் அந்த மானியத்தைத் தருவதற்கு மத்திய அரசை வலியுறுத்த வேண்டும் என்பதை மட்டும் கேட்டு, உரையை நிறைவு செய்கிறேன்.

**திரு. ச. அழகிரி:** இன்றைக்கு இந்தச் சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் பச்சைத் தேயிலைக்கு ஏற்பட்டிருக்கிற விலை குறைவு பற்றியும் தேயிலைத் தொழிலாளர்களுக்கு, தேயிலை விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கிற சங்கடத்தைப் பற்றியும் நாங்கள் ஒரு கவன ஈர்ப்பு அறிவிப்பைக் கொண்டு வந்திருக்கிறோம். ஆனால், மாண்புமிகு திரு. முபாரக் அவர்கள், அரசாங்கம், அவர்களுக்கு என்ன நிவாரணம் அளித்திருக்கிறது என்பதைப் பற்றிய விளக்கத்தை இங்கே கொடுத்திருக்கிறார்கள். அப்படி விளக்கம் கொடுப்பதற்கு அமைச்சர் இருக்கிறபோது ஒரே பிரச்சினையை இரண்டு பேர் எடுத்துக் கொள்ளலாமா? அது மரபு ஆகுமா?

[2000 நவம்பர் 11

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதிலே ஒன்றும் கிளாரிபிக்கேஷனே கிடையாது, உட்காருங்கள். அவரும் சிறப்பு அறிவிப்பு கவன ஈர்ப்புக் கொடுத்திருக்கிறார். நான் அவரைப் பேச அனுமதித்திருக்கிறேன், நீங்கள் உட்காருங்கள்.

**திரு. ச. அழகிரி:** தாங்கள் தீர்ப்பு வழங்குங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் பார்த்துக் கொள்கிறேன். நான் அனுமதி கொடுத்துத்தான் அவர் பேசியிருக்கிறார். (குறுக்கீடு) தேயிலைப் பிரச்சினை குறித்து என்று கொடுத்தாலே போதும். அவரைப் பேச அனுமதிக்கலாம். டாக்டர் கிருஷ்ணசாமி பேசுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் பச்சைத் தேயிலை விலை வீழ்ச்சியாலும், தமிழ்நாடெங்கும் கொப்பரைத் தேங்காய் விலை வீழ்ச்சியாலும், அதேபோல நெல் கொள்முதல் விலை வீழ்ச்சியாலும் அவதியுறும் பல்லாயிரக்கணக்கான விவசாயிகளுடைய அவல நிலையைத் தங்கள் மூலம் இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வர நான் முதற்கண் விரும்புகிறேன். ஏற்கெனவே பல உறுப்பினர்களும் இந்தப் பிரச்சினையைப் பற்றி எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

இதில் நான் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புவதெல்லாம், பச்சைத் தேயிலையினுடைய விலை வீழ்ச்சி அடைந்தாலும் கூட, சில்லரை விலையில் விற்பனை செய்யப்படக்கூடிய தேயிலையினுடைய விலை அந்த அளவுக்கு வீழ்ச்சி அடையாதபோது, கொப்பரைத் தேங்காயினுடைய விலை வீழ்ச்சியடைந்தாலும் கூட எண்ணெய் விலை வீழ்ச்சியடையாதபோது, நெல்லுடைய விலை வீழ்ச்சியடைந்தாலும் கூட, அரிசியினுடைய விலை வீழ்ச்சியடையாத இந்தநிலை இந்த நாட்டிலே இருந்து கொண்டிருக்கிறது.

ஒட்டுமொத்தமாகப் பார்க்கிறபோது, ஏதோ இடைத்தரகர்களுடைய சதி வேலையின் காரணமாகத்தான் இப்படிப்பட்ட ஒரு நிகழ்ச்சி கூட தொடர்ந்து சில மாதங்களாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறதோ என்ற சந்தேகங்கள் எழுகின்றன. அதேபோல, உலகமயமாக்கல், தாராளமயமாக்கல், தனியார்மயமாக்கல் என்ற கொள்கைகள் தொடர்ந்து கடந்த பத்தாண்டுகளாக வலியுறுத்தப்படுகின்றபோது, நாங்கள் எல்லாம் அதற்கு எதிர்ப்புக் குரல் கொடுக்கிறபோது, பெரிய முதலாளிகளும் பெரிய நிலக்கொடையாளர்களும் பேசாமல் இருந்ததனுடைய விளைவுதான் இப்போது தேயிலையும், அரிசியும் கொப்பரைத் தேங்காயும் கூட இறக்குமதி செய்யப்படக்கூடிய அளவுக்கு நிலைமை



2000 நவம்பர் 11] [டாக்டர் க. கிருஷ்ணசாமி]

வளர்ந்திருக்கிறது. எனவே, இந்தப் பிரச்சினையிலே மாநில அரசுகளும் மத்திய அரசும் ஒரு தீர்க்கமான முடிவுக்கு வர வேண்டியவர்களாக இருக்கிறார்கள். குறிப்பாக, உற்பத்தி செய்யக்கூடிய விவசாய விளைபொருட்களுக்குத் தேசிய அளவிலே விலை நிர்ணயம் செய்யப்பட வேண்டியது மிக மிகக் கட்டாயம். எனவே, இந்தப் பிரச்சினையைத் தற்காலிகமான பிரச்சினையாக மட்டும் கருத்திலே கொள்ளாமல் ஒரு நிரந்தரமாக, நாடு எங்கிலும் இருக்கக்கூடிய விவசாயிகளுடைய நிலைமைகளைக் கருத்திலே கொண்டு உற்பத்தி செய்யக்கூடிய பொருட்களுக்கு விலை நிர்ணயம் செய்யக்கூடிய ஒரு கொள்கையை வகுத்திட மாநில அரசும், மத்திய அரசும் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று புதிய தமிழகம் கட்சியின் சார்பாக வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல கரும்புக்கு 10 சதவீதம் சர்க்கரைச் சத்து அளவு இருந்தால்தான் 1000 ரூபாய் (ஒரு டன்னுக்கு) என்று சொல்லியிருப்பதை, 8.5 சதவீதம் இருந்தாலே 1000 ரூபாய் (ஒரு டன்னுக்கு) கொடுப்பதையும் இந்த அரசு கணக்கிலே எடுத்துச் செயல்பட வேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். உற்பத்தி செய்யக்கூடிய விவசாய விளைபொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்கின்ற வகையிலும், பச்சைத் தேயிலையையும், கொப்பரைத் தேங்காயையும் எப்படி நெல்லை நாமே கொள்முதல் செய்கிறோமோ அதைப்போல அரசே இவற்றையும் கொள்முதல் செய்வதற்கு இந்த அரசு தக்க நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி அமைகிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் தேயிலை, கொப்பரைத் தேங்காய் விலை வீழ்ச்சி குறித்தும், கரும்புக்கு டன் ஒன்றுக்கு 1000 ரூபாய் என விலை உயர்த்தப்பட வேண்டும் என்பது குறித்தும், இங்கே ஒத்திவைப்புத் தீர்மான அறிவிப்பாக திரு. ஞானசேகரன், திரு. மு. அப்பாவு, அவர்களும், சிறப்புக் கவன ஈர்ப்பாக மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஜி.கே. மணி, திரு. பி.ஆர். சுந்தரம், திரு. லா. சந்தானம், திரு. சொ. கருப்பசாமி, திரு. இரா. விசுவநாதன், திரு. ஐ. கணேசன், திரு. கே. சுப்பராயன், திரு. சி. வேலாயுதன், டாக்டர் செல்லக்குமார், திரு. பா.மு. முபாரக், டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், திரு. ஜே. ஹேமச்சந்திரன், திரு. டி. மணி அவர்களும், கவன ஈர்ப்பாக மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சி. ஞானசேகரன், திரு. ஐ. கணேசன், திரு. பி.ஆர். சுந்தரம், திரு. ப. மோகன் கந்தசாமி அவர்களும் இங்கே கொடுத்திருக்கிறார்கள்.

முற்பகல் 11-50

இந்தத் தீர்மானத்தின் மீது தங்களுடைய அனுமதியைப் பெற்று, கட்சிகளின் சார்பில் மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. கருப்பசாமி அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு ஐ. கணேசன் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்தானம் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. வேலாயுதன அவர்களும், மாண்புமிகு உறுப்பினர், அரசுக் கொறடா முபாரக் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்களும் ஆக இங்கே 9 உறுப்பினர்கள் அவரவர்களுடைய கட்சிகளின் சார்பில் பல்வேறு கருத்துக்களை எடுத்து வைத்துப் பேசியிருக்கிறார்கள். ஒவ்வொருவரும் பேசிய அந்தக் கருத்துக்களுக்குப் பதில் சொல்லி இங்கே விளக்கம் தர வேண்டிய அவசியம் இல்லை என்று நான் கருதுகிறேன். காரணம், இது கவன ஈர்ப்புத் தீர்மானமாக, ஒத்திவைப்புத் தீர்மானமாக, சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானமாக இருக்கக்கூடிய காரணத்தினால், அரசாங்கத்தின் சார்பில் தர வேண்டிய பதிலாக அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள் குறித்து மட்டும் விளக்கம் தந்தால் போதும் என்று நான் கருதுகிறேன். அந்த அடிப்படையில், சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானமாக, பச்சைத் தேயிலைக்குக் கட்டுப்படியாகும் விலை கிடைக்காததால், உற்பத்தியாளர்களிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து இன்று கொண்டு வந்திருப்பதற்கு முதலில் நான் அரசின் சார்பில் விளக்கத்தைத் தர விரும்புகிறேன்.

நீலகிரி மாவட்டத்தில் சுமார் 36 ஆயிரம் எக்டேர் பரப்பளவில் தேயிலை பயிரிடப்படுகிறது. இந்தியா முழுவதும் உள்ள தேயிலைத் தோட்டங்களின் மொத்தப் பரப்பளவில் சுமார் 11 விழுக்காடு நீலகிரி மாவட்டத்தில் மட்டும் உள்ளது. சுமார் ஒரு இலட்சம் நீலகிரி விவசாயிகள் தேயிலைத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

மாநில அரசு அளித்த பல்வேறு சலுகைகள் மற்றும் ஊக்கத்தின் காரணமாக நீலகிரி மாவட்டத்தில் கடந்த 10 ஆண்டுகளில் தேயிலை பயிரிடப்படும் பரப்பளவு 36 விழுக்காடு அதிகரித்துள்ளது. இதே காலகட்டத்தில் இந்தியா முழுவதும் தேயிலை பயிரிடப்படும் நிலத்தின் பரப்பளவில் சுமார் 19 விழுக்காடுதான் உயர்ந்துள்ளது. அகில இந்திய அளவில் எக்டேர் ஒன்றுக்கு, ஆண்டு ஒன்றுக்கு சுமார் 2000 கிலோ கிராம் தேயிலைதான் உற்பத்தி ஆகிறது. ஆனால், நீலகிரி மாவட்டத்தில், எக்டேர் ஒன்றுக்கு, ஆண்டு ஒன்றுக்கு சுமார் 2500 கிலோ கிராம் உற்பத்தி ஆகிறது. ஆகவே, கடந்த சில ஆண்டுகளில் நீலகிரி மாவட்டத்தில் தேயிலை பயிரிடப்படும் பரப்பளவு அதிக அளவு உயர்ந்து வந்துள்ளது; உற்பத்தியும் அதிகரித்துள்ளது. நீலகிரி மாவட்டத்தில் தேயிலை பயிரிடுவோர்களில் பெரும்பாலானோர் சிறு விவசாயிகள். நீலகிரி மாவட்டத்தில் சிறு விவசாயிகள் உற்பத்தி செய்யும் தேயிலை C.T.C. வகையைச் சேர்ந்தது. இது பெருமளவில் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது.



முற்பகல் 11-55

நீலகிரி தேயிலைத் தூளைப் பொறுத்தவரையில் முன்னர் சோவியத் ரஷ்யாவின் பகுதியாக இருந்து தற்போது சுதந்திர நாடுகளாக உள்ள COMMONWEALTH OF INDEPENDENT STATES—C.I.S. என்று அழைக்கப்படும் நாடுகளுக்குத்தான் பெருமளவில் ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது. சோவியத் ரஷ்யா சிதைந்து, அந்த நாட்டின் பொருளாதார நிலை சீர்குலைந்த நிலையில், இந்தியாவிலிருந்து குறிப்பாக நீலகிரியிலிருந்து அப்பகுதிக்கு ஏற்றுமதி செய்யப்படும் தேயிலைக்குக் கிடைக்கும் விலையில் பெரும் சரிவு ஏற்பட்டுள்ளது. கென்யா போன்ற ஆப்ரிக்கா நாடுகளிலிருந்தும், சீனா மற்றும் இந்தோனேசியா போன்ற கிழக்காசிய நாடுகளிலிருந்தும் தேயிலைத் தூள் C.I.S நாடுகளுக்கு இந்தியத் தேயிலைத் தூளுக்குப் போட்டியாக ஏற்றுமதி செய்யப்பட்டு வருவதும் இந்தியத் தேயிலைத் தூளின் ஏற்றுமதி விலை குறைவுக்குக் காரணமாகும். உள்நாட்டுச் சந்தையில் சிறு விவசாயிகள் உற்பத்தி செய்யும் தேயிலைக்கு கிராக்கி குறைவு. எனவே, ஏற்றுமதி விலையில் சரிவு அடைந்து உள்நாட்டு கேட்பு உயர்வடையாத காரணத்தாலும் நீலகிரி தேயிலையின் தரம் குறைந்துள்ளதாலும், சிறு விவசாயிகளுக்கு பச்சைத் தேயிலைக்கு கிடைக்க வேண்டிய விலையில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. 1980-லிருந்து இந்த ஆண்டு வரை பச்சைத் தேயிலை விலையில் ஏற்றத்தாழ்வுகள் அடிக்கடி ஏற்பட்டுள்ளன. மிக அதிகபட்சமாக 1997-98 ஆம் ஆண்டில் பச்சைத் தேயிலையின் விலை ரூ.18 என்ற அளவுக்கு எட்டியது. திடீரென விலை குறைந்து கிலோவிற்கு ரூ.4 முதல் 5 வரை என்ற நிலையை அடைந்ததும் நீலகிரி தேயிலை சிறு விவசாயிகள் மத்தியில் பெரும் அதிருப்தி ஏற்பட்டது. 1993-94 ஆம் ஆண்டுகளில்கூட பச்சைத் தேயிலையின் விலை பெருமளவு வீழ்ச்சி அடைந்து, ஒரு கிலோ ரூபாய் 3 முதல் 4 வரை என்ற விலையை எட்டியபோதும், அன்றைய அரசு எந்தவித நிவாரண நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதை இங்கு நான் குறிப்பிட விரும்புகிறேன்.

[திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்] [2000 நவம்பர் 11

பச்சைத் தேயிலையின் விலை இந்த ஆண்டு வீழ்ச்சி அடைந்தவுடன் நீலகிரி மாவட்ட சிறு விவசாயிகள் பச்சைத் தேயிலைக்கு, ஒரு கிலோவிற்குக் குறைந்தது 15 ரூபாய் என்று விலை நிர்ணயம் செய்ய வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்து, அரசின் கவனத்தை ஈர்க்க கண்டனக் கூட்டங்கள், ஊர்வலங்கள் ஆகியவற்றை நடத்தினார்கள். சிறு விவசாயிகள் பிரச்சினைகளை ஆராய்ந்து அவற்றைக் களைவதற்கான பரிந்துரைகள் என்ன என அறிய, தமிழ்நாடு அரசு 21-5-2000 அன்று தொழில் துறை ஆணையரைத் தலைவராகக் கொண்டு, நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர், மத்திய தேயிலை வாரியத்தின் வட்டார முதன்மைச் செயல் அலுவலர் மற்றும் INCOSERVE நிர்வாக இயக்குநர் ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்ட ஒரு குழுவை அமைத்தது. இக்குழு, நீலகிரி மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளுக்கு நேரடியாகச் சென்று ஆய்வு செய்து, விவசாயிகள் மற்றும் தேயிலைத் தொழிலில் ஈடுபட்டுவரும் பல்வேறு தரப்பினரையும் கலந்தாலோசித்து ஓர் அறிக்கையை அரசுக்கு அளித்தது. அந்தக் குழு அளித்த பரிந்துரைகளின் அடிப்படையில் மாநில அரசும் மத்திய அரசும் பல்வேறு சலுகைகளை அறிவித்துள்ளன.

2-7-2000 அன்று மாநில அரசு, தேயிலைத் தொழிலின் விற்பனை வரியை 8 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாகவும், தேயிலைத் தூளுக்கான மத்திய விற்பனை வரியை 4 விழுக்காட்டிலிருந்து 2 விழுக்காடாகவும் குறைத்து ஆணையிட்டது. நீலகிரி மாவட்ட சிறு விவசாயிகள் உற்பத்தி செய்யும் தேயிலைத் தூளை தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகச் சாலைகள் மூலம் விற்பனை செய்வதற்கான ஏற்பாடுகளை மாநில அரசு செய்தது. மத்திய அரசு தனது பங்காக தேயிலைத் தூளின் மீதான இறக்குமதி வரியை, சுங்க வரியை 15 சதவிகிதத்திலிருந்து 35 சதவிகிதமாக உயர்த்தியது. இதனால் நீலகிரி தேயிலைத் தூளுக்குப் போட்டியாக வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் தேயிலைத் தூளின் அளவு ஓரளவு கட்டுப் படுத்தப்பட்டுள்ளது.

தேயிலைத் தூள் ரூபாய் 55-க்குக் குறைவாக ஏலத்தில் விற்கப்படும்போது ஒரு கிலோ தேயிலைத் தூளுக்கு ரூ.5 மானியமாக மே மாதத்திலிருந்து வழங்க மத்திய அரசு அறிவித்தது. இதன் மூலம் சிறு விவசாயிகளுக்கு பச்சைத் தேயிலைக்கு கிலோ ஒன்றுக்கு ரூ.1.25 வீதம் கூடுதலாக இப்பொழுது கிடைத்து வருகிறது. இவ்வாறு வழங்கப்படும் மானியத் தொகையை ரூபாய் 5-லிருந்து மேலும் உயர்த்தி



2000 நவம்பர் 11] [திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்]

அளிக்க வேண்டுமென்று தமிழக அரசு, மத்திய அரசைக் கேட்டுக் கொண்டதை ஏற்று, மத்திய அரசு 24-7-2000 அன்று, ஏற்கெனவே வழங்கி வந்த மானியத் தொகையை கிலோவுக்கு ரூ.8 என்ற அளவுக்கு உயர்த்தியது. இந்த உயர்வின் காரணமாக சிறு விவசாயிகளுக்கு பச்சைத் தேயிலையின் விலையில் கிலோ ஒன்றுக்கு ரூ.2 கூடுதலாக இப்பொழுது கிடைக்கின்றது. இதுவரை கிட்டத்தட்ட ரூ.3.57 கோடி அளவுக்கு சிறு விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் இந்தச் சலுகைத் திட்டம் தொடர வேண்டுமென்று தமிழக அரசின் சார்பில் மத்திய அரசுக்குக் கடிதம் எழுதப்பட்டுள்ளது.

நண்பகல் 12-00

வெளிநாடுகளுக்கு தேயிலைத் தூளை ஏற்றுமதி செய்யும் நிறுவனங்களும் மத்திய அரசின் ஏற்றுமதி வர்த்தக மண்டலங்களில் அமைந்துள்ள நிறுவனங்களும் தாங்கள் இறக்குமதி செய்யும் தேயிலைத் தூளை இந்தியாவில் விற்கக் கூடாது என்ற தடையை மத்திய அரசு விதித்தது. இந்த நடவடிக்கையின் காரணமாக இறக்குமதி செய்யப்பட்ட தேயிலைத் தூளின் மூலம் நீலகிரி தேயிலைத் தூளுக்கு போட்டி ஏற்பட்டு விலைக் குறைவு ஏற்படுவது இப்போது தடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு மாநில அரசும், மத்திய அரசும் அளித்துள்ள பல்வேறு சலுகைகளை உரிய தருணத்தில் சிறு விவசாயிகளுக்குக் கிடைப்பதை உறுதி செய்வதற்காக நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையிலே தேயிலை வாரியத்தின் வட்டார முதன்மை அலுவலர் மற்றும் முதலமைச்சர் செயலக துணைச் செயலாளர் ஆகியோரைக் கொண்ட ஒரு குழு 3-8-2000 அன்று அமைக்கப்பட்டது. இக்குழு அடிக்கடி ஆய்வு செய்து மத்திய, மாநில அரசுகள் வழங்கியுள்ள மானியம் மற்றும் வேறு சலுகைகள் சீராக விநியோகிக்கப்பட்டுள்ளனவா என்பதைக் கண்காணித்து வருகிறது.

நீலகிரி தேயிலைக்கு விலை வீழ்ச்சி ஏற்படுவதற்கு முக்கிய காரணத்தை அறிந்து சிறு விவசாயிகள் உற்பத்தி செய்யும் தேயிலைத் தூள் தரம் வாய்ந்ததாக இருக்க தக்க நடவடிக்கையாக இக்குழுவினால் நீலகிரித் தேயிலையின் தரத்தை உயர்த்துவதற்கு விழிப்பு முகாம்கள் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் நடத்தப்பட்டு வருகின்றன. நல்ல தரம் வாய்ந்த பச்சைத் தேயிலை விளையும் பகுதிகளில் நல்ல விலை கிடைத்துள்ளது என்பது மற்ற தேயிலை உற்பத்தி செய்யும் விவசாயிகளிடம் எடுத்துச் சொல்லப்பட்டு வருகிறது.

தேயிலைத் தூளில் கலப்படம் செய்வதைத் தடுப்பதற்கு திடீர் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகின்றது. நீலகிரி தேயிலைத் தூளுக்குக் கிடைக்கும் விலை ஏற்றுமதி சந்தையில், குறிப்பாக முன்னாள் சோவியத் யூனியன் பகுதிகளில் பெறப்படும் விலையையும், தேயிலையின் தரத்தையும் பொறுத்து அமைகிறது. நீலகிரி மாவட்ட விவசாயிகளிடையே நீலகிரித் தேயிலையின் விலை வீழ்ச்சிக்கு, இலங்கையிலிருந்து அதிக அளவுக்கு தேயிலை இறக்குமதி செய்யப்படுவதுதான் காரணம் என்ற கருத்தும் நிலவி வருகிறது. நீலகிரி மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் தேயிலை கிட்டத்தட்ட 90 சதவிகிதம் C.I.H.C. வகையைச் சார்ந்தது. இலங்கையில் தயாரிக்கப்படும் தேயிலை 98 சதவிகிதம் Orthodox வகையைச் சார்ந்ததாகும். நீலகிரி மாவட்டத்தில் ஆண்டொன்றுக்கு உற்பத்தி செய்யப்படும் தேயிலையின் அளவு சுமார் 8 கோடி கிலோ ஆகும். மேலும், இறக்குமதி செய்யப்படும் இலங்கைத் தேயிலையை உள்நாட்டில் விற்பதற்குத் தடை உள்ளது. எனவே, இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்படும் தேயிலைதான் நீலகிரி தேயிலையின் விலை குறைவுக்குக் காரணம் என்ற கூற்றில் உண்மை இல்லை.

இந்த அடிப்படையிலே தமிழக அரசு இப்பொழுது எடுத்திருக்கிற நடவடிக்கையைப் பொறுத்து அங்கே ஓரளவுக்கு இப்போது பச்சைத் தேயிலைக்குக் கூடுதலான விலை கிடைத்துக் கொண்டிருக்கிறது. ஆகவே, மேலும் இந்த விலை குறையாமல், கட்டுப்படியாகக்கூடிய விலை உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகளுக்குக் கிடைப்பதற்கு தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை நான் இங்கு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கொப்பரைத் தேங்காயைப் பொறுத்தவரை....

*பிற்பகல் 12-05*

**திரு. ச. அழகிரி:** Point of Clarification.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** இந்த மூன்றைப் பற்றிச் சொல்லி விடுகிறேன்.

**திரு. ச. அழகிரி:** தேயிலையைப் பற்றிக் கருத்துக் கூற வேண்டும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற கூட்டத் தொடரின்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தயாரிக்கப்பட்ட தேயிலையில் ஏற்பட்டிருக்கின்ற அந்த விற்பனையினுடைய தேக்கத்தைப்





போக்குவதற்காக இராணுவத்திற்கு பெருமளவு தேயிலையை விற்பனை செய்தால் பிரச்சினை தீர்வாகும் என்று சொன்னார்கள். அப்படி அவர்கள் சொல்லி 6 மாத காலம் ஆகிறது. இந்த 6 மாத காலத்திற்குள் இராணுவத்திற்கு எவ்வளவு தயாரிக்கப்பட்ட தேயிலைகள் விற்பனை செய்யப்பட்டிருக்கின்றன? அந்தக் கணக்கு அரசிடம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த விவரம் என்னிடத்தில் இல்லை. ஆனால், நம்முடைய தமிழகத்திலே உற்பத்தி ஆகக்கூடிய தேயிலைத் தூள், விற்பனையாவதற்கு, அது ஏற்றுமதி செய்வதாக இருந்தாலும் சரி அல்லது நம்முடைய தேவையை நிறைவு செய்து கொள்வதற்கோ, இராணுவத்திற்கோ அல்லது இன்னும் சொல்லப்போனால், இங்கேகூட நம்முடைய கூட்டுறவு நிறுவனம் மூலம் கூட விற்பனைக்கான ஏற்பாடுகளை எல்லாம் நாம் செய்து கொண்டிருக்கிறோம். ஆகவே, எந்த அளவிலே நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு வேண்டுமானால், நான் தெரிந்து சொல்கிறேன். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அறிவித்தால் அந்த அறிவிப்பு உடனடியாக நடவடிக்கையாக மாறும் என்பது அவருக்கே தெரியும். ஆகவே, அதைப் பற்றி உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரஷ்யாவிற்கு தமிழகத்திலிருந்து 10 கோடி ரூபாய்க்கு தேயிலை ஏற்றுமதி ஆகாமல் போனதற்கு என்ன காரணம்? அதனால்தான் இவ்வளவு பெரிய வீழ்ச்சி என்று சொல்லப்படுகிறது. அது உண்மையா? அதைப்பற்றி அமைச்சர் அவர்கள் என்ன பதில் சொல்லப் போகிறார்கள்?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சிறப்புக் கவன ஈர்ப்பில் கொப்பரைத் தேங்காய் பற்றி இங்கே குறிப்பிட விரும்புகின்றேன். தமிழக அரசின் சார்பில் தேங்காய் விலை வீழ்ச்சி ஏற்பட்டதைப் பற்றி, குறிப்பாக கொப்பரைத் தேங்காய் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டவுடன், மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லப்பட்டது. விவசாயிகளுக்கு, தேங்காய் உற்பத்தியாளர்களுக்கு, கட்டுப்படியான விலை கொடுக்கப்பட வேண்டும், நடவடிக்கை எடுக்க வேண்டும், மத்திய அரசு கொள்முதல் செய்ய வேண்டும் என்று எடுத்துச் சொன்னதற்கிணங்க தமிழகத்திலே

கொப்பரைத் தேங்காயை கொள்முதல் செய்வதற்கு மத்திய அரசாங்கம் அனுமதித்து அந்த அடிப்படையிலே எடுக்கப்பட்ட சில விவரங்களை இந்தப் பேரவைக்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

*பிற்பகல் 12-10*

எண்ணெய் வித்துக்களைப் பொறுத்தவரை நம் நாட்டில் தென்னை முக்கிய பங்காக எண்ணெய் வித்துக்களிலே இருக்கிறது. இந்தியாவில் 18.97 இலட்சம் எக்டரில் தென்னை பயிரிடப்படுகிறது. 130.88 கோடி தேங்காய் உற்பத்தி செய்யப்படுகிறது. இதில் தமிழகத்தில் 3.52 இலட்சம் எக்டேர் பரப்பில் தென்னை சாகுபடி செய்யப்பட்டு, 43.57 கோடி தேங்காய் உற்பத்தி செய்யப்படுகிறது. தென்னை உற்பத்தியினைப் பெருக்கவும், பரப்பினை அதிகரிக்கவும் மைய அரசால் தென்னை வாரியம் அமைக்கப்பட்டது போல, தமிழகத்திலே தென்னை உற்பத்தியில் காணப்படும் பிரச்சினைகளுக்கு தென்னையைச் சார்ந்த பொருட்களின் உற்பத்தி, அபிவிருத்தி மற்றும் ஏற்றுமதிக்கான வாய்ப்பு குறித்து நடவடிக்கை மேற்கொள்ள மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் தமிழகத்திலே தென்னை வளர்ச்சிக் குழுமம் ஒன்று சமீபத்திலே அமைக்கப்பட்டது. தேங்காய் விலை வீழ்ச்சியின் காரணமாக உற்பத்தி செய்யப்படும் தேங்காய்க்கு உரிய விலை கிடைக்க மைய அரசு கொப்பரைத் தேங்காய்க்கு ஆதரவு விலையாக கிலோ ஒன்றுக்கு ரூ.32.50 என நிர்ணயித்து அறிவித்தது. இது கரும்புக்காக இருந்தாலும், நெல்லுக்காக இருந்தாலும், இதுபோன்ற எண்ணெய் வித்துகளுக்காக இருந்தாலும், எந்தப் பொருளுக்கும் ஒரு ஆதரவு விலை மைய அரசாங்கத்தால்தான் நிர்ணயிக்க முடியுமே தவிர, மாநில அரசாங்கத்தால் நிர்ணயிக்க இயலாது. அந்த அடிப்படையிலே கிலோ ஒன்றுக்கு ரூ.32.50 என நிர்ணயம் செய்து மைய அரசாங்கத்தாலே அறிவிக்கப்பட்டது. இந்த கொப்பரைத் தேங்காய் தேசிய கூட்டுறவு விற்பனை இணையம் (National Agricultural Co-operative Marketing Federation of India) தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் மற்றும் பிரதம கூட்டுறவு விற்பனை சங்கங்கள் மூலமாக தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, கோயம்புத்தூர், திண்டுக்கல், விருதுநகர், தேனி, மதுரை, ஈரோடு, சேலம், தருமபுரி, இராமநாதபுரம், திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் 39 கொள்முதல் மையங்கள் மூலம் கொள்முதல் செய்யப்பட்டது. 6-11-2000 வரை மொத்தம் 58,616 மெட்ரிக் டன் கொப்பரைத் தேங்காய் 190 கோடி ரூபாய்க்குக் கொள்முதல் செய்யப்பட்டது. மைய அரசு அறிவித்த





ஆதரவு விலையான ரூ.32.50-க்கு குறைவாகவே கொள்முதல் செய்யப்படுவதாக வந்த புகாரின் அடிப்படையில் இது குறித்து (நானும் வேளாண்மைத் துறை அமைச்சர்) மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களும், விவசாயிகளும் கலந்து பேசி அரசுக்கு அறிக்கை அளிக்க வேண்டும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததற்கிணங்க 17-8-2000 அன்று பொள்ளாச்சியில் கூட்டம் ஒன்று நடைபெற்றது. அக்கூட்டத்தில் மாண்புமிகு இளைஞர் மற்றும் மாசுக்கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் திரு. பொங்கலூர் நா. பழனிசாமி அவர்களும், கிணத்துக்கடவு சட்டமன்ற உறுப்பினர் திரு. ம. சண்முகம், பொள்ளாச்சி சட்ட மன்ற உறுப்பினர் திரு. எஸ். ராஜு, வேளாண்மைத் துறை செயலாளர் திரு. நா. ஆதிமூலம், மாவட்ட ஆட்சித் தலைவர், வேளாண்மைத் துறை இயக்குநர் மற்றும் விவசாய சங்கப் பிரதிநிதிகளும் அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். கொப்பரை கொள்முதலில் விவசாயிகள் இலாபம் அடைவதற்குப் பதிலாக வியாபாரிகளே இலாபம் அடைகிறார்கள் என்றும் இந்நிலை நீடிக்கக்கூடாது என்றும், இங்கே நீங்கள் சொன்னதைப் போல, கேரள மாநிலத்தில் உள்ளது போலவே விவசாயிகளிடமிருந்து நேரடியாகக் கொள்முதல் செய்ய வேண்டுமென்ற கருத்துக்கள் எல்லாம் அங்கு எடுத்துச் சொல்லப்பட்டது. தற்போதுள்ள முறையில் வியாபாரிகள் உள்ளே நுழைந்துவிடக் கூடாது என்று நல்ல நோக்கத்தோடு, தேங்காய்களைக் கொண்டுவரும் விவசாயிகள், தாங்கள் விவசாயிகள்தான் என்பதற்கு—நாங்கள் இந்தக் கூட்டம் நடத்திய பிறகு, விவசாயிகள்தான் கொண்டு வருகிறார்கள் என்பதற்கு—கிராம நிர்வாக அலுவலர்கள், உதவி வேளாண்மை இயக்குநர்கள், இவர்கள் ஒவ்வொரு தோட்டத்திற்கும் சென்று எவ்வளவு நிலப் பரப்பிலே தென்னை வளர்த்து இருக்கிறார்கள், அதில் காய்ப்புக்கு வந்திருக்கின்ற மரங்கள் எத்தனை என்ற விவரங்களை ஒரு அடையாள அட்டையிலே எழுதி இந்த இரண்டு அதிகாரிகளும் கையொப்பம் போட்டு விவசாயிகளிடத்தில் கொடுக்க வேண்டும். பிறகு, காயைப் பறித்து அவர்கள் கொப்பரையாகத் தயாரித்து கொண்டு வருகிற போதும் இவர்கள் சான்றிதழ் வழங்க வேண்டும். அந்தச் சான்றிதழ் பெற்றவர்கள்தான் இதனைக் கொண்டு வந்து இங்கு விற்க வேண்டும் என்று ஒரு நடவடிக்கையை நாங்கள் அரசின் சார்பில், முதலமைச்சருடைய ஆலோசனையின்பேரில் எடுத்தோம். அந்த அடிப்படையிலே, அந்த அடையாள அட்டை கொண்டு வரவேண்டுமென்று நாங்கள் எடுத்த அந்த நடவடிக்கை பயனுள்ளதாக

இருப்பதாக விவசாயிகள் சொல்லுகிறார்கள். மேற்படி அடையாள அட்டையில் விவசாயின் பெயர், மொத்த நிலம், அதில் தென்னை விவசாயம் செய்துள்ள பரப்பளவு மற்றும் உற்பத்தியாகும் தேங்காயின் அளவு போன்றவைகள் எல்லாம் குறிப்பிடப்பட வேண்டும். இப்படிக் குறிப்பிட்டு, நாங்கள் கொடுத்துள்ள அடையாள அட்டையை இன்றைக்கும் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

*பிற்பகல் 12-15*

தென்னை விவசாயிகள் கொப்பரைத் தேங்காய்களை நேரடியாக கொள்முதல் மையங்களுக்கு கொண்டு வந்து விற்பனை செய்து இத்திட்டத்தின் முழுப்பயனையும் அடையுமாறு 'டான்பெட்' நிறுனத்தால் கேட்டுக்கொள்ளப்பட்டது.

மேலும், கேரள மாநிலத்தில் தேங்காயைக் கொள்முதல செய்வது போல நமது மாநிலத்திலும் கொள்முதல் செய்ய வேண்டும் என்று விவசாயிகள் கேட்டுக் கொண்டதற்கிணங்க அலுவலர் குழு ஒன்று கேரள மாநிலத்திற்கு அனுப்பப்பட்டு, அந்தக் குழு கேரள மாநிலத்திற்குச் சென்று, அங்கே எப்படி கொள்முதல் செய்கிறார்கள் என்பதை ஆய்வு செய்து, இப்போது ஓர் அறிக்கையைக் கொடுத்திருக்கின்றார்கள். அந்த அறிக்கையைத் தமிழக அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. நம்முடைய மாநிலத்திலே அந்த முறையை பின்பற்றினால், தேங்காய் உற்பத்தியாளர்களுக்கு சாதகமாக இருக்கும் என்ற அந்த முடிவு அல்லது எது நமக்கு பயனுள்ளவையாக இருக்கும் என்று கருதுகின்றோமோ அதை அமல்படுத்துவதில் இந்த அரசுக்கு எந்தவிதமான தயக்கமும் இல்லை. அதைப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். விரைவிலேயே ஒரு நல்ல முடிவை, அந்தக் குழு தந்த அறிக்கையின் மீது நடவடிக்கை எடுத்து நம்முடைய முதலமைச்சர் அறிவிப்பார் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தது சர்க்கரை, (குறுக்கிடு) கரும்பு கரும்பு, சர்க்கரை இரண்டும் ஒன்றுதான். கரும்பு இருந்தால்தான் சர்க்கரை. இந்த சட்டப் பேரவையில் மாண்புமிகு உறுப்பினர்கள் இன்று பேசியதைப் போல, நிதிநிலை அறிக்கையின் போதும், மானியக் கோரிக்கையின்போதும் அல்லது ஒத்திவைப்புத் தீர்மானங்களின்போதும் பல முறை பேசியிருக்கிறீர்கள். மக்கள் மத்தியிலும் பேசிக் கொண்டிருக்கிறோம். ஆகவே, இதைப்பற்றி நம்முடைய எதிர்கட்சித் தலைவர் அவர்கள் தொடக்கத்திலேயே கரும்புக்கு டன் ஒன்றுக்கு 1000 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று, அவர்கள் தங்களுடைய உரையிலேயே ஆற்றினார்கள்.





அரசு எடுத்திருக்கின்ற நடவடிக்கை, அரசுக்குள்ள சங்கடங்கள் இவைகளைச் சொல்வது என்னுடைய கடமை. அந்த அடிப்படையிலே கரும்புக்கு சட்டபூர்வ குறைந்தபட்ச விலையை மைய அரசுதான்—நான் சொல்வதைப்போல—ஒவ்வொரு ஆண்டும் அறிவிக்கிறது. அந்த விலை விவசாயிகளுக்கு கட்டுப்படியாகவில்லை என்று முறையிடுவதன்பேரில் ஒவ்வொரு ஆண்டும் கரும்புக்குக் கூடுதலாக மாநில அரசு பரிந்துரை விலை ஒன்றை அறிவிக்கிறது. இதற்கிணங்க 1996-97 ஆம் ஆண்டுக்கு மைய அரசு அறிவித்த சட்டபூர்வ குறைந்தபட்ச விலை ரூ.459/- ஆகும். அதனுடன் மாநில அரசு பரிந்துரை விலையாக ரூ.140/-ஐ சேர்த்து, மாநில அரசு விலையாக ரூ.599/- என தமிழக அரசு அறிவித்தது. அதேபோல் 1997-1998 ஆம் ஆண்டிற்கு மைய அரசு அறிவித்த சட்டபூர்வ குறைந்தபட்ச விலை ரூ.484.50, அதனுடன் ரூ.175.50-ஐ சேர்த்து ரூ.660/- என மாநில அரசு பரிந்துரை விலையாக செய்து அறிவித்தது.

1998-99 ஆம் ஆண்டு அரவைப் பருவத்திற்கு சட்டபூர்வ குறைந்தபட்ச விலை ரூ.527/- என மைய அரசு அறிவித்தது. ஆனால் 1998-99 ஆம் ஆண்டில் தனியார் துறை சர்க்கரை ஆலைகள் உயர்நீதிமன்றத்தில், தடையாணை பெற்றதன் காரணமாகக, கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளுக்கு மட்டும் மாநில அரசு மைய அரசு அறிவித்த சட்டபூர்வ குறைந்தபட்ச விலையான ரூ.527/- உடன் கூடுதலாக ரூ.175.50-ஐ சேர்த்து மொத்தம் ரூ.702.50 என அறிவித்தது. 1998-ல் தனியார் சர்க்கரை ஆலை உரிமையாளர்கள் சட்டபூர்வ விலையை மத்திய அரசாங்கம்தான் நிர்ணயிக்க முடியும், பரிந்துரை விலையை மாநில அரசாங்கம் நிர்ணயிப்பதற்கு உரிமையில்லை என்று தடை ஆணை பெற்றுவிட்டார்கள். அப்படி தடை ஆணை பெற்றுவிட்ட காரணத்தாலே மாநில அரசாங்கம் பரிந்துரை விலையை கூட்டுறவு மற்றும் பொதுத் துறை ஆலைகளான நம்முடைய ஆலைகளுக்கு, மட்டும்—இந்த ஆலைகளுக்காவது—கொடுக்க வேண்டுமென்று மாநில அரசாங்கத்தினுடைய பரிந்துரை விலையை டன் ஒன்றுக்கு ரூபாய் 702.50 என அறிவித்தது. அதுபோல 1999-2000 ஆண்டுக்கு மத்திய அரசு அறிவித்த சட்டபூர்வ குறைந்தபட்ச விலையான...

*பிற்பகல் 12-20*

**திரு. ச. அழகிரி:** பேரவைத் தலைவர் அவர்களே...

[2000 நவம்பர் 11

**HON. SPEAKER:** By frequent interruptions, you are not going to benefit; please sit down.

**திரு. ச. அழகிரி:** 1998-ல் தனியார் சர்க்கரை ஆலை உரிமையாளர்கள் தடை ஆணை பெற்றுவிட்டார்கள் என்றால், இரண்டாண்டு காலத்தில் அந்தத் தடை ஆணையை இரத்து செய்வதற்கு என்ன செய்தீர்கள் என்பதுதான் என்னுடைய கேள்வி. அந்தக் கேள்விக்கு பதில் (என்ன?)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பதில் சொல்லிவிட்டால் வாபஸ் வாங்கிக்கொள்கிறேன் என்கிறீர்களா?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** பதில் சொல்லிக் கொண்டிருக்கிறேன். பதில் சொல்லிவிட்டு கடைசியில் சொல்கிறேன். அதற்கும் பதில் சொல்கிறேன். (குறுக்கீடு) நல்ல எண்ணத்தோடு கேள்வி கேட்டிருக்கிறீர்கள். நான் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறேன். உடனே வெளியே போகிறேன் என்று சொன்னால் நல்லதல்ல. தொடக்கத்திலேயே வெளியே போவது அவ்வளவு நல்லதல்ல, உட்காருங்கள். எதிர்கட்சித் தலைவர் அவர்கள் போக மாட்டார்கள் என்று நினைக்கிறேன். அதுபோல் 1999-2000 ஆம் ஆண்டிற்கு மைய அரசு அறிவித்த சட்டபூர்வ குறைந்தபட்ச விலையான ரூ.561 உடன் கூடுதலாக, மாநில அரசு பரிந்துரை விலையாக ரூ.179-ஐ சேர்த்து பரிந்துரை விலையாக ரூ.740 என மாநில அரசு அறிவித்தது. மாநில அரசு பரிந்துரை விலை அறிவிக்கப்பட்டதால் 1 டன் கரும்புக்கு அதிகபட்சமாக ரூ.922.80 கிடைக்கக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டது. அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு இந்த விலை கிடைக்கும். சென்ற அரவைப் பருவத்திற்கு 8.5 சதவிகிதம் கட்டுமானம் கொண்ட ஒரு டன் கரும்புக்கு ரூ.740 என நிர்ணயம் செய்யப்பட்டதால், கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளுக்கு 1999-2000 ஆண்டுக்கு ரூ.168.80 கோடி இழப்பு ஏற்பட்டது. இந்த விலை நிர்ணயம் செய்யப்பட்டபோது ஆலைகளுக்கு ஏற்பட்ட இழப்பு 1999-2000 ஆண்டுக்கு ரூ.168.80 கோடி.

சர்க்கரை ஆலைகளில் அரவைத் திறனை கூடுதலாக்க முந்தைய ஆட்சிக் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டதால் 31-3-2000 வரை கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளுக்கு ஏற்பட்ட மொத்த நட்டம், முந்தைய ஆட்சி காலத்திலே ஆலை விரிவாக்கம் செய்வதாக எடுத்த நடவடிக்கையின் காரணத்தினால் ஏறபட்ட நட்டம் 676 கோடியே 66 இலட்ச ரூபாய். 2000-2001 ஆம் நிதியாண்டிற்கு இந்த இழப்பு சுமார் 147 கோடியே 28 இலடசம் ரூபாய் வரை இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



2000 நவம்பர் 11] [திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்]

அரசின் பரிந்துரை விலையை அளிப்பதற்கு கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளின் நிதிநிலைமை மோசமாக இருந்தபோதிலும் அரசு கரும்பு விவசாயிகளின் நலன் கருதி 1996-ஆம் ஆண்டிலிருந்து மாநில அரசின் பரிந்துரை விலையை அளிக்கும் வகையில் வழிவகை முன்பணக் கடன் வழங்கி வருகிறது. நிதி நிறுவனங்கள் மூலமாகவும், அரசு வழிவகைக் கடன் மூலமாகவும், 1999-2000 ஆண்டு வரையில் கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளுக்கு மொத்தம் ரூ.414 கோடியே 51 இலட்சம் வழங்கப்பட்டு, கரும்பு உற்பத்தியாளர்களுக்கு நாம் பணம் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். இக்கடன் தொகையைக்கூட சர்க்கரை ஆலைகள் அரசுக்குத் திருப்பிச் செலுத்தவில்லை.

பிற்பகல் 12-25

சொல்வதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம் என்பதற்கேற்ப, விவசாயிகளுக்கு ஒரு டன் கரும்புக்கு ரூபாய் ஆயிரம் அளிக்க வேண்டுமென்ற கோரிக்கையைப் படிப்படியாக உயர்த்தி அளித்துக் கொண்டிருக்கும் இவ்வரசு, கரும்பு உற்பத்திக்கு ஆகும் செலவினம், சர்க்கரை உற்பத்திக்காகும் செலவினம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டும், 10 விழுக்காடு சர்க்கரைக் கட்டுமானம் உள்ள ஒரு டன் கரும்புக்கு ரூபாய் ஆயிரம் அளிக்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி 8.5 விழுக்காடு சர்க்கரை கட்டுமானமுள்ள ஒரு டன் கரும்புக்கு ரூ.850-ம், 9 விழுக்காடு சர்க்கரை கட்டுமானம் உள்ள ஒரு டன் கரும்புக்கு ரூபாய் 900-மும், 9.5 விழுக்காடு சர்க்கரை கட்டுமானம் உள்ள ஒரு டன் கரும்புக்கு ரூ.950-ம், 10 விழுக்காட்டுக்கு மேல், ஒவ்வொரு விழுக்காடு கட்டுமானத்திற்கும், 0.1 விழுக்காடுக்கு ரூபாய் 10 வீதம், ஒவ்வொரு கட்டுமானத்திற்கும், கூடுதலாக வரும் என்ற வகையில் கட்டுமானத்திற்கு ஏற்ப விலை அளிக்கப்படும்.

இவ்வரசு பொறுப்பேற்றவுடன் 20 கிலோ மீட்டர் வரை விவசாயிகளே ஏற்றி வந்த வாகன வாடகையை 10 கிலோ மீட்டராகக் குறைந்துள்ளது. அதனால் கரும்பு விவசாயிகளுக்கு 10 கிலோ மீட்டருக்கு மேல் உள்ள வாகன வாடகையை சர்க்கரை ஆலைகளே ஏற்றுக்கொள்கின்றன. கீழ்க்கண்ட மானியங்களும் சர்க்கரை ஆலைகள், கரும்பு பயிரிடுவோருக்கு அளிக்கப்படுகின்றன.

போக்குவரத்து மானியம் ரூபாய் 22 ஒரு டன்னுக்கு, இரக மானியம் ரூ.5 ஒரு டன்னுக்கு, பயிர் பாதுகாப்பு மானியம் ரூ.8 ஒரு டன்னுக்கு, சர்க்கரை வழங்கும் மானியம் ரூபாய் 2 ஒரு டன்னுக்கு. மொத்தம் 37 ரூபாய் வழங்கப்படுகிறது.

*1999-2000* கரும்பு அரவைப் பருவத்தில் கீழ்க்காணும் சர்க்கரை ஆலைகளில் அரவை செய்யப்பட்ட கரும்பு, *10* சதவிகிதத்திற்கும் மேலான சர்க்கரைக் கட்டுமானம் கொண்டுள்ளது. இதற்கான பரிந்துரை விலை ரூ.*740*-ன் அடிப்படையில் சென்ற ஆண்டு அளிக்கப்பட்ட விலை விவரம் வருமாறு:

பொதுவாக என்ன சொல்கிறார்கள் என்றால் *10* விழுக்காடு கட்டுமானம் எங்கே வருகிறது. இதுயாரை ஏமாற்ற. அப்படி வரவில்லை என்று ஒரு குற்றச்சாட்டை இங்கே சொல்வது அவ்வளவு சரியல்ல. ஏனென்று சொன்னால், *10* விழுக்காடு கட்டுமானத்திற்கு மேலே இருந்தால் ஒரு புள்ளிக்கு *10* ரூபாய் என்றால்—இப்போது ஆயிரம் ரூபாய் கொடுக்கிறோம் என்றால்—அதற்கு மேலே போய்விடும். கொடுக்கத்தான் போகிறோம். அதுதான மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அறிவிப்பு. அந்த அடிப்படையிலே அமராவதி சர்க்கரை ஆலையில் *10.6* கட்டுமானம் வருகிறது. *10.6* கட்டுமானம் என்றால் முதலமைச்சர் அறிவித்தபடி ஆயிரம் ரூபாய் கொடுத்தால் போதுமா? இந்த *6* புள்ளிகளுக்கு *60* ரூபாயைச் சேர்த்து *1,060* ரூபாய் தரப்போகிறோம். அதைப்போல தருமபுரி சர்க்கரை ஆலையில் *10.4* கட்டுமானம் வருகிறது. *10.4* கட்டுமானம் வந்தால் *1,040* ரூபாய் தரப்போகிறோம். அதேபோல, திருப்பத்தூர் சர்க்கரை ஆலையில் *10.1* கட்டுமானம் வருகிறது, அப்படியானால் *1,010* ரூபாய் தரப்போகிறோம். சுப்பிரமணிய சிவா *10.3* கட்டுமானம்; *1,030* ரூபாய் தரப் போகிறோம். ஆகவே, சக்தி-*1*, பத்து புள்ளி கட்டுமானம், ராஜஸ்ரீ *10.1* கட்டுமானம். ஆக, ஆயிரம் ரூபாய் தருவோம் என்று சொல்வது; எங்கே எப்படி தரப்போகிறீர்கள்; பத்து புள்ளி கட்டுமானம் வராவிட்டால் எங்கே நீங்கள் தரப்போகிறீர்கள்; இது யாரை ஏமாற்ற என்று சொல்கிறீர்களே? இத்தனை ஆலைகள் இன்றைக்கு வருகின்றன. ஆகவே, இப்படி நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அறிவித்த அறிவிப்பு, இவற்றையெல்லாம் பார்த்து, ஆலைகளும் நட்டம் இல்லாமல் நடைபெற வேண்டும்; கரும்பு உற்பத்தியாளர்களுக்கும் நியாயமான விலை கிடைக்க வேண்டும் என்று சொன்னாலும்கூட, கரும்பு ஆலைகளை நடத்துவதே ஒரு பெரிய காரியம் என்ற அளவிற்கு, இன்றைக்கு உள்ள சூழ்நிலையிலே இருந்துகொண்டிருக்கிறோம். அரசாங்கம் கடனுதவி கொடுத்து இப்போது ஆலை நடைபெறுகிறது. கரும்பு உற்பத்தியாளர்கள் ஆலைக்குத் தந்த கரும்பிற்குப் பணம் கொடுக்க வேண்டிய சூழ்நிலை இருந்தாலும்கூட, அறிவித்த அறிவிப்பை இப்போது நிறைவேற்றக்கூடிய, வகையில் இந்தியாவிலேயே கரும்பு உற்பத்தியாளர்களுக்கு நியாயமான விலை



கிடைக்கச் செய்த முதலமைச்சர், நம்முடைய முதலமைச்சர் என்பதை நான் இங்கே எடுத்துச் சொல்லி (மேசையைத் தட்டும் ஒலி) இங்கே கொடுத்திருக்கின்ற இந்தத் தீர்மானங்களுக்கு நான் கொடுத்த இந்த விளக்கத்தை ஏற்று இதை வலியுறுத்த வேண்டாம். என்று கேட்டுக்கொள்கிறேன். தமிழக அரசைப் பொறுத்தவரைக்கும் விவசாயிகளின் பக்கம் இருக்கக்கூடிய அரசு, அதுவும் நம்முடைய முதலமைச்சர் இதிலே மிகுந்த அக்கறை உடையவராக இருக்கின்றார் என்பது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவருக்கும் மற்றவர்களுக்கும் தெரியும். ஆகவே, இந்த அளவோடு எனது உரையை நிறைவுசெய்து முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

*பிற்பகல் 12-30*

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் கொடுத்த கோரிக்கைகளில் ஒன்றைக்கூட இங்கே ஏற்றுக்கொள்வதாகத் தெரியவில்லை. உதாரணமாக தேயிலைக்கு நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகிரி அவர்கள் சொன்னதுபோல, முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலேயே, இராணுவத்திற்குக்கூட நாங்கள் ஏற்பாடு செய்கிறோம் என்று சொன்னார்கள். இதுவரை அப்படிப்பண்ணியிருந்தாலும்கூட, அப்படி அந்தத் தேயிலை விவசாயிகள் ஓரளவு திருப்தி அடைந்திருப்பார்கள். அதைப்போல கொப்பரைத் தேங்காய்க்குப் பதிலாக தேங்காயே வாங்க வேண்டுமென்று நாங்கள் கோரிக்கை வைத்தோம். அதற்கும் சரியான பதில் வரவில்லை. பரிசீலனை பண்ணியிருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். அந்த அளவிற்கு அதிலே திருப்தி அடைகிறேன் என்பதைக்கூட நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கு அடுத்ததாக, இந்த நாட்டில் இருக்கின்ற கரும்பு விவசாயிகளுக்கு *8.5* சதவீதம் கட்டுமானம் என்பதுதான் சராசரி. அதற்கு ஆயிரம் ரூபாய் தரவேண்டும். எங்கேயாவது ஒரு இடத்தில் ரொம்ப அதிகமாக வந்துவிட்டது என்றால், அதைப்போய் நீங்கள் பெரிதாக எடுத்துக்கொள்ளக்கூடாது. கரும்பு விவசாயிகளுக்கு *8.5* சதவீதம் கட்டுமானத்திற்கு ஆயிரம் ரூபாய் கொடுக்க வேண்டுமென்று நீங்கள் கொடுத்த உறுதிமொழியை இந்த அவையில் சொல்லாததால், ஏற்றுக் கொள்ளாத காரணத்தால் நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*(தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)*

[2000 நவம்பர் 11

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அநேகமாக நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், வேளாண்மைத் துறை பட்ஜெட் பதிலுரை மாதிரி சொல்லியிருக்கிறார்கள் வேளாண்மைத் துறை பட்ஜெட்டிற்கு எவ்வளவு நேரம் எடுத்துக்கொண்டு சொல்ல வேண்டுமோ, அவ்வளவு விளக்கம் சொல்லி இருக்கிறார்கள். இருந்தாலும், விவசாயிகளுக்கு எந்த நன்மையும் இல்லை. கூட்டுறவுக் கடனுடைய வட்டியை முழுமையாக ரத்து செய்ய வேண்டுமென்று மாண்புமிகு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏற்கெனவே நீங்கள் சொன்ன மாதிரி. இவ்வளவு நேரம் பதில் சொல்லிவிட்டார். நீங்கள் உங்கள் அதிருப்தியைச் சொல்லிவிட்டுப் போய்க்கொண்டு இருக்க வேண்டியதுதானே. இதற்கு நீங்கள் ஒரு பேச்சு பேச வேண்டுமா?

**திரு. ஜி. பழனிசாமி:** வெளிநடப்புச் செய்கிறோம்.

(இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்)

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. நீங்கள் வெளிநடப்பு செய்யுங்கள். (குறுக்கீடு) நான் இனிமேல் நேரம் கொடுக்க முடியாது. நீங்கள் வெளிநடப்பு செய்கிறேன் என்று சொல்வதற்கு மட்டும் அனுமதி தருகிறேன், அவ்வளவுதான்.

**திரு. பி.ஆர் சுந்தரம்:** என்ன, அவர்களுக்கு ஒரு சட்டம். எங்களுக்கு ஒரு சட்டமா? அவர்களும் எதிர்க்கட்சிகள்தான். எல்லாமே எதிர்க்கட்சிகள்தான். அவர்களுக்கு allow பண்ணினால், எனக்கும் ஒரு நிமிடம் நீங்கள் allow பண்ண வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்னிடம் முறைகேடாகப் பேசினால் நான் நடவடிக்கை எடுப்பேன். அவர்கள் யாரையும் பேசக்கூடாது என்று சொல்லிவிட்டேன். "எங்களுக்கு பதில் திருப்தியில்லை, எனவே வெளிநடப்பு செய்கிறோம்" என்று சொல்லிவிட்டுப் போய்க்கொண்டே இருங்கள்.

*பிற்பகல் 12-35*

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரோம் நகரம் தீப்பிடித்துக் கொண்டிருந்தபோது நீரோ மன்னன் பிடில் வாசித்த கதையாக இருக்கின்றது, அமைச்சருடைய பதிலுரை. தேர்தல் வாக்குறுதியிலே 8.5 சதவித கட்டுமானத்திற்கு நாங்கள் கொடுப்போம்



2000 நவம்பர் 11] [திரு. பி.ஆர். சுந்தரம்]

என்று நீங்கள் சொல்லவில்லை. நீங்கள் இப்போது அதை மாற்றி, இப்போது 10 சதவிகிதக் கட்டுமானம் என்று சொல்லியிருக்கிறீர்கள். நீங்கள் விவசாயிகளை வஞ்சித்து விட்டீர்கள். என்றைக்குமே இந்த அரசு உருப்படியாக விவசாயிகளுக்கு நன்மை செய்யாத காரணத்தினால், அனைத்திந்திய அண்ணா திமுக-வின் சார்பாக நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்).

## 3. அறிக்கைகள் அளித்தல்

### (அ) பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து அறிக்கைகள் அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். திரு. கும்மிடிப்பூண்டி கி. வேணு.

**திரு. கும்மிடிப்பூண்டி கி. வேணு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2000-2001ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 134 முதல் 138 வரையிலான 5 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

### (ஆ) சட்ட விதிகள் ஆய்வுக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் அறிக்கைகள் அளித்தல் திரு. ம. அப்துல் லத்தீப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2000-2001ஆம் ஆண்டிற்கான சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின், 20, 21, 22 மற்றும் 23ஆவது அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 4. அரசினர் சட்டமுன்வடிவு (திரும்பப் பெறுதல்)

### தமிழ்நாடு பொது நூலகங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவு (திரும்பப் பெறுதல்) மாண்புமிகு கல்வி அமைச்சர்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"இந்தக் கூட்டத் தொடரில், 9-11-2000ஆம் நாளன்று அறிமுகம் செய்த 2000 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது நூலகங்கள் (திருத்தச்)

[பேராசிரியர் திரு. க. அன்பழகன்] [2000 நவம்பர் 11

சட்டமுன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 42/2000) திரும்பப் பெற அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவை திரும்பப் பெறுகிறேன்.

## 5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள். (அறிமுகம் செய்தல்). 2000 ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2000 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



2000 நவம்பர் 11] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (ஆ) அழகப்பா பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2000 ஆண்டு அழகப்பா பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

"2000 ஆண்டு அழகப்பா பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## (இ) தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2000 ஆண்டு தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.*

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## (ஈ) தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2000 ஆண்டு தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.*



**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

*பிற்பகல் 12-40*

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

## (அ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (எட்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்).

*2000 ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (எட்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 29/2000). மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.*

[2000 நவம்பர் 11

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

*"2000 ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (எட்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 29/2000)@, ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து வருகின்ற நான்கு சட்டமுன்வடிவுகளும் பொது விற்பனை வரியைப் பற்றியது என்பதால் கருத்துக்களைக்கூற விரும்பும் உறுப்பினர்கள் 5 சட்டமுன்வடிவுகளைப் பற்றியும் கருத்துக்கள் கூறலாம். திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத் திருத்தத்தினால், ஒரு கோடி ரூபாய் வரை விற்பனை தொகையுள்ள வணிகர்கள் தங்களது கணக்குப் புத்தகங்களை, வணிக வரித் துறை அதிகாரிகளிடம் சமர்ப்பிக்க வேண்டியதில்லை. மாறாக, பட்டயக் கணக்காளர்களிடம் ஒப்படைத்து சான்று பெற்று return தாக்கல் செய்தால் போதுமானது என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. இதிலே என்ன விஷயம் என்றால் தற்போது பட்டயக் கணக்காளர்களிடமிருந்து சான்று பெற வேண்டுமென்ற சுய வரிவிதிப்புத் திட்டம வலியுறுத்தப்படுவதால், இதை மட்டுமே நம்பியிருக்கும் Sales Tax Practioners தமிழ்நாட்டில் சுமார் 20 ஆயிரம் பேருக்கு வேலையிழப்பு ஏற்படுகிறது. எனவே, இப்போது, இந்தச் சட்டத் திருத்தத்தோடு என்னுடைய ஆலோசனை, வணிகவியல் பட்டம் பெற்ற, விற்பனை வரிச்சட்டம் பிரிவு 52 (சி) இன்கீழ் பதிவு பெற்ற Sales Tax Practitioner-களுக்கும் சுய வரி விதிப்பு அறிக்கையில் சான்று அளிக்கும் வகையில் உரிய சட்டத்திருத்தத்தைக் கொண்டுவருவதுதான் ஏறத்தாழ 20 ஆயிரம் பேரை வேலை இழக்கிற ஆபத்திலிருந்து காப்பாற்ற உதவும். ஒரு காரியம் செய்கிற போது, பிறிதொரு பகுதியினருக்கு தீமை ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காக, மாநில அரசு அந்த 20 ஆயிரம் Sales Tax Practitioners பாதிக்கப்படாமல் பொருத்தமான சட்டத் திருத்தத்தை கொண்டு வர வேண்டும். அப்படி கொண்டு வரப்படுமா என்பதையும் கேட்டு அமருகிறேன்.

---

@ 7-11-2000 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



2000 நவம்பர் 11]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு ஜே. ஹேமச்சந்திரன்.

***திரு ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிற விற்பனை வரி திருத்தச் சட்டத்திலே என்ன சொல்லப்படுகிறது என்றால், இரப்பர் நடமாட்டம் நாட்டிலே, அதுவும் தமிழகத்திலே அதிகமாக ஏற்படுவதற்கு, இந்தத் திருத்தத்தைக் கொண்டு வரப்படுவதாக சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், இரப்பரைப் பொறுத்தவரையில் இப்போது கன்னியாகுமரி மாவட்டத்திலேதான் இரப்பர் அதிகமாக உற்பத்தியாகிறது. ஆனால், அங்கே இரப்பரை எடுத்துச் செலவதிலே மிகப்பெரிய முறைகேடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதற்கு பிரதானமான காரணம் என்னவென்றால், check-post-களிலே பெரிய ஊழல்கள் நடந்து கொண்டிருக்கின்றன. யதார்த்தமாக வியாபாரிகள் சட்டத்தினுடைய பலனை அனுபவிக்க முடியவில்லை. திருட்டுத்தனமாக இரப்பரை transport செய்கிறவர்களுக்கு, இந்த Check-post-களிலே இருக்கிற சில அதிகாரிகள் உடந்தையாக இருக்கிற ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. ஏற்கெனவே, இது சம்பந்தமாக வியாபாரிகள் representation கொடுத்து இருக்கிறார்கள். இதை முறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

அதேபோன்று இப்போது பல பொருட்களுக்கு Salex Tax சலுகை வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால், நம்முடைய நாட்டிலே Bio-Fertilizers என்று ஒரு முறையிலே Fertilizers உற்பத்தி செய்யப்படுகிறது. ஆனால் அண்டை மாநிலமான கேரளாவிலே Bio — Fertilizer-க்கு Sales tax விதிவிலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. மிகப்பெரிய விலை கொடுத்து Fertilizers வாங்க முடியாதவர்களுக்கு, இந்த Biol Fertilizers பல முறைகளிலே உதவியாகவும் அல்லது குறைந்த விலையிலே கிடைக்கிற வாய்ப்பும் இருக்கிறது. ஆகவே, அந்த வியாபாரத்தை வளர்க்கப்போகிற முறையிலே அவர்களுக்கும், இந்த Sales Tax தள்ளுபடி அல்லது அந்தச் சலுகையை அவர்களுக்கும் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-45*

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் பேசும்பொழுது விற்பனை வரி சம்பந்தமாக இப்பொழுது ஓய்வு பெற்ற அதிகாரிகள் ஒவ்வொரு அலுவலகத்திற்கும் சென்று அதற்கான கணக்குகளை ஒப்படைக்கிறார்கள், அதற்கு அவர்களுக்கு அனுமதி

அளிக்கப்பட்டிருக்கிறது, இப்பொழுது 20 இலட்சத்திற்கு மேற்பட்டவர்கள் சுய வேலை நிர்ணயத்தின் அடிப்படையில் Chartered Accountants-களிடம் வாங்கினாலே போதும் என்றிருப்பதினாலே Sales Tax practitioners வேலைவாய்ப்பை இழக்கிறார்கள் என்ற ஒரு குறைப்பாட்டை அவர்கள் சொன்னார்கள். நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன், அவர்கள் எந்த வேலைவாய்ப்பையும் இதுமாதிரி இழக்கவில்லை. இதே Chartered Accountant-டினுடைய சான்றிதழை அவர்களே பெற்று கூட கொடுக்கலாம். Cost Accountant-ன் மதிப்பீட்டை அவர்களே பெற்றுக்கூட கொடுக்கலாம். அவர்கள் வேலைவாய்ப்பை ஒன்றும் இழக்கவில்லை.

**திரு. கே. சுப்பராயன்:** நான் குறிப்பிட விரும்புவது நம்முடைய அண்டை மாநிலமான கர்நாடக மாநிலத்திலேகூட Sales Tax Practitioner-களும் சான்றளிக்க வழிவகை சட்டத்திலேயே திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது. கர்நாடக மாநிலத்திலே சட்டத் திருத்தம் செய்யப்பட்டு S.T.P.-யினர் Chartered Accountant போல சான்றளிக்கிற உரிமை வழங்கப்பட்டுள்ளது போல தமிழ்நாட்டிலும் வழங்கலாம் என்பதுதான் என்னுடைய ஆலோசனை.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** ஏற்கெனவே அவர்கள் வணிகத் துறையிலே தொழில் செய்வதற்கு பயிற்சி எடுத்து, ஓய்வுபெற்ற காலத்திற்குப் பிறகு அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதற்கான தகுதியும் அவர்களுக்கு இருக்கிறது.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குறுக்கீட்டிற்கு மன்னிக்கவும். ஓய்வு பெற்றவர்கள் மட்டும் செய்கிற வேலை அல்ல இது. B.Com. படித்தவர்கள் 52 (சி) பிரிவின்படி அனுமதி பெற்று பிராக்டிஸ் செய்கிறார்கள். அவர்கள் ரிட்டையர்டு ஆகி செய்கிற வேலை அல்ல. கிட்டத்தட்ட எல்லோருமே 40 வயதிற்கு உட்பட்டவர்கள்தான் இதைச் செய்கிறார்கள் என்பதை நான் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** ஓய்வு பெற்றவர்களும் வேலை செய்கிறார்கள். கல்வித் தகுதி பெற்றவர்களும் வேலை செய்கிறார்கள். கல்வித் தகுதி பெற்றவர்களுக்கும் இப்போதும் ஆட்சேபணை இல்லை. அரசினுடைய கொள்கை என்னவென்றால், வணிகப் பெருங்குடி மக்களுக்கு முறையை எளிதாக ஆக்க வேண்டும். 100 இலட்சம் ரூபாய் வரை விற்பனை உள்ளவர்களுக்கு எளிதாக்க வேண்டும்; Chartered



Accountant கொடுத்தால் போதும் என்று சொல்கிறோம். அதை Chartered Accountant மட்டும் போதாது, Cost Accountant-காரர்கள் எங்களுடைய வேலை பாதிக்கும் என்று சொன்னார்கள். சரி அவர்களுக்கும், உற்பத்தியாளரிடமிருந்து அவர்கள் பெற்றுக் கொடுத்தால் போதும் என்று எல்லோரையும் சமம், நிறைவுபடுத்துகிற வகையிலேதான் இந்தத் திருத்தம் அளிக்கப்படுகின்றதே தவிர இருக்கின்ற பயனை, உரிமையை பறிக்கின்ற வகையில், இழக்கின்ற வகையிலே இந்தத் திருத்தம் அமையவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இரப்பரைப் பொறுத்த வரையில் இதைப் பொதுவாக கடத்திச் செல்கின்ற பழக்கம் இருக்கின்ற காரணத்தினாலேதான் அதற்கு ஒரு அனுமதி வாங்க வேண்டும் என்று சொல்கிறோமே தவிர ஒரு நல்ல நோக்கத்தோடுதான் அதை செய்து இருக்கிறோமே தவிர அந்தத் தொழிலுக்கு ஊனம் ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு செய்யவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 6 முடிய திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 6 முடிய சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (எட்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 29/2000) நிறைவேற்றப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (ஆ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஒன்பதாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 2000 ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஒன்பதாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 30/2000), மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.





**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஒன்பதாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 30/2000) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிற்பகல் 12-50

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3 திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

---

@ 7-11-2000 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[பேரவைத் துணைத் தலைவர்] [2000 நவம்பர் 11

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

*"2000 ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஒன்பதாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 30/2000) நிறைவேற்றப்பெற பெறவேண்டும்"*
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்ட முன்வடிவு ஏற்கப்பட்டது.

## (இ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (பத்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 2000 ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (பத்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 31/2000), மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,



2000 நவம்பர் 11] [திரு. ஆலடி அருணா]

*"2000 ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (பத்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 31/2000)* @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3 திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

---

@7-11-2000 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[2000 நவம்பர் 11

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (பத்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 31/2000) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (ச) தமிழ்நாடு பொது விற்பனை வரி (பதினொன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 2000 ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (பதினொன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 45/2000), மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (பதினொன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 45/2000) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

@ 10-11-2000 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



2000 நவம்பர் 11] [பேரவைத் துணைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (பதினொன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 45/2000) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏறபோரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (உ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (பன்னிரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 2000 ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (பன்னிரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 46/2000). மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (பன்னிரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 46/2000), @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

@ 10-11-2000 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (பன்னிரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 46/2000) நிறைவேற்றப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

[2000 நவம்பர் 11

## (ஊ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 2000 ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 32/2000), மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 32/2000) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

பிற்பகல் 12-55

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை வரவேற்கிற அதேநேரத்தில் சில கருத்துக்களை நான் இந்தத் தலைப்பின்கீழ் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்திலே இந்தக் கேளிக்கை வரி கட்டி இப்போதெல்லாம் அரசாங்கத்தினுடைய அனுமதி பெற்று நடத்தப்படுகிற பல சினிமாக் கொட்டகைகளில் நீலப் படங்கள் காட்டப்படுகிற காரணத்தினாலே இன்று இளைய சமுதாயத்தினர் பல இடங்களிலே கெட்டுக் கொண்டிருக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிற காரணத்தினால் நீங்கள் அதைக் கட்டுப்படுத்துவதற்கும் ஆவன செய்ய வேண்டும். இல்லையென்று சொன்னால் அவர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய அந்த அரசு அனுமதியைக்கூட ரத்து செய்வதற்கு நீங்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது தமிழகத்திலே கேபிள் டிவி. என்பது ஒவ்வொரு வீட்டிற்கும் தேவைப்படக்கூடிய இன்றியமையாத ஒரு பொருளாக வந்து விட்டிருக்கிற காலகட்டத்தில் ஆங்காங்கே இருக்கக்கூடிய மாநகராட்சி மற்றும் நகராட்சியினுடைய அலுவலர்கள் அதை முன்னறிவிப்பு ஏதுமின்றி சென்று அவ்வப்போது கட் செய்து விடுகிறார்கள் என்ற ஒரு குறை

---

@ 7-11-2000 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



2000 நவம்பர் 11] [திரு. சி. ஞானசேகரன்]

இருக்கிறது. அதை வரைமுறைப்படுத்திவிட்டு பிறகு வேண்டுமானால் நீங்கள் அவற்றை முன்னறிவிப்பு கொடுத்துவிட்டு, என்ன, ஏது என்று விளக்கம் கேட்டுவிட்டு அந்த கேபிள் டிவி. யினுடைய இணைப்பைத் துண்டிப்பதற்கு நீங்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திரைப்பட அரங்குகளில் ஆபாசமான படங்கள் காட்டப்படுமானால் அதிகாரிகள் உடனடியாகத் தகுந்த நடவடிக்கைகளை எடுக்கிறார்கள்; உரிமையை இரத்து செய்கிறார்கள். எனவே, அதுபோன்ற தவறுககு அரசு எப்போதுமே இடம் கொடுப்பதில்லை என்பதை இந்த அவையிலே நாங்கள் திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்கிறோம். நம்முடைய காவலை மீறி, கட்டுப்பாட்டை மீறி சில நேரத்திலே எங்கேயாவது நடக்கலாம். அதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட குற்றச்சாட்டோடு அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவாரானால் எந்தத் தயக்கமும் காட்டாமல் அரசு அதன்மீது நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோன்று கேபிள் டிவியின் மூலமாகவும், இப்போது தொலைக்காட்சிகள் அதிகமாகப் பெருகிவிட்ட இந்த காலத்தில், அந்தத் தொழில்கூட ஒழுங்காக வரைமுறை செய்யப்பட்டிருக்கிறது. நல்ல முறையில் அதுவும் கண்காணிக்கப்பட்டு வருகிறது என்பதையும் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துகொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3 திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

[பேரவைத் துணைத் தலைவர்] [2000 நவம்பர் 11

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 32/2000) நிறைவேற்றப் பெறவேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.



2000 நவம்பர் 11]

**(ஏ) தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் இயக்கூர்திகள் நுழைவின் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து 2000 ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் இயக்கூர்திகள் நுழைவின் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு. (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 33/2000). மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே.

"2000 ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் இயக்கூர்திகள் நுழைவின் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு Ny PUß \± &TW+ Y Ny P¹ ßYzÍ G¡ 33/2000) @ ஆய்வுக்கு எடுத்துகொள்ளப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே 1990ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் இயக்கூர்திகள் நுழைவின் மீதான வரிச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கான இந்தச் சட்டமுன்வடிவை வரவேற்கிற அதேநேரத்தில், நீங்கள் இந்தச் சட்டத்தில் அதிகாரிகள் அந்த வாகனத்தினுடைய ரிக்கார்டுகள், கணக்குகளை எல்லாம் கேட்கிறபோது கொடுக்கவேண்டும்; அதை எப்படியெல்லாம் செயல்முறைப்படுத்த வேண்டுமென்ற விதிமுறைகளைச் சொல்லியிருக்கிறீர்கள். ஆனால், அதிகாரிகள் யார் என்று சொல்லாமல் சிலபேர் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதனால் பியூன்களெல்லாம்கூட மிரட்டி இதுபோன்று வாகனங்களின் கணக்குகளை கேட்கக்கூடிய ஒரு நிலை இன்று தமிழகத்தில் இருந்துகொண்டிருக்கிறது. யார் யார் அதிகாரிகள், யார் யார் இதுபோன்று கணக்குகளை அல்லது ரிக்கார்டுகளைக் கேட்க வேண்டுமென்று வரைமுறை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்திலே இப்போது போக்குவரத்து வாகனங்கள் உள்ளாட்சி அமைப்புப் பரப்பிடங்களில் செல்லுகிறபோது, அதை வரைமுறைப்படுத்தி,

@ 7-11-2000 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

வரி கேட்டு ரிக்கார்டுகளைக் கேட்கக்கூடிய உரிமையைப் பெற்றிருக்கிறது. அரசாங்கம் தமிழக அரசின் போக்குவரத்துக் கழகங்களால் நடத்தக்கூடிய 1,200 பேருந்துகள் இன்று தமிழகத்திலே ஆங்காங்கே பல போக்குவரத்துக் கழகங்களிலே சரியாக நடத்தப்படாமல் நிறுத்தப்பட்ட நிலையில் இருக்கின்றன. உதிரி பாகங்கள் இல்லாமல் அல்லது அதுபோன்று அவற்றைப் பழுது பார்க்கின்ற ஒரு தன்மை இல்லாமல் repair-ஆகி நிற்கின்றன. குறிப்பாக எங்களுடைய மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் ஒரு நாளைக்கு சென்னையிலிருந்து நாம் வேலூருக்குப் போவதற்குள்ளே 15 பஸ், 20 பஸ் பழுதுபட்டு நிற்பதைப் பார்க்கலாம். பல இடங்களிலே இப்படித் தமிழக அரசால் நடத்தக்கூடிய பேருந்துகள் டப்பா பஸ்களாக மாறி நின்று போய் இருக்கக்கூடிய நிலையை மாற்றியமைக்க வேண்டும் என்று நான் இங்கே வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்று பஸ் கட்டணத்தை 2001 வரை இந்த அரசு ஏற்றுவதில்லை என்று மாண்புமிகு முதல்வர் அவர்களே ஒரு அறிவிப்பை ஒரு உறுதிமொழியை இந்த அவையிலே தந்தார்கள். ஆனால் கடந்த 15 நாட்களாக தீபாவளி சமயத்திலிருந்து பார்த்தால் இப்போது தமிழக அரசு போக்குவரத்துக் கழகங்கள் எல்லாம் Express என்று ஒரு போர்டை போட்டுக் கொண்டு அல்லது அழகாக அதை ஆங்கிலத்தில் எழுதி வைத்து விட்டு இன்று கட்டணங்களை உயர்த்தி விட்டிருக்கிறார்கள். பஸ் கட்டணமே உயர்த்துவதில்லை என்று சொல்லி வாக்குறுதி அளித்திருக்கக்கூடிய முதலமைச்சருடைய வாக்கு எல்லாம் இப்போது எங்கு போனது? ஏன் தமிழக அரசு இப்போது இரட்டை வேடம் போட்டு திடீரென்று எக்ஸ்பிரஸ் என்று போட்டுவிட்டு வேலூரிலிருந்து—

*பிற்பகல் 1-00*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தவறான செய்தியை இப்போது சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். துரிதப் போக்குவரத்துக் கட்டணம் தான் துரிதப் போக்குவரத்திற்கு இருக்கிறதே தவிர, துரிதப் போக்குவரத்திற்கு கட்டணங்களை உயர்த்துவதில்லை. ஆனால் பொதுமக்கள் பல இடங்களிலே துரிதப் போக்குவரத்து வேண்டுமென்று வைத்த கோரிக்கையின் அடிப்படையிலே துரிதப் பேருந்துகளை இயக்கிக் கொண்டிருக்கிறோமே தவிர அதனால் எந்தவிதமான சாதாரண பேருந்தும் நிறுத்தப்படவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.





**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் ஒரு புதிய விளக்கத்தை இங்கே தந்தார்கள். மக்கள் துரிதப் போக்குவரத்து கேட்கிறார்கள். அதனால்தான் போட்டோம் என்று சொல்கிறார்கள். வேலூரிலிருந்து சென்னைக்கு வருவதற்கு Point to Point என்ற பஸ்ஸை இயக்குகிறோம். அதைவிடத் துரிதமாக உங்களுடைய விரைவுப் போக்குவரத்து வருவதில்லை—*(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர் சொல்லுவதையெல்லாம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற அவசியம் இல்லை. Point to Point-ஐ விட துரிதப் போக்குவரத்துக் கழகம் என்று போட்டால், நல்லது துரிதப் போக்குவரத்துக் கழகத்திற்கென்று சில விதிமுறைகள் இருக்கின்றன. கட்டணம் இருக்கிறது. அந்த அளவிலேதான் போடுகிறோம்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த விரைவுப் —

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் இந்த பில்லைப் பற்றிப் பேசுங்கள். இது இயக்கூர்திகள் மீதான நுழைவு வரி பற்றியது. நீங்கள் பஸ் கட்டணத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தால் எப்படி?

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே கூறினார்கள். Point to Point பேருந்து வேலூரிலிருந்து சென்னைக்கு 2½ மணி நேரத்தில் அல்லது 3 மணி நேரத்தில் வந்துவிடுகிறது. அதில் 31 ரூபாய் பஸ் கட்டணம். ஆனால் அதையே Express என்று போட்டு—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** Point of order *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள் எழுந்து நிற்கிறார்கள். அங்கே கொஞ்சம் பாருங்கள்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டத் திருத்தம் நுழைவு வரியைப் பற்றியது. பஸ் கட்டணத்திற்கும் இதற்கும் தொடர்பு இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான் அதைத்தான் அவருக்கு ஞாபகப்படுத்தினேன். அவர் திரும்பத் திரும்ப பஸ் கட்டணத்தைப் பற்றியே பேசிக் கொண்டிருக்கிறார்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** பஸ் கட்டணத்தைப் பற்றி இந்தப் பேரவை பல முறை விவாதித்து தெளிவாக விளக்கி விளம்பரமும் கொடுத்தாகிவிட்டது. தூங்குபவர்களைத் தான் நம்மாலே எழுப்பமுடியும். தூங்குபவரைப் போல நடிப்பவர்களை ஒருநாளும் நம்மால் எழுப்ப முடியாது.

**திரு. சி. ஞானசேகரன்:** நுழைவு வரி வாங்கக்கூடிய உரிமை பெற்றிருக்கிற அரசாங்கம் மக்களுக்கு இதுபோன்ற அதிகமான சுமையை ஏற்றுகிறீர்களே, ஏன் இப்படி இரட்டை வேடம் போடுகிறீர்கள் என்று தான் கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நியாயமாகப் பேசுங்கள். நீங்கள் பேசுவது மொட்டைத் தலைக்கும், முழங்காலுக்கும் முடிச்சு போடுகிற மாதிரி இருக்கிறது.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு திரு. ஞானசேகரன் அவர்கள் இந்த நுழைவு வரி பற்றி என்ன சொன்னார் என்பது இந்த அவைக்கே தெரியவில்லை. அதுபற்றிய கவனமும் அவர் செலுத்தவில்லை. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திகொண்டு பஸ் கட்டணத்தைப் பற்றி பேசினார். இது இயற்கையிலேயே நுழைவு வரியை நாம் விதிக்கும்போது அங்கே சிலர் ஏமாற்றிவிடுகிறார்கள். அந்த ஏமாற்றுதலை கண்டுபிடிப்பதற்காக அதிகாரிகளுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. அவ்வளவுதான். இதுதான் உண்மையே தவிர வேறு ஒன்றுமில்லை. இது ஒரு நல்ல நோக்கத்தோடுதான் இந்தத் திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அரசுக்கு வருகின்ற வரி ஒழுங்காக வரவேண்டும். ஏனென்றால் அங்கேயிருந்து வியாபாரிகளே இங்கே எடுத்து வந்து 10 வண்டி என்று சொல்லிவிட்டு 100 வண்டியை கொண்டு வருகிறார்கள். விற்பனைக்குப் பிறகுதான் நமக்கே தெரிய வருகிறது. அதையெல்லாம் பார்த்தால் தான் கண்டுபிடிக்கமுடியும். அந்த அதிகாரம் இப்போது கொடுக்கப்படுகிறது. அவ்வளவுதான்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன். (குறுக்கீடு) இன்னும் ஏகப்பட்ட பில்கள் இருக்கின்றன. திரு. ஞானசேகரன் உட்காருங்கள். திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** ஏகப்பட்ட பில்கள் இருந்தாலும்...



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அது பற்றி பிறகு பேசும்போது பேசிக்கொள்ளலாம், உட்காருங்கள். திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

*பிற்பகல் 1-05*

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தை வரவேற்கிறோம். அதாவது அரசுக்கு வர வேண்டிய வரி சரியான முறையிலே வசூலிக்கப்பட வேண்டும். அதுபற்றி எந்த மாற்று கருத்தும் இல்லை. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் சொன்னதைப்போல எந்த அதிகாரி என்பதைப் பொறுத்த அளவிலே யாருக்கு அந்த அதிகாரம் என்பதைப் பொறுத்த அளவிலே தெளிவாக சொல்லப்பட வேண்டும். அந்த முறையிலே தெளிவு இல்லாத நிலை இருக்கிறது. இப்போது இந்தச் சட்டத்தைப் பொறுத்த அளவிலே மோட்டார் வாகனங்கள் வைத்திருக்கிறவர்களுக்கு பாதிப்பான முறையிலே இந்தச் சட்டத்தை அமல்படுத்தக்கூடிய முறையிலே பிரச்சினைகள் வரக்கூடாது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். அதற்கு ஒரு எடுத்துக்காட்டு சொல்ல விரும்புகிறேன். மினி பஸ்கள் ஓட்டப்பட்ட பிறகு மினி பஸ்களுக்குப் போதுமான அளவுக்கு வருமானம் வரவில்லை என்ற காரணத்தினால் மினி பஸ்களுடைய சொந்தக்காரர்கள் காவல் துறையையும் அதேமாதிரி R.T.O. துறையையும் பயன்படுத்தி வேன்களை ஓட்டக்கூடியவர்களிடம் தகராறு பண்ணுகிறார்கள். எங்கள் மாவட்டத்தில் எல்லாம் நிறைய வேன்கள் ஓடுகின்றன. அங்கே பஸ்கள் இல்லாத ரூட்டில் வேன்கள் ஓடுகின்றன. காவல் துறை அதிகாரிகளும், அதேபோன்று R.T.O. துறை அதிகாரிகளும் போய் அவர்களிடம் தகராறு பண்ணுகிறார்கள். இது இந்த மினி பஸ் ஆட்களுக்காகவே இப்படி தகராறு பண்ணுகிறார்கள். "நீ இந்த record கொண்டு வா"; அல்லது ந்த record கொண்டு வா; அது வைக்கவில்லை, இது வைக்கவில்லை" என்று இப்படியெல்லாம் சொல்லி, தேவையற்ற முறையிலே அவர்களைத் தொந்தரவு பண்ணக்கூடிய ஒரு நிலை வந்திருக்கிறது. அதேமாதிரி அந்த வேன் ஓட்டுநர்களிடம் போய் "நீ ரெக்கார்டு கொண்டு வா" என்று சொல்லி அதிகாரிகள் அவர்களை முடமாக்கக்கூடிய முறையிலே நடைபெறுகிறது. ஒருவேளை இது அரசினுடைய அதிகாரிகள் மட்டத்திலே செய்யக்கூடிய misuse-ஓ என்னவோ எனக்குத் தெரியவில்லை. அரசு இதைப் பொறுத்தளவிலே

கவனிக்க வேண்டும். ஏனென்றால், அரசுதான் இந்த வேன்களை ஓட்டுவதற்கு உரிமம் வழங்கியிருக்கின்றது. ஏற்கெனவே இதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக்கூட கொண்டு வந்திருக்கிறோம். எங்களுடைய மாவட்டத்திலே நிறைய வேன்கள் ஓட்டப்படுகின்றன. அதனாலே நம்முடைய State Transport Corporation கூட பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அன்றைக்கு ஒன்றும் கண்டுகொள்ளவில்லை. ஆனால், இப்போது மினி பஸ் ஆட்களினுடைய தேவைக்கு, இப்படிப்பட்ட ஒரு இம்சைபடுத்தக்கூடிய ஒரு harassment என்ற ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. அதைத் தடுக்க வேண்டும். அதற்கு நிச்சயமாக நாம் இடம் கொடுக்கக்கூடாது.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, Maxi Cab Van என்பது வேறு; Mini bus என்பது வேறு. Maxi Cab என்று சொல்லி பர்மிட் வாங்கிக்கொண்டு டிக்கெட் போட்டு பயணிகளை ஏற்றுவது தவறு. அந்த மாதிரிதான் செய்துகொண்டிருக்கிறார்கள். திருநெல்வேலி, நாகர்கோவில் பகுதிகளிலே இதையே தொழிலாகச் செய்து கொண்டிருக்கிறார்கள். அது தவறுதான். அதைத்தான் செய்து கொண்டிருக்கிறார்கள். அந்தத் தவறு செய்வதன் மூலமாக, போக்குவரத்துக் கழகங்களுக்கும், Mini Bus permit வாங்கிக்கொண்டிருப்பவர்களுக்கும், அது இழப்பு உருவாக்குவதற்கு காரணங்களாக இருக்கின்றன. ஆகவேதான், பேருந்துகள் இயக்காத இடங்களில் சிறிய பேருந்துகள் இயக்குவதற்கு அரசு அனுமதி கொடுக்கிறபோது, அதைத்தான் இயக்க வேண்டுமே தவிர, Van-களிலே டிக்கெட் வாங்கிக்கொண்டு அவற்றை இயக்குவது தவறு. தவறைத் தட்டிக் கேட்பதிலே தவறு இருக்க முடியாது.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவாதம் ஒரு திசையிலேயிருந்து இன்னொரு திசைக்குப் போய்க்கொண்டிருக்கிறது. என்றாலும், இந்த அதிகாரத்தை நாங்கள் வைத்து இருப்பதற்குக் காரணம், இந்த நுழைவு வரியிலேயும் தவறு நடந்துகொண்டிருக்கிறது. எனவே, விற்பனைவரித் துறையிலே இருக்கின்ற அதிகாரிகளுக்கு அதிகாரம் இருக்க வேண்டும் என்று, எத்தனை வண்டிகள் இருக்கின்றன, என்ன இருக்கிறது என்பதையெல்லாம் சோதிக்கின்ற அதிகாரம் இருக்க வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் இந்தத் திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது. Mini bus மற்ற விஷயங்களுக்கு எல்லாம் சம்பந்தப்பட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். எனவே, இது தேவையான அதிகாரம்.





இதன் மூலம் கடத்தல், நுழைவு வரியிலே இருக்கின்ற தவறைத் தடுப்பதற்கு வழிவகை ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்பொழுது வாக்கெடுப்பு மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி பரப்பிடங்களுக்குள் இயக்கூர்திகள் நுழைவின் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 33/2000) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

**(ஏ) தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (செயற்பாட்டினைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்தல்) சட்டமுன்வடிவு 2000.**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, 2000 ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (செயற்பாட்டினைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்தல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 34/2000), மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (செயற்பாட்டினைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்தல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 34/2000)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

@7-11-2000 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.





**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1-8-2000-த்திலிருந்து அமல்படுத்தப்பட வேண்டிய ஒரு சட்டத்தை நிறுத்தி வைப்பதற்காக போடப்பட்ட அவசரச் சட்டத்திற்குப் பதிலாகக் கொண்டு வரப்படுகிற சட்டமுன்வடிவு இது. என்னுடைய ஐயம் எல்லாம் ஆகஸ்ட் 1ஆம் தேதி நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டிய இந்த ஒரு சட்டத்திற்கு, ஆகஸ்ட் 23 அன்றைக்கு ஒரு ஆர்டினன்ஸ் வந்திருக்கிறது. இந்த 23 நாட்களுக்குள் இப்படியொரு சட்டத்தை நிறுத்தி வைக்க வேண்டிய அளவிற்கான கோரிக்கைகள் என்ன வந்திருக்கின்றன என தெளிவுபடவில்லை.

பிற்பகல் 1-10

அந்த சட்டத்தையும் விதிகளையும் உள்ளபடியே செயல்படுத்துவதற்கு முன்னர் அவற்றை ஆய்வு செய்வதற்குக் கால அவகாசம் கோரி ஒருசில உள்ளாட்சி அமைப்புகளிடமிருந்து கோரிக்கைகள் வரப்பெற்றுள்ளன என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இந்தப் பேரவை தெரிந்துகொள்ள விரும்புவது, எத்தகைய கோரிக்கைகள் வரப்பெற்றிருக்கின்றன, அவர்கள் ஆய்வு செய்வதற்கு எவ்வளவு கால அவகாசத்தை மாநில அரசு கொடுக்க உள்ளது என்பதைப் பற்றிய விளக்கங்கள் இதில் இல்லை. என்னுடைய ஆலோசனையாக நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, இந்தப் பேரவை நிறைவேற்றி முடித்துவிட்ட சட்டம் இது. அதில் ஏதாவது ஆலோசனை செய்யவேண்டுமென்று சொன்னால் அரசியல் கட்சிகளையும் அழைத்துப் பேசி, அவர்கள் சொல்கிற கருத்துக்களையும் கேட்டுக்கொண்டு, உள்ளாட்சி அமைப்புகளின் கருத்துக்களையும் கேட்டுக் கொண்டு அதில் ஏதாவது திருத்தம் செய்வதுதான் பொருத்தம் என்பது என்னுடைய கருத்து.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் சொன்ன கருத்து, இடையிலே இருக்கிற இந்த 23 நாட்களுக்கு என்ன பலன் என்ற ஒன்றைக் கேட்டார். இதற்கு முன்னாலே இருந்த சட்டம் என்னென்ன வழிவகைகளைக் கூறுகிறதோ அவை எல்லாம் இதன் மூலம் அமல்படுத்தப்படும் என்று இதிலே அறிவித்திருக்கிறோம். எனவே அந்தப் பிரச்சினையில் ஒன்றும் கஷ்டம் இல்லை. அதற்குப் பிறகு ஏதாவது திருத்தப்படவேண்டுமென்று விரும்பினால், அனைத்து அரசியல்

கட்சிகளையும் அழைத்து வைத்துப் பேசி அந்தத் திருத்தங்களுக்கு ஒப்புதல் பெறுவது நியாயம் என்று குறிப்பிட்டிருக்கிறார். அதைப் பிறகு ஆலோசிக்கலாம். ஆகவே இந்தச் சட்டத் திருத்தத்தால் அதற்கு எந்தப் பிரச்சினையும் வராது. பிறகு ஆலோசிக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 6 முடிய திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 6 முடிய சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.





**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (செயற்பாட்டினைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்தல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 34/2000) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

**(ஐ) தமிழ்நாடு ஊராட்சிகள் (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 2000 ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 35/2000), மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு G¡ 35/2000) @ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

@ 7-11-2000 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[2000 நவம்பர் 11

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு பஞ்சாயத்து ஆக்ட்க்குக் கொண்டு வந்திருக்கக் கூடிய சட்டமுன்வடிவு திருத்தத்திற்கு ஒரு கருத்தை மட்டும் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். District Planning Committee கூட்டம் கூட்டுகிறபோது அதிலே சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மேயர் போன்ற மக்கள் பிரதிநிதிகள் எல்லாம் கலந்து கொள்ளலாம் என்ற நல்ல ஷரத்தை நீங்கள் இதிலே கொண்டு வந்திருக்கிறீர்கள். ஆனால் அதேநேரத்தில் ஏற்கெனவே இருந்த பழைய D.D.C. Act படி மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டம் என்று நடக்கிறபோது எல்லா அதிகாரிகளும் அங்கே ஒற்றாகக் கூடி அமர்வார்கள். அப்போது மக்கள் பிரதிநிதிகள் கேட்கிற வினாக்களுக்கு அவ்வப்போது அந்த அதிகாரிகளிடமிருந்து பதிலைப் பெறக்கூடிய ஒரு சூழ்நிலையும் முன்பு இருந்தது. அந்த மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தை நாம் இப்போது எடுத்துவிட்ட காரணத்தால் மாவட்ட பஞ்சாயத்து கூட்டங்களில் ஒரே ஒரு Additional Collector (Development) மட்டும்தான் வருகிறார். ஆகவே அங்கே எந்தவிதமான அதிகாரிகளிடமிருந்தும் தகுதியான, நேரடியான பதில்கள் எதுவும் கிடைக்காமல் அந்தந்தத் திட்டங்கள் அப்படியே நின்றுவிடுகின்றன. ஆகவே, எல்லா அதிகாரிகளும் இதிலே கலந்துகொண்டு, முன்பு நடந்த மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தைப் போன்று நடத்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று நான் வலியுறுத்தி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவரும் இதையே குறிப்பிட்டிருக்கிறார். மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டம் போன்று என்று குறிப்பிட்டிருக்கிறார். நான் அதை ஏற்கிறேன். மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் ஏற்கெனவே ஊரக வளர்ச்சித் துறை, நகர்ப்புற வளர்ச்சித் துறைக்குச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் யார் யார் கலந்துகொள்ளவேண்டுமென்று விரும்புகிறார்களோ, எது எது தேவையோ அத்தனை அதிகாரிகளும் அதில் கலந்துகொள்கிற அளவுக்கு அரசால் உத்தரவு அளிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.



2000 நவம்பர் 11]

*பிற்பகல் 1-15*

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த விளக்கத்திற்கு நன்றி. இந்தக் குழுவை அமைத்திருப்பது பாராட்டுக்குரியது. அதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நாங்கள் வரவேற்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் சொன்னதுபோல், இந்தக் குழுக் கூட்டங்களில் அனைத்து அதிகாரிகளும் பங்கு பெறுவது என்பதுதான் சிறப்புக்குரியதாக இருக்கும். அப்போதுதான் அந்த மாவட்டத்தினுடைய வளர்ச்சி நிலைமைகளை முழுமையாக ஆய்வு செய்து பரிசீலிப்பதற்கான வாய்ப்பு ஏற்படும்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு திருத்தம்தான் அது. அனைத்து அதிகாரிகளும் என்பதை நான் வரையறுத்துக் குறிப்பிடுகிறேன். இந்தத் துறைக்கு, இந்தப் பணிக்கு, எந்த அதிகாரிகள் தேவை என்று நாம் கருதுகிறோமோ, அந்த அதிகாரிகள் நிச்சயமாக அதில் கலந்து கொள்கிற ஏற்பாட்டை இந்த அரசு செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத் திருத்தத்தை வரவேற்கின்ற அதேநேரத்தில், மாவட்ட திட்டக் குழுவிலே சம்பந்தப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் மற்றும் இருக்கின்ற பேரூராட்சித் தலைவர்கள் எல்லாம் சிறப்பு அழைப்பாளர்களாகக் கருதப்படுவார்கள் என்று இருக்கிறது. முன்பு இருந்த மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலும் அந்த வளர்ச்சி மன்றத்தின் உறுப்பினர்களாகத்தான் சம்பந்தப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் இருக்கவேண்டும். ஆகவே, சிறப்பு அழைப்பாளர்கள் என்று இருப்பதை, அந்தத் திட்டக் குழுவினுடைய உறுப்பினர்களாக அவர்கள் ஆக்கப்படுவார்கள் என்ற திருத்தத்தை அரசு செய்ய வேண்டுமென்று நான் வலியுறுத்துகிறேன். பொதுவாக, மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே ஒரு Mini சட்டமன்றமாக, ஒரு சிறிய சட்டமன்றமாகவே, மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் விளங்கின. குறிப்பிட்ட காலவரையறைக்குள் அவை போட வேண்டுமென்று வரையறுக்க வேண்டும். அப்படி வரையறுக்கின்ற நேரத்திலே எந்தெந்தப்

பணிகள் எடுத்துக் கொள்ளப்படும் என்று அந்த வளர்ச்சி மன்றத்திற்கு அதிகாரங்கள் முழுமையாக அளிக்கப்பட வேண்டும். அப்போதுதான் overlapping அதாவது, ஒரே பணியினை ஊராட்சியும், ஊராட்சி ஒன்றியமும், சட்டமன்ற உறுப்பினருடைய மேம்பாட்டு நிதியிலிருந்து எடுக்கப்படுகின்ற நிலைமையும் என்ற நிலையில் இப்போது இருக்கின்ற நிலைமை போக்கப்படும். ஆகவே, இப்படிப்பட்ட நிலைகள் ஏற்படாத வண்ணம் இப்போது ஏற்படுத்தப்பட்டிருக்கிற இந்தத் திட்டக் குழுவிற்கு முழு அளவிலே அதிகாரங்கள் அளிக்கப்படவேண்டும் என்பதை வலியுறுத்தி, இந்தச் சட்டமுன்வடிவை வரவேற்கிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இவ்வளவு காலம் .....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. டி. மணி. (குறுக்கீடு) திரு. மணி அவர்கள் பேசி முடிக்கட்டும், பிறகு அமைச்சர் எல்லாவற்றிற்கும் ஒன்றாகப் பதில் சொல்லிக்கொள்ளலாம். திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தில் ஏற்கெனவே சட்டமன்ற உறுப்பினர்கள், அதுபோல ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் எல்லாம் சிறப்பு அழைப்பாளர்கள் என்று சொல்லியிருப்பதற்குப் பதிலாக நிரந்தரமாக அவர்கள் இருக்கக்கூடிய வாய்ப்பை உருவாக்க வேண்டும். அதுபோன்று அதிகாரிகள் நிரந்தரமாக இருக்க வேண்டும். ஏனென்றால், டி.டி.சி. இருந்த காலத்தில் டி.டி.சி.-இல் பெரிய அளவுக்கு அதிகாரிகள் கலந்து கொண்டாலும், பற்றாக்குறை இருந்து கொண்டே இருந்தது. இப்போது மாவட்டப் பஞ்சாயத்தினுடைய கூட்டத்திலே நம்மை எல்லாம் அழைத்தாலும்கூட, எந்த அதிகாரியைப் பார்த்துப் பேசுவது என்பது பெரிய பிரச்சினை. எனவே, இந்தக் குழுக்களில் முக்கியமான அதிகாரிகள், மின்சாரத் துறையானாலும் சரி, காவல் துறையானாலும் சரி, ரெவின்யூ துறையானாலும் சரி, அந்த மாவட்டத்தினுடைய மக்களுடைய பல்வேறு வளர்ச்சிக்கான பிரச்சினைகள் வருகின்றபோது, அதற்குப் பதிலைச் சொல்கின்ற வகையில், அந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு இந்த அதிகாரிகள் கட்டாயமாக அந்தக் கூட்டங்களிலே கலந்து கொள்வதற்கான ஏற்பாட்டை நாம் செய்வதுதான் முறையாக இருக்கும்.

அதேபோன்று காலதாமதம் ஆகின்றது. சமீப காலத்தில் நடந்த ஒரு சிறு நிகழ்ச்சியைச் சொல்ல விரும்புகிறேன். கடையாலுமூடு



பேரூராட்சியிலே ஒரு அணைப் பகுதி. சிற்றாறு அணை இரண்டு. ஒரு பகுதியிலே இருந்து அடுத்த பகுதிக்கு, இரண்டு ஊர்களுக்குப் போக வேண்டும். அந்தப் படகு 2½ மாதங்களுக்கு முன்னால் உடைந்து போய்விட்டது. மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கேட்டால் பஞ்சாயத்தில் பணம் இருக்கிறதா என்று கேளுங்கள் என்ற கேள்வி வந்தது. A.D. (Panchayat) அவர்களைக் கேட்போம் என்றால், A.D. (Panchayat) ஊரில் இல்லை என்ற தகவல் கிடைத்தது. 2½ மாதங்களாக அந்தக் கிராம மக்கள், குழந்தைகள் பள்ளிக்குப் போகமுடியாத ஒரு சூழ்நிலையை உருவாக்கினார்கள். அவர்கள் நெட்டையிலிருந்து கணபதிக்கல் ஏரியாவுக்குப் போகவேண்டும். எனவே, இப்படிப்பட்ட காலதாமதங்கள், அத்தியாவசியான பணிகளில் ஏற்படுவதைத் தவிர்க்கின்ற வகையில் — நம்முடைய மாவட்ட ஆட்சித் தலைவரானாலும், சரி, A.D. (Panchayat)-ஆக இருந்தாலும் சரி, சரியான பதிலைச் சொல்லியிருக்கலாம். — அதற்கான ஒரு ஏற்பாட்டைக்கூட இந்த அமைப்புகள் மூலம் உருவாக்க வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) அந்த வகையிலே இந்தச் சட்டத் திருத்தத்தைச் செய்ய வேண்டுமென்று சொல்லி, சில மாற்றங்களைக்கூட சிறப்பாகச் செய்ய வேண்டுமென்று சொல்லி, அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி அவர்கள் குறிப்பிடுகையில், அவர்கள் நிரந்தரச் சிறப்பு அழைப்பாளர்களாக இருக்க வேண்டுமென்று ஒரு கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அவர்கள் நிரந்தரமான சிறப்பு அழைப்பாளர்கள் என்று நாங்கள் குறிப்பிட்டிருக்கிறோம். எனவேதான் நிரந்தரச் சிறப்பு. எவ்வளவு காலம் நமக்குப் பதவி இருக்கிறதோ அவ்வளவு காலம்வரையில் அந்த மன்றத்தில் நிச்சயமாகத் தொடர்ந்து நீடிக்கலாம் சிறப்பு அழைப்பாளர்களாக.

இன்னொன்று, இரண்டு பேர்களிடத்திலே சொன்னவர், என்னிடத்திலேயும் சொல்லியிருக்கலாம். மூன்றாவது நபரிடத்திலும் சொல்லியிருக்கலாம். அதற்கு ஏதாவது ஒரு தீர்வு கண்டிருக்கலாம். நான் ஆரம்பத்திலே குறிப்பிட்டது, இப்படிப்பட்ட பணிகளை நிறைவேற்றுகின்ற, தகுதி படைத்த துறை அலுவலர்கள் யாரோ, அவர்கள் அனைவரும் அதில் கலந்து கொள்கிற ஒரு ஏற்பாட்டை நிச்சயமாகச் செய்வோம். அதற்குத்தான் எனக்கு அதிகாரம் இருக்கிறது.

வேறு துறையைச் சார்ந்த, அனைத்துத் துறைகளையும் அதிகாரிகளையும் கலந்து கொள்ளச் செய்கிற சட்டத் திருத்தத்தைச் செய்வதற்கு எனக்கு அதிகாரம் இல்லை. ஆகவே, தயவுசெய்து, இதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-20*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

*பிரிவுகள் 2 மற்றும் 3 திருத்தங்கள் இல்லை.*

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.





**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 35/2000) நிறைவேற்றப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

### (ஏ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *2000 ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 47/2000), மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 47/2000)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

---

@ 10-11-2000 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 12 முடிய திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 12 முடிய சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,



"2000 ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 47/2000) நிறைவேற்றப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

**(ழ) தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் [தொழிலாளர்களுக்கு நிரந்தர தகுநிலை (அந்தஸ்து) வழங்குதல்] திருத்தச் சட்டமுன்வடிவு, 2000**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 2000 ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் [தொழிலாளர்களுக்கு நிரந்தர தகுநிலை (அந்தஸ்து) வழங்குதல்] திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 36/2000), மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் [தொழிலாளர்களுக்கு நிரந்தர தகுநிலை (அந்தஸ்து) வழங்குதல்] திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 36/2000) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

---

@ 7-11-2000 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தை வரவேற்கிறோம். பதிலி தொழிலாளர்களுக்கு அந்த உரிமைகள் வழங்குவதற்கு கொண்டு வந்திருக்கிற சட்டம் என்ற முறையிலே அதை வரவேற்கிற நேரத்திலே 4(b)ஐ பொறுத்தளவிலே இப்போது Supervisor capacity-யில் இருக்கக்கூடியவர்களுக்கு 1000 ரூபாய் சம்பளம் என்று போட்டிருக்கிறது. இப்போது 1000 ரூபாய் சம்பளம் என்பது சாதாரணமாக உள்ள ஒன்று. ஆகவே, அந்த 1000 ரூபாய் என்று சம்பளம் வாங்குகிறவர்களை Supervisors என்ற முறையிலே சில இடங்களிலே சொல்கிறார்களே தவிர, அவர்களுக்கு எந்தவிதமான Supervise செய்வதற்கும் அதிகாரங்கள் இருக்காது. அதனாலே ஆயிரம் ரூபாய் என்பதை 5,000 ரூபாய் என்ற முறையிலே மாற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையென்றால், Supervisors அல்ல, சாதாரண தொழிலாளிகள் பாதிக்கப்படுகிற நிலை ஏற்படுகிறது. இன்று, பல நிறுவனங்களிலே இப்படி பல தில்லுமுல்லுகளைச் செய்து, தொழிலாளிகளை direct recruitee, daily rated worker, contract worker, casual worker இந்த முறையிலே எல்லாம் பெயர்களை இப்போது சூட்டி அவர்களுக்கு சட்டப்படியாகக் கிடைக்க வேண்டிய உரிமைகள் மறுக்கப்படுகிற நிலை இருந்து கொண்டிருக்கிறது; இதனை மாண்புமிகு அமைச்சர் அவர்களும் நன்கு அறிவார்கள். ஆகவே, இந்த ஆயிரம் ரூபாய் என்ற வரம்பு பெரிய பாதிப்பை தொழிலாளிகளுக்கு ஏற்படுத்தும். அதை மாற்றுவதற்கு சட்டம் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

*பிற்பகல் 1-25*

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தோழர் ஹேமச்சந்திரன் அவர்கள் சொன்ன அந்த விஷயத்தை நான் வழிமொழிகின்றேன். ஆயிரம் ரூபாய் என்பது நடைமுறையில் பலன் அளிக்கிற ஒரு விஷயமாக இல்லை. இரண்டாவதாக, நான் குறிப்பிட விரும்புவது, இந்தச் சட்டத் திருத்தம் நல்ல நோக்கத்தோடுதான் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அதையும் நான் வரவேற்கின்றேன். ஆனால் பதிலி workers என்றால், இப்பொழுது தமிழ்நாட்டில் முதலாளிகள், தொழிலாளிகளை வேலை வாங்குகிறபோது பல பெயர்களை தப்பித்துக்கொள்வதற்காக வைத்துக்கொள்கிறார்கள். சட்டத்தின் சந்து பொந்துகளையும், இண்டு இடுக்குகளையும் மிக நுட்பமாகப் பயன்படுத்துவதில் கைதேர்ந்தவர்கள் தமிழ்நாட்டு முதலாளிகள். எனவே அவர்கள் இந்தச் சட்டத்தை மீறி தவறு





செய்வதற்கு வழி ஏற்படாத வண்ணம் உஷார்த்தனம் இருக்கவேண்டும் என்பதோடு, இந்தச் சட்டம் 1981 ஆம் ஆண்டு வந்தது. 19 ஆண்டுக் காலம் ஆகிவிட்டது. நான் இதில் ஒரு வேதனையை, வருத்தத்தை இந்த நேரத்திலே வெளிப்படுத்த விரும்புகிறேன்.

ஒரு சட்டம் கொண்டு வரப்படுவதன் நோக்கமே யாருக்காக சட்டம் கொண்டு வரப்படுகிறதோ அவர்கள் அவற்றை அனுபவிக்க வேண்டும் என்கிற மெய்யான நோக்கத்தோடுதான் அவை கொண்டு வரப்படுகின்றன. ஆனால், யாருக்காகக் கொண்டு வரப்படுகிறதோ அவர்களால் அனுபவிக்கப்படவேயில்லை என்பதுதான் உண்மையான அனுபவம். ஆனால் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, 19 வருடங்களாக பல பகுதிகளில் 480 நாட்கள் தொடர்ந்து வேலை செய்த எந்தத் தொழிலாளியையும் எந்த நிர்வாகமும் permanent செய்யவேயில்லை. எனவே இந்த விஷயத்தில் தொழிற்சங்கங்களை உள்ளடக்கிய ஒரு குழுவை நியமித்து, இந்தச் சட்ட நிறைவேற்றம் தமிழ்நாட்டில் எப்படி இருக்கிறது என்பதை ஆய்வு செய்வதற்கு ஒரு குழுவையும் அமைக்கவேண்டும் என்பதையும் இந்த நேரத்தில் நான் வலியுறுத்துகிறேன்.

அரசாங்கம் உண்மையிலேயே இந்தச் சட்டத்தினுடைய சாரங்களை தொழிலாளிகள் அனுபவிக்க வேண்டுமென்று கருதுவது அந்தரங்க சுத்தியான உண்மையானால், இப்படி ஒரு குழுவை தொழிற்சங்க தரப்பில் போடுவதுதான் பொருத்தமாக இருக்கும் என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தை வரவேற்கக்கூடிய நான் ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஹேமச்சந்திரன், திரு. சுப்பராயன் ஆகியோர் சொன்ன கருத்தையே வலியுறுத்த விரும்புகிறேன். இதில் supervisor என்ற தகுதியை நிர்ணயிப்பதற்கு ஆயிரம் ரூபாய்க்கு மேலாக சம்பளம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே பல தொழிலாளர் சட்டங்களில், குறிப்பாக, தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் ஆலைத் தொழிலாளர்கள் சட்டங்களில் இதுபோல குறிப்பிட்டதன் விளைவு பல தொழிலாளர்கள் பல சலுகைகளை இழந்து இருக்கிறார்கள். தோட்டத் தொழிலாளர்களைப் பொறுத்தமட்டில், ஏற்கெனவே 1951 ஆம் ஆண்டு சட்டத்தின்படி 750 ரூபாய்க்கு மேலாகப் பெறக்கூடியவர்கள்

யாரும் தொழிலாளிகளாகவே கருத முடியாத ஒரு நிலை இருக்கிறது. அதன் காரணமாக அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய சலுகைகளெல்லாம் போய்விடுகின்றன. எனவே, இந்த ஆயிரம் ரூபாய் என்பது 5 ஆயிரம் ரூபாய் அல்லது 7 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படவேண்டும். அதுவும் ஆண்டுக்கு ஒரு முறை உயர்த்தப்படக்கூடியதாக அல்லது பரிசீலிக்கப்படுவதாகவும் இருக்கவேண்டும். அதுபோல இரண்டு வருடங்களில் 480 நாட்கள் வேலை செய்த அனைத்து தொழிலாளர்களையும் நிரந்தரப்படுத்துவதாக, அது தோட்டத் தொழிலாக அல்லது வேறு எந்தத் தொழிற்சாலையாக இருந்தாலும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்பதை இதிலே வலியுறுத்தி அமர்கிறேன்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் இதனுடைய நோக்கத்தை வரவேற்றிருக்கிறார்கள். நிரந்தரப் பணியாளர்களுக்குக் கிடைக்கக்கூடிய சலுகைகள் இதுபோன்ற பதிலிப் பணியாளர்களுக்கும் கிடைக்கவேண்டுமென்ற நோக்கத்தோடு அரசு இந்தத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறது. மற்றபடி இதிலே நடைமுறையிலே உள்ள சிக்கல்களையெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவற்றையெல்லாம் வருங்காலங்களில் அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.





பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களுக்கு நிரந்தர தகுநிலை (அந்தஸ்து) வழங்குதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 36/2000) நிறைவேற்றப்பெறவேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

[பேரவைத் துணைத் தலைவர்] [2000 நவம்பர் 11

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

**(ஔ) தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய மற்றும் பண்டிகை விடுமுறைகள்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2000.**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *2000 ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய மற்றும் பண்டிகை விடுமுறைகள்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 37/2000),* மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"*2000 ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய மற்றும் பண்டிகை விடுமுறைகள்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 37/2000)* @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"
எனக் கோருகிறேன்.

*பிற்பகல் 1-30*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியோடு அலுவல் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது. திரு ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று, இந்தச் சட்டத்தை மீறுகின்ற நிருவாகிகள்மீது சட்டப்படி நடவடிக்கை எடுப்பதற்கு இடம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. அந்த நடவடிக்கை எடுப்பதிலே காலதாமதம் ஏற்படுகிறது என்ற

@7-11-2000 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



2000 நவம்பர் 11] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

காரணத்தினால் நம்முடைய மாநில Labour Commissioner அவர்களுக்கு compound பண்ணுவதற்கான அதிகாரத்தைக் கொடுக்கிற ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். நான், அந்தத் திருத்தத்தைப் பொறுத்தவரையிலே ஆட்சேபிக்கவில்லை. ஆனால், அந்தச் சட்டத்திலே இப்படி compound பண்ணப்படுகிற அந்த நிருவாகி மேலே நடவடிக்கை எடுப்பதிலே further proceedings இப்போது இருக்கின்ற proceedings மட்டுமல்லாமல் further proceedings எடுப்பதிலேயும், வேண்டாம் என்ற முறையிலே கருத்து வரும். Further proceedings என்று வருகின்ற நேரத்திலே அது குழப்பத்தை ஏற்படுத்துகிற ஒரு வார்த்தை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஒரு நிருவாகி சட்டத்தை மீறுகிற நேரத்திலே அவர் மேலே நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அந்த நடவடிக்கையிலேதான் ஒரு Compounding வருகிறது. அந்த Compounding-வுடன் அது முடிகிறது. ஆனால், இந்தச் சட்டத்திருத்தத்திலே "That proceedings or further proceedings" என்று சொல்கிற நேரத்திலே அந்த அதிகாரி மேலே, மேலும் ஏதாவது நடவடிக்கை எடுத்தால், இந்தச் சட்டத் திருத்தத்தைக் காட்டி அவர் நீதிமன்றத்திற்கு போய் என் மேல் நடவடிக்கை எடுத்திருப்பது சரியல்ல என்று சொல்லி தப்பித்துக்கொள்வதற்கு அது சந்தர்ப்பத்தைக் கொடுக்காதா என்ற ஐயப்பாடு எனக்கு இருக்கிறது. ஆகவே, அரசு அதைப்பற்றி பரிசீலிக்க வேண்டும். நம்முடைய பல நிருவாகிகளைப் பொறுத்தளவிலே என்ன கருதுகிறார்கள் என்றால், தொழிலாளர்களுக்குக் கொடுக்க வேண்டிய சம்பளத்தைக் கொடுக்காமல், வேண்டுமென்றால் நீதிமன்றத்திலே போய் ஆயிரம் ரூபாய் அபராதம் கட்டினாலும் பரவாயில்லை, இதை அமல்படுத்தக் கூடாது என்ற முறையிலே உள்ள கருத்தோடு இருக்கிற நிருவாகிகள் இருந்துக்கொண்டிருக்கிறார்கள் என்பது Labour Department-க்கும் நன்கு தெரியும். ஆகவே. அப்படிப்பட்டவர்கள் தப்பித்துக்கொள்வதற்கு இந்தச் சட்டத் திருத்தத்திலே இருக்கின்ற இந்த வார்த்தை இடம் கொடுக்கும் என்று நான் கருதுகிறேன். ஆகவே, அதைச் சரி பண்ணக்கூடிய முறையிலே, தேவைப்பட்டால் சட்டத் திருத்தத்தை பின்னாலேயாவது கொண்டுவருவதற்கு அரசு தயாராக வேண்டுமென்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழிலாளர் நல விதிகள் மீறப்படுகிறபோது இதிலேயெல்லாம் அதனுடைய Manager அளவிலேதான் நடவடிக்கை

எடுக்கப்படுகிறது. அந்த உரிமையாளர்களைப் பொறுப்பாக்கி, அந்த உரிமையாளர்கள்மீதும் நடவடிக்கை எடுக்கப்படக்கூடிய அளவிற்கு சட்டம் கொண்டுவரப்பட வேண்டும். ஆனால், இதுவரையிலேயும் அப்படி எந்த இடத்திலேயும் அது அமலாக்கப்படவில்லை. முதல் குற்றவாளியாகவே அந்த உரிமையாளர்களை ஆக்குகின்றபட்சத்தில்தான் தொழிலாளர்களுக்கு சரியான பாதுகாப்பு கிடைக்கும். அதற்குண்டான சட்டத் திருத்தம் கொண்டுவரப்பட வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி.

***திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பண்டிகை மற்றும் தேசிய விடுமுறை நாட்களில் நடைபெற்றிருக்கிற அத்துமீறல் தொடர்பான வழக்குகளை ஒரு இணக்கமான முறையில் தீர்வு காண்பதற்காக இந்தச் சட்டத் திருத்த முன்வடிவு வழி செய்கிறது. தேசிய பண்டிகை விடுமுறை நாட்களில் வேலை வாங்குவது என்பது எவ்வகையிலும் மன்னிக்க முடியாத ஒரு குற்றமாகக் கருதப்பட வேண்டிய ஒரு நடவடிக்கையாகும். குறிப்பாகச்சொல்ல வேண்டுமானால், பல்வேறு தொழிலகங்களில் ஜனவரி 26 அன்றும், ஆகஸ்ட் 15 அன்றும், மே 1 அன்றும் வேலை செய்யும்படி தொழிலாளர்கள் நிர்பந்திக்கப்படுகின்றார்கள். மிக முக்கியமான தேசிய விடுமுறை நாட்களான இந்த நாட்களில்கூட விடுமுறை பல்வேறு நிறுவனங்களில் வழங்கப்படுவதில்லை. இதுபோன்ற அத்துமீறல்கள்தான் வழக்குகளாக மாறுகின்றன. இந்த வழக்குகளைத் தீர்வு காண்பதற்கு இணக்கமான ஒரு வழிவகை செய்யப்படுகிறது என்ற ஒரு திருத்தம் வருமானால், அத்துமீறலையே அனுமதிக்கக்கூடிய அபாயம் இதிலே இருக்கிறது என்ற காரணத்தினால், இந்தத் திருத்தம் நிறைவேற்றப்படக் கூடாது என்ற அடிப்படையில் அதை எதிர்க்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல Further என்ற சொல்லுக்கு இரண்டாவது முறையாக குற்றம் செய்கிறபோது என்ற பொருளிலேதான் அது உருவாக்கப்பட்டிருக்கிறது. முதல் முறையாக குற்றம் செய்வார் என்று சொன்னால், அது இணக்கக் கட்டணத்தின் மூலமாக அதைத் தீர்த்துக்கொள்ளலாம், இரண்டாவது முறையும்



அதேபோன்ற குற்றம் இழைக்கப்படுமானால், அது நீதிமன்றத்திற்குச் செல்ல வேண்டுமென்ற பொருளோடு அது உருவாக்கப்பட்டிருக்கிறது. இங்கே உறுப்பினர்கள் எல்லாம் சுட்டிக்காட்டியிருப்பதைப்போல, நீதிமன்றங்களிலே பல்வேறு வழக்குகள் தேக்கத்திலேயிருக்கின்ற காலகட்டத்திலே இவைகளும் நீதிமன்றத்திற்குச் செல்லுமானால் எந்தவிதமான முடிவும் ஏற்படாது என்ற உணர்வோடுதான் இதுபோன்ற இணக்க முறைகளின் மூலமாகத் தீர்வு காண்கிற முறையும் கையாளப்பட்டு வருகிறது. ஆகவே, இது தொழிலாளர்களுக்கு நன்மை அளிக்கக்கூடியதாகவே இருக்கும். இதை நடைமுறைபடுத்துகிறபோது மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் சுட்டிக்காட்டியதைப்போல சிக்கல் ஏற்படுமானால், மேலும் திருத்துவது பற்றி அரசு பரிசீலிக்கும்.

*பிற்பகல் 1-35*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2 திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும்

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய மற்றும் பண்டிகை விடுமுறைகள்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 37/2000) நிறைவேற்றப்பெறவேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.



## (அ.அ) தமிழ்நாடு உணவு வழங்கு நிறுவனங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, 2000 ஆண்டு தமிழ்நாடு உணவு வழங்கு நிறுவனங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 38/2000), மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு உணவு வழங்கு நிறுவனங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 38/2000.) @ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்" எனக்கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம், என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

---

@7-11-2000 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு உணவு வழங்கு நிறுவனங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 38/2000) நிறைவேற்றப்பெறவேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (அஆ) தமிழ்நாடு நகரமைப்பு மற்றும் ஊரமைப்புத் திட்ட (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 2000 ஆண்டு தமிழ்நாடு நகரமைப்பு மற்றும் ஊரமைப்புத் திட்ட (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 39/2000), மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.





**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு நகரமைப்பு மற்றும் ஊரமைப்புத் திட்ட (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 39/2000) @ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெறவேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2000 ஆண்டு தமிழ்நாடு நகரமைப்பு மற்றும் ஊரமைப்புத் திட்ட அவசரச் சட்டம் கொண்டுவந்ததற்குப் பதிலாக, இப்போது சட்டமுன்வடிவு கொண்டுவந்திருக்கிறார்கள். அதை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால், அதேநேரத்தில், நேற்றைக்கு முந்தையநாள், நெடுநேரம் இதைப் பற்றி விவாதித்து, ஏற்கெனவே கட்டப்பட்டு இருக்கக்கூடிய கட்டடங்களை எப்படி நாம் முறைப்படுத்தப் போகிறோம் என்கிற வழிமுறைகளை எல்லாம் இங்கே சொல்லி, 6 மாத காலம் அவர்களுக்கு அவகாசம் கொடுக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்த போது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், முதல்வர் அவர்களோடு கலந்து பேசி, ஒரு தேதியை, எவ்வளவு நாள் அவர்கள் தரப் போகிறார்கள் என்பதை அறிவிப்பதாகச் சொன்னார்கள். இதிலே வரைமுறைகளை மீறி கட்டடங்கள் கட்டி இருக்கக்கூடியவர்களுடைய கட்டடங்களை இடிபடாமல் இருக்க வேண்டும் என்பதற்காகவும், அரசுக்கு 3 இலட்சம் applications வரவேண்டும்; இதுவரை 5,474 applications தான் வந்து இருப்பதாகச் சொல்லி இருக்கிறீர்கள். மீதி application-களையும் Process செய்து, அவற்றையெல்லாம் வரைமுறைப்படுத்தி, எல்லா கட்டடங்களுக்கும் ஓரளவிற்கு அனுமதி கொடுக்க வேண்டும் என்ற நிலை வேண்டுமென்று சொன்னால், குறைந்தபட்சம் 6 மாத கால அவகாசமாவது தேவைப்படும். அந்த கால அவகாசத்தை இந்த அரசு கொடுக்க முன்வருமா? அதை அமைச்சர் அவர்கள் தந்து, இந்தக் கட்டடங்கள் எல்லாம் இடிபடாமல் வரைமுறைப்படுத்த வேண்டுமென்று கேட்டு விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதிலே ஒரு திருத்தமாக அதையும் கொடுத்து இருக்கிறோம். 31-10-2000 என்று இருந்ததை, 31-12-2000 வரை மாண்புமிகு முதல்வர் அவர்கள் நேற்று அனுமதித்து இருக்கிறார்கள். ஆகவே, 31-12-2000 வரை இதை நீட்டிக்கலாம் என்று மாண்புமிகு முதல்வர்

@7-11-2000ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

அவர்கள் அனுமதித்து இருக்கிறார்கள். திருத்தமும் இதிலே கொடுத்து இருக்கிறோம். (குறுக்கீடு) திருத்தம் நேற்றுதான் வந்தது (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதுதான், அவசரக் குடுக்கை மாதிரி பண்ண வேண்டாம் என்கிறேன். சட்டமுன்வடிவை ஒழுங்காக படிக்க வேண்டும். விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பிரிவு 2., மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் தம் திருத்தத்தை மொழியலாம்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

I move the following amendment to clause 2;

``In sub-clause (2) of Clause 2 for the words and figures ``31st day of October 2000" substitute the words and figures ``31st day of December 2000``.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கோரிக்கைகளெல்லாம் 90 நாட்களாவது கொடுங்கள் என்பதுதான். நாங்கள் ஏற்கெனவே 6 மாதம் கேட்டோம். டிசம்பர் என்று சொன்னால் நாள் ரொம்ப நெருக்கத்தில் வந்துவிட்டது. ஆகவேதான் மாண்புமிகு முதலமைச்சரோடு அமைச்சர் அவர்கள் கலந்துபேசி—அமைச்சர் அவர்கள் கலந்து பேசினாரா என்று தெரியவில்லை—கலந்துபேசி 6 மாத காலம் என்று இல்லாவிட்டாலும் 3 மாத காலம் அவகாசம் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.





ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், திருத்தம் ஏற்கப்பட்டது.

பிரிவு 2 திருத்தப்பெற்றபடி, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

[டாக்டர் க. பொன்முடி] [2000 நவம்பர் 11

"2000 ஆண்டு தமிழ்நாடு நகரமைப்பு மற்றும் ஊரமைப்புத் திட்ட (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 39/2000) திருத்தப்பெற்றபடி, நிறைவேற்றப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு, திருத்தப்பெற்றபடி, ஏற்கப்பட்டது.

## 7. அறிவிப்புகள்

### (அ) இந்திய சுங்க வரிகள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2000 ஆண்டு இந்திய சுங்க வரிகள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவைப் (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 43/2000) பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி

### (அ-இ) இந்திய சுங்க வரிகள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 2000 ஆண்டு இந்திய சுங்க வரிகள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 43/2000), மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,



2000 நவம்பர் 11] [திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்]

"2000 ஆண்டு இந்திய சுங்க வரிகள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 43/2000) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மிக ஆபத்தான ஒரு சட்டம் இது என்பது எங்களுடைய கருத்து. சில இடங்களில் இந்தப் பாலங்களைக் கட்டிவிட்டு, அந்தப் பாலங்கள் வழியாக போகிற வாகனங்களுக்கு வரி வசூலிக்கிற பழக்கம் இப்போது இருந்து கொண்டிருக்கிறது. அதற்கு ஒரு எல்லையே இல்லாத ஒரு நிலை ஏற்படுகிறது. 1978 ஆம் ஆண்டு எங்கள் மாவட்டத்திலே மார்தாண்டத்திலே நேசமணி பாலம் என்ற பாலம் கட்டப்பட்டது. இன்னும் அதற்கு வரி வசூலித்துக் கொண்டிருக்கிறார்கள். போகிற வாகனங்களையெல்லாம் நிறுத்தி அவர்கள் காசு வசூலிக்கிறார்கள். அதற்கு என்ன வரம்பு என்று தெரியவில்லை. துரதிருஷ்டவசமாக நம்முடைய அமைச்சர் அவர்கள் அல்லது நம்முடைய தமிழக அரசு இப்போது சாலைகளையும் அதோடு சேர்த்துக்கொள்கிற ஒரு திருத்தத்தைக் கொண்டு. வந்திருக்கிறது. சாலைகள் என்பது இந்த நாட்டு மக்களுக்கு ஒரு இன்றியமையாத் தேவை என்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்து கிடையாது. மக்களுக்குத் தேவையான சாலைகளைப் போடுவது இப்போது பஞ்சாயத்தினுடைய வேலை; பஞ்சாயத்து யூனியனுடைய வேலை, நெடுஞ்சாலைத் துறையினுடைய வேலை. ஆனால் இந்த சாலைகளைப் போட்டுவிட்டு பஞ்சாயத்து அல்லது யார் வசூலிக்கிறார்கள் என்பதைக்கூட இந்தச் சட்டத்திருத்தத்திலே சொல்லவில்லை. ஒருவேளை பஞ்சாயத்து போட்டால், வசூல் செய்வது பஞ்சாயத்தாக இருக்கலாம்; அல்லது அரசு போட்டால் அரசாக இருக்கலாம். ஆனால் இவற்றையெல்லாம் குத்தகைக்குவிட்டு, குத்தகைதாரர்கள் இந்தக் காசை வசூலிக்கப்போகிறார்கள். பஞ்சாயத்து ஒரு சாலை போட்டு, அதற்கு சுங்க வரி வசூலிக்கிறோம் என்றால் பஞ்சாயத்தினுடைய வேலை என்ன? பஞ்சாயத்திற்கு என்ன பொறுப்பு? இது எதனுடைய விளைவு என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். உலக வங்கியினுடைய நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டு கடனை வாங்கி

@9-11-2000 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [2000 நவம்பர் 11

சாலைகளையும் பாலங்களையும் கட்டுவதனுடைய விளைவுதான் இந்தச் சட்டம். அவர்கள் கேட்கின்ற நிபந்தைகளுக்குட்பட்டு நீங்கள் சாலைகளைப் போட்டால் உடனே மக்களிடமிருந்து வசூல் செய்துகொள்ளுங்கள், பாலம் போட்டால் உடனே மக்களிடமிருந்து வசூல் செய்துகொள்ளுங்கள் என்று மக்களைக் கசக்கி பிழிகின்ற உலக வங்கியினுடைய கொள்கையை இந்த அரசு அமல்படுத்துகிறதா என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

*பிற்பகல் 1-45*

பாலத்தைப் போடுகிறார்கள். அதைப் பொறுத்தளவில் இந்த நாடு ஏற்றுக்கொண்டிருக்கிறது. அதைப்போட்டுக் கொண்டிருக்கிறார்கள். சாலைகளுக்கு என்று விஸ்தரிப்பது அதற்கு எல்லையில்லாமல் போய்விடும். பஞ்சாயத்து போட்டாலும் சரி, அரசு போட்டாலும் சரி, யார் போட்டாலும், யார் வசூலிக்கலாம் என்பதுகூட தெளிவு இல்லாத முறையிலே இந்தச் சட்டத் திருத்தம் கொண்டுவரப்பட்டிருப்பது மிக துரதிருஷ்டம். இதனை நான் கடுமையாக ஆட்சேபிக்கிறேன். ஒரு வேண்டுகோள். அமைச்சர் அவர்களும், தமிழக அரசும் இந்தச் சட்டத் திருத்தத்தைக் கைவிட்டு, சாலைகள் என்ற வார்த்தையை மாற்ற வேண்டும் அல்லது அந்தச் சாலைகள் என்ற வார்த்தையை எடுத்துவிட வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மாநிலத்திற்கு பொருந்துவதைப் பொறுத்தளவில் 1851 ஆம் ஆண்டு இந்திய சுங்க வரிகள் சட்டத்தை மேலும் திருத்துவதற்கான இந்தச் சட்டமுன்வடிவை கடுமையாக தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பாக நான் இங்கே எதிர்க்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தச் சட்டத்திருத்தம் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் சொன்னதுபோல தமிழக மக்களுடைய உரிமைகளை முழுக்க முழுக்க பறிக்கக்கூடிய ஒன்றாக இந்த அரசு இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. ஏற்கெனவே நீங்கள் B.O.T. போன்ற ஸ்கீம்களில் போடக்கூடிய பாலங்களுக்கோ, ரோடுகளுக்கோ பணத்தைக் கொடுக்க முடியாமல், கோயம்புத்தூர் பக்கத்தில் இருக்கக்கூடிய மேட்டுப்பாளையம் பகுதியில் ஒரு பெரிய போராட்டமே நடந்தது. நேற்றைக்கு முந்தின நாள் மாண்புமிகு



2000 நவம்பர் 11] [திரு. சி. ஞானசேகரன்]

உறுப்பினர் திரு. லத்திப் அவர்கள் சேத்தியாதோப்பு, லால்குடி என்ற அந்த ஊருக்கு பொதுக் கூட்டத்திற்குப் போனபோது, அவருடைய காரின் டிக்கி, கண்ணாடி எல்லாம் அடித்து அவர் உயிருக்கே ஆபத்து ஏற்படக்கூடிய அளவுக்கு அடித்து நொறுக்கி இருக்கிறார்கள். அந்த இடத்திலே ஒரு பாலத்திற்கு தினந்தோறும் சுங்கவரி வசூல் செய்து கொண்டிருக்கக்கூடிய ஒரு அமைப்பு, அது ஒரு ரவுடி கும்பல் என்றே சொல்லலாம், அந்தப் பாலம் எப்போது கட்டப்பட்டது, யாரால் கட்டப்பட்டது, அது ஒரு வேளை B.O.T. இல் வந்திருந்தது என்று சொன்னால் டோல்கேட்டை எப்படி வசூல் பண்ணுவது, எந்த காலத்திலிருந்து எந்த காலம் வரை அவர்கள் அந்த டோலை வசூல் செய்வது என்பது குறித்த விளம்பரமாவது அந்த இடத்தில் இருக்க வேண்டும். அதெல்லாம் இல்லாமல் 20, 30 பேர் ஒரு கொட்டகை போட்டு பெரிய கூட்டாந்துடிகளை வைத்துக்கொண்டு, அவர்கள் அமர்ந்துகொண்டு பணத்தை வசூல் செய்கிறார்கள். ஒரு எம்எல்ஏ. என்று சொல்லியிருந்தாலும்கூட பணத்தைக் கேட்டால் கொடுத்திருப்பார்கள். 15 கார்களுக்குப் பின்னாடி எம்எல்ஏ. இருந்தாராம். பின்னாடி கிடுகிடு என ஓடி வந்து அவர் காரையெல்லாம் உடைத்து. அவருடைய கண்ணாடியெல்லாம் உடைத்து பயமுறுத்தி இருக்கிறார்கள்; அடித்திருக்கிறார்கள். இப்படி சட்டமன்ற உறுப்பினருக்கே பாதுகாப்பற்ற நிலைமை இப்படிப்பட்ட சுங்க வரி வசூலிக்கிற ஒரு தன்மையால் வருகிறது என்பதை இங்கே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். இதைவிட மோசம், பின்னர் கிராமங்களில் போடக்கூடிய ரோடுகளுக்கு வரி கேட்பீர்கள், இதுவெல்லாம் அரசாங்கத்தினுடைய கடமை, எதற்காக அரசாங்கம்? அரசாங்கம் என்பது மக்களுடைய அடிப்படை வசதிகளைப் பூர்த்தி செய்வதற்காக தேர்ந்தெடுக்கப்பட்டு ஆட்சி பீடத்திற்கு வந்துவிட்ட பின்னால் நீங்கள் சாலைகளுக்கு வரி கேட்பீர்கள், பாலத்திற்கு வரி கேட்பீர்கள் எல்லாவற்றிற்கும் வரி வரி என்று கேட்டு கேட்டு அந்த மனிதனை ஒரேயடியாக சுடுகாட்டுக்கு அனுப்புவதுதான் உங்களுடைய நோக்கமா என்று நான் கேட்க விரும்புகிறேன். இந்தச் சட்டத் திருத்தத்தை நீங்கள் உடனடியாக வாபஸ் பெறவேண்டும் என்று தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி சார்பாக கேட்டு அமைகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இப்படி ஆளுக்கு ஆள் எழுந்து நின்றால் எப்படி, யார் திருத்தம் கொடுத்தார்களோ அவர்களுக்குதான் முன்னுரிமை, அவர் கொடுத்தார், அவர் பேசினார், அடுத்து இவர் பேசினார். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத் திருத்தம் வந்து ரொம்ப கடுமையான சட்டம். ஏனென்றால், ஏற்கெனவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் சொன்ன மாதிரி, எங்கள் ஊரிலே 1968-லே கட்டப்பட்ட பாலத்திற்குக்கூட இன்னும் வரி வசூல் பண்ணிக்கொண்டிருக்கிறார்கள். அதுவும் கண்டபடியெல்லாம் வசூல் பண்ணுகிறார்கள். ரோட்டுக்கு வசூல் பண்ண ஆரம்பித்தால் அது மிகப் பெரிய விவகாரமாகிவிடும். தனியார் பணம் போட்டு, ரோடு போட்டு வசூல் செய்வது என்பது வேறு. அரசாங்கமே ரோடு போட்டு, அதிலே வசூல் செய்வது என்கின்ற இந்தச் சட்டம் மிகக் கொடுமையான சட்டம். இந்தச் சட்டத்தை வாபஸ் பெற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் திரு. நா. பெரியசாமி, டாக்டர் க. கிருஷ்ணசாமி, திரு. லா. சந்தானம், திரு. ஜி. நிஜாமுதீன் ஆகியோர் எழுந்து நின்றனர்)

பிற்பகல் 1-50

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உட்காருங்கள். அமைச்சர் அவர்கள் எல்லாவற்றுக்கும் சேர்த்து பதில் சொல்லுவார்கள். (குறுக்கீடு) உறுப்பினர்கள் ஏற்கெனவே சொன்ன கருத்தைத்தான் நீங்களும் சொல்லப் போகிறீர்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) சரி, டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் சொன்னதுபோல பாலங்களுக்கும் சாலைகளுக்கும் சுங்கம் வசூலிக்கக்கூடிய இந்தத் திருத்தச் சட்டம் உண்மையிலேயே ஆபத்தை விளைவிக்கக்கூடியது. இது எங்கே சென்று முடியும் என்றால், ஏற்கெனவே அரசினுடைய நிதியிலிருந்து போடப்பட்டிருக்கக்கூடிய, பஞ்சாயத்து யூனியன்களால் போடப்பட்டிருக்கக்டிய அந்தச் சாலைகளுக்கும் சேர்த்து சுங்க வரி வசூலிக்கக்கூடிய பிரச்சினை ஏற்படும். அதோடு மட்டுமல்ல, பல சிக்கல்களையும், மோதல்களையும், தகராறுகளையும்கூட இது கிராமப்புறங்களிலே ஏற்படுத்தகூடிய வாய்ப்பும் இருக்கிறது. ஏற்கெனவே, பாலங்களிலே சுங்க வரி வசூலிக்கக்கூடிய இடங்களிலே பல பிரச்சினைகள் ஏற்பட்டிருக்கின்றன. எனவே, இப்படிப்பட்ட இக்கட்டான காலகட்டத்தில், அதுவும் Welfare State அமைப்பதே கிராமப்புற மக்களுக்கும், ஏழை மக்களுக்கும், எளிய மக்களுக்கும் சாலைகளைப்





போட்டுக்கொடுப்பதற்காகத்தான். தனியார் துறையை ஊக்குவிக்கக்கூடிய மேலை நாடுகளிலேகூட, இதுபோன்று அரசுப் பணத்திலே போடப்படக்கூடிய சாலைகளுக்கு வரி வசூலிக்கக்கூடிய நிலைமை கிடையாது. எனவே, இந்தச் சட்டத்தை வாபஸ் பெற வேண்டுமென்று வலியுறுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

***திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சாலைகளுக்குச் சுங்கவரி வசூலிப்பதன் மூலமாக இரட்டை வரி விதிப்பு என்கிற ஒரு நிலை ஏற்படுகிறது. ஏற்கெனவே நாம் Road Tax என்று சொல்லி வசூல் செய்து கொண்டிருக்கிறோம். அப்படி இருக்கின்ற நேரத்தில், அந்த Road Tax வசூலிலே 10 சதவீதத்தைக்கூட நாம் சாலைகளுக்குச் செலவு செய்வதில்லை என்கின்ற நிலை இருக்கும்போது, மீண்டும் இந்தச் சுங்கவரி மூலமாக வாகனங்களை இயக்குகின்றவர்களுக்கு இரட்டை வரி விதிப்பது போன்ற ஒரு நிலை ஏற்படுகிறது. உதாரணத்திற்கு, மதுரையிலே இப்போது புறவழிச் சாலை போடப்பட்டிருக்கிறது. அந்த புறவழிச் சாலையிலே செல்லுகின்ற வாகனங்களுக்கு, ஒரு பேருந்துக்கு 150 ரூபாய் நாளொன்றுக்கு வசூல் செய்யப்படுகிறது. இதன் காரணமாக அவர்கள் மாதத்திற்கு 4500 ரூபாய் செலுத்துகின்ற ஒரு நிலை இருக்கிறது. ஏற்கெனவே காலாண்டுக்கு, 3 மாதங்களுக்கு ஒரு முறை 26 ஆயிரம் ரூபாய் செலுத்துகிறார்கள். இதை ஒரு வருடத்திற்கு 4 முறை செலுத்துகின்ற நிலையிலே இந்தச் சுங்க வரியின் மூலமாக 6 முறை செலுத்துகின்ற ஒரு நிலை ஏற்படுகிறது. எனவே, இது எல்லா பொதுமக்களையும் பாதிக்கின்ற ஒரு நிலையாக இருக்கிறது. சாதாரண வாகனங்களை ஓட்டிச்செல்பவர்களிடம்கூட, சைக்கிள்களிலே செல்லுகின்றவர்களிடம்கூட வரி வசூலிக்கின்ற ஒரு நிலை இருக்கின்ற காரணத்தால் இந்தச் சட்டத்தை நிறுத்தி வைக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி.

***திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவினுடைய மோசமான எதிர்விளைவுகளை முழுமையாக உணர்ந்திருந்த காரணத்தினாலேதான் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் அறிமுக நிலையிலேயே இதைக் கடுமையாக எதிர்த்தோம்.

ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் கருத்துக்களைச் சொல்லியிருககிறார்கள். கட்டுதல், இயக்குதல், பிறகு ஒப்படைத்தல் என்ற அடிப்படையில் சில பணிகள் நடைபெறுகின்றபோது அந்தப் பணிகளுக்கு நாம் எந்த அளவுக்கு ஒத்துழைக்க வேண்டுமென்று கோவை ஆத்துபாலம் தொடர்பான ஒரு பிரச்சினை வருகின்றபோது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரிவாக இங்கே எடுத்துக்கூறியிருக்கிறார்கள். ஆனால், அந்தப் பிரச்சினை ஓய்ந்தபாடில்லை. கோவை ஆத்துப் பாலம் ஆனாலும் சரி, கரூர் பாலம் ஆனாலும் சரி, உறுப்பினர்கள் குறிப்பிட்ட பல்வேறு இடங்கள் ஆனாலும் சரி, எங்கேயும் பிரச்சினைகள் ஓய்ந்தபாடில்லை. தொடர்ந்து பதட்டம் ஏற்படுத்துகின்ற ஒரு நிகழ்வாகத்தான் இருக்கிறது.

இந்தச் சட்டமுன்வடிவில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால், உள்ளாட்சி அமைப்புகளால், அவற்றின் செலவில் அமைக்கப்பட்ட அல்லது மேம்படுத்தப்பட்ட அல்லது பழுது பார்க்கப்பட்ட சாலைகளுக்குக்கூட சுங்க வரி வசூலிக்கலாம் என்ற ஒரு வாய்ப்பு இந்தச் சட்டமுன்வடிவின் மூலம் செய்யப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே பொதுமக்கள் வீட்டு வரி செலுத்துகிறார்கள். வேறு வகையான வரிகளைச செலுத்துகிறார்கள். இப்போது பொதுமக்கள் நடமாட்டத்திற்கும் வரி செலுத்தவேண்டிய ஒரு நெருக்கடியை இந்தச் சட்டமுன்வடிவு ஏற்படுத்தியிருக்கிறது. எனவே, இந்தச் சட்டமுன்வடிவை கடுமையாக எதிர்க்கின்றோம். எங்களுடைய எதிர்ப்பின் உணர்வைப் புரிந்துகொண்டு அரசு இதைத் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

*பிற்பகல் 1-55*

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே பாலங்களில் சுங்க வரி வசூலிக்கப்படுவதன் மூலமாக பல பிரச்சினைகள் உருவாகியிருக்கின்றன. குறிப்பாக, கோவை உக்கடம் பகுதியிலே பழைய பாலம் ஒன்று இருக்கிறது. அதற்கு முன்பாக இப்பொழுது ஒரு புதிய பாலத்தைக் கட்டிக் கொண்டு இப்போது அங்கே பல பிரச்சினைகளுக்கு இடையிலே





அந்தச் சுங்க வரி வசூலிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. மாதிரிப் பல இடங்களிலே பிரச்சினைகள். இப்போது புதிய தலைவலியாக கிராமப்புறங்களிலே போடப்படுகிற அல்லது மேம்படுத்தப்படுகிற சாலைகளுக்கும் சுங்க வரி என்று போடப்படுகிறபோது நிச்சயமாக இது இரட்டை வரி விதிப்பு மட்டுமல்ல; ஏற்கெனவே கிராமப்புறப் பகுதிகளிலே பல பிரச்சினைகள் இருக்கின்றன. இந்த சுங்க வரி விதிப்பு வருமானால், நிச்சயமாக சாதிப் பிரச்சினைகள்கூட, சாதி மோதல்கள்கூட வருவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. காரணம் என்னவென்று சொன்னால், மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் ஒரு பகுதியிலே பிரச்சினைக்கு ஆளாகியிருக்கிறார்கள் என்று சொன்னார்கள் அல்லவா. அது மாதிரி பரவலாக வருவதற்கும் ஒரு வாய்ப்பு இருக்கிறது. காரணம் என்னவென்று சொன்னால், கிராமப்புறங்களிலே சாலைகளில் சுங்க வரி விதிப்பதற்காக ஏலம் எடுப்பவர்கள் ஒரு குறிப்பிட்ட பிரிவினராக இருந்தால், இன்னொரு பிரிவினர் அந்தக் கிராமப்புறங்களிலே வரி செலுத்த மாட்டோம் என்று சொன்னால், அநாவசியமான பிரச்சினைகள் வரும். எனவே, சமூக அமைதிக்காகவாவது, இரட்டை வரி விதிக்கக்கூடாது என்பதற்காகவாவது இந்தச் சாலைகளுக்கு சுங்க வரி விதிக்கின்ற அந்த முறையை அரசு கைவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதிகப்படியான வசதிகளைச் செய்யும் போது B.O.T. அடிப்படையில் நாம் கட்டணங்களை வசூல் செய்கின்றோம். ஆனால், அடிப்படை வசதிகளைச் செய்து தரவேண்டிய கட்டாயத்தில் இருக்கும்போது, அதற்குக் கட்டணங்களை வசூலிப்பது முறையற்றது. மிகவும் கொடூரமான செயலாகும். ஆகவே, அடிப்படையிலே இந்தச் சட்டத்தை வாபஸ் பெறவேண்டும் அல்லது அனைத்துக் கட்சிக் குழுவையும் கூப்பிட்டு, இதை பொறுக்குக் குழுவிற்கு விட்டு, ஆய்வு செய்தாவது, இதற்கு மாற்று முடிவு எடுக்க வேண்டும். ஏனென்று சொன்னால், அடிப்படை ஆதார வசதிகளை நாம் வழங்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கும்போது, சாதாரணமாக இருக்கக்கூடிய சுங்க வரி வசூலிக்கும் இடங்களிலேயெல்லாம் Syndicate form செய்து கொண்டு, 5, 10 ரௌடிகளை வைத்துக் கொண்டு, தாக்கிக் கொண்டிருக்கின்றார்கள். கடந்த 8 ஆம் தேதி நானும், எனது தலைவர் திரு. லத்தீப் அவர்களும்

[திரு. ஜி. நிஜாமுதீன்] [2000 நவம்பர் 11

லால்பேட்டைக்கு ஒரு பொதுக்கூட்டத்திற்குச் சென்றபோது, 10-வது வண்டியாக எங்கள் வண்டி நின்று கொண்டிருக்கிறது. அங்கே கட்டணத் தகராறிலே எங்கள் வண்டியையும் சேர்த்து அடித்து நொறுக்குகின்றார்கள்; எந்தவிதமான காரணமும் இன்றி. இப்படி இரண்டு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. எங்களோடு வந்த போலீஸ்காரர் ஒருவர் துப்பாக்கியைத் தூக்கிக் கொண்டு நிற்கிறார். திரு. லத்திப்பைத் தாக்க முற்படுகிறபோது, அதைத் தடுப்பதற்கு எங்களோடு வந்த போலீஸ்காரர் துப்பாக்கியைத் தூக்கி காண்பிக்க முற்படுகிறபோதுகூட, தீவிரவாதி துப்பாக்கியைத் தூக்கிக் காட்டுகிறான் என்று சொல்லி கத்திவிட்டு, கூட்டத்தைக் கூட்டி, வேகமாக வந்து அடிக்கிறார்கள். அப்படி, உயிருக்குப் பாதுகாப்பற்ற சூழ்நிலை அந்த இடத்தில் உருவாகிக் கொண்டிருக்கிறது. ஒரு Uniform இல்லை; அவர்கள் யாருக்கும் identity card இல்லை. எதுவுமே இல்லை. கரடுமுரடாக தாக்குகின்றார்கள். திரும்ப அடிக்கக்கூட சக்தி இல்லை; நடுரோட்டிலே நின்று கொண்டிருக்கிறோம். இங்கேயிருந்து 250 கிலோமீட்டருக்கு அப்பாலே இரவிலே meeting-ற்குப் போகிறபோது, இந்தமாதிரிச் சம்பவங்களெல்லாம் நடக்கிறது. ஆகவே, இது அதிகப்படியான ஒரு நிலையை, ஒரு சட்ட சிக்கலை ஏற்படுத்தும் law and order பிரச்சினையை ஏற்படுத்தும். ஆகவே, இதுபோன்ற நிலையை உருவாக்கக்கூடாது என்று நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, B.O.T. திட்டத்திலே நடக்கும் திட்டங்கள் என்பது வேறு. உள்ளாட்சி அமைப்புகள் மூலமாக நடத்தப்படும் அடிப்படைக் கட்டமைப்புகள் என்பது வேறு. ஆகவே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு என்று சொல்லவில்லை; அனைத்து மக்களுக்கும் சேர்த்துசொல்கிறேன். சென்ற மாதத்திலே Judge ஒருவர் தாக்கப்பட்டிருக்கிறார், அதே சேத்தியாத்தோப்பு பகுதியிலே. ஆகவே, இதுபோன்ற நிலையெல்லாம் இல்லாமல் இருப்பதற்காக பாதுகாப்பு வழங்க வேண்டும். அரசு மீண்டும் இதுபோன்ற நிலையை ஏற்படுத்தக்கூடாது. கிட்டத்தட்ட 25 வருடங்களாக அந்தப் பாலத்தில் வசூல் செய்து கொண்டிருப்பதாக அந்தப் பகுதி மக்கள் கருதிக்கொண்டிருக்கிறார்கள். இவற்றையெல்லாம் நீங்கள்தான் கேட்க வேண்டும். நீங்களே எங்களைக் காப்பாற்றவில்லை என்று சொன்னால் உங்களுக்கு வெட்கக்கேடாக இல்லையா என்று எங்களிடம் கேட்கிறார்கள்; மக்களிடம் முறையிடும்போது. ஆகவே, இதுகுறித்து மறுபரிசீலனை செய்ய வேண்டும். நிச்சயமாக இந்தச் சட்டத்தை செயல்படுத்தக்கூடாது என்று கேட்டுக்கொண்டு, அமர்கிறேன்.



2000 நவம்பர் 11]

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சாலைப் பணியை எந்த அளவிற்கு எவ்வளவு தூரம் இந்த அரசால் செய்ய முடியும் என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மை. அதைத்தாண்டி பல துறைகள் சாலைப் பணி செய்ய வேண்டுமென்று கருதினால், B.O.T.-க்குப் போகிறோம். அப்படிப் போகிறபோது, கரூரில் வழக்குமன்றத்திலேகூட, வழக்கு தொடரப்பட்டது. அதுகூட அவர்களுக்குச் சாதகமாக முதலிலே தீர்ப்பு வந்தது. பிறகு அரசு அப்பீல் செய்தது. பிறகு அரசு கொடுத்ததை ஏற்றுக்கொண்டு தீர்ப்பு வழங்கப்பட்டது. இதற்குமேல் யாரும் இதுவரை அப்பீல் போகவில்லை. இப்பொழுது மதுரையிலே ரிங் ரோட்டைப் பார்க்கிறபோது, நாமெல்லாம் அதிலே பயணம் செய்வதில், எவ்வளவு தூரம் மிச்சப்படுகிறது என்பதும், நேரம், காலம் சௌகரியப்படுகிறது என்பதும் தெரியவருகிறது. ஆரம்பித்தவுடனே 1.26 இலட்ச ரூபாய்க்கு மேல் வசூலாகியிருக்கிறது. யாரும் அதிலே குறை சொல்லவில்லை. எந்தத் தகராறும் வரவில்லை. ஒருசில பிரச்சினைகள் சேத்தியாத்தோப்பு போன்ற இடங்களிலே வருவது. இந்தத் திட்டத்தினாலோ, சட்டத்தினாலோ, உத்தரவினாலோ அல்ல. ஆங்காங்கே இருக்கிறவர்கள் போகிறவர்கள் நடந்துகொள்வதில் ஏற்படுகிற பேச்சுவார்த்தையில் ஏற்படுகிறதே தவிர, இதனால் ஏற்படவில்லை. எனவே, B.O.T.-மூலம் செய்யப்படுகிற வேலையைத் தவிர்க்க வேண்டுமென்று கருதினால், இதைச் சொல்லலாமே தவிர, வேறொன்றும் அல்ல. அதை ஏற்றுக்கொள்ளக்கூடாது என்பதல்ல. முடியவில்லை என்பதுதான் என்னுடைய கருத்து. அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்குவார்கள்.

பிற்பகல் 2-00

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டினன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏதோ நல்ல வேளையாக இந்தச் சட்டம் புதிதாக கொண்டுவரப்படுகிறது போன்ற உணர்வை ஏற்படுத்துவதற்கு மாண்புமிகு உறுப்பினர்கள் முயற்சித்தாலும்கூட, 25 ஆண்டு காலம், 30 ஆண்டு காலம், 40 ஆண்டு காலம் இந்தச் சுங்க வரி வசூலிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றது என்ற உண்மையையும் இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லத் தவறவில்லை. எனவே, இது நீண்ட நெடுங்காலமாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு ஞானசேகரன் அவர்கள் குறிப்பிடுகிறபோதுகூட, இந்தச் சட்டத் திருத்தம், 1851 ஆம் ஆண்டு சட்டத்திற்குத் திருத்தம் என்று சொன்னார்கள். 1851-லே

கொண்டுவரப்பட்ட சட்டம், அதற்குப் பின்பு பலமுறை திருத்தப்பட்டிருக்கிறது. பலமுறை திருத்தப்பட்டு, அரசாங்கம் நிறைவேற்றுகிற திட்டங்களுக்கு சுங்கம் வசூலிப்பது என்று இருந்த நிலை 1942-லே கொண்டுவந்த சட்டத் திருத்தத்திலே அரசாங்கம் மற்றும் உள்ளாட்சி நிறுவனங்கள் என்று அதிலே வந்திருக்கிறது. மறுபடியும் 1997-ஆம் ஆண்டிலே ஒரு சட்டத் திருத்தம், நம்முடைய சட்டமன்றத்திலே நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அந்த சட்டத் திருத்தத்திலே மூன்றாவது பிரிவாக, தனியார் முதலீடு செய்கிற சாலைகள், பாலங்கள் ஆகியவற்றிற்கு சுங்கம் வசூலிப்பதற்கு வழிவகை செய்து, அந்தச் சட்டத் திருத்தமும் இந்தச் சட்டமன்றத்திலே நிறைவேற்றப்பட்டிருக்கிறது. தனியார் முதலீட்டிற்குச் சுங்கம் வசூலிக்கலாம் என்று சட்டத் திருத்தம் நிறைவேற்றப்பட்டபோது, உள்ளாட்சி நிறுவனங்கள்... (குறுக்கீடு)

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** நான் சொல்லிவிடுகிறேன். நான் சொன்ன பிறகு, சந்தேகம் வந்தால் நீங்கள் கேளுங்கள்.

அதிலே உள்ளாட்சி நிறுவனங்களும் வசூலிக்கலாம என்று பழைய சட்டத்திலே இருக்கிறதே, அதிலே உள்ளாட்சி நிறுவனங்கள் என்று வருகிற அந்தப் பகுதியில் பாலங்கள் என்று இருக்கிறது. சாலைகள் என்று இல்லை. இப்போது, அதற்குத்தான் சட்டத் திருத்தம். சாலைகள் மற்றும் பாலங்கள் என்று அப்படி கொண்டு வருகிறோம். இதுகூட இப்போது அவசியமாகக் கொண்டு வருவதற்கு என்ன தேவை ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால், மதுரையில், புறவழிச் சாலை ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. அமைக்கப்பட்டு முடிவும் பெற்றுவிட்டது. மாநகராட்சியிலே அவர்கள் தீர்மானம் நிறைவேற்றுகிறபோது, அந்தச் சாலை 27.20 கிலோ மீட்டர் நீளம்; அதற்குத் தேவைப்படுகிற தொகை 47.35 கோடி ரூபாய். இந்த 47.35 கோடி ரூபாயைக் கடனாகப் பெற்று அந்தச் சாலை அமைக்கப்பட்டிருக்கிறது. நகர வளர்ச்சி வங்கி, அதன்மூலமாக அந்தக் கடன் பெறப்பட்டு சாலை அமைக்கப்பட்டு முடிவுற்றிருக்கிறது. நகராட்சியிலே தீர்மானம் நிறைவேற்றுகிறபோது, அந்தத் தொகையைக் கடனாகப் பெறுவது; அதை நெடுஞ்சாலைத் துறையின் மூலமாக நிறைவேற்றுவது; நிறைவேற்றி முடிந்த பிறகு, அந்தக் கடனை நாம் நகர



வளர்ச்சி வங்கிக்குத் திரும்பக் கட்டுகிறபோது, சுங்கம் வசூலித்துக் கட்டுவது என்று மாநகராட்சியிலே தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள். அந்தத் தீர்மானம் அரசினுடைய கவனத்திற்கு வந்தது. சரி, இந்தக் கடனைத் திருப்பிக் கட்டுவதற்கு வாய்ப்பு இருக்கிற காரணத்தினாலே இந்தத் திட்டத்தை அனுமதிக்கலாம் என்று அரசு அனுமதித்தது. அனுமதித்த பிறகு, கடன் பெறப்பட்டது. சாலை அமைக்கப்பட்டு, அது முடிவுற்றிருக்கிறது. சாலை அமைக்கப்பட்டு, முடிவுற்று, அதற்குத் திறப்பு விழா நடத்தி, அதிலே போக்குவரத்து அனுமதிக்கப்படுகிறபோது, சுங்கம் வசூலிக்க வேண்டிய அவசியம் வந்தது. எனவே, ஆளுநர் மூலம், அப்போது சட்டமன்றம் கூடாத நேரத்தில், அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டு, அந்த அவசரச் சட்டமும் இப்போது அமலிலே இருக்கிறது. சுங்கமும் வசூலிக்கப்படுகிறது. ஒரு நாளைக்கு 1,20,000 ரூபாய்க்கு மேல் இப்போது வசூலாகிக் கொண்டிருக்கிறது. இதிலே முக்கியமாக மாண்புமிகு உறுப்பினர்களுக்கும், நாட்டு மக்களுக்கும் நான் தெரிவிக்க வேண்டியது ஒன்று, எல்லா சாலைகளுக்கும் சுங்கம் வசூலிக்கப் போவதில்லை. குறிப்பாக, ஒரு கோடி ரூபாய்க்கு மேலே வருகிற திட்டங்கள் என்று வருகிறபோதுதான் சுங்கம் வசூலிக்கிற பிரச்சினைகூட வருகிறது. அதுவும் உள்ளாட்சி நிறுவனங்கள், Corporation போன்ற — மாநகராட்சி போன்ற — அல்லது நகராட்சி போன்றவைகள் கடனாகப் பெற்று அந்தத் திட்டத்தை நிறைவேற்றுகிறபோது நாங்கள் சுங்கம் வசூலிக்க வேண்டும் என்று அவர்கள் தீர்மானம் நிறைவேற்றினால், அதை அரசு மறுக்குமானால், உள்ளாட்சியினுடைய அதிகாரத்திலே அரசு தலையிடுகிறது என்ற குற்றச்சாட்டை நீங்கள் சொல்லமாட்டீர்களா? எனவே, மாநகராட்சி தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது. மாநகராட்சி அப்படி ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினால் அதை மறுக்க முடியாது. எனவே, அப்படி கடன் வாங்கி, அந்தக் கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டிய கட்டாயம் மாநகராட்சிக்கு இருக்கிறது. அதுவும் குறிப்பாக மதுரை மாநகராட்சிக்கு இதுதான் முதல் திட்டம். தனியார் துறையிலே நிறைவேற்றப்பட்ட திட்டம், கோயம்புத்தூரிலே முதல் திட்டம். ஒரு உள்ளாட்சி நிறுவனம் கடன் வாங்கி, சாலை அமைத்து, பாலம் கட்டி — அதிலே சாலை மட்டுமல்ல; மூன்று, நான்கு பாலங்களும் வருகின்றன — இவற்றையெல்லாம் கட்டி முடித்திருக்கின்ற முதல் திட்டம்; உள்ளாட்சி நிறுவனம் துணிந்து செயல்படுத்துகிற ஒரே ஒரு திட்டம், மதுரை புறவழிச் சாலைதான். அந்தச் சுங்கம் யாரிடமிருந்து வசூலிக்கப்படுகிறது? அரசாங்கத்திற்குப் பணம் எங்கிருந்து வரும், சாலை போடுவதற்கு? மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள்கூட காலையிலே 5 சாலைகள் தனது தொகுதியில் மோசமாக இருக்கிறது; உடனே

போடுங்கள் என்று கூறினார்கள். எங்கேயிருந்து வரும் பணம்? மக்களிடமிருந்து வரி போட வேண்டுமா? ஆனால், இந்தச் சுங்க வரி என்பது எல்லா மக்களுக்கும் போடுவது இல்லை. பஸ், கார், லாரி, டிரக் போன்றவைகளுக்கு சுங்க வரி போடப்படுகிறது. டிராக்டர்களுக்குக்கூட இல்லை Three wheelers-க்கு இல்லை; Two wheelers-க்கு இல்லை; சைக்கிளுக்கு இல்லை; மாட்டு வண்டிக்கு இல்லை. நடந்து போகிறவர்களுக்கு வரி இல்லை. (சிரிப்பு) இவ்வளவு சலுகைகள் இருக்கின்றன சாதாரண மக்கள் யாரையும் பாதிக்காமல். Those who can afford to pay, யாரால் வரி செலுத்த முடியுமோ, யாரால் பணம் கொடுக்க முடியுமோ அவர்களிடம்தான் சுங்கம் வசூலிக்கப்படுகிறது. bus operators வசதி இல்லாதவர்களா? ஏழைகளா? லாரி வைத்திருக்கிறவர்கள் ஏழைகளா? டிரக் வைத்திருக்கிறவர்கள் ஏழைகளா? கார் வைத்திருக்கிறவர்கள் ஏழைகளா? அவர்களிடம்தானே சுங்கம் வசூல் செய்கிறோம்.

*பிற்பகல் 2-05*

மாநகராட்சி நிருவாகம் நடக்க வேண்டும் அல்லவா? மாநகராட்சியில், அந்த நிருவாகத்திலே, இதுமாதிரி புதுப்புது தலைவர்கள் வருகிறார்கள். புதிய, புதிய தலைவர்கள், இளைஞர்கள் நிருவாகத்திற்கு வரும்போது, ஒவ்வொருவரும் ஆர்வத்தோடு, தங்களுடைய திட்டங்களை தங்களுடைய மாநகராட்சியில் அல்லது நகராட்சியில் நிறைவேற்ற வேண்டுமென்ற ஆர்வத்தோடு செயல்படுகிறார்கள். அப்படி, அந்த ஆர்வத்தோடு செயல்படுகிறபோது, சாலைகள் அமைக்க வேண்டும், பாலங்கள் கட்ட வேண்டும், மேல் பாலங்கள் கட்டவேண்டுமென்று அவர்கள் ஆசைப்படுகிறபோது, அதற்கு நிதியாதாரம் மாநகராட்சியிலே கிடையாது. இப்போது கடன் வாங்குகிற வசதி இருக்கிறது. நிதியாதாரங்கள் பல இடங்களிலேயிருந்து நமக்கு கிடைக்கின்றன. அந்த நிதியாதாரங்களை பயன்படுத்திக்கொண்டு, நகராட்சியாக இருந்தாலும், மாநகராட்சியாக இருந்தாலும் அல்லது மாநிலமாக இருந்தாலும், அந்த நிதியாதாரங்களைப் பயன்படுத்தி, இதுமாதிரி அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேற்கொண்டால்தான், அந்த மாநிலம் முன்னேறும். அந்த மாநகராட்சி முன்னேரும். அந்த அடிப்படையிலே இது ஒரு அடிப்படை கட்டமைப்பு வசதி. தூத்துக்குடி துறைமுகத்திலிருந்து புறப்படுகிற ஒரு டிரக், நேராக மதுரைக்கு உள்ளே போகாமல், புறவழிச் சாலையாக வந்து சென்னைக்கு வருவதற்கு அவர்களுக்கு எவ்வளவு டீசல் செலவு மிச்சம் ஆகிறது. எவ்வளவு நேரச் செலவு மிச்சமாகிறது. எவ்வளவு இலாபம் அவர்களுக்கு கிடைக்கிறது. இன்னும் ஒன்று சொல்கிறேன். அந்தப் புறவழிச் சாலையில் போகின்றவர்களுக்கு, இந்தப் புறவழிச் சாலையைப் பயன்படுத்துகின்றவர்களுக்கு மட்டும்தான் இந்தச் சுங்கவரி. நாங்கள்





அதிலே போக விரும்பவில்லை. நாங்கள் மதுரைக்கு உள்ளே போய்த்தான் வருவோம் என்று போகிறவர்களுக்கு சுங்கவரி கிடையாது. அதனாலே, யார் இதை பயன்படுத்துகிறார்களோ அவர்களுக்கு மட்டும்தான் அந்தச் சுங்கவரி. அப்படி பயன்படுத்துகிறவர்களுக்கும், மூன்று சக்கர வாகனங்களுக்கு கிடையாது, இரண்டு சக்கர வாகனங்களுக்கு கிடையாது. சைக்கிளுக்கு கிடையாது. மாட்டு வண்டிக்கு கிடையாது. டிராக்டருக்கு கிடையாது. ஆகவே, சாதாரண மக்கள் யாரும் பாதிக்கப்படவில்லை. வசதி படைத்தவர்கள், வரி செலுத்துவதற்கு வாய்ப்பு உள்ளவர்களிடத்திலேதான் வசூலிக்கப்படுகிறது. அதுதானே கம்யூனிச கொள்கை. அதுதானே இடதுசாரி கொள்கை. அப்படிப்பட்டவர்களிடமிருந்துதான் இந்தச் சுங்கவரி வசூலிக்கப்படுகிறதே தவிர, சாதாரண மக்களை பாதிக்கக்கூடிய சுங்கவரி அல்ல இது. இது தொன்றுதொட்டு இருக்கக்கூடிய ஒன்று. இப்போது உள்ளாட்சி நிறுவனமும் இதை வசூலிக்கலாம் என்பதற்காகத்தான், ஏற்கெனவே இருக்கிறது சட்டத்தில். உள்ளாட்சி பாலம் என்று இருக்கிறது. அதிலே சாலை என்பதையும் சேர்த்து இருக்கிறோம். எனவே, இந்தச் சட்டத்தை நிறைவேற்றி கொடுத்து, மதுரை மாநகராட்சியைக் காப்பாற்றும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு.ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே டீசல் விலையை மத்திய அரசு உயர்த்தியபோது, மாநில அரசும், மத்திய அரசும் ஒரு காரணத்தைச் சொன்னது. டீசல் விலை உயர்வைத் தொடர்ந்து வரக்கூடிய, அந்த மானியத்தை வைத்து, இந்தச் சாலைகள் பராமரிக்கப்படும், அதனை மத்திய அரசு மாநிலங்களுக்கு பிரித்து கொடுத்து, இந்தச் சாலைகள் அமைக்கப்படும் என்று ஏற்கெனவே நீங்கள் சொன்னீர்கள். இப்போது சாலையைப் போடுவதற்கு பணம் எங்கேயிருந்து வரும்? நாங்கள் எப்படி சாலையைப் போடுவது என்ற ஒரு கேள்வியையும் கேட்கிறீர்கள். மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சரும் சரி, பழனிசாமியும் சரி இரண்டு பேரும் போய், நாங்கள் உங்கள் சாலைக்கு வரி வாங்குவோம், சுங்கவரியைப் போடுவோம் ஓட்டு போடுங்கள் என்று கேட்கவேயில்லை. சாலையைப்போடுவோம் குடிதண்ணீரைக் கொடுப்போம், லைட் கொடுப்போம், உங்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்வோம், எங்களுக்கு ஓட்டு போடுங்கள் என்று கேட்டிருக்கிறோம். ஓட்டு போட்டு ஆட்சிக்கு வந்த பின்னால், நாம் இப்படியெல்லாம் வரி போடுவோம் என்று சொன்னால் எப்படி மக்கள் ஏற்றுக்கொள்வார்கள்? ஏற்கனவே, மத்திய அரசு டீசல் விலையை உயர்த்தியபோது இதைத்தான் நீங்கள் சொன்னீர்கள். இதே அமைச்சர்தான் பதில் சொன்னார்கள். ஒரு ரூபாய் எப்படி பண்ண முடியும்... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

**திரு. சி. ஞானசேகரன்:** மதுரை மாநகராட்சிக்கு மட்டும் என்று சொன்னார்கள். ஆனால், சட்டத்திலே அப்படியில்லை. ஒவ்வொரு ஊராட்சிமன்றமும் கூட, ஏதாவது திட்டத்தைப் போட்டுவிட்டு, இப்படி செய்தால், இதிலே. என்ன உத்தரவாதம் இருக்கிறது. ஆகவே, தயவுசெய்து அமைச்சர் அவர்கள் இந்தச் சட்டத்தை வாபஸ்பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே. ஹேமச்சந்திரன் தம் திருத்தத்தை முன்மொழியலாம்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"The words, 'road or' occuring in Sub Clauses (1), (2) and (3) of Clause 2 be deleted."

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமசந்திரன் அவர்கள் முன்மொழிந்தத் திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினருடைய திருத்தம் வலியுறுத்தப்படுகின்றதா என அறிய விரும்புகிறேன். திரு. ஜே. ஹேமசந்திரன்.



**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருத்தத்தை வலியுறுத்துகிறேன்.

பிற்பகல் 2-10

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன் அவர்களுடைய திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
மறுப்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
மறுப்போரே அதிகம், திருத்தம் தோல்வியுற்றது.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1 முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு இந்திய சுங்கவரிகள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 43/2000) நிறைவேற்றப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது

## (அஈ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு, 2000

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 2000ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு, (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 40/2000.) மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 40/2000) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

---

@7-11-2000ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்பொழுது மணி 2¼ ஆகிவிட்டது. இது பேச வேண்டிய சட்டம். இப்படி அவசர கதியில் போனால்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்னும் 2, 3 சட்டமுன்வடிவுகள்தான் இருக்கின்றன. அவற்றை முடித்துவிடலாம். இதற்கென்று இன்னொரு நாள் நீட்டிக்க முடியாது. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) எல்லோருக்கும்தான் வாய்ப்புத் தருகிறோமே, சரி நீங்கள் பேசுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** After all Special Officers என்பதனாலேதான் சொல்கிறோம். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதாவது கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேர்வு செய்யப்பட்டு தங்களுடைய shareholders-ஆல் தேர்ந்தெடுக்கப்பட்ட Directors அந்த கூட்டுறவுச் சங்கத்தை நிர்வகித்துக் கொண்டு போவது என்பதுதான் ஜனநாயக ரீதியாக அமையும். ஆனால், சென்ற 25 ஆண்டு காலமாக தனி அதிகாரிகளின் தலைமையில் சில சங்கங்கள் செயல்படுகின்றன என்றால் அது மிகவும் வருந்தத்தக்க விஷயம். இந்தத் தேர்தல்களைப் பொறுத்த அளவிலே நடத்துவதற்கு எந்தவிதமான தடையும் இல்லை. நான்கூட என்ன சொல்கிறேன் என்றால், ஏற்கெனவே கூட்டுறவுத் துறை சம்பந்தமான Demands-ன் மேலே பேசுகிற நேரத்திலே நாங்கள் வலியுறுத்தினோம். அதாவது ஒரு தேர்தல் ஆணையத்தை ஏற்படுத்தி—உள்ளாட்சிகளுக்கு எப்படி ஒரு தேர்தல் ஆணையம் தனியாக வைக்கப்பட்டிருக்கிறதோ, அதேபோல ஒரு தேர்தல் ஆணையம் கூட்டுறவுச் சங்கத் துறையிலே ஏற்படுத்தி—கூட்டுறவுச் சங்கங்களுக்கு 3 ஆண்டுகளுக்கு ஒரு தடவை தேர்தலை நடத்தி, தனி அதிகாரிகளுடைய ஆட்சி என்பதை மாற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்த நேரத்திலே வலியுறுத்தப்பட்டது. ஏற்கெனவே மீண்டும் 6 மாதமாகிவிட்டது. இதற்கிடையே தேர்தல் நடத்தி, உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு நிருவாகத்தை உருவாக்குவதற்கு அரசுக்கு தாராளமான அவகாசம் இருந்தது. ஆனால், அது செய்யப்படாமல் இப்போது தனி அதிகாரிகளை நியமித்ததற்கு மீண்டும் அந்த காலத்தை நீட்டிப்பதற்கு ஒரு சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. ஜனநாயக விரோதமான நடவடிக்கை. இந்த நேரத்திலே தமிழக அரசிடம் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம்

என்ன வேண்டுகிறோம் என்றால், இந்தத் தேர்தலைப் பொறுத்த அளவிலே விரைவிலே நடத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இது மட்டுமல்ல, தேர்ந்தெடுக்கப்படாத பல கூட்டுறவுச் சங்கங்கள் இருந்துகொண்டிருக்கின்றன. அந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்கெல்லாம் தேர்தலை நடத்துவதற்கான நடவடிக்கை விரைவிலே எடுக்கப்பட வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு போவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் தனி அதிகாரிகளுடைய ஆட்சிக் காலத்தை நீட்டித்து வைப்பதற்கு பலமுறை இந்த மாமன்றத்திலே அனுமதி பெறப்பட்டிருக்கிறது. இந்த முறையும் அதே மாதிரி அனுமதி கோரப்படுகிறது. அதற்குச் சொல்லப்படுகிற காரணம் மிகவும் குழப்பமான நிலையிலே இருக்கிறது. நிர்வாக மற்றும் பிற காரணங்களால் இன்னும் தேர்தல் முடிக்கப்படாமல் இருக்கிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. நிர்வாகக் காரணங்கள் என்ன? அல்லது பிற காரணங்கள் என்றால் என்ன என்ற எந்த விவரமும் இங்கே அவைக்குத் தெரிவிக்கப்படாமல் வெறுமனே கால நீட்டிப்புப் பெறுவது என்பது நல்ல ஜனநாயக ஆரோக்கியம் அல்ல என்பதைத் தெரிவித்து, ஆட்சேபனை தெரிவித்து அமர்கிறேன்.

*பிற்பகல் 2-15*

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மூன்றாவது முறை முதலமைச்சராக இருந்தபோது கலைஞர் அவர்கள் கூட்டுறவுச் சங்கத் தேர்தல்களை நடத்தினார்கள். ஆரம்ப கட்ட தேர்தல் நடைபெற்றது. மைய சங்கங்கள், மாநில சங்கங்களுடைய தேர்தல்கள் நடைபெறுவதற்கு முன்பாகவே ஆட்சி கலைக்கப்பட்டு, மீண்டும் தனி அதிகாரிகளுடைய ஆட்சி அன்றைக்கு வந்தது. மீண்டும் இப்பொழுது நான்காவது முறையாக வந்தபிறகு முறைப்படியாக தொடக்க அளவிலிருந்து, மைய அளவிலிருந்து, மாநில அளவு வரை நடத்தக்கூடிய சங்கங்களுடைய தேர்தல்கள் முழுமையாக நடத்தப்பட்டு, மக்கள் பிரதிநிதிகள் இப்போது அதை ஆண்டுகொண்டு இருக்கிறார்கள். தேர்தல் நடத்தப்பட்டபோதுகூட 3 ஆண்டுகள் என்று நடத்தப்பட்டு, மீண்டும் 2 ஆண்டுகள் அவர்களுக்கு பதவி நீட்டிப்பு தந்து, வரும் 6 மாத காலத்திலே புதிய தேர்தலை நடத்தக்கூடிய சூழ்நிலையிலே இருந்துகொண்டிருக்கிறது. இங்கே மாண்புமிகு உறுப்பினர்



திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் சொல்கின்றபோது ஏன் இன்னும் தேர்தல் நடத்தப்படாமல் மக்களுடைய பிரதிநிதிகள் வராமல் இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். குறிப்பாக நம்முடைய மாண்புமிகு திரு. பெரியசாமி அவர்கள் பேசுகின்றபோது நிர்வாக காரணங்கள், பிற காரணங்கள் என்று சொன்னார்கள். நிர்வாக காரணங்கள் என்று சொல்கின்றபோது அரசு நிர்வாகத்திலே ஏற்படுகிற காரணங்கள்; பிற காரணங்கள் என்று சொன்னால் சில தனி நபர்கள் நீதிமன்றத்திலே வழக்கு தொடுத்திருக்கிறார்கள். சில இடங்களிலே சில சங்கடமான சூழ்நிலைகள் ஜாதி தகராறுகள் போன்ற காரணங்களால் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்ற தேர்தல்களும் இருக்கின்றன. இப்படிச் சொல்வது 0.1% தேர்தல்கள்தான். அடிப்படைத் தேர்தல்கள் நின்றிருக்கின்றன. மற்ற அத்தனை இடங்களிலும் தேர்தல்கள் நடத்தபட்டு தலைவர்கள் வந்திருக்கிறார்கள். குறிப்பாக இப்போது தனி அலுவலர்கள் என்று வருவது Spinning mill-க்கும் Sugar mill-க்கும் மட்டும்தான். இந்தத் தனி அலுவலர்கள் நீட்டிப்புச் சட்டம், இப்போது இருக்கின்ற நூற்பு ஆலைகளும், சர்க்கரை ஆலைகளும் என்று வருகின்றபோது சில நிதி நெருக்கடிகள் இருக்கின்றன. நிர்வாகத்தை, புதிதாக வருகின்றவர்கள் எங்கே அதைச் சரி செய்ய முடியாத நிலைமை வருகின்றதோ என்ற ஒரு அச்சம் அவர்களுக்கு இருக்கிறது. ஆனால் அந்த நிதி நிலைமையை உருவாக்குகின்றபோது இதிலே பல இடங்களிலே கடன் கேட்டுப் பெறுகின்ற ஒரு சூழ்நிலை. அந்தச் சூழ்நிலையில்தான் இது தள்ளி வைக்கப்பட்டிருக்கின்றது என்பதைத் தவிர, வேறு எந்தவிதமான காரணமும் இல்லை. மேலும் வருகின்ற காலத்தில் புதிதாகத் தேர்தல் நடத்தப்படுகின்றபோது முழுமையாக அதற்கும் நடத்துவதற்கு நடவடிக்கைகள் எடுத்திருக்கிறோம். என்னென்ன நடவடிக்கைகள் எடுத்து இருக்கிறோம் என்பதைப்பற்றிக்கூட என்னால் நீண்ட நேரம் சொல்ல முடியும். அப்படி நடவடிக்கைகள் எடுத்திருக்கின்ற காரணத்தினால் இந்த முறை இன்னும் ஓராண்டு காலத்திற்கு இந்தத் தனி அலுவலர் நீட்டிப்புச் சட்டத்தை ஆதரித்து, நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 40/2000) நிறைவேற்றப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (அஉ) தமிழ்நாடு நீர்ப்பாசன (மேம்பாட்டு வரி விதிப்புத்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2000

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 2000 ஆண்டு தமிழ்நாடு நீர்ப்பாசன (மேம்பாட்டு வரி விதிப்புத்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 44/2000), மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு நீர்ப்பாசன (மேம்பாட்டு வரி விதிப்புத்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 44/2000)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்."
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது

---

@ 9-11-2000 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[பேரவைத் துணைத் தலைவர்] [2000 நவம்பர் 11

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு நீர்ப்பாசன (மேம்பாட்டு வரி விதிப்புத் திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 44/2000) நிறைவேற்றப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.



2000 நவம்பர் 11]

பிற்பகல் 2-20

## (மூன்) தமிழ்நாடு வழக்குரைஞர்கள் நல நிதிய (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, 2000 ஆண்டு தமிழ்நாடு வழக்குரைஞர்கள் நல நிதிய (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 48/2000), மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு வழக்குரைஞர்கள் நல நிதிய (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 48/2000)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** துணைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் –

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே...

**திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, திரு. ஞானசேகரன், நீங்கள் உட்காருங்கள். முதலில் திரு. அ.லெ. சுப்பிரமணியன் அவர்கள் பேசி முடிக்கட்டும். திரு. அ.லெ. சுப்பிரமணியன்.

***திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த தமிழ்நாடு வழக்குரைஞர்கள் நல நிதிய (திருத்தச்) சட்டமுன்வடிவை நான் வழக்குரைஞர்கள் சார்பாக மனப்பூர்வமாக ஆதரித்து, வரவேற்கிறேன். இதிலே வழக்குரைஞர்கள் இடையிலே பணியிலிருந்து விலகிக் கொண்டால் முன்பு 50,000 ரூபாய் என்று இருந்ததை இப்போது 1 இலட்சம் ரூபாய் ஆக உயர்த்தியிருப்பது வரவேற்கத்தக்கது.

@ 10-11-2000 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

அதைப்போல, வழக்குரைஞர்கள் தொழிலினைச் செய்துகொண்டு இருக்கின்றபோது இறந்துபோனால் ஒரு இலட்சம் ரூபாய் என்று இருந்தது. அது இப்போது 2 இலட்சம் ரூபாயாக உயர்த்தி இந்தத் திருத்தச் சட்டமுன்வடிவைக் கொண்டுவந்திருக்கிறார்கள். இது வரவேற்கத்தக்கது.

நேரமில்லாத காரணத்தினால் நான் மற்ற விவரங்கள் குறித்துப் பேச விரும்பவில்லை. ஒன்றே ஒன்றை மட்டும் நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். இதிலே ஒரு பிரிவில் யார், யார் பெறலாம் என்பதற்கு ஒரு தகுதி இருக்கிறது என்று கூறப்பட்டுள்ளது. இப்போது Practice செய்கின்ற வழக்குரைஞர்களுக்காக ஒரு நிதி இருக்கிறது. Bar Council-ல் அதற்குப் பணம் செலுத்த வேண்டும். அப்படிச் செலுத்தக் கூடியவர்கள் இறந்தால் 2 இலட்சம் ரூபாய் கொடுக்கலாம். அதற்கு ஒரு proviso, அதாவது ஒரு exemption proviso இருக்கிறது. அதிலே என்ன கூறியிருக்கிறார்கள் என்றால், 'இந்த உறுப்பினர் அவருடைய இறப்பிற்கு முன்பாக ஓய்வூதியம், பணிக்கொடை அல்லது பிற ஓய்வுக்காலச் சலுகைகள் ஏதேனும் மாநில அரசு அல்லது மைய அரசு அல்லது பிற அதிகார அமைப்பு அல்லது வேலைதரும் ஆளுநர் ஆகியோர்களில் எந்த அமைப்பிடமிருந்தாவது பெற்று இருந்தால், அவர்கள் அல்லது அவர்களது தேவைக்கேற்ப பதவி வகித்தால் அவருடைய வாரிசு இதைப் பெற முடியாது. அதனால் இதிலே சொல்லியிருப்பது, ஒருவர் பென்ஷன் வாங்கிக் கொண்டிருந்து, அவர் வழக்குரைஞராக இருந்து, அந்தச் சங்கத்தில், அந்த நிதியத்தின் உறுப்பினராக இருந்து இறந்துபோனால் அவருடைய வாரிசு 2 இலட்சம் ரூபாய் பெற முடியாது.

இப்போது எனக்கிருக்கிற பயமெல்லாம், நானும் ஒரு practising lawyer. நானும் ஒரு வழக்குரைஞர். பல வழக்குரைஞர்கள் இங்கே சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்கிறார்கள். நாளை இருப்போமோ இல்லையோ அல்லது சட்டமன்ற உறுப்பினராக வருவோமோ இல்லையோ, தெரியாது. மேலும், பல முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களும் இருக்கிறார்கள். அவர்களுக்கும் சட்டமன்றப் பேரவையிலிருந்து ஓய்வூதியம் தருகிறார்கள். அப்படி ஓய்வூதியம் பெற்றிருந்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் அவர்கள் practising lawyer -ஆக கோர்ட்டிலே, அவர்கள் நீதிமன்றத்தில் தொழில் செய்தால் அவர்கள் இறந்துபோனால், ஓய்வூதியம் பெறுகிறார்கள் என்று சொல்லி அந்த 2



இலட்சம் ரூபாயை அவர்களுடைய வாரிசுகள் பெற்றுகொள்வதைத் தடுக்கக்கூடிய ஒரு நிலை இந்தப் proviso-வில் இருக்கிறது. ஆகவே, இங்கே சட்டமன்றத்தில் இருக்கின்ற வழக்குரைஞர் சட்டமன்ற உறுப்பினர்களின் சார்பாக நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, இதற்கொரு clarification அமைச்சர் அவர்கள் தரவேண்டும் அல்லது இந்த proviso-வுக்கு ஒரு exemption (மேசையைத் தட்டும் ஒலி) இந்த வழக்குரைஞர்கள் சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தால் (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுக்கு இதிலிருந்து விதிவிலக்கு உண்டு என்பதை அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த வழக்குரைஞர்கள் நல நிதியச் சட்டத்திற்குக் கொண்டுவரப்படுகிற திருத்தத்தை நான் இங்கே வரவேற்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். இருந்தாலும்கூட இரண்டு இலட்சம் ரூபாய் என்பது மிகக் குறைவு. இந்தக் காலகட்டத்தில் 5 இலட்சம் ரூபாயாவது ஒரு வழக்கறிஞர் இறந்தால் கொடுக்க வேண்டுமென்று இந்தச் சட்டமுன்வடிவில் வலியுறுத்துகிறேன். ஒத்திவைப்புத் தீர்மானம்கூடக் கொடுத்திருந்தேன். அது எடுத்துக்கொள்ளப்படவில்லை. 50 ரூபாய் subscription ஆக நீங்கள் வாங்கி, அதைப்போல வக்காலத்துக்கு 10 ரூபாய் என்று stamp duty எல்லாம் பெற்று, அப்படி வருகின்ற பணத்திலேயிருந்து குறைந்தபட்சம் 5 இலட்சம் ரூபாயாவது ஒரு வழக்குரைஞர் இறந்தால் கொடுக்கக்கூடிய ஒரு நிலையை இந்த அரசு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்றும் Welfare Fund Act-லேகூட அப்படிப்பட்ட provision கொடுக்க வேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, வழக்குரைஞர் இறந்தால்தான் 5 இலட்சம், அதாவது இப்போது இரண்டு இலட்சம் என்று இருக்கிறது. சட்டத்திருத்தத்தில், உயிரோடு இருந்தால் ஒரு இலட்சம்தான் என்று இருக்கிறது. ஒருவேளை இறக்காமல் இருந்து, தொடர்ந்து அவர்கள் பணிக்குப் போகாமல் விட்டுவிட்டால் குறைந்தபட்சம் 2.5 இலட்சம் ரூபாயாவது அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய ஒரு வசதியை இந்த அரசு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இந்த நல நிதியிலேயே அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பிரமணியன் அவர்கள் சொன்னதைப்போல, pension பெறக் கூடியவர்களுக்குத் தகுதியின்மை வந்துவிடுகிறது. அப்படிப்பட்ட ஒரு விதியைத் தளர்த்தி வழக்கறிஞர் ஒருவர் தொடர்ந்து தன்னுடைய பணியைச் செய்வாரேயானால் அவருக்கும் pension கிடைக்க வேண்டும். நம்முடைய இந்த சட்டமன்ற உறுப்பினர் பணி என்பது part time job தான். அவர் சொன்னதுமாதிரி சட்டமன்ற உறுப்பினர் பதவி மற்றவைகளெல்லாம் part time job தான். முழு நேரப் பணியாகப் பண்ணினால, practice-லிருந்தே நாங்கள் suspend ஆகிவிடுவோம். Part time-ஆக இருக்கக்கூடிய காரணத்தினால் அதிலே pension என்ற ஒன்று வருமேயானாலும்கூட அந்த அடிப்படையிலே நல நிதியைப் பெறக்கூடிய ஒரு தகுதியின்மை வந்துவிடக் கூடாது. எனவே அந்த விதியை நீங்கள் எடுத்துவிட வேண்டும் என்று கேட்டு, அமைகிறேன்.

*பிற்பகல் 2-25*

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஏ.எல்.எஸ். அவர்கள் பேசும்போது ஏற்கெனவே ஓய்வூதியம் பெறுபவர்கள் பயன் பெறமுடியாத சூழ்நிலை இந்தச் சட்டத்திலே இருக்கிறது என்ற விவரத்தை இந்த மாமன்றத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். நான் அவருக்குப் பதில் சொல்ல விரும்புவது எல்லாம் இந்தச் சட்டம் 1987-லேயே நிறைவேற்றப்பட்டுவிட்டது. அவர் எந்த விதியைச் சொல்கிறாரோ அது 1987-லே இருக்கிறது. புதிதாக நாம் எந்தத் திருத்தத்தையும் கொண்டு வரவில்லை. நாமாகவும் இதைக் கொண்டு வரவும் இலலை என்பதை அவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கு அடுத்தபடியாக மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் 2 இலட்சம்தானா, 5 இலட்சம் என்று இருக்கக்கூடாதா என்று சொன்னார்கள். நான் அவர் காந்தியவாதி என்பதால் காந்தி அடிப்படையிலேயே பதில் சொல்கிறேன். மனம் என்பது ஒரு அமைதி பெறாத பறவை. அது மேலும், மேலும் பறக்க ஆசைப்படும். எனவே நாங்கள் 5 இலட்சம் என்றாலும்கூட, நீங்கள் 10 இலட்சம் என்று சொல்வீர்கள். 10 இலட்சம் என்று சொன்னால் 15 இலட்சம் என்று சொல்வீர்கள்.





அதனாலே அதிகம் கேட்கக்கூடாது என்று நான் சொல்லவில்லை. என்றாலும் 1 இலட்சத்திலிருந்து 2 இலட்சமாக உயர்த்தியிருக்கிறோம். 100 சதவிகிதம் உயர்த்தியிருக்கிறோம். ஒரு மடங்கு உயர்த்தி இருக்கிறோம். எனவே இது காலப்போக்கில் உயர்த்தப்படுவதற்கு வழி வகுக்கும். அதைவிட முக்கியம் என்னவென்றால் இந்த சேம நல நிதித் திட்டத்தின்கீழ்—தமிழ்நாட்டில் ஏறத்தாழ 30,000 வழக்கறிஞர்கள் இருக்கிறார்கள். ஆனால் இந்தத் திட்டத்திலே—தங்களைப் பதிவு செய்துகொண்டவர்கள் 10,000 பேர்தான். நம்முடைய திரு. ஞானசேகரன் போன்றவர்கள் இந்த 30,000 பேரையும் இந்தத் திட்டத்தின்கீழே கொண்டு வந்தால் இந்த உதவித் தொகை மேலும் அதிகரிப்பதற்கு வழிவகை ஏற்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** 1987-லிருந்து-

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதுதான் முதலிலேயே சொல்லிவிட்டீர்களே. இன்னும் எவ்வளவு நேரம் பேசிக்கொண்டே இருப்பீர்கள். விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 7 முடிய திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 7 முடிய சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு வழக்குரைஞர்கள் நல நிதிய (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 48/2000) நிறைவேற்றப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.





## 7. அறிவிப்புகள்-தொடர்ச்சி

### (ஆ) பதிவு செய்தல் (தமிழ்நாடு இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. *2000 ஆண்டு பதிவு செய்தல் (தமிழ்நாடு இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் (சட்டமன்றப பேரவை சட்டமுன்வடிவு எண் 41/2000) பேரவையில் ஆய்வு செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*

## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)-தொடர்ச்சி

### (அ) பதிவு செய்தல் (தமிழ்நாடு இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்.) 2000 ஆண்டு பதிவு செய்தல் (தமிழ்நாடு இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 41/2000), மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.*

***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு பதிவு செய்தல் (தமிழ்நாடு இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 41/2000)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விஞ்ஞான ரீதியான வளர்ச்சி நம்முடைய நாட்டிற்குத் தேவை என்பதுபற்றி மாற்றுக் கருத்து இல்லை. ஆனால் துரதிருஷ்டவசமாக விஞ்ஞான ரீதியான வளர்ச்சி இந்த சாதாரண மக்களைப் பாதிக்கக்கூடிய முறையிலே அமைகிற ஆபத்தும் இப்போது ஒரு பக்கத்திலே ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த registration சம்பந்தமாக documents

@ 7-11-2000ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

எல்லாம் computerise பண்ணுவதைப் பொறுத்தளவிலே அது பாதுகாக்கப்பட வேண்டும், அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். ஆனால் இந்த computerisation காரணமாக பலர் பாதிக்கப்படுகிறார்கள் என்ற ஒரு நிலைமையும் இப்போது ஏற்பட்டிருக்கிறது. இப்போது அவர்கள் பாதுகாக்கப்படுவதற்கு அவர்களால் ஒரு கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது.

எங்களுக்கு நல வாரியத்தை ஏற்படுத்தி, எங்களிடமிருந்து பணத்தைப் பிடித்து, எங்களுக்கு Pension, Provident Fund போன்ற சலுகைகளைச் செய்தால் இப்போது இத்தொழிலில் ஈடுபடுகிறவர்களுக்கு ஒரு பாதுகாப்பு கிடைக்கும் என்ற ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அந்தக் கோரிக்கையைப் பொறுத்தளவிலே அரசு பரிசீலித்து ஒரு முடிவு எடுத்தது மாதிரி தெரியவில்லை. நான் இந்த நேரத்திலே என்ன கேட்டுக்கொள்ள விரும்புகிறேன் என்றால் இப்போது இந்த விஞ்ஞான ரீதியான வளர்ச்சியை நாம் பயன்படுத்துவதற்கு முயற்சிக்கிற நேரத்திலே, இன்னொரு பக்கத்திலே மக்களை, சாதாரண மக்களைப் பாதிக்கக்கூடிய முறையிலே அது அமைந்துவிடக் கூடாது. அதாவது அந்தத் தொழிலிலே ஈடுபடக்கூடியவர்களெல்லாம், சாதாரண மக்கள்தான், ஆகவே, அவர்களைப் பாதுகாத்துக்கொள்வதற்காக அவர்களால் கோரிக்கைகள் அரசுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று கருதுகிறேன். அதிலே பிரதானமான கோரிக்கை என்னவென்றால் அவர்களுக்கு நல வாரியம் ஏற்படுத்தி, அவர்களுடைய வாழ்க்கைக்கு ஒரு பாதுகாப்பை ஏற்படுத்த வேண்டும் என்பதுதான். அதையும் அரசு பரிசீலித்து, அவர்களுக்கு ஒரு நல வாரியம் ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 2-30

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் வலியுறுத்திய அந்த நல வாரியத்தை அவசியம் அமைக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தினுடைய நோக்கத்தைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் குறிப்பாக குறிப்பிட்டுச் சொன்னது, பத்திர எழுத்தர்களுக்கு வாரியம் அமைக்கப்பட வேண்டும்; அவர்களுடைய கோரிக்கை நிறைவேற்றப்பட வேண்டும் என்று சொன்னார்கள். நேற்று பேசுகின்றபோதுகூட மாண்புமிகு





உறுப்பினர்கள் திரு. சுப்பராயன் மற்றும் திரு. ஞானசேகரன் ஆகியோர் சுட்டிக்காட்டினார்கள். ஆகவே, அரசு அழைத்துப் பேசும் என்று நாங்கள் குறிப்பிட்டிருக்கின்றோம். ஆனால், இந்தச் சட்டத்தினுடைய நோக்கம், தலையாய நோக்கமே, ஏற்கெனவே பத்திரப் பதிவுத் துறையில் கணினிமயமாக்க வேண்டும் என்று அரசு அறிவித்து, அதுகூட கொஞ்சம் காலதாமதமாக இருக்கிறது என்று எதிர்க்கட்சிகளால் சுட்டிக்காட்டியதும் அதை மிகத் தீவிரமாக நடைமுறைப்படுத்துவதற்காக அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இது ஏற்கெனவே பத்திரப் பதிவுத் துறையிலே இருக்கக்கூடிய புள்ளிவிவரங்கள், ஆவணங்கள் பதிவு ஆகியவை காகித வடிவத்திலே இருந்தன. அவற்றை இப்போது நாம் மின்னணு மூலமாகப் பதிவு செய்கிறோம். அதற்காகத்தான் திருத்தம் கொண்டு வந்திருக்கிறோம். வேறு ஒன்றுமில்லை. இது பத்திர எழுத்தர்கள், மற்றவர்கள் சம்பந்தப்பட்டது அல்ல. எனவே, இந்தச் சட்டத்தைப் பொறுத்தளவிலே காகித வடிவத்திலே பேணிப் பாதுகாக்கப்படுகின்ற புள்ளிவிவரங்கள், ஆவணங்கள் பதிவுகள் இப்போது மின்னணு வாயிலாகப் பதிவு செய்து, பாதுகாக்கப்பட்டு அந்த வகையிலே இப்போது மக்களுக்குச் சேவை செய்வதற்காகத்தான் இந்த திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, இது எந்த வகையிலேயும் யாரையும் பாதிக்காது. எனவே, இதனை நிறைவேற்றித் தரக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.*

*சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.*

*பிரிவுகள் 2 முதல் 8 முடிய திருத்தங்கள் இல்லை.*

*பிரிவுகள் 2 முதல் 8 முடிய சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

[பேரவைத் துணைத் தலைவர்] [2000 நவம்பர் 11

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு பதிவு செய்தல் (தமிழ்நாடு இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 41/2000) நிறைவேற்றப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.



2000 நவம்பர் 11]

## (அஏ) தமிழ்நாடு நிலக்கொடை வேள்வி (பூதான் யக்ஞா) (திருத்தச்) சட்டமுன்வடிவு 2000

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 2000 ஆண்டு தமிழ்நாடு நிலக்கொடை வேள்வி (பூதான் யக்ஞா) (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 28/2000) (ஆய்வுக் குழு ஏற்பளித்தவாறு), மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர்.

• **மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு நிலக்கொடை வேள்வி (பூதான் யக்ஞா) (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்ற பேரவை சட்டமுன்வடிவு எண் 28/2000) (ஆய்வுக் குழு ஏற்பளித்தவாறு) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி.

***திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு நிலக்கொடை வேள்வி சட்டமுன்வடிவின்மீது கடந்த மே மாதம் 18 ஆம் தேதி இந்தப் பேரவையிலே முன்மொழியப்பட்ட நேரத்தில், நாங்கள் இதன்மீது நிதானமான ஆய்வு செய்யப்பட வேண்டும் என்று வலியுறுத்தினோம். அதற்கான முறையிலே ஒரு ஆய்வுக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட அந்தக் குழுவில் 15 சட்டமன்ற உறுப்பினர்கள் இடம் பெற்றிருக்கிறார்கள். ஆனால், என்ன காரணத்தாலோ 8 சட்டமன்ற உறுப்பினர்களோடு ஒரு அணியாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கிற இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அதிலே இடம் பெறவில்லை. அதனால் கருத்தைச் சொல்வதற்கான வாய்ப்பு அந்தக் கமிட்டியிலே கிடைக்கவில்லை. நேரடியாக வருகை தந்தபொழுது எங்கள் சார்பாகச் சில கருத்துகளைத் தெரிவித்திருக்கின்றோம். ஆனால் துரதிருஷ்டம் என்னவென்றால், இந்தக் கமிட்டி ஆய்வு செய்துகூட எந்தத் திருத்தத்தையும் ஏற்படுத்துவதற்கு முன்வரவில்லை.

---

@18-5-2000 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

*பிற்பகல் 2-35*

நம்முடைய நாட்டில் மிக முக்கியமாகக் கருதப்பட்ட இந்த நில தான இயக்கம், ஆச்சார்ய வினோபா அவர்களால் தொடங்கப்பட்ட இந்த நில தான இயக்கத்தைப் பொறுத்தவரையில் ஏறத்தாழ 30,000 ஏக்கர் அளவிற்கு தமிழ்நாட்டிலே நிலம் தானம் பெறப்பட்டதாக விவரம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த தானம் தரப்பட்ட நிலத்தை முறைப்படுத்துவதற்கான முறையிலே சில திருத்தங்கள் இந்தச் சட்டமுன் வடிவிலே கூறப்பட்டிருக்கின்றன. அதிலே ஒன்றிரண்டு திருத்தங்களை ஏற்றுக்கொள்வதிலே எங்களுக்கு ஆட்சேபணையில்லை. ஆனால் சில விவரங்களை இன்னும் தெளிவாக்க வேண்டியதும், தேவைப்படுகின்ற அளவுக்கு விளக்க வேண்டியதும் அரசுக்குப் பொறுப்பாக இருக்கிறது.

இதிலே வருமான வரம்பு, ஏழை என்ற ஏழ்மைக்கு வரம்பு கட்டுகிறபொழுது ரூபாய் 300 என்று இருப்பதை 24,000 என்ற அளவிற்கு உயர்த்தியிருக்கிறார்கள். அதிலே ஒன்றும் யாருக்கும் ஆட்சேபணையிருக்க முடியாது. (குறுக்கீடு) 25,000 என்று உயர்த்தியிருக்கிறார்கள். அதிலே ஆட்சேபணையில்லை.

ஒரு பொது நோக்கத்திற்காக அரசு பொருத்தம் எனக் கருதி வகுத்துரைக்கும் நிபந்தனைக்கு உட்பட்ட நிலத்திற்கு ஈடான சந்தை மதிப்பில் இரு பங்கு அளவிலான அளவினைச் செலுத்துவதின் மூலம் அடிப்படையில் ஒரு நபர் அல்லது நிறுவனத்திற்கு ஒப்படைக்க வகை செய்கிறது. பூமிதானமாகப் பெற்ற நிலத்தை, அரசு பொது நோக்கங்களுக்காகக் கருதுகிறபோது, சந்தை மதிப்பில் இரு பங்கு அளவினைச் செலுத்துகிறபோது அந்த நிலத்தைக் கொடுக்கலாம் என்று கருதுவதற்கு, அதை வழங்குவதற்கு வழி செய்கிறது இந்தச் சட்டத்திலே. சந்தை மதிப்பிலே, ஒரு பங்கு சந்தை மதிப்பிலே நிலம் கிடைக்கிறபொழுது, இந்த தான நிலத்தை இரண்டு பங்கு சந்தை மதிப்பு செலுத்திப் பெறுவதற்கு யார் முன்வருவார்கள், எந்த நிறுவனம் முன்வரும், என்பதைப்பற்றி நாம் கருதிப் பார்க்க வேண்டிய நிலையிலே இருக்கிறோம். (மணியடிக்கப்பெற்றது) இதிலே நிறைய பிரச்சினைகள் இருக்கின்றன.

அதேபோல, தானமாகப் பெறப்பட்டிருக்கிற இந்த பூமியில் தானமாகக் கொடுத்த ஒரு இடத்தை மாற்றி, இன்னொரு இடத்தைக் கொடுத்துவிட்டு, அதை எடுத்துக்கொள்வதற்கு இந்தச்சட்டத் திருத்தத்திலே வாய்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. ஒரு காலத்திலே கிராமமாக இருந்திருக்கும். அங்கே





தானம் கொடுத்திருப்பார்கள். அந்த இடம் இப்பொழுது வளர்ச்சியடைந்து. நகரமாக மாறியிருக்கும். நகரத்தில் அந்த விலை மதிப்பு, அந்த இடத்தினுடைய முக்கியத்துவம், எந்த அளவிற்கு இப்பொழுது வந்திருக்கும் என்பதை நாம் கருதிப் பார்க்க வேண்டும். ஆனால் அந்த இடத்திற்கு, யாரும் தீண்டாத ஒரு இடமாகப் பார்த்து, தொலைதூரத்தில் ஒரு இடத்தை வாங்கிக் கொடுத்துவிட்டால் அந்த இடத்தை மாற்றிக் கொடுக்கலாம் என்றால் அது ஏராளமான தவறுகளுக்கு வாய்ப்பு அளிக்கும், முறைகேடுகளுக்கு வாய்ப்பு அளிக்கும், அதுபோன்ற அம்சங்களும் இந்தத் திருத்தத்திலே இருக்கிற காரணத்தினாலேதான் ஆய்வு செய்யப்பட வேண்டும்; நிதானமாக இதைப்பற்றி யோசிக்க வேண்டும் என்று நாங்கள் வலியுறுத்தினோம்.

அதேபோல, நிலத்தைத் தானமாகக் கொடுப்பதற்கு வீடற்ற ஏழை நபர் என்று வருகிறபொழுது, வீட்டு இடத்தைத் தவிர, வேறு எந்த அசையும் சொத்துக்கள், அசையாச் சொத்துக்களும் வைத்திருக்கக் கூடாது என்ற வரையறைப்பு செய்ய வேண்டியிருக்கிறது. அந்த வீடற்ற, நிலமற்ற ஏழைகள் என்று வருகிறபொழுது வீட்டை மட்டுமே வைத்திருக்கிற ஏழைகளுக்கு நிலம் கொடுப்பதுபற்றிக் கருதிப் பார்க்கலாம். வீடே இல்லாத ஏழைகளுக்கு வீடு கொடுப்பதற்குக்கூட வழி செய்யலாம். தானமாக ஒருவரிடமிருந்து நிலத்தைப் பெற்று, இன்னொருவருக்கு நிலம் கொடுப்பதுதான் இதனுடைய நோக்கமாக இருக்கிறது. அந்த அடிப்படையிலே நிலத்தைக் கொடுக்கிறபொழுது விலைக்கிரையம் கட்டாமல் இனாமாக, இலவசமாகப் பட்டா வழங்குவதைப்போல நகரப் பகுதியிலே இருக்கக்கூடிய நிலத்தைப் பட்டா வழங்குவதற்கு முயற்சியெடுக்கலாம் என்ற கருத்தையும் இங்கே தெரிவித்துக்கொள்கிறோம்.

இதிலே கால அவகாசம் இல்லாத காரணத்தால்—இன்னும் கருத்து சொல்ல வேண்டிய அவசியம் இருக்கிறது. ஆனால் அதற்கு வாய்ப்பு இல்லாத சூழ்நிலையில்—இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டம் ஏற்கெனவே வந்தபொழுது நாங்கள்தான் அதைச் சொன்னோம். வினோபாஜி அவர்கள் இந்த நாட்டில் ஒரு

புனிதமான யாத்திரையை மேற்கொண்டபோது, எத்தனையோ பேர் ஏழைகள்கூட அவர்கள் வைத்திருக்கிற நிலத்தை இரண்டு ஏக்கர்கூடக் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, இதை உடனடியாக, அவசரமாகப் பண்ணக் கூடாது என்று கேட்டோம். முதலமைச்சரவர்கள் உடனடியாக இதை செலக்ட் கமிட்டிக்கு அனுப்புங்கள் என்று சொன்னார்கள். கேட்ட எனக்கே அந்தக் கமிட்டியிலே இடமில்லை என்பது மிக வருத்தம். இந்த வினோபாஜி அவர்களை—ஆச்சார்ய வினோபாஜி அவர்களை—இந்தச் சட்டமன்றத்தில் அநேகமாக நேரில் பார்த்தவர்கள் நம்முடைய பேராசிரியர் அவர்களும், நம்முடைய முதலமைச்சரவர்களும், நானும், எங்களுடைய, துணைத் தலைவர் வி.கே.எல். அவர்களும், அக்கா பொன்னம்மாள் அவர்களும் தான். (குறுக்கீடு) நீங்களும் பார்த்திருக்கிறீர்கள். நம்மையெல்லாம் அந்தக் கமிட்டியிலே போட்டு இதைக் கொஞ்சம் விரிவாகப் பேசியிருக்கலாம். இதெல்லாம் ஒரு மறைமுகமான முறையில், இதிலே ஏதோ ஒரு சந்தேகம் வருகிறது எனக்கு. ஏன் எங்களையெல்லாம் சேர்க்காமல் இந்தக் கமிட்டியில்...

பிற்பகல் 2-40

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்கள் கட்சியின் சார்பில் திரு. டி. சுதர்சனம், திரு. எஸ்.எஸ். மணி நாடார் எல்லாம் தழுவில் இருக்கிறார்கள்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** அவர்களைப் போட்டதை நான் வரவேற்கிறேன். எங்களையும் அதிலே சேர்த்திருக்க வேண்டும் என்பதுதான் எங்களுடைய கோரிக்கை என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சுதர்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவு குறித்து மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. பெரியசாமி அவர்களும் தங்களுடைய கருத்துகளைக் கூறியிருக்கிறார்கள். இந்தச் சட்ட விதிகளின் நான்கு உட்பிரிவுகளில் திருத்தம் குறித்து ஏற்கெனவே மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆய்வுக் குழுவிற்கு அனுப்பி, ஏற்கெனவே எந்தவிதமான குழுக்களிலும் அங்கம் வகிக்காதவர்கள்தான் இந்த ஆய்வுக் குழுவில் உறுப்பினர்களாகச்



சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். நம்முடைய எதிர்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டிருப்பதைப் போல தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் மாண்புமிகு உறுப்பினர்கள் 2 பேர் அதிலே அங்கம் வகிக்கிறார்கள். அவர்களும்கூட அந்தக் குழுவில் கலந்துகொண்டு தங்களுடைய கருத்துகளைக் கூறினார்கள்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த இரண்டு பேரும் அந்தக் கூட்டத்தில் ஏதாவது கருத்துச் சொல்லியிருக்கிறார்களா என்றுகூட எனக்குத் தெரியாது. ஏனென்றால் அவர்கள் என்னைக்கூட வந்து பார்க்கவில்லை. ஆகவே இதை மறுபடியும் reconsider பண்ணவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எந்தக் கமிட்டியிலும் இடம் பெறாத உறுப்பினர்களை அந்தக் கமிட்டியில் நியமித்ததாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சில கமிட்டிகளில் தலைவர்களாக இருந்தவர்களைக் கூட இந்தக் கமிட்டியில் உறுப்பினர்களாகச் சேர்த்திருக்கிறார்கள் என்பதைத் தங்களின் மூலம் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** இந்த பூதான் வாரியத்தின் மூலமாக நிலம் பெற்றவர்கள், ஆண்டு வருமானம் அப்போது ரூ.300 என்று இருந்ததை இந்தச் சட்டத்தின் மூலமாக ரூ.25000 ஆக ஆக்கியிருக்கிறோம். 1958 ஆம் ஆண்டு, ஆண்டு வருமானம் ரூ.300 என்று கொண்டுவரப்பட்டிருந்தது. காலப்போக்கில் உள்ள வருமானத்திற்கு ஏற்ப, இப்போது அதை ரூ.25,000 என்று மாற்றப்பட்டிருக்கிறது. அதேநேரத்தில் வீட்டு மனைகளைக் கொடுப்பதற்கு ஏற்கெனவே இருந்த சட்டத்தில் வழிவகைகள் இல்லை. ஆனால் இந்தச் சட்டத்தில் வழிவகைகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஏன் வீட்டு மனைகளாகக் கொடுக்கப்படுகிறதென்றால், ஏற்கெனவே தானமாக வழங்கப்பட்ட நிலங்கள், அன்றைக்கு கிராமங்களாக இருந்த இடங்களில் உள்ளவை. இப்போது அவை நகர்ப்புறங்களாக, நகரமாக மாறிவிட்டன. குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் கோவையில் இருக்கக்கூடிய பகுதிகளான சிங்காநல்லூர், துடியலூர், ஒண்டிப்புதூர், பீளமேடு, குறிச்சி, கோவை புதூர், வடவெள்ளி போன்ற பகுதிகள் எல்லாம் இப்போது கோவை நகரத்தின் மையப் பகுதிகளாக இருக்கின்ற காரணத்தால், அதை இப்போது

[திரு. அந்தியூர் ப. செல்வராசு] [2000 நவம்பர் 11

விவசாயத்திற்கு ஒதுக்க முடியாத சூழ்நிலை. அதுபோல திருநெல்வேலியில் குலவணிகபுரம், மதுரை மாநகரில் டி.வி.எஸ்., திருநகருக்கு மத்தியிலே இருக்கிற நிலங்கள், அதுமாதிரி ஏராளமான நிலங்கள் இப்போது நகர்ப் பகுதிகளில் இருப்பதால், அதை விவசாயிகளுக்குக் கொடுக்கமுடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

ஆகவே அவர்களுடைய தகுதிக்கேற்ப இந்தச் சட்டத்தில் வீட்டு மனைகள் கொடுப்பதற்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே தானமாகக் கொடுத்த நிலச்சுவான்தார்கள், அந்த நிலத்தைத் தானமாக வழங்கியவர்கள், நிலத்தை அளித்த நேரத்தில் அதன் புல எண்களைக் குறிப்பிடவில்லை. புல எண்கள் குறிப்பிடாத காரணத்தால் அந்த தானஸ்தர்கள் கொடுத்த நிலங்களைப் பள்ளிக்கூடங்களாக, கட்டடங்களாக, வீட்டுமனைகளாக இப்போது மாற்றிவிட்டார்கள். குறிப்பாக, பல்லடம் தாலுகா, நீலாம்பூரில் நஞ்சப்பா செட்டியாருடைய அறக்கட்டளையில் வழங்கப்பட்ட நிலங்கள் அனைத்தையும் கட்டடமாக இப்போது கட்டிவிட்டார்கள். மற்ற பகுதிகளிலும் இதுமாதிரி கட்டியிருக்கிறார்கள். மேட்டுப்பாளையத்திற்குப் பக்கத்தில் இருக்கிற ஓடந்துறை பகுதியில் நம்முடைய மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். பி.சி. வெள்ளியங்கிரி கவுண்டர் அவர்கள் ஏராளமான நிலங்களைத் தானமாக வழங்கியிருக்கிறார்கள். ஓடந்துறையில் அளிக்கப்பட்ட நிலங்கள் முழுவதிலும் வீடுகள் கட்டிவிட்டார்கள். அதை இப்போது விவசாயத்திற்குக் கொடுக்கமுடியாத நிலை. அந்த வகையில் இப்போது இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதேமாதிரி மதிப்புள்ள மாற்று இடம் கொடுப்பதை ஏற்றுகொள்ளவும், தற்போது சந்தை மதிப்பின் இரண்டு மடங்கு செலுத்தினால் பொதுக்காரியங்களுக்காக அவர்கள் கோரும் நிலத்தைப் பெறுவதற்கும் இந்த சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. இந்த வகையில் இந்தச் சட்டத்தின் சாதக, பாதகங்களை எல்லாம் அறிந்து சட்டமுன்வடிவு ஆய்வுக் குழுவில் அங்கம் வகிக்கிற அத்தனை பேரும் சம்பந்தப்பட்ட இடங்களுக்கு நேரடியாகச் சென்று, ஆய்வு செய்து அதனுடைய முழு விவரத்தையும் அறிந்த பிறகுதான் இந்தச் சட்டத்தினை இந்த மாமன்றத்தில் கொண்டு வந்திருக்கிறோம். ஆகவே இந்தச் சட்டத்தை ஏற்று, ஏற்பளிக்குமாறு அன்போடு கேட்டு, விடைபெறுகிறேன்.



2000 நவம்பர் 11]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 4 முடிய திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 4 முடிய சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

எற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர்.

பிற்பகல் 2-45

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

[திரு. அந்தியூர் ப. செல்வராசு] [2000 நவம்பர் 11

"2000 ஆண்டு தமிழ்நாடு நிலக்கொடை வேள்வி (பூதான் யக்ஞா) (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 28/2000) (ஆய்வுக் குழு ஏற்பளித்தவாறு) நிறைவேற்றப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சுதர்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## 8. அரசினர் தீர்மானம்

### (அ) விதி 30,130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தல்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அரசினர் தீர்மானம், இன்று அறிமுகம் செய்யப்பட்ட சட்டமுன்வடிவுகளை இன்றே ஆய்வுக்கு எடுத்துக்கொள்வது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவை விதி 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தி, 2000 ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000 ஆண்டு அழகப்பா பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000 ஆண்டு தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000 ஆண்டு தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு ஆகியவை இன்றே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"
என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.



2000 நவம்பர் 11]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

இன்று அறிமுகம் செய்யப்பட்ட சட்டமுன்வடிவுகள் இன்றே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

## 7. அறிவிப்புகள்-தொடர்ச்சி

### (இ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2000 ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 49/2000) பேரவையில் ஆய்வு செய்யப்பெற மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)-தொடர்ச்சி

### (அஉ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அரசினர் சட்ட முன்வடிவுகள் (ஆய்வு செய்தல்) 2000 ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 49/2000), மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 49/2000)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3. திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

---

@11-11-2000ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 49/2000) நிறைவேற்றப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (அ௭) அழகப்பா பல்கலைக் கழக (திருத்தச்) சட்ட முன்வடிவு, 2000

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, 2000 ஆண்டு அழகப்பா பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 50/2000), மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு அழகப்பா பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 50/2000)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

---

@11-11-2000ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[2000 நவம்பர் 11

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி அமைச்சர்.



2000 நவம்பர் 11]

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு அழகப்பா பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 50/2000) நிறைவேற்றப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (அஐ) தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, 2000 ஆண்டு தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 51/2000), மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே.

"2000 ஆண்டு தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 51/2000)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

பிற்பகல் 2-50

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

---

@11-11-2000-ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 51/2000) நிறைவேற்றப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (அஉள) தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, 2000 ஆண்டு தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 52/2000), மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 52/2000) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

---

@11-11-2000ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 52/2000) நிறைவேற்றப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.





## 8. அரசினர் தீர்மானம்—தொடர்ச்சி

### (ஆ) விதி 32-ஐத் தளர்த்தல்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 13-11-2000 திங்கட்கிழமை அன்று கேள்வி நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம், மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள் - விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ 13-11-2000 (திங்கட்கிழமை) அன்று தளர்த்தி, அந்நேரம் அரசினர் அலுவல்களுக்கு எடுத்துகொள்ளப்பெற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

திங்கட்கிழமை (13-11-2000) அன்று வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் திங்கட்கிழமை (13-11-2000) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-53 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

80. 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மாவட்ட ஊராட்சி மன்றக் கூட்டங்களில் தீர்மானங்கள் கொண்டுவருதல்) விதிகள்

அமைப்பது குறிப்பது ஊரக வளர்ச்சித் துறையின் 28-12-1999 ஆம் நாளிட்ட 273 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

81. 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஊராட்சிகளின் மூலமாக சமுதாய நிலம் பயன்படுத்தப்படுவதை முறைப்படுத்தல்) விதிகள் அமைப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 28-12-1999 ஆம் நாளிட்ட 273 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

82. 2000 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (கிராம ஊராட்சிகள் பற்றிய தணிக்கை அறிக்கையை வெளியிடுதலும், ஒருவகை செய்தலும்) விதிகள் அமைப்பது குறிப்பது ஊரக வளர்ச்சித் துறையின் 7-3-2000 ஆம் நாளிட்ட 59 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

83. 2000ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஊராட்சி ஒன்றிய மன்றம் மற்றும் மாவட்ட ஊராட்சியின் தணிக்கை அறிக்கையை வெளியிடுதலும் தீர்வு செய்தலும்) விதிகள் அமைப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 31-7-2000 ஆம் நாளிட்ட 199 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

84. 2000 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (குற்றங்களை இணக்க முறையில் தீர்த்தல்) விதிகள் அமைப்பது குறித்த ஊரக வளர்ச்சித் துறையின் 17-8-2000 ஆம் நாளிட்ட 205 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].



85. 2000ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் மூலமாக வசூலிக்க இயலாத வரிகள், கட்டணங்கள் முதலியவற்றைத் தள்ளுபடி செய்வதற்கான அதிகாரங்கள், வரையறைகள் மற்றும் கட்டுப்பாடு) விதிகள் அமைப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 17-8-2000 ஆம் நாளிட்ட 206 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

86. 2000 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (அறிவிக்கை அல்லது அறிவிப்பு வெளியிடும் முறை மற்றும் பொது மக்களுக்கு ஆவணங்களை அளிக்கும் முறை) விதிகள் அமைப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 17-8-2000 ஆம் நாளிட்ட 208 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

87. 2000 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (அசையாச் சொத்தைக் கையகப்படுத்தல் - மாற்றிக் கொடுத்தல்) விதிகள் அமைப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 17-8-2000-ஆம் நாளிட்ட 209 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

88. 1996-97, 1997-98 மற்றும் 1998-99 ஆகிய ஆண்டுகளுக்கான நீலகிரி மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கைகள். [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின் கீழ் பேரவையின்முன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

89. 1996-97, 1997-98 மற்றும் 1998-99 ஆகிய ஆண்டுகளுக்கான தஞ்சாவூர் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கைகள். [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவையின்முன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

90. 1996-97, 1997-98 மற்றும் 1998-99 ஆகிய ஆண்டுகளுக்கான நாகப்பட்டினம் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கைகள். [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவையின்முன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

[2000 நவம்பர் 11

91. 1996-97, 1997-98 மற்றும் 1998-99 ஆகிய ஆண்டுகளுக்கான திருவாரூர் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கைகள். [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவையின்முன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

92. 1996-97, 1997-98 மற்றும் 1998-99 ஆகிய ஆண்டுகளுக்கான பெரம்பலூர் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கைகள். [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவையின்முன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

93. 1996-97, 1997-98 மற்றும் 1998-99 ஆகிய ஆண்டுகளுக்கான புதுக்கோட்டை மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கைகள். [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவையின்முன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

51. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று முப்பத்து நான்காவது அறிக்கை. (2000-2001)

52. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று முப்பத்து ஐந்தாவது அறிக்கை. (2000-2001)

53. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று முப்பத்து ஆறாவது அறிக்கை. (2000-2001)

54. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று முப்பத்து ஏழாவது அறிக்கை. (2000-2001)

55. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று முப்பத்து எட்டாவது அறிக்கை. (2000-2001)

[illegible] விதிகள் ஆய்வுக் குழுவின் இருபதாவது அறிக்கை (2000-2001)

57. சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் இருபத்து ஒன்றாவது அறிக்கை (2000-2001)



2000 நவம்பர் 11]

58. சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் இருபத்து இரண்டாவது அறிக்கை (2000-2001)

59. சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் இருபத்து மூன்றாவது அறிக்கை (2000-2001)

@ 60. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (எட்டாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

@ 61. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (ஒன்பதாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

@ 62. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (பத்தாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

63. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (பதினொன்றாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை)

64. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (பன்னிரெண்டாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை)

65. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (பதிமூன்றாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை)

66. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (பதினான்காவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை)

67. 2000 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது நூலகங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவினை விலக்கிக்கொள்வதைத் தேவையானதாக்கிய சூழ்நிலைகளை விளக்குகிற தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 163ஆம் விதியின்கீழ் வைக்கப்பட்டுள்ள விவரவுரை.

@ 10-11-2000 அன்று பேரவைமுன் வைக்கப்பெற்றன.

ஒ.ஐ

228458

அரசு மைய அச்சகம், சென்னை-600 079.

**Copies can be had from the**
**Assistant Director,**
**Government Publication Depot,**
**816, Anna Salai,**
**Chennai-600 002.**

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.